# பாரதி நூல்கள்

## இரண்டாம் பகுதி

### வசனம்

(தத்துவம்)

சி. சுப்பிரமணிய பாரதி

©
சென்னை அரசாங்கம்
1960

சென்னை அரசாங்க அச்சுக்கூட மேற்பார்வையாளரால்
அச்சிடப்பட்டது
1960

[விலை ரூ. 5.

# முன்னுரை

பாரதியாரின் எழுத்திலே தத்துவ கருத்துக்கள் அமைந்த கட்டுரைகளும் கதைகளும் பல உண்டு. பதஞ்சலியோக ஸூத்ரங்கள், வேதரிஷிகளின் கதை, ஈஸாவாஸ்யோப நிஷத் ஆகியவை வட மொழியிலிருந்து தமிழுக்கு அவர் தந்த தத்துவச்செல்வங்கள். ஞானரதம் எனும் அவரது மிகச் சிறந்த கற்பனைக் கருவூலம் அற்புத மான உண்மைகளைத் தாங்கி நிற்கிறது. தொடர்பாகத் தத்துவக் கருத்துக்களைக் காட்டும் அவர் எழுத்து ஓவியங்களை மட்டும் இத் தொகுதியில் சேர்த்திருக் கிறோம்.

# பொருளடக்கம்


| | பக்கம். |
|---|---|
| பதஞ்சலியோக ஸூத்ரங்கள் .. .. | 1 |
| பகவத்கீதை .. .. .. .. | 36 |
| ஞானரதம் .. .. .. .. | 70 |
| வேதரிஷிகளின் கதை .. .. .. | 130 |
| ஈஸாவாஸ்யோபநிஷத் .. .. .. | 167 |

ஓம் சக்தி.

# பதஞ்சலியோக ஸூத்ரங்கள்

## முதலாவது

## ஸமாதி பாதம்

**ஸூத்ரம் க. இனி யோகம் சொல்லப்படும்.**

**ஸூ. உ. யோகம் என்பது சித்த வ்ருத்திகளை அடக்குதல்.**

**வயாக்யாநம் :** சித்த வ்ருத்திகள் என்பன சித்தத்தின் இயக்கங்கள். மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற நான்கினையும் சேர்த்து மனிதனுக்குள்ளே அந்தக் கரணம் (உட்கருவி) என்று சொல்லுதல் வேதாந்த சாஸ்த்ர முறை. அவையனைத்தையும் ஒருங்கிச் சித்தம் என்று சொல்லுவது யோக சாஸ்த்ர வழக்கு. பார்வையென்னும் தொழிலுக்கு, வெளிக் கருவி கண்ணென்றால், உட்கருவி சித்தம். கேள்விக்குப் புறக் கருவி செவி; உட்கருவி சித்தம். இப்படியே அனைத்திற்கும் கொள்க. எனவே, எனது சித்தத்தைத் தவிர எனக்கு உலகம் வேறு இல்லை. நான் ஒரு யானையைப் பார்க்கும்போது, புறத்தே நிற்கும் யானையை நான் பார்க்கவில்லை. அது காரணமாக என் சித்தத்துள் விழும் யானைச் சித்திரத்தையே நான் அறிவேன். எனக்கு உலகம் எனது சித்தமேயாதலால் என் சித்தம் எனக்கு வசப்படும்போது உலகம் எனக்கு வசமாய்விடும்.

**ஸூ. ங. அப்போது காண்பவன் தன் வடிவத்தில் நிற்கிறான்.**

**வ்யா :** காண்பவன் ஆத்மா. சித்தச் செயல்களை அடக்கிய போது, ஆத்மா தன் நிஜரூபத்தில் இருப்பான் என்பது ஸூத்ரத்தின் பொருள்.

ஸூ. ச. மற்றப் பொழுது வ்ருத்திகளின் வடிவை ஏற்பான்.

வ்யா : 'மற்றப் பொழுது' என்றால் சித்த வ்ருத்திகளை அடக்காதபோது. ஒருவன் முதலையைப் பற்றி எண்ணுகையில், அவனுடைய ஆத்மா முதலை வடிவம் பெற்று நிற்கும். "நீ எண்ணுகிறபடியே ஆகிறாய்"—'யத் பாவயஸி தத் பவஸி" என்றும், "மனம் போல் வாழ்வு" என்றும் முன்னோர் சொல்லியிருப்பது எதிர்காலத்தை மாத்திரம் சுட்டுவதன்று, நிகழ் காலத்திலும் உண்மை. எப்போது உன் மனம் எதை நினைக்கிறதோ, அப்போது நீ அதுவாகிறாய்.

ஸூ. ரு. சித்த வ்ருத்திகள் ஐந்து வகைப்படும். அவற்றுள் சில துன்பமுடையன. சில துன்பமில்லாதன.

வ்யா : அவ் வைந்து வகைகள் எவையென்பது கீழே கூறப்படும்.

ஸூ. சு. அவை :—ப்ரமாணம் ; விபர்பயம் ; விகற்பம் ; நித்திரை ; ஸ்மரணை என்பன.

வ்யா : ப்ரமாணம் என்பதற்குத் தமிழில் அளவை என்று பெயர். விபர்பயம் என்பது விபரீத ஞானம்.

ஸூ. எ. ப்ரத்யக்ஷம், அனுமானம், ஆகமம் என்பவை ப்ரமாணங்களாம்.

வ்யா : ஐம்புலன்களால் நேரே அறிதல் ப்ரத்யக்ஷ ப்ரமாணம் அல்லது காட்சியளவை எனப்படும். ஊஹத்தால் அறிவது அனுமானம். அனுபவத்தில் உண்மையென்று காட்டத் தக்கனவாகிய மேலோர் வாய்ச்சொல் ஆகமம் எனப்படும்.

ஸூ அ. விபர்பயம் என்பது பொய்யறிவு ; ஒரு பொருள் மெய்யான வடிவத்தில் நிலை பெறாதது.

வ்யா : சிப்பியை வெள்ளியாகக் காண்பது போன்ற உணர்வு விபர்பயம் எனப்படும், ஸந்தேஹமும் இதனுள் அடங்கும். தூணோ மனிதனோ என்றாற்போல என்பர்.

ஸூ. கூ. விகற்பம் என்பது பொருளில்லாமல் ஒலியை மாத்திரம் தழுவி நிகழும் உணர்வு.

**வ்யா :** இந்த ஸூத்ரத்துக்குப் போஜ தேவர் தமது ராஜ மார்த்தண்டம் என்னும் உரையில் வ்யாக்யாநம் எழுதுமிடத்தே, பின் வருமாறு சொல்லுகிறார் :—

" மனிதனுக்கு அறிவே ஸ்வரூபம் என்ற வசனத்தை (விகற்ப ஞானத்துக்கு) த்ருஷ்டாந்தமாகக் காட்டலாம். ' மனிதனுக்குக் கம்பளம் உடை ' என்பது போல அவ் வாக்கியத்தில் வேற்றுமை யுணர்ச்சி தோன்றும்படி இருக்கிறது. ஆனால் உண்மையில், புருஷனுடைய ' ரூபம் ' அறிவன்று, புருஷன் தானே அறிவு."

முயற் கொம்பு ; ஆகாயத் தாமரை என்றாற் போலச் சொல்லளவில் நின்று பொருளற்ற உணர்வுகள் விகற்பங்களெனப்படும்.

**ஸூ. கய.** அபாவம் (இன்மை) போன்ற உணர்வைச் சார்ந்த வ்ருத்தியே நித்திரையாம்.

**வ்யா :** அபாவம் என்பது பௌதிக லோகத்தை விட்ட நிலை. ஒன்றுமில்லாத சூன்யத்தை அபாவம் என்பாரு முளர் நித்திரையில் சித்தம் ஒரு பொருளையுஞ் சாராமல் நிற்கிறது என்பது பொருள்.

**ஸூ. கக.** அனுபவித்த விஷயத்தை நழுவ விடாதிருத்தல் நினைப்பு.

**வ்யா :** போஜ தேவர் தமது வியாக்யாநத்தில் சொல்லுகிறார் :—" ப்ரமாணம், விபர்யயம், விகற்பம் இம் மூன்றும் விழிப்பிற்குரிய நிலைகள், இவை அநுபவத்தால் கனவிலும் புலப்படுகின்றன உறக்கம் உணரப்படாத விஷயத்தைப் பற்றியது. ப்ரமாணம், விபர்யயம், விகற்பம், நித்திரை என்ற நான்கையும் நிமித்தங்களாக உடையது நினைப்பு."

இனி, சித்த வ்ருத்திகளை அடக்கியாளும் நெறி சொல்லுகிறார்.

**ஸூ. கஉ.** பழக்கத்தாலும், பற்றில்லாமையாலும் அவற்றை அடக்கலாம்.

**வ்யா :** பழக்கத்துக்கு முதனூலில் " அப்யாஸம் " என்ற சொல்லும், பற்றின்மைக்கு " வைராக்யம் " என்ற சொல்லும் வழங்கப்படுகின்றன. இவற்றின் இலக்கணம் கீழே சொல்லப்படுகிறது.

**ஸூ. கங.** அவற்றுள் ஒரே நிலையில் நிற்க முயலுதல் பழக்கம் எனப்படும்.

**ஸூ. கச.** அம் முயற்சியை நெடுங்காலம் இடையின்றி ஆதரித்தால் அது திடம் பெறும்.

**ஸூ. கரு.** பார்த்தனவும் கேட்டனவும் ஆகிய விஷயங்களில் ஆவலற்றோன் அவற்றின் மீது பெறும் வசீகரத் தன்மைக்கு வைராக்கியம (பற்றின்மை) என்று பெயர்.

**வ்யா :** வைராக்கியம் என்ற சொல்லுக்கு விருப்பமில்லாமை என்பது பொருள். உலகத்துப் பொருள்களனிடத்தே நாம் ஆவலைத் துறந்து விட்டால், அவை நமககு வசப்படுகின்றன. ஆவல் உள்ளவரை அவற்றுக்கு நாம் வசப்பட்டிருக்கிறோம். "வசீகரணம்" என்றால் வசப்படுத்துதல்.

**ஸூ. கசு.** அப்பால், புருஷனை அறிவதால் குணங்களினிடத்திலும் பற்றின்மை உண்டாகிறது.

**வ்யா :** குணங்களாவன : ஸத்வம், ரஜஸ், தமஸ் என்பவை. இவையே ஜகத்தின் மூலங்கள். இவற்றிலே பற்று விடுவது தான் வைராக்யத்தின் சிகரம். வெளிப் பொருள்களிலே பற்று நீங்கிய போது, பரமாத்ம ஞானம் கிடைக்கிறது. அதினின்றும் குணப் பற்றுதல் விடுகிறது.

இனி ஸமாதி லக்ஷணம் சொல்லுகிறார்.

**ஸூ. கஎ.** விதர்க்கம், விசாரம், ஆனந்தம், அஸ்மிதை என்ற நிகழ்ச்சிகளுடையது "ஸம்ப்ரக்ஞானதம்" என்ற ஸமாதி.

**வ்யா :** விதர்க்கம் என்பது பொது ஆராய்ச்சி; விசாரம் ஸூக்ஷ்ம வஸ்துக்களைப் பற்றிய ஆராய்ச்சி. அஸ்மிதை என்பது வெறுமே "நான் இருக்கிறேன்" என்ற உணர்ச்சி மாத்திரம் மிஞ்சி நிற்கும் நிலைமை.

ஸமாதியே யோகியின் லக்ஷ்யம். சித்தத்தை அசைவின்றி ஒரே பொருளில் நிறுத்தி விடுதல் ஸமாதி எனப்படும். இந்த ஸமாதி இரண்டு வகைப்படும் :—ஸம்ப்ரக்ஞாதம், அஸம்ப்ரக்ஞாதம் என. 'ஸம்ப்ரக்ஞாதம்' உணர்வுபட்டது; 'அஸம்ப்ரக்ஞாதம்' உணர்வைக் கடந்தது.

ஒரு பதார்த்தத்தை மற்றெல்லாப் பொருள்களினின்றும் பிரித்து, மீட்டுமீட்டும் அதிலேயே தியானம் செலுத்துவது விதர்க்க ஸமாதியின் லக்ஷணம்.

தியானம் செலுத்துவதற்குரிய விஷயங்கள் இரண்டு வகைப்படும். பிரகிருதியின் தத்துவங்கள் ஒரு வகை. மற்றொன்று புருஷன் (ஆத்மா). பிரக்ருதியின் தத்துவங்களெல்லாம் ஜடம்—உணர்வற்றன. புருஷன் (ஆத்மா) சேதனன்—அறிவுடையவன். இவ்விடத்தில், சுவாமி விவேகாநந்தர் பின்வருமாறு எழுதுகிறார் :—

"யோக சாஸ்த்ரத்தில் இந்த அம்சம் ஸாங்க்ய சாஸ்த்ரத்தை ஆதாரமாகவுடையது. அஹங்காரம், புத்தி, மனம் இவ்வாறுக் கெல்லாம் சித்தமே ஆதாரம். சித்த வஸ்துவிலிருந்தே இவையெல்லாம் பிறக்கின்றன. ப்ரக்ருதியின் சக்திகள் சித்தத்தினுள்ளே புகும்போது, அவை எண்ணங்களாக மாறுகின்றன. பிரகிருதி (இயற்கை) ஜடப் பொருள்களாகவும் ஜடசலனங்களாகவும் காணப்படுகிறது. பொருள் வேறு சலனம் வேறாகப் பிரிவுபட்டுத் தெரியாமல் கலந்து நிற்கும் பூர்வ நிலைக்கு அவ்யக்தம் (வ்யக்த மாகாதது) என்று பெயர் படைப்புக்கு முன்பு, ஜகத்தெல்லாம் அவ்யக்த நிலையிலிருந்தது. இந்த ஜகத்தைக் கடந்து நிற்பது புருஷன் ; இதுவே சைதந்யத்தின் ஸாரம்.

"பதார்த்தங்களின் மீது தியானம் செலுத்துவதனால் யோக ஸித்திகள் பிறக்கின்றன. அறிவே சக்தி. அறிவே சித்தி. ஒரு பொருளை நாம் முழுவதும் அறிந்து விடுவோமாயின் அது நமக்கு வசப்பட்டுப்போம். பஞ்ச பூதங்களைப் பற்றித் தியானம் செய்யும்போது, அவற்றின் மீது அதிகாரம் ஏற்படுகிறது. வெளிப்படையான ஸ்தூல பூதங்களைத் தியானத்துக்குரிய பதார்த்தங்களாக வைத்துக்கொண்டு செய்யப்படும் ஸமாதிக்கு ஸவிதர்க்க ஸமாதி என்று பெயர். தர்க்கம் என்பதற்குச் சங்கித்தல் என்பது பொருள். சங்கை செய்து ஆராய்ந்து பார்க்குமிடத்தே பூதங்கள் தம்மிடத்திலுள்ள உண்மைகளையெல்லாம் யோகிக்குத் தெளிவாகக் காட்டுகின்றன. அவன் வசத்திலே ஒப்புவித்து விடுகின்றன. இதே தியானத்தில் பூதங்களைக் கால தேசங்களினின்றும் பிரித்து அவற்றின் சுயவடிவில் தியானிக்கும்போது அது நிர்விதர்க்க ஸமாதி யெனப்படும். அப்பால் தியானம் மேற்கூறப்பட்ட நிலையைக் கடந்து தன்மாத்திரைகள் என்று சொல்லப்படும்

ஸூக்ஷ்ம அணுக்களை விஷயமாகக் கொண்டு நிகழுமிடத்தே அதற்கு ஸவிசார ஸமாதி என்று பெயர். இதுவும் கால தேசங் கடந்தால் நிர்விசார ஸமாதியாகும்.

“இனி அடுத்த படி : ஸூக்ஷ்மம், ஸ்தூலம் என்ற இரு வகையான பூதங்களையும் விட்டுச் சித்தத்தையே விஷயமாகக் கொண்டு தியானம் செய்யும்போது, ஸானந்த (ஆனந்த ஸஹிதமான) ஸமாதி ஏற்படுகிறது, சித்தத்தின் குணங்களைக் கூடப் பிரித்துத் தள்ளிவிடு, அதன் சுத்த வடிவத்தில் தியானம் செலுத்தி, மற்றெல்லா வ்ருத்திகளும் மடிந்து, ஸத்வ குண ஸம்பந்தமான அஹங்காரம் மட்டிலும் மிஞ்சி நிற்கும்போது, அஃது அஸ்மித ஸமாதி யெனப்படும். இந் நிலை அடைந்தவர்களை முன்னோர் “விதேஹர்” என்று கூறுவர். அநேகமாய், ஸ்தூல தேஹத்துடன் தம்மைச் சேர்த்துக் கொள்ளாதவர். ஆனால், இவர்களும் தம்மை ஸூக்ஷ்ம தேகத்துடன் சேர்த்துப் பாவனை செய்து கொள்வர். இந்த நிலையில் இயற்கையுடன் கலந்து நிற்போர் ‘ப்ரக்ருதிலயர்’ என்று கூறப்படுவர். பிரகிருதியைக் கடந்து செல்வோர் முக்தியடைகிறார்கள்.”

**ஸூ. கஅ.** எல்லாவகைச் சித்த வ்ருத்திகளையும் அழித்துப் பழகுவதனால் மற்றொரு ஸமாதி உண்டாகிறது. இதில், ஸம்ஸ்காரங்கள் மாத்திரமே மிஞ்சி நிற்கின்றன.

**வ்யா :** இதுவே உணர்வைக் கடந்து நிற்பதாகிய ‘அஸம்ப்ரக்ஞாத ஸமாதி’. இதிலிருந்துதான் முக்தி விளைகிறது. மேலே கூறப்பட்ட ஸம்ப்ரக்ஞாத ஸமாதி முக்திக்கு வழி காட்டுவதன்று; அதிலிருந்து சித்திகள் ஜனிக்கும். ஒருவன் எல்லாச் சித்திகளும் பெற்ற பிறகுகூட, மறுபடி நழுவி வீழ்ச்சி பெறக் கூடுமென்று பெரியோர் சொல்லுகிறார்கள். ஆத்மா (புருஷன்) ப்ரக்ருதியைக் கடந்து செல்லவேண்டும். இந்த நிலை பெறுதல் மிகவும் துர்லபம். இதனைப் பெறும் உபாயம் பின் வருமாறு :— சித்தத்தை விஷயமாக நிறுத்திக் கொள். ஏதேனும் எண்ணம் உள்ளே புகும்போது அதை உடனே வெட்டிவிடு. சித்தத்தில் யாதொரு எண்ணமும் நிகழாமல் அதைப் பாழாக்கி விடு. ‘இது செய்யும் திறமை ஒருவனுக்கு வருமாயின் உடனே முக்தி உண்டாய்விடும்’ என்று விவேகாநந்தர் சொல்லுகிறார்.

இந்த ஸமாதியில் ஸம்ஸ்காரங்கள் மிஞ்சி நிற்கும் என்று பதஞ்சலி முனிவர் சொல்லுகிறார். ஆனால் இந்த ஸமாதி முதிர்ச்சி பெறும்போது, ஸம்ஸ்காரங்கள் தாமாகவே நசித்து

விசம் என்று விவேகாநந்தர் கருதுகிருர். அது பற்றியே, விவேகாநந்தர் இதனை முக்தியில் உடனே கொண்டு சேர்க்கும் 'படி' யென்று பேசியிருக்கிருர்.

'ஸம்ஸ்காரங்கள் என்பன, சித்த வ்ருத்திகளின் விதைகள். நம்முடைய சித்தத்தில் தோன்றி மறையும் எண்ணங்கள் அப்படியே அழிந்து போகவில்லை. தம் தம் விதைகளை மிச்சம் வைத்து விட்டுப் போகின்றன. இந்த விதைகளையும் அழித்தாலன்றிப், பரிபூர்ண விடுதலை தேடன்ருது. கெட்ட விதைகளை மாத்திரமேயன்றி நல்ல விதைகளையும் அழித்து விடவேண்டும்; அப்போது, ஆத்மா தனது ஸ்வரூபத்தை அறிவான். தான் நித்ய ஒளியுடையவன் என்றும் எல்லாம் அறிபவன் என்றும், ஸர்வ சக்தியுடையவனென்றும் தெரிந்து கொள்வான். தன்னைத்தானே தளைகளில் கட்டியிருந்த தெல்லாம் ஒருவித மாயத் தோற்றமேயல்லாமல், யதார்த்தத்தில் தனக்கு எக்காலத்திலும் எவ்விதமான தளையேனும் துன்பமேனும் இருந்ததில்லையென்று தெரிந்து கொள்வான். அப்போது அவன் சட்டளையிட்ட செய்கைகளெல்லாம் நிறைவேறும். அவன் விரும்புவதில்லை; ப்ரார்த்தனை செய்வதில்லை. அவனுக்கு நிகழும் ஸங்கல்பங்கள் தாமே நிறைவேறும்' என்கிருர்.

**ஸூ. கக** :—விதேஹயோகிகளுக்கும் ப்ரக்ருதிலயர்களுக்கும் இந்த யோகம் உலகத் தோற்றத்தை விளைவிக்கும்.

**வ்யா** : உடம்பிலே நாம் கட்டுப்பட்டிருக்கிறேம் என்ற அற்ப சிந்தையைக் கடந்தவர்கள் விதேஹயோகிகள். இயற்கையுடன் ஒன்றுபட்டவர்கள் ப்ரக்ருதிலயர்.

இவ்விருவரும் ஸமாதியாகிய சலன மற்ற நிலையில் உணர்வற்ற பதவியடைந்த ஸமயத்திலும் அவர்களுக்கு உலகத் தோற்றம் தென்படாதிராது; தென்படத்தான் செய்யும். இந்திர ஜாலம் கண்டிருப்போன் தன்னை அதில் உடம்படுத்தாத வாறுபோல, அவர்கள் தம்மை உலகத்தின் மாறுபடு தோற்றங்களுடன் உடம்படுத்திக் கொள்ளமாட்டார்கள்.

**ஸூ. உ௦** :—(சுத்த மோனம் வேண்டுகிற) மற்றவர்களுக்கு, அந்த யோகம் சிரத்தை, வீர்யம், ஸ்ம்ருதி (நினைப்பு), ஸமாதி, உணர்வு இவற்றின் வழியே பிறக்கிறது.

**வ்யா**:—ஸ்ம்ருதி என்பது சித்தத்தைத் தியானத்தினின்றும் நழுவவிடாதிருத்தல், "உணர்" வென்பது மெய்யறிவு.

ஸமாதியென்பது ஸம்பூர்ண அமைதி. சிரத்தையென்பது விடாத நம்பிக்கை. அதினின்றும் ஊக்க முண்டாகிறது. ஊக்கத்திலிருந்து நழுவுதலற்ற சிந்தை பிறக்கிறது. அதிலிருந்து சித்தத் தெளிவு பிறக்கிறது. அது மெய்யறிவைத் தருகிறது. இவற்றைச் சாதிப்போர் உலகத் தோற்றத்தைக் கடந்து மஹா மோன நிலை பெற வல்லோராவர்.

**ஸூ. உக :—** தீவ்ர வேகமுடையவர்களுக்கு ஸமாதி மிகவும் விரைவாகக் கைகூடுகிறது.

மதுரை நாராயணய்யர் மொழி பெயர்ப்பில் இந்த ஸூத்ரத்துக்குப் பின் குறிப்புச் சேர்க்கப்பட்டிருக்கிறது :—'யோகிகள் ஒன்பது விதப் படிகளில் உள்ளவர்கள். உபாயங்கள், வைராக்கியங்கள், தாரதம்யங்களினால் அப் படிகள் ஏற்படுகின்றன. உபாயம் மூன்று விதம் :—ம்ருது, மத்யமம், அதிமாத்ரம். வைராக்கியமும் மூன்று விதம். அதிமாத்ரையான உபாயம், அதிமாத்ரையான வைராக்கியம் இவையிரண்டும் கூடிய யோகிக்கு, இந்த ஸூத்ரத்தில் சொல்லிய ப்ரகாரம், ஸமாதி ஸமீபத்திலுள்ளது.'

**ஸூ. உஉ :—** அதிலும், மெதுவாகவேனும், மத்ய வேகமாகவேனும், அதி தீவ்ர வேகமாகவேனும் செல்வதற்குத் தக்கபடி (பயன்களிலும்) பேதங்களுண்டாகின்றன.

இதன் பொருள் அடுத்த ஸூத்ரத்தின் கீழே காட்டப்பட்டது.

**ஸூ. உங :—** அன்றிக் கடவுளை வழிபடுதலாலும்.

வழிபடுதலாவது பரிபூர்ண பக்தி செலுத்துதல். இஃதே அந்த ஸமாதி எய்துவதற்குச் சிறந்த வழி. பக்தியே பரம ஸாதனம். "அகண்ட ஜகத்து"க்கும் ஆத்மா தெய்வம் என்று வேதம் சொல்லுகிறது.

அகண்ட ஜகத்து ரூபமே பரப்ரஹ்மம்.

அகண்ட பஹிரண்டமுமடங்க வொரு நிறைவாகி யானந்தமான பரமே' என்று தாயுமானவர் சொல்லுகிறார்.

இந்த உலகம் உடம்பு ; ஈசன் இதனுயிர்.

இந்த உலகமே தெய்வம்.

இந்த உலகம் எல்லையில்லாதது.

திக்கும், காலமும் எல்லையில்லாதன. வஸ்து அநந்தம், ஸ்தூலம், ஸூக்ஷ்மம் என்பன வஸ்து பேதங்களல்ல, ரூப பேதங்கள்.

அதை மறுபடி எரித்தான்.

வேறொரு த்ரிபுரம் ஜனித்தது

பரமசிவன் அதைச் சுட்டான்.

மற்றொரு த்ரிபுரம் உண்டாயிற்று.

அப்படியே இன்று வரையும் நடந்துகொண்டு வருகிறது. மாயையாவது யாதெனில் :—

ஸர்வ மங்களமாகிய ஜகத்தில் ஜீவன் தன் கற்பனா சக்தியால் ஏற்படுத்திக்கொள்ளும் தீமை.

இது பூர்வத்தில் சங்கராசார்யர் சொன்ன லக்ஷணத்துக்குப் பேதப்பட்டது. மாயையைத் தவிர ஜகத்தே யில்லை யென்று சங்கராசார்யர் சொன்னார் ஸர்வ மங்களாகாரமான ஜகத்தில் ஜீவன் கற்பனையால் செய்து கொள்ளும் தீமையே மாயை யென்று நாம் சொல்லுகிறோம்.

இந்த மாயை என்ற ராக்ஷஸியின் வயிற்றில் கவலை, துன்பம் பயம், கஷ்டம், நோய், மரணம் முதலிய அஸுர ஜாதிகள் தோன்றி ஜீவகுலம் என்கிற பயிரை அழிக்கின்றன.

இந்த மாயை ஸர்வ ஜீவகோடிகளுக்கும் பொது.

இந்த மாயையைத் தொலைப்பதற்குப் பக்தியே உபாயம்.

மதுரை நாராயணய்யர் எழுதிய யோகஸூத்ர உரையில் பின்வருமாறு சொல்லப்படுகிறது :—'வேறு வ்யாபாரமின்றி பக்தியினால் மாத்திரம் இச் சமாதி லாபம் ஸித்திக்கும். பக்தி என்பது மனம், மொழி, மெய்களால் நிகழ்வது. பக்தியினால் மாத்திரம் எனபதற்கு, பகவதகீதை கூ-ஆம் அத்யாயம், உஉ-ஆம் சுலோகம் பார்க்க.'

ஷை பகவத்கீதை—கூ—உஉ, பின்வருமாறு :—
அநந்யா : சிந்தயந்தோ மாம் யே ஜநா : பர்யிபாஸதே
தேஷாம் நித்யாபியுக் தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।

तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥

இதன் பொருள் யாதெனில் :—

"மாறுதலின்றி யெனை மனத்திடைக் கொண்டு
போயிறுவார் யாரோ, அம மக்கள்
நீரா யோகத் திருப்பார் ; அவர் தம்
நன்மையும் யோகமும் நானே வஹிப்பேன்"

என்று பகவான் சொல்லுகிறார்.

இனிப் பின்வரும் குறிப்புக்கள் ஸ்வாமி விவேகாநந்தரின் இங்கிலீஷ். பீடிகையை ஆதாரமாக உடையன :—

பல அம்சங்களில் யோக சாஸ்த்ரமும் ஸாங்கியமும் அபிப்பிராயக் கலப்புடையனவாக இருப்பினும். ஈசன் ஒருவன் உளனு என்ற விஷயத்தில் அவ்விரண்டு சாஸ்த்ரங்களும் தம்முள்ளே முரண்படுகின்றன. ஸாங்க்ய சாஸ்த்ரப்படி ஈசனென்ற வஸ்துவேயில்லை. ஸாங்க்யர்களுடைய வாதம் பின்வருமாறு :—

இந்த ஜகத்துக்கு ஈசனொருவனிருப்பது ஸாத்யமில்லை. எனென்றால், ஈசனொருவன் இருந்தால் அவன் ஓர் ஆதமாவாக இருக்க வேண்டும். ஆத்மாவானால் அது கட்டுப்பட்டேனும் விடுதலை பெற்றேனும் இரண்டிலொன்றாக இருத்தல் வேண்டும்.

கட்டுப்பட்டதாயின் அதற்குப் படைத்தல் முதலிய திறமைகள் இரா. ஜகத்திலே கட்டுண்ட அடிமையால், அதனை ஆக்கவும் ஆளவும் இயலுமோ ?

அங்ஙனமின்றி, ஈசன் விடுதலைபெற்ற ஆத்மாவாக இருக்கக் கூடுமெனில் அதுவும் ஸாத்யமில்லை. என் ? விடுதலை பெற்ற ஆத்மா எதையுமே விரும்பாது. அதனுளளத்தில் ஸங்கற்பங்கள் எழமாட்டா. ஆகவே, அவ்வித ஆத்மாவுக்கும் சிருஷ்டி முதலிய தொழில்களுக்கும் ஸம்பந்தம் ஸாத்யமில்லை.

மேலும், ஸாங்க்ய சாஸ்த்ரத்தின் கொள்கைப்படி ஈசனொருவனை இருக்கவேண்டிய அவசியமேயில்லை. பிரக்ருதியே போதும். ப்ரக்ருதியின் சக்திகளாலேயே சிருஷ்டி முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன. 'வீணாக ஒரு கடவுளெதற்கு ?' என்கிறார்கள்.

ஆனல், பரிபூரண சித்தி பெறப்போகுந் தருணத்தில் முழுத் துறவில்லாமல் பின்னடைந்து போய்ப் பிரகிருதியிலே

லயித்திருந்து அப்பிரகிருதிக்குத் தலைவர்களாக வெளிப்படும் ஜீவர்கள் பலரிருப்பதாக ஸாங்க்ய சாஸ்த்ரம் சொல்லுகிறது. நாம் அனைவரும் அவ்விதமான தேவர்கள் ஆகலாமென்றும் வேதங்களிலே சொல்லப்பட்ட ஈசன் இந்த இனத்தைச் சேர்ந்தவனே யென்றும் ஸாங்க்யர்கள் சொல்லுகிறார்கள்.

இந்தப் ப்ரக்ருதிலயர்களுக்கு மேலே ஒருவன் நித்யனாகவும் ஆநந்தமயனாகவும் இருந்து சிருஷ்டி முதலிய தொழில்கள் செய்வதாக ஸாங்க்யர்கள் அங்கீகாரம் செய்வதில்லை.

இனி, யோக சாஸ்த்ரத்திலோ எனில் :—

ஈசனிருப்பதாகவே ஸித்தாந்தம். மற்ற எல்லா ஆத்மாக்களினின்றும் பிரிந்த இயல்பு உடையவனாகிய ஒரு தனி ஆன்மா எப்போதும் நித்யனாகவும் முக்தனாகவும் ஸர்வக்ஞனாகவும் இருந்து இவ்வுலகத்தின் தலைமை செலுத்துவதாக யோக சாஸ்த்ரம் சொல்லுகிறது.

இந்த ஈசன் படைத்தவன், சிவன், விஷ்ணு. யேஹோவோ அல்லது அல்லா. 'படைத்தோன் காப்பானென்று சொல்லி வாழ்க்கையில் எல்லாவிதமான பொறுப்புக்களையும் இவனுடைய திருவடிக்கு ஸமர்ப்பணஞ் செய்து கர்மபந்தமின்றி விடுதலை பெறுவதே கைவல்ய முக்தி. இந்த ஈசனுடைய பக்தியை விட்டபோது நரகம், இதைக் கைக்கொண்டபோது முக்தி.

'இவனே ஸர்வமும்' என்பது வேதாந்த ஸமரஸக் கொள்கை.

**ஸூ உச: கவலைகளாலும் செய்கைப் பயன்களாலும் விருப்பங்களாலும் தீண்டப்படாத யாதொரு விசேஷ புருஷன் ஈசுவரன்**

ஸர்வ புருஷன் என்று கூறுவதே பொருந்தும். ஈசனை வேறு உயிர்களினின்றும் தனி உயிராகப் பிரிக்கும்போது, ஈசனுடைய உண்மையே வாதத்துக்கிடமாகிறது. ஸர்வம் இதம் ப்ரஹ்ம்—தோன்றுகின்ற இவ்வுலகனைத்தும் கடவுள்—என்போமாயின், நாஸ்திகர் கூட நமது ஸ்தானத்தை அசைக்க முடியாது. நாஸ்திகன் ப்ரக்ருதி யென்பதும், சைவன் சிவனென்பதும், மஹமதியன் அல்லா என்பதும்—ஒரே பதார்த்தம்; 'ஜகத்தின் காரணப் பொருள்.'

அதனை நாஸ்திகர் ஜடமென்று வாதிடுகிறார்கள். ஆனால், அதற்குள்ளே சக்தியும் ஜீவனும் அமைந்திருக்கின்றன என்பதை நாஸ்திகர் மறுக்க வழியில்லை.

ப்ரக்ருதி ஜடமென்று நாஸ்திகன் கூறலாம். ஆனால் நான் ஜடமில்லை. அந்த நாஸ்திகனும் ஜடமில்லை. எங்களுக்குள் விளங்கும் சைதந்யத்தை ஜடத்தின் குணபேத மென்று நாஸ்திகன் சொல்லிய போதிலும், அது சைதன்யமேயில்லை யென்றாவது ஜடத்தின் இதர இனங்களுக்கும் இந்தச் சைதந்ய சக்திக்கும் அபாரமான பேதமில்லை யென்றாவது நாஸ்திகன் சொல்ல முடியாது.

அது எப்படியானாலும், ஜடம் சித் இரணம் சேர்ந்தது வஸ்து. இது நாஸ்திகன் மறுக்க முடியாதது.

அந்த, வஸ்துவையே வேதம் ' தெய்வம் ' அல்லது ' கடவுள் ' என்கிறது. எனவே இந்தக் கடவுள் இல்லை யென்று சொல்ல நாஸ்திகனால் ஸாத்யப்படாது,

ஆனால் பதஞ்சலி சொல்லுகிற ஈசுவரனை ஸாங்க்யர்கள் மறுப்பது மட்டுமின்றி வேதாந்த சாஸ்த்ரமும் மறுக்கத்தான் செய்கிறது. இதைப் பற்றி மற்றொரு (செய்யுட்) ப்ரபந்தத் தில் நான் எழுதியிருக்கும் பாட்டொன்றை இங்கு எடுத்துக் காட்டுகிறேன் :—

" சொல்லடா ஹரியென்ற கடவுளெங்கே<br>
சொல்லென்று ஹிரணியன் தான் உறுமிக்கேட்க,<br>
நல்ல தொரு மகன் சொல்வான் :—" தூணிலுள்ளான்,<br>
நாராயணன் துரும்பிலுள்ளா " னென்றான்.<br>
வல்லமை சேர் கடவுளிலா அணுவொன்றில்லை,<br>
மஹா சக்தி யில்லாத வஸ்து வில்லை,<br>
அல்லவில்லை, அல்லவில்லை, அல்லவில்லை,<br>
அனைத்துமே தெய்வ மென்றா ல்லலுண்டோ ? "

எல்லாம் பரமாத்மாவே என்பதை விட்டுப் பதஞ்சலி, ' மற்ற உயிர்களினின்றும் பிரிந்த தனிப் புருஷனே ஈசுவர' னென்று கூறியிருத்தல் அனுபவத்துக்கும் யுக்திக்கும் பொருந்தாது.

ஸூ. உரு. எல்லாவற்றையும் அறியும் அறிவின்வே (ஈசனிடம்) நிரதிசயமானது.

இந்த ஸூத்ரத்தில் ' நிரதிசயம் ' என்ற பதம் ' தனக்கு மேல் பிறிதொன்றில்லாது ' என்று பொருள்படுவது. ' மற்ற ஆத்மாக்களிடம் வித்து வடிவமாகக் காணப்படும் ஸர்வக்ஞத் தன்மை அவனிடம் எல்லையற்றதாக விளங்குகிறது ' என்று விவேகாநந்தர் இந்த ஸூதரத்துக்குப் பொருள் சொல்லு

கிருர். அவரிடத்தில் (ஈசுவரனிடத்தில்) எல்லாவற்றையும் அறியும் சக்தியானது உயர்வற உயர்வு பெற்றது' என்று மதுரை நாராயணய்யர் அர்த்த மெழுதியிருக்கிருர்.

பின்வரும் விநோதமான குறிப்புக்கள் மதுரை நாராய ணய்யர் வ்யாக்யானத்தில் காணப்படுகின்றன :—

' அவருடைய ஸ்ருஷ்டியினுல் அவருக்கு ய தொரு ப்ரயோ ஜனமுமில்லை, ப்ராணிகளின் ப்ரயோஜனம் உண்டாகின்றது. ப்ராணிகளுக்கு ஞான தர்மங்களை உபதேசிப்பதனுல் கல்பம், ப்ரளயம், மஹா ப்ரளயம் இவைகளில் எற்படும் ஜனன மரணங்களினின்று ப்ராணிகள் கரையேறும்படிச் செய்வது தான் ஈசுவரன் அடையும் ப்ரயோஜனம்.

இவ்விதமே, பஞ்சசிகாசார்யர் அடியில் வருமாறு சொல்லி யிருக்கிருர் : ' ஆதிவித்வான் (கபிலர்) சுத்த ஸாத்விக சித் தத்தை நிர்மித்து, அதன் மூலமாகக் கருணையால் ஜிஞ்ஞாஸு (அறிவை விரும்புவோன்) ஆகிய ஆஸுரி என்பாருக்கு ஸாங்க்ய சாஸ்த்ரத்தை உபதேசித்தார்.' கபிலர் மஹா விஷ்ணுவின் அவதாரமாகையால், ஈசுவரன் ப்ராக்ருத சரீர மில்லாதவராகையால், சுத்த சித்தத்தை நிர்மித்துக் கொண்டாரென்று சொல்லியிருக்கிறது.

அடியிற்கண்ட முக்கியமான அம்சங்களும் ஷை நாராயணய் யர் வ்யாக்யானத்தினின்று எடுத்தெழுதப் படுகின்றன :—

இவ்விதமே, வாயு புராணம் :—' எல்லாவற்றையும் அறி யுந் தன்மை ; என்றுந் திருப்தியுடனிருத்தல் ; அநாதி யான ஞானம், ஸ்வதந்த்ரம், குறைவில்லாத சக்தி, அநந்த சக்தி இவ்வாறும் ஈச்வர அங்கங்கள் என்று அறிஞர்கள் சொல்லுகிருர்கள். ஞானம், வைராக்யம், ஐசுவர்யம், தபஸ், ஸத்யம், க்ஷமை, தைர்யம், ஜகத்தைச் சிருஷ்டி செய்யும் சக்தி, ஆத்ம ஸ்வரூப ஞானம், எல்லாவற்றுக்கும் அதிஷ் டானமாக இருத்தல் என்ற பத்துக் குணங்கள் எப்பொழுதும் அழிவில்லாமல் ஈசுவரனிடம் இருக்கின்றன.'' இத் தன்மை யான குணங்களை உடையவரானுல் துக்கம் நிறைந்த இந்த லோகத்தை ஈசுவரன் ஸ்ருஷ்டித்திருக்கமாட்டாரென்ற ஆக்ஷே பத்துக்கு ஸமாதானம் :—பரம ச்ரேயஸ்கரமான கைவல்யத் தைப் ப்ராணிகள் அடையும் பொருட்டு, ஸுக துக்கங்களை ஏற் படுத்தி அவைகளின் அனுபவங்களினுல் ப்ராணிகள் மனம் சுத்தியாகி, ஞானம் உண்டாகி, ப்ரக்ருதி புருஷ விவேகம் உண்டாகிறது. அதனுல் கைவல்யம் ஸித்தியாகிறது. இது

ஈச்வரனுடைய பரம காருண்யத்தைக் காட்டுகிறது........ முதல் குரு......யோகிகளின் குரு பரம்பரையில் ஈச்வரன், ஹிரண்ய கர்ப்பன்.'

மேலே, விவேகாநந்தரின் கருத்தைச் சொல்லுகிறேன் :— 'வான வெளியிலே வரம்புள்ள ஓர் பரதேசத்தை (இடப் பரப்பை) நீ சிந்திப்பாயாகில், அதற்கப்பாலும் வெளியுண் டென்ற சிந்தனை உனக்குண்டாகிறது. இப்படிப் போகப்போக நீ எத்தனை பெரிய வட்டம் போட்டாலும் அதற்கப்பால் எல்லையற்ற திசைவெளி யிருக்கிறது. காலத்தைப் பற்றி நினைக்கும் போதும் இப்படியேதான் நடக்கிறது. ஒரு க்ஷணப் பொழுதைப் பற்றி எண்ணும் பொழுதே, காலம் நித்ய மானது என்ற எண்ணம் உடன் தோன்றுகிறது. அறிவு விஷயத்திலும் இங்ஙனமேதான். மனிதனிடத்தே அறிவு ஒரு வித்தாக இருக்கிறது, ஆனால் அதிலிருந்து எல்லையற்ற அறி வொன்றிருப்பதாக ஊஹிக்கப்படுகிறது.'

இந்த 'எல்லையற்ற அறிவை'யே யோகிகள் ஈசனென் கிறார்கள். இவ்விஷயத்தைப் பற்றி மேலே (முதற் பாதம்) முப்பத்தெட்டாம் ஸூத்ர உரையில் விரிவாகப் பேசுவோம். அங்குக் காண்க.

**ஸூ.** உகு. அவன் காலத்தால் வரையறுக்கப்படாதவனாத லால், அதிபூர்வமான குருக்களுக்குங்கூட அவனே குரு.

**வ்யா :** ஈசனே புராதன குரு என்கிறார். ஸர்வ ஞானத் துக்கும் உற்பத்தி ஸ்தானம் பகவானே யென்பது கருத்து.

**ஸூ.** உஎ. அவனுடைய வாசகம் ப்ரணவம்.

'ஓம்' என்பது ப்ரணவ மந்த்ரம். ப்ரணவமே பகவா னுடைய முக்ய நாமம். ஓம் என்பது மூலமந்த்ரம். இந்த மந்த்ரத்துக்கு ஆகமங்கள் கோடி வகைகளில் பொருள் சொல்லுகின்றன. ப்ரணவம் என்ற சொல் எப்போதும் புதுமையானது என்ற பொருளைத் தருவது. ஓம் என்ற பதம் 'ஆம்' என்று ஸம்மதியைக் குறிப்பது. மஹா கணபதியே இந்த மந்த்ரத்தின் அதிஷ்டான தேவதை. சிருஷ்டி அடை யாளம்.

**ஸூ.** உஅ. அதன் பொருளைப் பாவனை செய்வதே அதனை ஜபித்தல்.

எல்லையற்ற அறிவுக் கடலென்ற பொருளைத் தியானம் செய்ய வேண்டும். அதுவே ஜபம். பொருளைப் பாவனை செய்யாமல் வெறுமே சொற்களைத் திரும்பத் திரும்பச் சொல்லுதல் அதிகப் பயன் தரமாட்டாது எனபது பதஞ்சலி மஹரிஷியின் மதம்.

ஸர்வ வ்யாபியான பரமாத்மாவை மனதால் தியானஞ் செய்வது மிகவும் சிரமம். வாக்குக்கும், மனதுக்கும் எட்டாத பரம்பொருளை நாம் எங்ஙனம் தியானம் செய்வோம் ?

எல்லையற்ற மங்கள மயமான ஞானக் கடல், எங்கும் நிறைந்த பராசக்தி, எல்லாப் பொருள்களிலும் தொழில் புரியும் சுடர்ப் பொருள், யாது மாவது, பரம சக்தி, அகண்ட சைதந்யம், அகண்ட ஸௌந்தர்யம், பரம ஜ்யோதி, மஹா மோனம்,—என்று பலவிதமாக மனம் சொற்களை வழங்கு கிறது. எனினும் அப்பொருளைப் பற்றிக்கொள்ளுதல் மனத் துக்கு வழக்கப்படவில்லை. ஸர்வ சக்தியாகிய பரமாத்மா என்ற வஸ்துவை அர்த்த மயமாகத் தியானம் செய்தா லன்றி வெறுமே நாமஸ்மரணம் அதிகப் பயன்படாது என்று பதஞ்சலியார் சொல்லுவது ஒருவாறு மெய்யே என்று கருது வதற்குப் பல காரணங்கள் காட்டலாம்.

ஆனால் ஈசனுடைய நாமஸ்மரணத்தைக் காட்டிலும் ஷை ஞானம் உண்டாவதற்கே வேறு வழியிருப்பதாகத் தோன்ற வில்லை. பகவந் நாமஸ்மரணமே தாரகம் என்ற பக்தர் களுடைய கொள்கையையே நான் உண்மையாகக் கருது கிறேன்.

நாம் நம்புகிறோம்.

' நீ என்னைக் கொலை செய்தாலும், தெய்வமே, நான் உன்னைப் பின்னும் நம்புவேன் ' என்ற வாக்யத்தை நாம் கடைப்பிடித்திருக்கிறோம்.

வல்லாத் துன்பங்களுக்கும், எல்லாச் சிதைவுகளுக்கும், எல்லாப் பயங்களுக்கும் கடவுளின் ஸம்ரக்ஷணை நிவாரணம் ; வேறுவித ஸம்ரக்ஷணை உலகத்திலில்லை. ' அவனன்றி யோரணுவு மசையாது.' சிவனன்றி வேறு புகலில்லை. தேடித் தேடிப் பார்த்தாலும் தெய்வமன்றித் துணையில்லை. அந்தத் தெய்வம் நம் அறிவுக் கெட்டவில்லை.

என்ன செய்வோம் ?

பின்னும் கடவுளை நம்பத்தான் செய்வோம். 'நம்புவதே வழி' யென்ற மறை தன்னை நாம் இன்று நம்பி விட்டோம்.

என்றைக்கும், ஒரு நாளில்லாவிட்டால் ஒருநாள், இந்தப் பரம்பொருள் .மனிதனுடைய அறிவுக்குள்ளே அடைபடத் தான் செய்யும்.

'அஸாத்யத்தை மனிதன் ஸாத்தியமென்று கருதிப் பின்னும் பாடுபட வேண்டும். இல்லாவிட்டால் அவன் உண்மையின் தோட்டத்தைக் கைவிட நேரும்,' என்றொரு ஐரோப்பிய மஹாகவி சொல்லுகிறார்.

கடவுள் அறிவுக்கும் வாக்குக்கும் எட்டாததென்று சொன்னேன்? அது தவறான வார்த்தை. பூர்வ பக்ஷங்களை அனுசரித்துச் சொல்லிய வார்த்தை,

'ஸர்வம் பரமாத்மா' என்பதே ஸித்தாந்தம்.

எனவே, நீ தியானம் செய்யத் தொடங்குங் காலத்தில், முன்னே ஒரு விளக்கிருந்தால் அதுதான் தெய்வம். பல்லியிருந்தால் அதுவே தியானத்துக்குரியது. சுவர் நின்றால் அதுவே கடவுள். எதுவும் தியானத்துக்குரிய பதார்த்தம்.

அங்கு அர்த்த பாவனே, 'ஸர்வ ரூபியான ஸர்வமான பொருளை அதன் ஒரு பகுதியில் தியானிக்கிறேன்' என்று செய்யத் தகும். செப்புவதெல்லாம ஜபம், நான் சிந்திப்பதெல்லாம் நின் ஒப்பில் தியாக மென ஓர்ந்தேன் பராபரமே என்று தாயுமானவர் சொல்லுகிறார்.

எல்லாம் கடவுளாதலாலே, மனதில் தோன்றும் நிகழ்ச்சிகளெல்லாம் ஈசனுடைய தியானங்களாகக் கருதத் தக்கனவென்பது இக் கண்ணியின் பொருள்.

மேலும், கண் முன்னே நிற்கின்ற பொருள்களைத்துமே தெய்வம் என்பது மெய்யாயின், நம்மைச் சூழ்ந்த அசேதன வஸ்துக்களைக் காட்டிலும் சேதன வஸ்துக்களிடம் நாம் அதிகத் தெய்விக புத்தி செலுத்த வேண்டுமென்பது எளிதாக ஊஹித்துக் கொள்ளத்தக்க விஷயமாம். இவற்றுள்ளும் மற்ற உயிர்களைக் காட்டிலும் மனித உயிர்களிடம் தேவதா பக்தி செலுத்தல் நமக்கெளிது. அது முக்கியமாகச் செய்யத்தக்கது. அருகேயுள்ள பந்துமித்திரரிடம்

பரமாத்ம தர்சனம் செய்தல் ஸாத்யமாயின், பிறகு அவர்களை ஸ்மரிக்கும் பொழுதெல்லாம் சிவ ஸ்மரணம் செய்கிற பய னுண்டாகிறது.

மேலும், ஜபம் மூன்று விதமானது :—

(க) சிவ, சிவ, சிவ, அல்லது ராம, ராம, ராம என இங்ங னம் ஏதேனுமொரு மந்திரத்தை வாயினால் உரக்க உச்சரிப் பது.

(உ) அடி நா அசையும்படி, ஆனால் வெளியே பிறருக்கு ஓசை கேட்காதபடி, ஜபம் செய்வது.

(ங) மனதுக்குள்ளே சொல்லிக் கொள்வது.

இம் மூன்றுக்குள் மனதுக்குள்ளே சொல்லிக் கொள்ளு தல் விசேஷமானது.

இந்த ஜபத்தினால் சில சமயங்களில் தீங்கு நேரிடும். பொருளைக் கருதாமல் வெறுமே பதத்தை ஓயாமல் சொல் லும்படிப் புத்தியை வற்புறுத்துவதினின்றும், புத்தி ப்ரமங் கொண்டு போகக் கூடும். ஆதலால்—'சிவ, சிவ' என்று உச்சரிப்போர் ஸர்வ மங்களத்தின் பெயரை உச்சரிக்கிறோம் என்ற பொருளறிந்து கொண்டு செய்தல் நன்று. இங்ஙனமே 'சக்தி' என்னும் பதம் திறமையையும் குறிக்கும். பிற மந்திரங்களையும் இங்ஙனமே கொள்ளுக. அர்த்த ஜபம் விசேஷமானது.

எனினும், நாம ஸ்மரணத்தைக் காட்டிலும் பகவானுடைய கல்யாண குணங்களை நாம் ஒழுகிக் காட்டுதலே மேலான பூஜை யென்பதில் ஸந்தேஹமில்லை. 'அறிவு, ஸமபாவனை, ஸந்தோஷமென்ற மலர்களால் அந்தத் தேவாம் பிரிவரிய ஆத்தும தத்துவத்தை யர்ச்சிப்பதே பெரிய பூஜை' என்று பெரியோரும் கூறினர்.

மேலும், ஈசன் நான்.

"தத்வமஸி" என்று வேதம் சொல்லுகிறது.

இவ்விஷயமாக நான் மற்றொரு நூலில் பாடியிருக்கும் விருத்தமொன்றை இங்கெடுத்துக் காட்டுகிறேன் :—

பூமியிலே வழங்கி வரு மதத்துக் கெல்லாம்
பொருளினை நாமிங் கெடுத்துப் புகலக் கேளாய்,
சாமிநீ சாமி நீ, கடவு ளீயே.

தத்வ மஸி, தத்வ மஸி, நீயே தெய்வம்.

பூமியிலே நீ கடவு ளில்லை யென்று

புகல்வது நின் மனத்துள்ளே புகுந்த மாயை.

சாமி நீ, யம் மாயை தன்னை நீக்கி

ஸதா காலம், "சிவோஹ" மென்று ஸாதிப்பாயே.

ஸூ. உகூ. இந்த ஜபத்திலிருந்து தனி யறிவின் உணர் வுண்டாகும், இடையூறுகள் நீங்கும்.

தனியறிவு என்பது ஆத்மா. யோக ஸித்திக்கு நேரும் இடையூறுகள் எவை என்பது கீழே ௩೦-ஆம் ஸூத்ரத்தில் கூறப்படும்.

இனி அர்த்தத்திலே சிந்தையை ஆழச் செலுத்தி ஜபம் பண்ணுவதால் முக்தி கூடப் பலிதமாகிற போது, இஹ லோகத்தில் அறிவு, கீர்த்தி, வீர்யம் முதலிய பெருமைகள் வேண்டுவோருக்கு ஜபம் எவ்வளவு தூரம் அனுகூலம் என்பது சொல்ல வேண்டுவதில்லை.

ஸூ. ௩. நோய், உள்ளச் சோர்வு, ஸந்தேஹம்; அஜாக்ரதை, சோம்பர், இந்திரிய விஷயங்களில் பற்றுடைமை, பிழையுடைய காட்சி, யோகபூமி யொன்றை எட்டுதற்குத் திறமில்லாமை, எட்டிய பூமியினின்றும் நழுவுதல்—இவை யோகிக்கு நேரிடும் இடையூறுகளாம்.

நோயில்லாமை யோக ஸாதனத்துக்கு மிகவும் முக்கியமாகும். நோயாளிக்கு யோகஸாதனம் கை கூடாது. நோய் மனத்தின் கற்பனையால் உண்டாகிறது. பொறாமை, லோபம், அஸூயை, கோபம், களவு முதலிய துர்க்குணங்களால் உண்டாகும் பயமே நோய்க்கு ப்ரதான காரணம். எல்லா ஜீவராசிகளும் பரமாத்ம ஸ்வரூப மென்ற ஞான முண்டாய், அதினின்றும் ஸமபாவனை ஏற்பட்டால், பிறகு ஒருவனுக்குப் பயம் செத்துப்போகும். பயம் செத்தாலொழிய நோய் சாகாது. நோய் ஸம்பந்தமான பயங்களை உடனே அழித்துக் கொள்ள முயலுதல் அப்யாஸியின் முதற்கடமை.

உள்ளச் சோர்வினால் சிரத்தைக் குறைவு நேரும். ஸாதனத்துக்கு வேண்டிய ஊக்க மில்லாமல் போய்விடும். இஃதொரு தடை.

மேலும், ஸாதனத்தினின்றும் ஒரு சில ஸாமான்ய ஸித்திகளேனும் தோன்றும் வரை, அடிக்கடி ஸம்சயங்கள் ஜனித்துக்கொண்டே யிருக்கும். இந்த ஸம்சயம் ஒரு தடை. ஊக்கத்தாலும், ஸத்யத்தாலும் ஜயத்தை வெல்லவேண்டும்.

யோக சாஸ்த்ரத்தில் 'பூமி' என்றால் அனுபவநிலை என்றர்த்தம். ஸாதனத்தினால் எய்தும்படிப்படியான சித்த நிலைகளுக்குப் 'பூமி' களென்றும் பெயர்.

ஒருவன் எட்டிய பூமியினின்றும் நழுவி விடாமல் இருப்பதற்கு ஒரே உபாயந் தான் உண்டு. அதாவது, இன்னும் மேலே ஏறிச் செல்ல முயலுதல். எதிலும் மேன்மேலே ஏறாதவன் தான் நிற்கும் நிலையைப் பாதுகாக்க முடியாது. ஏற முயற்சி செய்து கொண்டே போகவேண்டும். இல்லா விட்டால், ப்ரகிருதி உன்னை இறக்கிக்கொண்டே போகும்.

ஸூ. ௩௧. ஸமாதியிலிருந்து நழுவுதல் நேர்ந்தால், அதனுடனே, துக்கம், மனநோவு, மெய்ந்நடுக்கம், பெருமூச்செறிதல் என்பவை தோன்றுகின்றன.

ஸூ. ௩௨. அவற்றை அகற்றுவதற்கு ஒரே தத்துவத்தை அப்யஸிப்பதே உபாயம்.

வ்யா: ஒரே தத்துவம், என்பதற்கு 'ஈசுவரன், என்று சிலர் பொருளுரைக்கிறார்கள். 'யாதாயினு மொரு தத்வம் என்று விஞ்ஞானபிக்ஷு அர்த்தம் சொல்லுகிறார். யாதாயினுமொரு தத்வத்தை எடுத்துக்கொண்டு அதையே தியானம் செய்து பழக்கப்படுத்தினால், மேற்கூறப்பட்ட இடையூறுகள் நீங்கிவிடும்.

இது பொதுப்படையான வார்த்தை. இன்னின்ன தத்துவங்கள் அப்யாஸத்துக் குரியன என்பதைக் கீழே முறையாக விரித்துச் சொல்லுகிறார். இவற்றுள் ஒருவருக்கு வேண்டத் தக்கது பிறருக்கு வேண்டத்தகாத தாகலாம். ஆதலால், அவரவர் தத்தமக் கிணங்கிய அப்யாஸத்தைக் கைப்பற்றிக் கொள்ளுதல் பொருந்தும். அதினின்றும் உள்ளத்தில் அமைதி பிறக்கக் காணலாம்.

ஸூ. ௩௩. சுகம், துக்கம், புண்ணியம் பாவம் இவையுள்ள விஷயங்களில் முறையே நட்பு, கருணை, மகிழ்ச்சி உபேக்ஷை என்பவற்றைச் செலுத்துவதால் சித்தத்திலே அமைதி யுண்டாகும்.

**வ்யா :** சுகமாக வாழ்வோனைக் கண்டு நீ பொறாமைப் படாமல் அவ்னிடம் நட்புச் செலுத்த வேண்டும். துக்கப் படுவோரிடம் கருணை செலுத்தவேண்டும். புண்ணியச்செயல் களைக் கண்டு மகிழ்ச்சி கொள்ள வேண்டும். பாவச் செயல் களைக் கண்டால் அவற்றில் சினமடையாமல் , புறக்கணிப்பு அடைதல் வேண்டும்.

**ஸூ.** ௩௪. விதிப்படி மூச்சை வெளியே விடுவதனாலும், உள்ளே அடக்குவதனாலும் (சித்தம்) அமைதி பெறும்.

இங்ஙனம் சித்த சாந்திக்காக மூச்சை ஆளும் முறைமை 'ப்ராணாயாமம்' என்று சொல்லப்படும். மூச்சை உள்ளே இழுத்தல் பூரகமென்றும், கட்டிவைத்தல் கும்பகமென்றும், வெளியே விடுதல் ரேசகமென்றும் கூறப்படும். ப்ராணாயாமத் தின் பல வகைகளையும், அவற்றுக்குரிய விதிகளையும் ஹடயோக நூல்களிலே கண்டுகொள்ளுக. மனதை யாதொரு சிரமமில்லாமல் மூச்சுப் போக்குவரவிலே செலுத்தி மூச்சை இயற்கைப்படி நடைபெறவிடுதல் ப்ராணாயாமங்களில் சிறந்தது என்று நான் நினைக்கிறேன்.

'ப்ராணன்' என்ற பதம் மூலத்திலுள்ளது. அதற்கு 'மூச்சு' என்பது சரியான மொழி பெயர்ப்பன்று, மூச்சுக் காதாரமான ஜீவசக்திக்குப் ப்ராணன் என்று பெயர். மனதை எங்கே நிறுத்துகிறோமோ அந்த இடத்தில் உயிர் நிற்கிறது. உயிர் நிற்குமிடத்தில் மூச்சு நிற்கும்.

**ஸூ.** ௩௫. (குறிப்பிட்டதொரு) பொருளையுடையதாகிய மனச் செய்கை தோன்றுமிடத்தே, மனம் கட்டுப்படும்.

வ்யா : " விஷயவதீ வா ப்ரவ்ருத்தி ருத்பந்நா

மனஸஸ் ஸ்திதி நிபந்தநீ " என்பது மூலம்.

தெளிவாக, இதன் பொருள் : 'யாதேனுமொரு பயனுடையதாகிய தொழில் செய்யப் புகுமிடத்தே மனம் கட்டுப் பட்டு நிற்கும்' என்பதுதான். எனினும் ஸ்தூலமான வெளிப் படையான பொருளைத் திரஸ்காரம் செய்துவிட்டு, வலிந்து பிற பொருள் கொள்ளுதலே பண்டிதத்தன்மைக்கு லக்ஷண மென்னும் கருத்துடைய புராதன வ்யாக்யாநக்காரர், வேறு பல இடங்களில் செய்திருக்குமாறே, இந்த ஸூத்ரத்துக்கும் வலிந்து பிறபொருள் காட்டி இருக்கின்றனர்.

அவர்கள் சொல்லிய பொருளைச் சோதனை பண்ணி யுக்திக்குப் பொருந்துமா என்று பார்த்த பிறகே கொள்ளுதல் வழக்கமாகவுடைய ஸ்வாமி விவேகாநந்தர் இவ்விடத்தே கவனக் குறைவால் பூர்விக பீடிகைகளையே பரிசோதனையின்றிக் கைக்கொண்டு பின்வருமாறு பொருள் சொல்லுகிறார் :—

'அப்யாஸத்திருந்து இந்திரியங்களுக்குப் புலப்படக் கூடிய புதுமைகளைக் காணுமிடத்தே, மனம் அந்த அப்யாஸத்தில் நிலைபெற்றுவிடும்' என்று விவேகாநந்தர் வ்யாக்யானம் பண்ணுகிறார். அப்பால் பின் வரும் குறிப்புகள் அவரால் சேர்க்கப்படுகின்றன. 'மனத்தை அடிக்கடி மூக்கின் நுனியிலே நிற்கும்படிச் செய்தால் சில தினங்களுக்கப்பால் அற்புதமான ஸுகந்தங்கள் புலப்படுமென்று யோகிகள் சொல்லுகிறார்கள். நாக்கின் அடியில் நிறுத்தினால் விநோதமான ஒலிகள் செவியுறும். நாக்கின் நுனியிலே நிறுத்தினால் நல்ல ருசிகளின் உணர்ச்சி உண்டாகும். இவ்வாறு எத்தனையோ சோதனைகள் சொல்லப்படுகின்றன. அப்யாஸத்தில் ஸம்சயம் ஏற்படுவதால் மேற் செல்ல மாட்டாதவர்களுக்கு இந்த அனுபவங்கள் தோன்றினால் ஸம்சயங்கள் நீங்கி மேல் அபிவிருத்தி செய்ய இடமுண்டாகுமென்பது யோகிகளின் கருத்தாம்.'

**ஸூ.** ௩௬. அல்லது, சோகமில்லாத ஜோதிமயமான மனித நிலை (இதனாலும் சித்த ஸமாதானம் ஏற்படும்.)

**வ்யா :** ஸ்வாமி விவேகாநந்தர் எழுதுகிறார் :—

'ஹ்ருதய ஸ்தலத்தில் ஒரு தாமரை யிருப்பதாக நினைத்துக்கொள். அதன் இதழ்களெல்லாம் கவிழ்ந்து தலைகீழாக இருப்பதாகப் பாவனை செய்துகொள். அந்த ஸமயத்தில் மூச்சை உள்ளே வாங்கு. பிறகு, மூச்சை வெளியே விடும் போது, அத்தாமரை மலர் மல்லாந்து—மேல் நோக்கி—விழுந்து, அதன் இதழ்கள் மலர்ந்து நிற்பதாகப் பாவனை செய். அதனிடையே தேஜோமயமான ஒரு வஸ்து விளங்குவதாக எண்ணு. அந்த ஒளிப்பொருளைத் தியானம் செய்' என்கிறார்.

இந்த இடத்தில் மதுரை நாராயணய்யர் பின் வரும் விஷயங்கள் சொல்லுகிறார் :—

'ஹ்ருதய புண்டரீகத்தில் ஒரு சக்ரமுளது ; அது எட்டுத் தளங்களுடையது ; அது அதோமுகமாக இருக்கிறது. ப்ராணாயாமத்தால் ஊர்த்வமுகமாகத் திருப்பி அதில் மனத்தை

நிறுத்தவேண்டும். அதன் மத்தியில் ஸூர்ய மண்டலமாகிய ஜாக்ரதாவஸ்தையின் இருப்பிடமும் அகாரம் என்ற அக்ஷரமும், அதன் மேல் சந்தர மண்டலமாகிய ஸ்வப்நாவஸ்தையின் இருப்பிடமும் உகாரம் என்ற அக்ஷரமும், அதற்கும்மேல் அக்நி மண்டலமாகிய ஷுஷுப்தி அவஸ்தையின் இருப்பிடமும் மகாரம் என்ற அக்ஷரமும், அதற்கும்மேல் பரவ்யோம ஸ்வரூபம்—துரீயாவஸ்தை—ப்ரஹ்மநாதம் என்று சொல்லப்படும் அர்த்த மாத்திரையும் இருக்கின்றன. அந்தத் தாமரையின் சர்ணிகையில் ஊர்த்வ முகமான ப்ரஹ்ம நாடி இருக்கிறது. அது ஸூர்யாதி மண்டலங்களின் மத்தியில் ப்ரவேசிக்கிறது. அதற்கு மேல் போய்க்கொண்டிருக்கிறது ஸுஷும்நா நாடி. அது வெளியிலுள்ள ஸூர்ய மண்டலங்களைத் தாண்டிப் போகிறது. அது தான் மனத்தின் ஸரியான ஸ்தானம். அதில் தாரணை தியானம் செய்தால் ' சித்த ஸம்வித்" உண்டாகிறது. வஸ்துக்களின் உண்மையான (Thought-Forms) நிலையின் ஸாக்ஷாத்காரம் பெறுகிறான். அந்த ஸ்தானத்தில் மனம் நிற்பதினால், ஸூர்யன், சந்திரன், க்ரஹங்கள், ரத்நங்கள் இவற்றின் தேஜோ ரூபங்கள் நானாவிதமாகத் தோன்றுகின்றன; அதாவது, மனம் அந்த ரூபங்களாகிறது ஸுஷும்நா நாடியை ஆச்ரயித்திருக்கின்றமையால் இந்த மநஸ், ரஜஸ் தமஸ் இரண்டும் குறைந்தும் ஸத்வம் மேலிட்டும் இருக்கிறது. இதனால் அந்த நிலை 'ஜ்யோதிஷ்மதீ' (ஜோதியுடையது) என்று ஸூத்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆயினும், மேற்கூறிய இரண்டு ஸூத்ரங்களின் (௩௫, ௩௬) தெளிவான பொருள் மீட்டு மொரு முறை இங்குச் சுருக்கமாகக் காட்டத்தக்கது.

ஒரு பொருளை யுடைய தொழில் நிகழுமிடத்தே மனம் ஒரு நிலைப்படு மென்பது ௩௫—ஆம் ஸூத்ரக் கருத்து.

துன்பம் யாதுமின்றி ஒளியுடைய மனநிலை, (காதல், அன்பு, ஔஷதம் முதலியவற்றால்) பெறு மிடத்தே. சித்த ஸமாதானம் பிறக்கு மென்பது ௩௬—ஆம் ஸூத்ரக் கருத்து.

**ஸூ. ௩௭.** அல்லது விருப்பப்பொருள் நீங்கிய சித்தத்தினால் மனம் ஒரு நிலைப்படும்.

**வ்யா:** 'வீத ராக விஷயம் வா சித்தம்' என்பது மூலம் இதன் பொருளை நன்கு தெளிவிக்கும் பொருட்டாக ௩௫—ஆம் ஸூத்ரத்திலிருந்து மற்றொரு முறை திருப்பிச் சொல்ல வேண்டும்.

விஷய வதீ வா ப்ரவ்ருத்தி ருத்பந்நா

(அதாவது) விஷய முடைய தொழில் மனதின் நிலையைக் கட்டும்.

விசோகா வா ஜ்யோதிஷ்மதீ. (ரூசு)

சோக மற்ற ஒளியுடைய ப்ரவிருத்தியும் (அங்ஙனமே மனதைக் கட்டும்).

வீத ராக விஷயம் வா சித்தம் (ரூஎ)

விருப்பப் பொருள் நீங்கிய சித்தமும் (அங்ஙனமே மனதைக் கட்டும்).

வா என்னும் இப் பொருள் குறிக்கும் சொல் மூன்று ஸூத்ரங்களிலும் இருத்தல் காண்க. ('வா'—அல்லது).

இங்குப் பண்டைக் காலத்து வ்யாக்யாந கர்த்தாக்களை அனுஸரித்து ஸ்வாமி விவேகாநந்தர் :—

'அல்லது, விருப்பம் நீங்கிய ஒரு சித்தத்தைப் பற்றித் தியானம் செய்யாலாம் என்று பொருளுரைத்துப் பின் வருமாறு விளக்க மெழுதுகிறார் :—

'யாரேனும் ஒரு ஞானியுடைய சித்தத்தைப் பற்றிச் சிந்தனை செய். அச் சித்தம் எல்லா விருப்பங்களும் நீங்கி யிருப்பதை யெண்ணு. இத்தகைய சித்தத்தைப் பற்றித் தியானம் செய்வதால் உன் உள்ளத்திலே அமைதியுண்டா கும்.

இங்ஙனமே மதுரை நாராயணய்யர் உரையில் :— 'அல்லது, ஆசை விட்ட மஹா புருஷர்களை மனம் விஷயீகரித்தலினால் (அது ஸ்தைர்யம் பெறும்)' என்று பொருள் கூறி விட்டுப் பின் வரும் குறிப்பு எழுதியிருக்கிறார் :—

'ஆசை விட்டவர்களான வ்யாஸர் முதலிய மஹர்ஷிகளின் குணங்களைத் தியானித்தல் வேண்டும். அவர்களின் மன நிலையைத் தியானித்தலால், அந்த நிலையை, அப்யாஸம் செய்கிற யோகி பெறுகிறான்.'

'உன் சித்தத்தில் விருப்பம் நீங்கினால் ஸமாதானம் ஏற்படும்' என்று நாம் பொருள் சொல்லுகிறோம். விருப்ப

மற்ற மற்றொரு சித்தத்தின் த்யானத்தால் சாந்தி விளையும். என்று முந்திய வ்யாக்யாநகாரர் வலிந்து பொருள் கொண்டனர். இது தான் பேதம்.

**ஸூ. ௩௯.** அல்லது, கனவிலும் உறக்கத்திலும் உண்டாகிய ஞானத்தைத் தியானம் செய்தல்.

இதனால் சித்த சாந்தி உண்டாகு மென்கிறார். கனவிலே தன்னை அறிதல் ஸாதனத்தால் எளிதாகச் செய்துகொள்ளலாம். நனவிலே எண்ணியதுதான் கனவாக மீண்டும் வருகிறது. ஸ்வப்நத்தில் நாம் இதர லோகங்களுடன் ஸம்பந்தப் படுவதாகவும் இவ்வுலகத்தில் தோன்ற இடமில்லாத அற்புத ஞானம் இதர லோகங்களினின்றும் நமக்குக் கனவிலே எய்தக் கூடுமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். ஸ்வப்நத்தில் நாம் இதர லோகங்களுடனே ஸம்பந்தப்படுகிறோமென்பது மெய்தான்.

ஸங்கீதத்தில் ஸ்வர ஸாதனங்கள்—ஸ, ரி, க, ம, ப, த நி—என ஏழு இருக்கின்றன. ஆனால் நாம் எந்த ஒலியையும் "ஸ" (ஷட்ஜம்) என்று வைத்துக்கொண்டு அதற்குத் தக்கபடி மற்ற—ரி, க, ம, ப, த, நி—பாடலாம்.

நாம் பாடும்போதே, கீழே சில ஸ்வரங்கள் எட்டாதுபோனால் சுருதியை மாற்றிக் கொள்ளுகிறோம். அதாவது—த்ருஷ்டாந்தமாக—முன்பு "க" (காந்தாரம்) அல்லது "ம" (மத்யமம்) சொன்ன இடத்தை இப்போது "ஸ" (ஷட்ஜம்) என்று வைத்துக் கொண்டு அதற்குமேல் அவ் வோசைக்குத் தக்கபடி ரி, க, ம, ப, த, நி, ஏற்றிக் கொண்டு போகிறோம். எப்படி நாம் சொன்னபோதிலும் ஸாதாரண மனிதனுடைய தொண்டையளவு இரண்டரை ஸ்தாயிதான். ஒரு ஸ, ரி, க, ம, ப, த, நி—ஒரு ஸ்தாயி, அதற்கு மேலே ஸ, ரி, க, ம, ப, த, நி மேல் ஸ்தாயி. எடுப்பு கீழேயுள்ளது கீழ்ஸ்தாயி.

இங்ஙனம் ஸாதாரண மனிதனுடைய தொண்டைக்கு இரண்டரை ஸ்தாயிதான் எட்டும். சிலருக்கு மூன்று ஸ்தாயியும், சிலருக்கு இன்னும் அதிகமாகவும் எட்டக் கூடுமென்று சொல்லுகிறார்கள். இருந்தாலும் மூன்றரை ஸ்தாயிக்கு மேலே மனிதத் தொண்டை பேசுதல் ஸாத்யமில்லை.

ஆனால், ஒலியுலகத்தில் அநந்த ஸ்தாயிகள் இருக்கின்றன. கிளிக்குஞ்சு கத்துவதை ஷட்ஜமாக வைத்துக் கொள்வோம். சந்த்ர மண்டலம் இடிந்து பூமிமேல் விழுந்தால் அதிலுண்

டாகும் ஒலியை ஷி கிளிக்குஞ்சின் ஒலியினின்றும் எத்தனை ஸ்தாயி மேலாகக் கணக்கிடலாம்? ஊழிக் காற்று அடிப்ப தாக வைத்துக் கொள்வோம். நமது ஸூர்ய கோளமும் அதனைச் சூழ்ந்த க்ரஹ குடும்பமும் தம்முள்ளே மோதி இடிபட்டுச் சிதறிப் பொடியாவதாகப் பாவனை செய்வோம். அதில் தோன்றும் ஒலி ஷி கிளிக்குஞ்சு ஸ்தாயிக்கு மேலே எவ்வளவு தூரம் போகும்? இங்ஙனம் ஒலி யுலகத்து ஸ்தாயிகள் அநந்தமாயினும் மனிதனுடைய தொண்டைக்கு இரண்டரை ஸ்தாயிகள் மாத்திரமே எட்டுவதுபோல், அவனுடைய செவிப் புலனுக்கும் ஏழு ஸ்தாயிகள்தான் அகப்படு மென்று ஜகதிச சந்த்ர வஸு கணக்குச் சொல்லியதாக ஞாபகமிருக்கிறது.

அதாவது,—எங்ஙனம் கூறுவேன்?—அநந்தமான—எண்ணத் தொலையாத, எண்ண எண்ண எண்ண எண்ண எண்ண எண்ணத் தொலையாத—ஒலிக் கடலில் ஏழு ஸ்தாயி நமது செவிக் கெட்டுமென்றால் நமது செவிப் புலனுடைய சிறுமையை நான் எங்ஙனம் வகுத்துக் காட்டுவேன்?

இதுபோல அநந்தமான—எல்லையில்லாத எல்லையே யில்லாத—ஜ்யோதிக் கடலில் நம்முடைய விழிக்கும் சுமார் ஏழு "ஸ்தாயி" ஒளிதான் தென்படுமென்றும் அதற்கும் மேலும் கீழும் நாம் முழுக் குருடென்றும் ஜகதீச சந்த்ர வஸு சொல்லியிருக்கிறார். ஸ்தாயிக் கணக்கு ஸரியாக ஞாபக மில்லை, எனக்கிப்போது. ஏழுக்கு மேலே போகாது; நிச்சயம் தான் எனக்கு.

ஒளிக் கடலோ பெரிதினும் பெரிது,—எழுத்தில் எங்ஙனம் காட்டுவோம்?—அகண்டம்.

ஒளியோ எல்லையற்றது.

நாமோ துளி; தவிர முழுக் குருடு!

மனிதன் இருளாகக் கருதுவதை ஆந்தை ஒளியாகக் கருதுகிறது. ஒளி விஷயத்தில் ஆந்தை நம்மைக் காட்டிலும் கீழ் "ஸ்தாயி" பழகி யிருக்கிறது. ஆனால் நம்முடைய "ஸ்தாயி" ஆந்தைக்கெட்டாது. பகலில் நாம் ஸாதாரண ஒளியாகக் கருதும் வெயிலொளி ஆந்தைக்குக் கண் கூச்சத்தை விளைவிக்கிறது. நமக்கே ஸூர்யனை நேரே பார்த்தால்—நல்ல பயிற்சியுடையோர் தவிர, ஸாதாரண மனிதருக்கெல்லாம்—கண் கூசுகிறது, பார்க்க முடியாது; பெரும்பாலும் குருடுதான்.

ஆனால் பருந்து ஸூர்யனைக் கூசாமல் பார்க்கும். எனவே, ஒளி விஷயத்தில் நம்மைக் காட்டிலும் பருந்துக்கு மேல் "ஸ்தாயி" எட்டுகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒருநாள் காலையில் பத்மாஸனத்தில் வீற்றிருந்து உதய ஸூர்யனை நோக்கத் தொடங்கியவர் அரை விநாடி கூட அந்த ஸூர்யனை விட்டுச் கண்ணை அப்புறப்படுத்தாமல், நடுப் பகலில் முகத்தை ஸூர்யனுக்கு நேரே தாமரை போல் காட்டியும், அங்ஙனமே நேரமாக நேரமாக முதுகை மல்லாந்து வளைத்துக்கொண்டே, ஸூர்யனை விட்டு விழிகளை விலக்காதபடி மாலை நேரத்தில் அந்த ஸூர்யன் முன்னே (தன் முகத்தை முதுகுப் புறத்தினின்றும் காதலன் முத்தமிடுவதற்கு நின்றபடி மல்லாந்து வளைந்து முகங் காட்டுங் காதலி போல) காட்டியும், இங்ஙனம்—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்—ஒருநாள் முழுதும் யோகப் பயிற்சி செய்தாரென்று சொல்லப்படுகிறது.

எனவே, ஸாதாரண மனிதரைக் காட்டிலும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவருக்கு ஒளி விஷயத்தில் அதிக ஸ்தாயிகள் எட்டின.

இங்ஙனம் கோடி ஸூர்ய ப்ரகாசமுண்டானால்? அநந்தக் கோடானு கோடி ஸூர்யன்கள் ஜகத்திலிருக்கின்றன. அவை ஒளி வீசத்தான் செய்கின்றன. ஆனால் நம்முடைய விழிப் புலன் சிறிது. நாம் மிகச் சிறிய எல்லைதான் பார்க்கிறோம்.

இங்ஙனம் ஜகத்தில் தத்துவங்களெல்லாம் அநந்தமாகவேயிருக்கின்றன. விரிக்கிற் பெருகும்.

இங்ஙனமே, நம்முடைய சைதன்யமும் அநந்த விஸ்தாரமுடையது.

பரமாத்ம சைதந்யத்தின் மஹிமையையே பூர்வ யோகிகள் அந்தக் கோடானு கோடானு கோடானு கோடி ஸூர்ய ஜ்யோதியாக வர்ணித்திருக்கிறார்கள், உபமித்திருக்கிறார்கள்.

எல்லாம்—என்பது ஸர்வத்தின் பெயர்.

எல் என்பது, தமிழில், ஸூர்யனுக்குப் பெயர்.

ஸர்வமென்ற மனக் கொள்கைக்குப் ப்ரதிநிதியாக நம்முடைய முன்னோர் ஸூர்யனை ஆராதனை செய்தது யுக்தமேயாகும்.

'ஸர்வமென்ற மனக் கொள்கை வேறு; ஸர்வமென்ற ஞான லோகம் வேறு; ஸர்வமென்ற டஹிர் லோகம் வேறு; இதற்குள்ளேயே ஸர்வம் திசைமயமான லோகம் வேறு; ஸர்வம் தேஜோ மயமான லோகம் வேறு; கால மயமான ஜகத் வேறு' எனப் பலவாக அநந்த லோகங்கள் தோன்றுமாயினும், ஸர்வம் ஒன்று. அதன் பெயர் கடவுள்.

மண்ணும் அதுவே; வானும் அஃதே. அது அநந்த லோகங்களை அநந்த வஸ்துக்களாலே பெருக்கிய அநந்தாநந்த வஸ்து.

எனவே ஒரு கல்லிலுந் தொழலாம்; பதுமையிலுந் தொழலாம்; அந்த ஸர்வமாகிய கடவுளைப் பெண்ணிலுந் தொழலாம்; ஆணிலுந் தொழலாம்.

ஸர்வமும் அஃதே யெனில், ஸர்வ பதார்த்தங்களும் அதன் ப்ரதிநிதிகளாகக் கருதி வணங்குதற்குரியன அல்லவோ?

மேலே நாம் விளக்கியபடி உணர்வு—அறிவு, சைதந்யம்—அநந்தமாக இருக்கவும், நமக்கு அதில் இரண்டு மூன்று "ஸ்தாயிகள்" மாத்திரமே ஸாதாரண நிலையில் எட்டுகின்றன. மிஞ்சிப் போனால், சிலருக்கு எட்டு ஸ்தாயி ஒன்பது ஸ்தாயிகள் எட்டுகின்றன. அவர்களை மஹாத்மாக்களென்றும், அவதார புருஷர்களென்றுங் கொண்டாடுகிறோம். இது நிற்க.

சைதந்யமாகிய எல்லையற்ற கடலில் நமக்குத் தென்படும் ஓரிரண்டு ஸ்தாயிகளிலுங்கூட நாம் ஆரோஹண அவரோஹண கிரமங்களிலும், ஸ்வரக் கோவைகளிலும், ராக வேற்றுமைகளிலும் எண்ணிறந்த விசித்திர விசித்திரமான அனுபவங்கள் பெறுதல் ஸாத்யமேயாகும். அதுதான் இந்த ஜகத்தில் மஹத்தான ஆச்சர்யம்.

நம்முடைய வரையறுக்கப்பட்ட புலனுணர்வுக்குள்ளே அனந்தங்கள் பல இருக்கின்றன. ஸ்வரங்கள் ஏழுதானே? அப்படி இருந்தும் அவற்றின் கலப்புக்களால் இந்தப் பூமண்டலத்தின் மீது இதுவரை ஏற்பட்டனவும் இப்போது ஏற்பட்டு வருவனவும் இனி ஏற்படப் போவனவு மாகிய ராக பேதங்களை எண்ணில்லாதன. ஜ்யோதி விஷயத்திலும் அப்படியே. நமக்குப் புலனாகக் கூடிய ஜ்யோதி ஸ்தாயிகள் சிலவேயாயினும், இவற்றுள் காணும் வர்ண பேதங்கள் அநந்த மாகும்.

இங்ஙனமே, நம்முடைய ஸாதாரண ஜாக்ர புத்திக்கு—அதாவது, ஸாதாரண மனிதனுடைய ஜாக்ர புத்திக்கு—இட

மாகிய சைதன்ய ஸ்தாயிகள் சிலவேயாயினும், இதற்குள்ளே அநந்தமான ஸம்பவங்கள் நிகழ்ந்து வருதல் வெளிப்படை. இதனுள் அநந்தமான இன்ப வாயில்கள் இருக்கின்றன.

அப்படியிருந்தும், மனிதர் இந்த எல்லைக்குள் தீரத்துடன் ஸஞ்சரிக்கவில்லை. ஸாதாரண ஜாக்ர லோகத்திலும், எவனும் வானத்தில் பருந்து சுற்றுவது போலச் சுற்றுவதைக் காண்பது மிகவும் துர்லபமாகும். இங்கு மானுடர், எலியென்று பொறிக்குள்ளே அகப்பட்டுத் தவிப்பது போலே, ஒரு சில வளையங்களுக்கு உட்பட்டுத் தவிக்கிறார்கள்.

பளீரென்று தீப்பெட்டியினின்றும் ஸூர்யனைப் போய்க் கவ்வக் கூடிய திறமை மனுஷ்ய ஸாதாரண ஜாக்ர புத்திக்கு உண்டு என்பது வெளிப்படை. சித்த யந்திரத்தை வெகு வேகமாகச் சுழற்றிக் கொண்டு போய் அநந்தமான காட்சிகள் காணுந் திறமை ஸாதாரண மனிதனுக்கு ஜாக்ர உணர்வில் உண்டு. ஆனால், அத் திறமையை அவன் நேரே உபயோகப் படுத்துவதில்லை. இது நிற்க. நமக்கு ஸாதாரண ஜாக்ர நிலையில் தோன்றும் இரண்டொரு சைதன்ய ஸ்தாயிகளைத் தவிர இவற்றின் கீழும் மேலும் எண்ணற்ற சைதன்ய ஸ்தாயிகள் உண்டென்று மேலே சொன்னோம். இதை ஒட்டிச் சில தத்துவ சாஸ்திரிகள் இந்த இரண்டொரு சைதன்ய ஸ்தாயிகளுககுக் கீழே இருப்பவற்றுக் கெல்லாம் ஒரு பெயர் கொடுத்துக் 'கீழ்ச் சைதன்யம்' (Sub-conscious) என்றும், ஸாமான்ய மனிதனுடைய ஜாக்ராவஸ்தையிலுள்ள சைதந்ய விஸ்தாரத்தை 'ஸாதாரண சைதன்ய' மென்றும், இந்த எல்லைக்கு மேலேயுள்ள அனந்த ஸ்தாயிகளுக்கும் ஒரு பெயர் கொடுத்து அதை 'மேற் சைதன்யம்' (Super-conscious) என்றும் சொல்லுகிறார்கள்.

'உழக்குள்ளே கிழக்கேது, மேற்கேது? எல்லாம் ஒன்றாய், ஒரே அனந்த மண்டலமான பொருளில் மேலேது, தாழ்வேது? ஸர்வமும் சைதன்யமாகையிலே, சைதன்யப் பெருங் கடலுக்கிடையே ஒரு சில துளிகளைப் பற்றிக்கொண்டு நாம் மற்றப் பகுதியை அதற்கு மேலென்றும் கீழென்றும் வகுக்க இடமுண்டோ?' எனில், உண்டு.

எங்ஙனமெனிலோ, அநந்தமாகிய ஜ்யோதி வெள்ளத்தில் நமக்குத் தென்படும் அளவையே ப்ரமாணமாக வைத்துக் கொண்டு, அதற்கு மேலும் கீழுமுள்ள பகுதிகளுக்கு ஒரே மொத்தமாக ஒளி மிகையென்றும், இருளென்றும் பெயர்கள் கொடுத்துப் பகுத்திருப்பது போலே, என்க.

இங்ஙனம் கீழ்ச் சைதன்யமென்று பொதுப்படையாகக் கூறப்பட்ட அநந்த புவனக் கோவையில், கனவும் ஒரு படியாகச் சில நவீன தத்துவ சாஸ்திரிகளாலே கருதப்படுகிறது. 'மேற் சைதன்ய' வரிசையில் யோகானுபூதி முதலியவை சேர்க்கப்படுகின்றன. எனவே, ஸாதாரணமாக நனவில் தோன்றக் கூடாத சில அனுபவங்கள் கனவிலே தோன்றுதல் அஸாத்யமில்லை யெனினும், ஸாதாரணமாகக் கனவு நனவிலே கண்டதைத்தான் குழப்பிக் குழப்பிச் சித்தரித்துக் காட்டுகிறது.

எனினும், யோக ஸித்தியிலே சில படிகள் ஏறினவர்களுக்குக் 'கீழ்ச் சைதன்ய' லோகத்தில் சில புதிய வெடிப்புக்கள் திறந்து, பூமண்டலத்தின் மத்ய பாகத்தில் மறைந்து கிடைக்கும் அக்நி சில மலைத்திறப்புக்களில் வெளியேறி வருவது போலே, சில அற்புதமான அனுபவங்கள் ஏற்படுதல் ஸாத்யந்தான் என்றும், அவை ஒரு வேளை மேல் லோகங்களினின்றும் (கங்கா ப்ரவாஹம் வானத்தினின்றும் பாதாளத்துக் கிறங்கியது போல்) ஸாதாரண ஜாக்ர உணர்வாகிய புவனத்தைக் கடந்து, (சில ஸமயங்களில் ஸாதாரண ஜாக்ர புத்திக்குத் தெரியாமலே) 'பாதாள சைதன்ய' மண்டலத்தில் இறங்கிக் கனவில் தோன்றக் கூடுமென்றும் மேலே பதஞ்சலி முனிவர் கூறியுள்ள ஸூத்ரத்தினின்றும் ஊஹிக்க இடமுண்டாகிறது.

கனவில் தேவதா ரூபங்கள், அற்புதமான இயற்கைக் காட்சிகள் (அதாவது ஸாதாரணமாக விழிப்பில் காணக் கூடிய பரமாச்சர்யமான இயற்கைக் காட்சிகளினின்றும் வேறுபட்டன) முதலிய வியப்புக்கள் யோகப் படிகளின் மீது மிகவும் சிரமத்துடன் ஏறிச் செல்லும் ஸாதகனுக்குத் தென்படுமாயின் அவற்றை அவன் நனவிலும் சிந்தை செய்வதால் சித்த சாந்தி விளையுமென்பது பதஞ்சலியின் கருத்து. மேலும், அவ்விதமான தேவ ரூபங்கள் ஒரு வேளை நனவிலே கண்ட காட்சிகளின் ப்ரதி பிம்பங்களாகவே யிருக்குமென்று வைத்துக் கொள்ளினும், நனவுக் காட்சிகளைக் காட்டிலுங்கூடச் சில ஸமயங்களில் அவற்றின் கனவு ப்ரதி-சித்திரங்கள் அதிகத் தெளிவுடையனவாக இருப்பதால் அவற்றை நனவில் மீண்டும் சிந்திப்பது சித்த சமாதானத்துக்கு வழியாகக் கூடும்.

**ஸூ. ௩௯. அல்லது, அவரவர் இஷ்டப்படித் தியானம் புரிதலால்.**

**வ்யா :** எந்தப் பொருள் உனக்குப் பிரியமோ அது யாதாயினும் அதைத் தியானம் செய்வதால் சாந்தி பிறக்குமென்பது கருத்து.

**ஸூ. சு0.** இவனுக்குப் பரமாணு முதல் பரம மஹத்வம் வரை எல்லாம் வசமாகும்.

**வ்யா :** இங்ஙனம் சித்த அமைதி எற்படுத்திக் கொண்ட யோகிக்குப் பரமாணு (மிகச் சிறிது) முதல் பரம மஹத்வம் (மிகப் பெருமை) வரை ஜகத்தெல்லாம் வசமாய்விடும்.

**ஸூ : சக.** வ்ருத்திகள் அழி வெய்தும் போது, கொள்வோன், கொள்ளுதல், கொள்ளப்படும் பொருள் மூன்றிலும் பளிங்கு போல் ஓர் நிலையும் ஒரு தன்மையுமான ஸமாபத்தி ஏற்படும்.

**வ்யா :** அதாவது, அஹங்கார ஸம்பந்தமான சித்த வ்ருத்திகள் நீங்கி, மேல் ஸூத்ரங்களில் சொல்லப்பட்ட வழிகளால் சித்த சாந்தி யெய்திய யோகிக்கு, விஷய வஸ்துக்களுடன் எக்காலத்தும் முரண்பாடு தோன்ருது. வர்ணமுடைய பொருள்களுக்கு அருகேயுள்ள பளிங்கு போல அவனுடைய சித்தம் எதிரே கண்ட விஷயத்துடன் சமநிலை எய்தி விடுகிறது. இந்த ஸூத்ரத்தில் 'கொள்வோன்' என்பது ஆத்மா, 'கொள்ளுதல்' அறிதல், 'கொள்ளப்படும் பொருள்' எதிரே அறியத் தக்கபடி நிற்கும் விஷயம்.

'ஸமாபத்தி' என்பது பொருத்தம், லயப்படுதல் ; இஃதே ஸமாதி என்றும் சொல்லப்படும்.

**ஸூ. சஉ.** அதில் சொல், பொருள், உணர்வு மூன்றுங் கலந்து நிற்கும்போது, அஃது ஸவிதர்க்க ஸமாதி எனப்படும்.

தியானத்துக்கு விஷயமாக எடுத்துக் கொள்ளப்படும் பதார்த்தத்தைப் பற்றிய சொல், பொருள், உணர்வு மூன்றுங் கலந்து நிகழும் உளளக் காட்சியை ஸவிதர்க்க சமாதி என்கிருர்.

தியானத்துக்கு ஒரு மனுஷ்யனையே பதார்த்தமாக எடுத்துக் கொள்ளுவோமெனில், அவனைப் பற்றிய பதம், அர்த்தம், ஞானம் இவற்றுடன் கலந்த தியானம் ஸவிதர்க்கமாம் ; அதாவது, பலவித தர்க்கத்துடன் கூடியது.

ஸூ. சங. நினைவு பரிசுத்தமடைவதனாலும், அல்லது ஸ்வரூப சூன்யத்தாலும் அர்த்தம் மாத்திரம் விளங்குவது நிர்விதர்க்க ஸமாதி.

நினைவு பரிசுத்தமடைவதாவது தியான பதார்த்தத்தின் ஸம்பந்தமான இதர ஸம்ஸ்காரங்களின் ஞாபகம் ஏற்படாதிருப்பது. ஸ்வரூப சூன்யமாவது தியானம் செய்வோன் தன் அஹங்கார வடிவத்தை மறத்தல். கேவலம் தியான பதார்த்தத்தைப் பற்றிய வேறு சிந்தனைகள் ஒன்றுமேயில்லாமல் அதன் உள்ளுறைப் பொருள் மாத்திரமாக உனது சித்தம் பரிணமித்து (இதன் செயல்களைக் கூடக் கருதாமல் அதன் உட்பொருள் நீயாகி) நிற்கும் ஸ்மாதி நிர்விதர்க்க மெனப்படுகிறது. (அதாவது, தர்க்க மில்லாதது.) இவையிரண்டும் ஸ்தூல விஷயங்களைப் பற்றி நிகழ்வன.

ஸூ, சச. இதுபோலவே, ஸூக்ஷ்ம விஷயங்களைப் பற்றி இயலும் ஸவிசார நிர்விசார ஸமாதிகள் சொல்லபபடுகின்றன.

ஸ்தூலமான விஷயங்களைப்பற்றி மேற் கூறப்பட்ட ஸவிதர்க்க நிர்விதர்க்க ஸமாதிகளின் பிரிவு முறைப்படியே, ஸூக்ஷ்ம விஷயங்களைப்பற்றி இருவகையாக நிகழ்வன ஸவிசார ஸமாதி என்றும், நிர்விசார ஸமாதி என்றும் பெயர் பெறும். ஸ்தூல விஷயங்களாவன பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்ட பொருள்கள். ஸூக்ஷ்ம விஷயங்களாவன : இந்திரியங்கள், மனம், அஹங்காரம், சித்தம், ப்ரதானம் (அதாவது ஸத்வ ரஜஸ் தமோ குணங்களின் மூலஸ்தனமாகிய ப்ரக்ருதியின் ஆதி நிலை)—இவையே ஸூக்ஷ்ம விஷயங்களாம்.

ஸூ. சரு. ஸூக்ஷ்ம விஷயத் தன்மை மூல ப்ரக்ருதிவரையுரைத்தாம்.

'மூல ப்ரக்ருதி' என்று நாம் மேலே மொழி பெயர்த்திருக்கும் வஸ்துவுக்குப் பதஞ்சலி மஹர்ஷி 'அலிங்கம்' என்று பெயர் சொல்லுகிறார். 'அலிங்கம்' என்றால் 'குறியில்லாதது' என்பது பொருள். அதனை ஸ்ருஷ்டிக்கு முந்திய நிலை யென்பர். இதுவே 'அவ்யக்தம்' என்றும் சொல்லப்படும். ஆத்மா ஸூக்ஷ்மத்துக்கும் அதீதமான வஸ்து.

ஸூ. சசு. இவையே வித்துடைய ஸமாதிகள்.

மேலே கூறப்பட்ட ஸவிதர்க்க நிர்விதர்க்க ஸவிசார நிர்விசார ஸமாதிகளே வித்துடைய ஸமாதிகளென்றும் சொல்லப்

படும். அதாவது, இவை கர்மத் தொடர்பை நீக்குவதில்லை. இவற்றால் புதிய கர்ம விதைகள் (ஸம்ஸ்காரங்கள்) ஏற்படுகின்றன.

**ஸூ. சஎ.** நிர்விசார ஸமாதியில் தொடர்ச்சி பெறுவதனால் அத்யாத்ம ப்ரஸாதம் ஏற்படுகிறது.

அத்யாத்ம ப்ரஸாதம் என்பது ஆத்ம சாந்தி.

**ஸூ. சஅ.** அங்கு அறிவு 'ரிதம்பரா' எனப்படும்.

'ரிதம்பரா' என்றால் 'உண்மையைச் சுமப்பது' என்றர்த்தம். அந்த உணர்ச்சியில் எப்போதும் பரிபூர்ண ஸத்யமே நிற்கும்.

**ஸூ. சகூ.** இது கேள்வியாலும், அனுமானத்தாலும் கிடைக்கும் அறிவினின்றும் வேறுபட்டதாம், விசேஷப் பொருளுடையதாகையால்.

பிறர் சொற்களைக் கேட்பதினின்றேனும்—வேதாகமங்களினின்றேனும்—கிடைக்கும் உணர்வைக் காட்டிலும் இந்த நிர்விசார ஸமாதி நம் அனுபவத்துக்கு வரும்போது, நமக்கு உயர்ந்த விதமான ஞானமொன்று பிறக்கிறதென்று விவேகாநந்தர் சொல்லுகிறார்.

தியானம் செய்யப்படும் ஸூக்ஷ்மப் பொருளை, வெறுமே அதன் செய்கைகளால் கணிப்பதைக் காட்டிலும், அதன் சுத்த ஸ்வரூபத்தில் தியானம் செய்யும் திறமை பெறுவதால் எய்தும் உணர்வு—உள்ளத்தின் நிலை—விசேஷமான இல்புடையது. எதைப்பற்றியும் நமது மனச் சலனத்துடன் நிகழும் ஆராய்ச்சி வடிவமான ஸமாதியைக் காட்டிலும், யதார்த்த ரூபமான தியானமே அறிவில் சுத்தமான தெளிவையும் இன்பத்தையும் விளைவிக்கும். தியான விஷயங்களை நம்முடைய மனம் ஆராய்ச்சி செய்யுமிடத்தே அஹங்காரத தொடர்களைக் கிளப்பிக் குழப்பமுண்டாக்கும். வெறுமே அவற்றுடன் சுத்த ரூபத்தில் கலந்து விடுங்கால் நம்முடைய அஹங்காரம் மடிந்து போகும். எந்த வஸ்துவின் ரூபமும் நம்முடைய அறிவுக் கெய்தி விடும். எனவே, அப்படிப்பட்ட தியானத்தால் நமக்கெவ்விதமான சலிப்பக்களும் நிகழமாட்டா. உண்மை மயமான உணர்வு பிறக்கும்.

நிர்விசார ஸமாதி விஷயமாக, மதுரை நாராயணய்யர் உரையில் காணப்படும் பின்வரும் வசனங்கள் இங்குக் குறிப்பிடத் தக்கன:

'ஸாதாரணமாக ஏனையோருக்கு ஞானம் ஒன்றன்பின் ஒன்ருய் க்ரமமாக உண்டாகிறது. இந்நிலைமையடைந்தானுக்கு அப்படியின்றி ஏககாலத்தில் எல்லா விஷயங்களின் ஞானமும் உண்டாகிறது. இந்நிலையில் உள்ளவன் பிறர் யாராலும் பரிதபிக்கக் கூடாதவனுக அத்தன்மையான உயர்ந்த ஸ்தானத்தை அடைந்து, பர்வதத்தின் மேலுச்சியிலுள்ளவனை போல, ஜனங்களைக் கருணையுடன் பார்க்கிருன். இவ்விஷயம் மஹா பாரதத்தில் சாந்தி பர்வத்தில் சொல்லப்பட்டுள்ளது.'

**ஸூ. ருO. அதனுல் உண்டாகும் ஸம்ஸ்காரம் மற்ற ஸம்ஸ்காரங்களைத் தடை செய்யும்.**

ஸம்ஸ்காரங்களாவன, கர்மங்களாலே சித்தத்தில் மிஞ்சி நிற்கும் கர்ம விதைகள். இந்த ஸம்ஸ்கார விதைகளே நம்முடைய சித்த லோகத்தைக் கெடுக்கின்றன. புராதன கர்மங்களால் நாம் எத்தனை தூரம் கட்டுப்படுகிறேமென்பதை ஸாதாரண மனிதன் அறியமாட்டான்.

ஒரு செய்கை நம்முடைய சித்தத்தில் ஒரு முத்திரை போடுகிறது. அந்த முத்திரை ஞாபகமெனப்படுவது மட்டுமன்று. கீழ்ச் சைதன்ய மண்டலம் வரையடிப்பது. உனது சைதன்ய ஜகத்தில் ஜாக்ரத் பூமியை மட்டுமேயன்றி அஜாக்ரத்த சைதன்ய பாதாளங்களிலும் போய் அடிப்பது.

ஒருமுறை ஒரு சித்தச் செய்கை நிகழ்ந்தால் அது மீள மீள நிகழும். ஒரு முறை செய்த தொழிலை மீட்டு மீட்டும் செய்தல் இன்றியமையாததாக நேரும்.

"Qui a bu, boria" என்பது பிரஞ்சுப் பழமொழி. இதன் பொருள் :—"(இதற்கு முன்னே) குடித்தவன் (இனியும்) குடிப்பான்."

ஒரு முறை பொடியை மூக்கிலே செலுத்திஞல், முதல் தரம் செலுத்தும்போது நரகம் போலிருக்கும், அப்பால் எங்குப் பொடியைக் கண்டாலும் மூக்கூறும். ஒரு முறை பேனுககத்தி திருடினவன் கையில் பின்பு பேனுக்கத்தியைக் கண்டபோதெல்லாம் ஊரலெடுக்கும்.

ஒரு முறை ஒருவரை மிருகத்தனமாகத் தூஷணை செய்தோம், அல்லது அடித்தோம்—அல்லது வேறு வகைகளில் ஒருவருக்குத் தீங்கு விளைவித்தோமாஞல், பிறகு அவர்களைக் காணும் பொழுதெல்லாம், நினைக்கும்பொழுதெல்லாம் மனம் அசாந்தியடையும். தீய கர்ம ஸம்ஸ்காரங்கள் மீண்டும்

அதிகத் தீச் செயல்களாய், மீண்டும் அதிகத் தீய ஸம்ஸ்காரங்களாய், அவற்றினின்றும் புதிய பல தீய செயல்களாய், இங்ஙனம் தீராத சங்கிலியாக நடைபெறும், நல்ல கர்மங்களும் அங்ஙனமே. இவற்றுள் நல்ல கர்ம ஸம்ஸ்காரங்கள் தீய கர்ம ஸம்ஸ்காரங்களைப் பெரும்பாலும் குறுக்கவும், நசுக்கவும், வற்றடிக்கவும், சுண்டுவிக்கவும், பாழாக்கவும், வல்லன. ஆனாலும் பரிபூர்ணமாக அழித்து விடமாட்டா. ஏனெனில் சித்த லோகத்தில் ஸாதாரண ஜீவனுக்கு—அதாவது யோகஸாதனத்தாலே கைவல்ய பதவி பெறாத ஜீவனுக்கு—நல்ல—ஸம்ஸ்காரங்களைக் காட்டிலும் தீய ஸம்ஸ்காரங்கள் அதிக வேகத்துடனும் ஸம்ருத்தியுடனும் பயிராவதாகச் சொல்ல இடமில்லையெனினும், இரண்டும் ஸமபலத்துடனே வளர்கின்றன. தீயதை நல்லது அழிப்பது போலவே, சில ஸமயங்களில் நல்லதைத் தீயது கெடுக்கிறது. ஆகவே இந்த ஸம்ஸ்கார யுத்தத்தால் ஜீவன் தனது சித்தம் நரக நிலையிலிருப்பது கண்டு, அதையும் அதன் புறக்கோலமாகிய சரீரத்தையும், உதறி எறிந்துவிடுகிறது. இங்ஙனம் எறிதலே மரணம் என்று சொல்லப்படும்.

ஸர்வ ஜீவராசிகளும் மரணமடைகின்றன. இதன் காரணம் யாது? ஜீவலோகமுழுவதிலுமே நல்ல ஸம்ஸ்காரங்களைக் காட்டிலும் [அதாவது, ஜீவஸம்ரக்ஷணைக்குரிய ஸம்ஸ்காரங்களைக் காட்டிலும்] தீய ஸம்ஸ்காரங்களே அதிக வேகத்துடன் வளர்கின்றனவென்று புலப்படுகிறது.

அங்ஙனமன்று. ஏனெனில், உயிர்கள் மேன்மேலும் புதியன புதியனவாகத் தோன்றி வருதலால்.

எனவே, ஜீவலோகப் பொதுமையில் நல்ல ஸம்ஸ்காரங்களே வெற்றி பெற்று வருகின்றன. மரணம் வெல்லவில்லை. உயிரே வெற்றியடைந்து கொண்டு வருகிறது. இன்று வரை பூமியின் மீது செத்த ஜீவன்களின் தொகை அதிகமா? மிஞ்சிய உயிர்களின் தொகை அதிகமா? மிஞ்சியவற்றின் தொகை அதிகம். ஸந்தேஹமென்ன இதிலே? வெளிப்படை.

உயிர்தான் இதுவரை வெற்றியடைந்து வருகின்றது.

நல்ல ஸம்ஸ்காரங்களே ஜயம் பெற்று வருகின்றன.

இதனை இன்னும் சாஸ்திர ரூபத்தில் விவகரிப்போம். உயிரை மரணத்தால் அழிக்க முடியாது. உயிர் மழையை மரணத்தீ வற்றடித்தல் ஸாத்தியமில்லை.

உயிருக்கும் சாவுக்கும் சண்டை நடக்கிறது.

ஜீவன் ஸாக்ஷியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறான். ஜீவன் ஸஹஸ்ர கோடிகளாக விளங்குகிறானெனினும் ஜீவலோகம் ஒன்றே.

உயிர்த்தலுக்கு அனுகூலமான குணங்கள் பொறுமை, அன்பு, துணிவு முதலியன. சாவுக்கு அனுகூலமான குணங்கள் பொறாமை, பகைமை, பயம் முதலியன.

உயிருக்கனுகூலமான குணங்களே தேவர்கள்.

சாவுக்கனுகூலமான குணங்கள் அஸுரர்.

தேவாஸுர யுத்தம் முடிவின்றி நடைபெற்று வருகிறது, ஜகத்தாகிய நாடக சாலையில்; பரமாத்மாவாகிய ராஜாதி ராஜன் ஸாக்ஷியாக நின்று பார்த்துக் கொண்டிருக்கிறான். இது நிற்க.

ஸம்ஸ்கார விதைகளை அப்போதப்போது புதுப்பித்தலே நன்று. பழைய கர்ம விதைகளால் நமக்குப் பயனில்லை.

நாம் ஒரேயடியாக எவ்விதமான கர்மபந்த விதைகளுமில்லாமல் பரமமுக்தி நிலை பெற முயலவேண்டும்.

படிப்படியாக முக்தியடையவேண்டி முயற்சி பண்ணுவோன் ஒரு போதும் முக்தி பெறமாட்டான். படீரென்று கர்மச் சங்கிலியை ஒரு தடவையாக அறுத்தெறிந்து விடவேண்டும்.

# பகவத் கீதை

## முன்னுரை

——: 0 :——

க

புத்தியிலே சார்பு எய்தியவன், இங்கு, நற் செய்கை தீச் செய்கை இரண்டையும் துறந்து விடுகின்றான். ஆதலால் யோக நெறியிலே பொருந்துக. யோகம் செயல்களிலே திறமையாவது. (கீதை, 2-ஆம் அத்தியாயம்; 50-ஆம் சுலோகம்.)

இஃதே கீதையில் பகவான் செய்யும் உபதேசத்துக்கெல்லாம் அடிப்படையாம். புத்தியிலே சார்பு எய்தலாவது, அறிவை முற்றிலும் தெளிவாக மாசுமறுவின்றித் திருத்தல். தெளிந்த புத்தியே ஷ சுலோகத்தில் புத்தி என்று சொல்லப்படுகிறது. அறிவைத் தெளிவாக நிறுத்திக்கொள்ளுதலாவது யாதென்றால், கவலை நினைப்புக்களும் அவற்றுக்கு ஆதாரமான பாவ நினைப்புக்களுமின்றி அறிவை இயற்கை நிலைபெறத் திருத்துதல்.

'நீங்கள் குழந்தைகளைப் போல ஆலைன்றி, மோக்ஷ ராஜ்யத்தை எய்தமாட்டீர்கள்' என்று யேசு கிறிஸ்து சொல்லியதும் இதே கருத்துக்கொண்டுதான்.

'குழந்தைகளைப்போல ஆய்விடுங்கள்' என்றால், உங்களுடைய லௌகிக அனுபவங்களை யெல்லாம் மறந்து விடுங்கள்; நீங்கள் படித்த படிப்பை யெல்லாம் இழந்து விடுங்கள்; மறுபடிச் சிசுக்களைப்போலே தாய்ப் பால் குடிக்கவும், மழலைச் சொற்கள் பேசவும் தொடங்குங்கள்' என்பது கொள்கையன்று. 'ஹிருதயத்தைக் குழந்தைகளின் ஹிருதயம் போலே நிஷ்களங்கமாகவும் சுத்தமாகவும் வைத்துக் கொள்ளுங்கள்' என்பது கருத்து.

ஹிருதயம் தெளிந்தாலன்றி, புத்தி தெளியாது. ஹிருதயத்தில் பரிபூர்ணமான சுத்த நிலை எற்படும் வரை, புத்தி இடையிடையே தெளிந்தாலும், மீட்டு மீட்டும் குழம்பிப்போய்விடும்.

ஹிருதயம் சுத்தமானால் தெளிந்த புத்தி தோன்றும். பகவான் சொல்லுகிறார் :—'அந்த அறிவுத் தெளிவிலே நிலை பெற்று நில், அர்ஜுனா' என. அப்போது நீ செய்யும் செய்கை யாதாயினும், அது நற் செய்கையாம். நீ ஒன்றும் செய்யாதே மனம் போனபடி இருப்பின் அஃதும் நன்றாம். நீ நற்செய்கை தீச் செய்கை என்ற பேதத்தை மறந்து, உனக்கு இஷ்டப்படி ஏது வேண்டுமாயினும் செய்யலாம். ஏனென்றால் நீ செய்வதெல்லாம் நன்றாகவே முடியும். உனக்குப் புத்தி தெளிந்து விட்டதன்றோ? புத்தி தெளிவுற்ற இடத்தே, உனக்குத் தீயன செய்தல் ஸாத்யப்படாது. ஆதலால், நீ நல்லது தீயது கருதாமல் மனம் போனபடி யெல்லாம் வேலை செய்யலாம்.

இனி, இங்ஙனம் உரை கொள்ளாதபடி நற் செய்கை தீச் செய்கை, அதாவது, எல்லா விதமான செய்கையையும் துறந்துவிட்டு 'அர்ஜுனா, நீ எப்போதும் தூங்கிக்கொண்டே இரு' என்று கடவுள் உபதேசம் பண்ணியதாகக் கருதுதல் வெறும் மடமையைத் தவிர வேறொன்றுமில்லை.

ஏனென்றால் கடவுளே மேலே மூன்றாம் அத்யாயத்தில் பின் வருமாறு சொல்லுகிறார்:—'மேலும், எவனும் ஒரு க்ஷண மேனும் செய்கையின்றி இருத்தல் இயலாது. எல்லா உயிர்களும் இயற்கையில் தோன்றும் குணங்களால் தமது வசமின்றியே தொழிலில் பூட்டப்படுகின்றன' என.

ஆதலால் மனிதன் தொழில் செய்துதான் தீரவேண்டும். எப்போதும் தூங்கக் கும்பகர்ணனாலேகூட இயலாது. அவனுக்குக்கூட ஆறு மாஸ காலம் விழிப்பு உண்டு. ஆனால் நீ தொழில் செய்யுமிடத்தே, அதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கு மனமுடைந்து ஓயாமல் துன்பப்பட்டுக்கொண்டே தொழில் செய்யும் உலகத்தாரைப்போலே தொழில் செய்யாதே. ஸ்ரீ பகவான் சொல்லுகிறான்:—'அர்ஜுனா, உனக்குத் தொழில் செய்யத்தான் அதிகாரம் உண்டு. பயன்களில் உனக்கு எவ்வித அதிகாரமும் எப்போதும் இல்லை' என.

ஆதலால், கடவுள் சொல்லுகிறார்:—'கர்மத்தின் பயனிலே பற்றுதலின்றித் தான் செய்யவேண்டிய தொழிலை எவன் செய்கிறானோ, அவனே துறவி; அவனே யோகி' என்று.

அறிவுத் தெளிவைத் தவற விடாதே. பின் ஓயாமல் தொழில் செய்து கொண்டிரு நீ எது செய்தாலும் அது நல்ல தாகவே முடியும். நீ சும்மா இருந்தாலும், அப்போது உன் மனம் தனக்குத்தான் ஏதேனும் நன்மை செய்துகொண்டே இருக்கும். உடம்பினுல் செய்யப்படும் தொழில் மாத்திரமே தொழிலன்று. மனத்தால் செய்யப்படும் தொழிலும் தொழிலேயாம். ஜபம் தொழில் இல்லையா? மனனம் தொழில் இல்லையா? சாஸ்த்ரங்களெல்லாம், கவிதைகளெல்லாம், நாடகங்க ளெல்லாம், சட்டங்களெல்லாம், வேதங்களெல்லாம், புராணங்களெல்லாம், கதைகளெல்லாம், காவியங்களெல்லாம், தொழில்கள் அல்லவா? இவை எல்லாம் உடம்பாற் செய்வதின்றி மனத்தாற் செய்யப் படுவன அன்றோ?

அறிவுத் தெளிவைக் கலங்க விடாதே.

அப்பால், -யோகம் பண்ணு. எதன் பொருட்டெனில், 'யோகமே செய்கைகளில் திறமையாவது' என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிறுர்.

தொழிலுக்குத் தன்னைத் தகுதியுடையவனுகச் செய்து கொள்வதே யோகம் எனப்படும்.

யோகமாவது ஸமத்வம். 'ஸமத்வம் யோக உச்யதே. அதாவது, பிறிதொரு பொருளைக் கவனிக்குமிடத்து, அப் போது மனத்தில் எவ்விதமான சஞ்சலமேனும், சலிப்பேனும் பயமேனும் இன்றி, அதை ஆழ்ந்து, மனம் முழுதையும் அதனுடன் லயப்படுத்திக் கவனிப்பதாகிய பயிற்சி.

நீ ஒரு பொருளுடன் உறவாடும்போது, உன் மனம் முழுதும் அப் பொருளின் வடிவமாக மாறிவிடவேண்டும். அப்போது தான் அந்தப் பொருளை நீ நன்ருக அறிந்தவனுவாய்.

'யோகஸ்த: குரு கர்மாணி' என்று கடவுள் சொல்லு கிறுர். 'யோகத்தில் நின்று தொழில்களைச் செய்' என.

யோகி தன் அறிவைக் கடவுளின் அறிவு போல விசாலப் படுத்திக்கொள்ளுதல் இயலும். ஏனென்ருல் ஊன்றிக் கவனிக்கும் வழக்கம் அவனுக்குத் தெளிவாக அர்த்தமாய் விடுகிறது. ஆதலால் அவனுடைய அறிவு தெய்வீகமான விசாலத் தன்மை பெற்று விளங்குகிறது. அவனுடைய அறிவுக்கு வரம்பே கிடையாது.

எனவே, அவன் எங்கும் கடவுள் இருப்பதைக் காண்கிருன்.

உ

வேதத்தின் கொள்கைகளை விளக்கும் பொருட்டாகவே பகவத் கீதை செய்யப்பட்டது. ரிக் வேதத்திலுள்ள புருஷ ஸூக்தம் சொல்லுகிறது. 'இஃதெல்லாம் கடவுள்' என்று. இந்தக் கருத்தையொட்டியே கீதையிலும் பகவான். 'எவன் எல்லாப் பொருள்களிலும் ஆத்மாவையும், ஆத்மாவில் எல்லாப் பொருள்களையும் பார்க்கிறானோ, அவனே காட்சி யுடையான்' என்கிறார்.

நீயும் கடவுள். நீ செய்யும் செயல்களெல்லாம் கடவு ளுடைய செயல்கள். நீ பந்தத்தில் பிறப்பதும் கடவுளுடைய செயல். மேன்மேலும் பல தளைகளை உனக்கு நீயே பூட்டிக் கொள்வதும் கடவுளுடைய செயல். நீ முக்தி பெறுவதும் கடவுளுடைய செயல்.

'ஆனால் நான் எதற்காகத் தளை நீங்கும்படிப் பாடுபட வேண்டும்? எல்லாம் கடவுளுடைய செய்கையாய் இருக்கும் போது முக்தியடையும்படி நான் என் முயற்சி செய்ய வேண்டும்?' என்று ஒருவன் கேட்பானாயின், அதற்கு நாம் கேட்கிறோம்: 'முக்தியாவது யாது?'

எல்லாத் துயரங்களும், எல்லா அச்சங்களும் எல்லாக் கவலை களும் நீங்கி நிற்கும் நிலையே முக்தி. அதனை எய்தவேண்டு மென்ற விருப்பம் உனக்கு உண்டாயின், நீ அதற்கு உரிய முயற்சிசெய். இல்லாவிட்டால், துன்பங்களிலே கிடந்து ஓயாமல் உழன்று கொண்டிரு. உன்னை யார் தடுக்கிறார்கள்? ஆனால், நீ எவ்விதச் செய்கை செய்தபோதிலும், 'அது உன்னுடைய செய்கை இல்லை, கடவுளுடைய செய்கை' என்பதை அறிந்துகொண்டு அதனால் உனக்கு நன்மை விளையும் என்று சாஸ்த்ரம் சொல்லுகிறது. 'ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்' என்பது ஸநாதன தர்மத்தின் ஸித்தாந்தம். எல்லாம் கடவுள் மயம். எல்லாத் தோற்றங்களும், எல்லா வடிவங்களும், எல்லா உருவங்களும், எல்லாக் காட்சிகளும், எல்லாக் கோலங்களும், எல்லா நிலைமைகளும், எல்லா உயிர்களும், எல்லாப் பொருள்களும், எல்லாச் சக்திகளும், எல்லா நிகழ்ச்சிகளும், எல்லாச் செயல்களும்—எல்லாம் ஈசன் மயம். [ஆதலால், எல்லாம் ஒன்றுக்கொன்று ஸமானம்:] 'ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம் யத் கிஞ்ச ஜகத்யாம் ஜகத்'

என்று ஈசாவாஸ்யோபநிஷத் சொல்லுகிறது. அதாவது :— 'இவ்வுலகத்தில் நிகழ்வது யாதாயினும் அது கடவுள் மயமானது' என்று பொருள்படும்.

இந்தக் கருத்தையே ஸ்ரீ கிருஷ்ணன் பகவத் கீதையில், 'இவ் வுலகனைத்திலும் நிரம்பிக் கிடக்கும் கடவுள் அழிவில்லாதது என்று உணர்' என்று சொல்லுகிறார்.

எனவே, எல்லாம் கடவுள் மயமாய், எல்லாச் செயல்களும் கடவுளின் செயலாக நிற்கும் உலகத்தில், எவரும் கவலைப் படுதலும், துயர்ப்படுதலும் அறியாமை யன்றோ ?

'எல்லாம் சிவன் செயல்' என்றால், பின் எதற்கும் நான் ஏன் வருத்தப்படவேண்டும் ? 'இட்டமுடன் என் தலையில் இன்னபடி யெனறெழுதிவிட்ட சிவன் செத்துவிட்டானோ ?'

நக்ஷத்ரங்களெல்லாம் கடவுள் வலியால் சுழல்கின்றன. திரிலோகங்களும் அவனுடைய சக்கரத்தில் ஆடுகின்றன. நீ அவன். உன் மனம், உன் மனத்தின் நினைப்புக்கள் எல்லாம் அவனே. "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்"— அங்ஙனமாக, மானுடா, நீ ஏன் வீணாகப் பொறுப்பைச் சுமக்கிறாய் ? பொறுப்பை யெல்லாம் தொப்பென்று கீழே போட்டுவிட்டு ஸந்தோஷமாக உன்னால் இயன்ற தொழிலைச் செய்து கொண்டிரு. எது எப்படியானால் உனக்கு என்ன ? நீயா இவ் வுலகைப் படைத்தாய் ? உலகம் என்னும்போது உன்னைத் தவிர்ந்த மற்ற உலகத்தையெல்லாம் கணக்கிடாதே. நீ உட்பட்ட உலகத்தை, உனக்கு முந்தியே உன் பூர்வ காரணமாக நின்று உன்னை ஆக்கி வளர்த்துத் துடைக்கும் உலகத்தை, மானுடா, நீயா படைத்தாய் ? நீயா இதை நடத்துகிறாய் ? உன்னைக் கேட்டா நக்ஷத்ரங்கள் நடக்கின்றன ? உன்னைக் கேட்டா நீ பிறந்தாய் ? எந்த விஷயத்துக்கும் நீ ஏன் பொறுப்பை வஹித்துக்கொள்கிறாய் ?

௩

கடவுள் சொல்லுகிறார் :—"லோபமும், பயமும், சினமும் அழிந்து, என் மயமாய், என்னைச் சார்ந்தோராய், ஞானத் தவத்தால் தூய்மை பெற்றோர் பலர் எனது தன்மை எய்தி யுள்ளார்" (கீதை, 4-ம் அத்யாயம் ; 10-ம் சுலோகம்). இந்தச் சுலோகத்தில் ஒருவன் இஹ லோகத்திலேயே ஜீவன் முக்தி பெற்று ஈசுவரத் தன்மை அடைவதற்குரிய உபாயம்

பகவானால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "ஞானத்தைக் கடைப் பிடி. அதனையே தவமாகக்கொண்டு ஒழுகு. சினத்தை விடு. விருப்பத்தை விடு. என்னையே சரணாகக்கொண்டு என்னுடன் லயித்திரு. நீ எனது தன்மை பெறுவாய்" என்று கடவுள் சொல்லுகிறார்.

எல்லாச் செயல்களையும் கடவுளுக்கென்று ஸமர்ப்பித்து விட்டுப் பற்றுதல் நீக்கி எவன் தொழில் செய்கிறானோ அவனைப் பாவம் தீண்டுவதில்லை, தாமரையிலைமீது நீர்போலே. (கீதை, 5-ம் அத்யாயம்; 10-ம் சுலோகம்.)

சால நல்ல செய்தியன்றோ, மானுடர்காள், இஃது உங்களுக்கு? பாவத்தைச் செய்யாமலிருக்கும் வழி தெரியாமல் தவிக்கும் மானுடரே, உங்களுக்கு இந்தச் சுலோகத்தில் நல்வழி காட்டியிருக்கிறான் கடவுள். ஈசனைக் கருதி, அவன் செயலென்றும், அவன் பொருட்டாகச் செய்யப்படுவதென்றும் நன்கு தெளிவெய்தி, நீங்கள் எத் தொழிலைச் செய்யப் புகுந்தாலும், அதில் பாவம் ஒட்டாது. தாமரையிலை மீது நீர் தங்காமல் நழுவி ஓடி விடுவதுபோல், உங்கள் மதியைப் பாவம் கவர்ந்து நிற்கும் வலியற்றதாய், உங்களைவிட்டு நழுவி யோடிப்போய்விடும்.

ச

"மனிதனுக்குச் சொந்தமாக ஒரு செய்கையும் கிடையாது. செய்யும் திறமையும் அவனுக்குக் கடவுள் ஏற்படுத்தவில்லை. கர்மப் பயனை அவன் எய்துவதுமில்லை. எல்லாம் இயற்கை யின்படி நடக்கிறது." (கீதை, 5-ம் அத்யாயம்; 14-ம் சுலோகம்.)

எனவே, அவன் செய்கைகளில் எவ்விதப் பொறுமையும், சஞ்சலமும் எய்த வேண்டா. தன் செயல்களுக்கு இடையூறாக நிற்குமென்ற எண்ணத்தால் அவன் பிற உயிர்களுடன் முரண்படுதலும் வேண்டா.

"கல்வியும் விநயமு முடைய அந்தணனிடத்திலும், மாட்டினிடத்திலும், யானையினிடத்திலும், நாயினிடத்திலும், அதை யுண்ணும் சண்டாளனிடத்திலும் அறிஞர் ஸமமான பார்வை யுடையோர்" (5-ஆம் அத்யாயம், 18-ஆம் சுலோகம்) என்று பகவான் சொல்லுகிறார்.

எனவே, கண்ணபிரான் மனிதருக்குள் ஜாதி வேற்றுமையும், அறிவு வேற்றுமையும் பார்க்கக் கூடாதென்பது மட்டுமேயன்றி எல்லா உயிர்களுக்குள்ளேயும் எவ்வித வேற்றுமையும் பாராதிருத்தலே ஞானிகளுக்கு லக்ஷணமென்று சொல்லுகிறார்.

எல்லாம் கடவுள் மயம் அன்றோ? எவ் வுயிரிலும் விஷ்ணு தானே நிரம்பி யிருக்கிறான்? 'ஸர்வமிதம் ப்ரஹ்ம.' பாம்பும் நாராயணன். நரியும் நாராயணன். பார்ப்பானும் கடவுளின் ரூபம்; பறையனும் கடவுளின் ரூபம். இபபடி இருக்க ஒரு ஜந்து மற்றொரு ஜந்துவை எக்காரணம் பற்றியும் தாழ்வாக நினைத்தல் அஞ்ஞானத்துக்கு லக்ஷணம். அவ்விதமான ஏற்றத் தாழ்வு பற்றிய நினைப்புக்களுடையோர் எக்காலத்தும் துக்கங்களிலிருந்து நிவிர்த்தி யடையமாட்டார். வேற்றுமையுள்ள இடத்தில் பயம் உண்டு; ஆபத்து உண்டு; மரணம் உண்டு. எல்லா வேற்றுமைகளும் நீங்கி நிற்பதே ஞானம். அதுவே முக்திக்கு வழி.

ரு

பகவத் கீதை தர்ம சாஸ்த்ரமென்று மாத்திரமே பலர் நினைக்கிறார்கள். அதாவது, மனிதனை நன்கு தொழில் புரியும்படித் தூண்டி விடுவதே அதன் நோக்கமென்று பலர் கருதுகிறார்கள். இது சரியான கருத்தன்று. அது முக்கியமாக மோக்ஷ சாஸ்த்ரம். மனிதன் ஸர்வ துக்கங்களிலிருந்தும் விடுபடும் வழியைப் போதித்தலே இந்நூலின் முதற் கருத்து. ஏனென்றால், தொழில் இன்றியமையாதது. அங்ஙனமிருக்க, அதனைச் செய்தல் மோக்ஷ மார்க்கத்துக்கு விரோதமென்று பல வாதிகள் கருதலாயினர். அவர்களைத் தெளிவிக்கும் பொருட்டாகவே, கண்ணபிரான் கீதையில், முக்கியமாக மூன்றும் அத்யாயத்திலும் பொதுப்படையாக எல்லா அத்யாயங்களிலும், திரும்பத் திரும்பத் திரும்பத் 'தொழில்செய், தொழில்செய்; தொழிலை விட்டுவிடாதே; தொழில் செய், தொழில் செய்' என்று போதிக்கிறார். இதினின்றும், அதனை வெறுமே தொழில் நூல் என்று பலர் கணித்து விட்டார்கள்.

இங்குத் தொழில் செய்யும்படித் தூண்டியிருப்பது முக்கியமன்று; அதனை என்ன நிலையிலிருந்து, என்ன மாதிரியாகச் செய்யவேண்டுமென்று பகவான் காட்டியிருப்பதே மிக மிக முக்கியமாகக் கொள்ளத்தக்கது.

பற்று நீக்கித் தொழில் செய்; பற்று நீக்கி, பற்று நீக்கி, பற்று நீக்கி;—பற்று நீக்கி—இதுதான் முக்கியமான பாடம். தொழில்தான் நீ செய்து தீரவேண்டியதாயிற்றே ? நீ விரும்பினாலும் விரும்பாவிடினும் இயற்கை உன்னை வற்புறுத்தித் தொழிலில் மூட்டுவதாயிற்றே? எனவே, அதை மீட்டும் மீட்டும் சொல்வது கீதையின் முக்கிய நோக்கமன்று. தொழிலின் வலைகளில் மாட்டிக்கொள்ளாதே. அவற்றால் இடர்ப்படாதே. அவற்றால் பந்தப்படாதே, தளைப்படாதே - இதுதான் முக்கியமான உபதேசம். எல்லா விதமான பற்றுக்களையும் களைந்து விட்டு, மனச் சோர்வுக்கும், கவலைக்கும், கலக்கத்துக்கும் பயத்துக்கும் இவையனைத்திலும் கொடியதாகிய ஐயத்துக்கும் இடங் கொடாதிரு. 'ஸம்சயாத்மா விநச்யதி'—'ஐய முற்றோன் அழிவான்' என்று கண்ணபிரான் சொல்லுகின்றான்.

"ஆத்மாவுக்கு நாசத்தை விளைவிப்பதாகிய நரகத்தின் வாயில் மூன்று வகைப்படும்; அதாவது காமம், குரோதம், லோபம். ஆதலால் இம் மூன்றையும் விட்டு விடுக." இவற்றுள் கவலையையும் பயத்தையும் அறவே விட்டுவிட வேண்டும். இந்த விஷயத்தைப் பகவத் கீதை சுமார் நூறு சுலோகங்களில் மீட்டும் மீட்டும் உபதேசிக்கிறது. அதற்கு உபாயம் கடவுளை நம்புதல். கடவுளை முற்றிலும் உண்மையாகத் தமது உள்ளத்தில் வெற்றியுற நிறுத்தினாலன்றி, உள்ளத்தைக் கவலையும் பயமும் அரித்துக்கொண்டுதான் இருக்கும். கோபமும் காமமும் அதனை வெதுப்பிக்கொண்டுதான் இருக்கும். அதனால் மனிதன் நாசமடையத்தான் செய்வான்.

௬

'பொலிக, பொலிக,' பொலிக; போயிற்று வல்லுயிர்ச் சாபம்; நலியும் நரகமும் நைந்த; நமனுக் கிங்கியாதொன்று மில்லை; கலியுங் கெடும், கண்டுகொண்மின்' என்று நம்மாழ்வார் திருவாய்மொழியிற் கூறிய நம்பிக்கையை உள்ளத்தில் நிலைநிறுத்திக்கொள்ளவேண்டும். இதற்குப் பக்திதான் ஸாதனம். பக்தியாவது 'ஈசன் நம்மைக் கைவிடமாட்டான்' என்ற உறுதியான நம்பிக்கை.

"வையகத்துக் கில்லை மனமே, உனக்கு நலஞ்
செய்யக் கருதி இது செப்புவேன்—பொய்யில்லை;
எல்லா மனிக்கும் இறை நமை யுங் காக்கு மென்ற
சொல்லா லழியுந் துயர்."

இவ் விஷயத்தைக் குறித்து ஸ்ரீ பகவான் பின் வருமாறு திருவாய் மலர்ந்தருளியிருக்கிறான் :—

'எல்லா ரஹஸ்யங்களைக் காட்டிலும் பெரிய ரஹஸ்யமாகிய என் இறுதி வசனத்தை உனக்கு மீட்டும் ஒரு முறை சொல்லுகிறேன் ; கேள், நீ எனக்கு மிகவும் இஷ்டனாதலால் உனக்கு நன்மை சொல்லுகிறேன்.' (கீதை, 18-ஆம் அத்தியாயம், 64-ம் சுலோகம்.)

'உன் மனதை எனது ஆக்கிவிடு. என் பக்தனாயிரு. எனக்குப் பூஜை செய். என்னைக் கும்பிடு. நீ என்னையே எய்துவாய். இஃது உண்மை ; உனக்குப் பிரதிக்கினை செய்து கொடுக்கிறேன். நீ எனக்குப் பிரியமானவன்.' (கீதை, 18-ஆம் அத்தியாயம், 65-ஆம் சுலோகம்.)

'எல்லாக் கடமைகளையும் பரித்யாகம் பண்ணிவிட்டு என்னையே சரண் புகு. நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் விடுவிக்கிறேன். துயரப் படாதே.' (கீதை 18-ஆம் அத்தியாயம், 66-ஆம் சுலோகம்.)

நதியினுள்ளே விழுந்துவிட்ட ஒருவன் இரண்டு கையையும் தூக்கி விடுவது போலே, ஸம்ஸார வெள்ளத்தில் விழுந்த ஒவ்வொருவனும் இரண்டு கைகளையும் தூக்கிக்கொண்டு (அதாவது, எவ்விதப் பொறுப்புமின்றி எல்லாப் பொறுப்புக்களும் ஈசனுக்கென்று துறந்துவிட்டு) கடவுளைச் சரண் புக வேண்டும் என்று ஸ்ரீ ராமாநுஜாசார்யர் உபதேசம் புரிந்தார்.

ப்ரஹலாதன் சரித்திரத்திலும், திரௌபதி துகிலுரியும் கதையிலும் இந்த உண்மையே கூறப்பட்டிருக்கிறது. இடுப்பு வஸ்த்ரத்தில் அவள் வைத்திருந்த இடது கையையும் விட்டு விட்டு இரண்டு கைகளையும் தூக்கி முடிமீது குவித்துக்கொண்ட பிறகுதான், கண்ணபிரான் அருளால் திரௌபதிக்கு மான பங்கம் நேராமல், அவளுடைய ஆடை மேன்மேலும் வளர்ச்சி பெறத் துச்சாசனன் கை சோர்ந்து வீழ்ந்தான். இக் கருத்தைப் பிள்ளைப் பெருமாளையங்கார் :—

“மெய்த்தவளச் சங்கெடுத்தான் மேகலை விட்டங்கைதலை
வைத்தவளச்சங் கெடுத்தான் வாழ்வு.”

என்ற வரிகளில் மிகவும் அழகாகச் சொல்லியிருக்கிறார். 'உண்மையாகிய வெண் சங்கைத் தரித்தவன் பாஞ்சாலியின் கைகளை மேகலையினின்றும் எடுத்து முடிமீது வைத்த தன்

பேரில் அவளுடைய அச்சத்தைக் கெடுத்தவன் ஆகிய திருமாலுக்கு வாழ்விடம் (திருவேங்கடமலை)' என்பது அவ் வரிகளின் பொருளாம்.

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கை தொழக்
கற்றுணைப் பூட்டி யோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச் சிவாயவே"

என்ற நாவுக்கரசரின் உறுதி சான்ற சொற்களும் பரம பக்தியின் இலக்கணத்தைக் குறிப்பனவாம், 'தம்மை ஒரு கற்றூணுடன் சேர்த்துக் கட்டிக் கடலுக்குள் வீழ்த்திய போதிலும் தமக்கு நம்புதற்குரிய துணை நமச்சிவாய (சிவனைப் பணிகிறேன்) என்ற 'மந்திரமல்லது வேறில்லை' என்று திருநாவுக்கரசர் சொல்லுகிறார்.

இனி, 'இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாகக் கருதுதல் அவசிய மென்கையில், அப்போது கடவுளை நம்புவது எதன் பொருட்டு? கடவுள் நம்மை அச்சந் தீர்த்துக் காப்பானென்று எதிர் பார்ப்பது எதன் பொருட்டு? நமக்குத் தீங்கு நேர்ந் தாலும், நன்மை நேர்ந்தாலும், வாழ்வு நேர்ந்தாலும், மரணம் நேர்ந்தாலும்—எல்லாம் கடவுள் செயலாகையிலே நாம் எல்லாவற்றையும் ஸமமாகக் கருத வேண்டுமென்று பகவத்கீதை சொல்லுகையிலே, நமக்குக் கடவுளின் துணை எதன் பொருட்டு? நம்மைக் கற்றூணுடன் வலியக் கட்டி யாரேனும் கடலுள் வீழ்த்தினால், நாம் இதுவும் கடவுள் செயலென்று கருதி அப்படியே மூழ்கி இறந்துவிடுதல் பொருந்துமன்றி, அப்போது நமச்சிவாய, நமச்சிவாய என்று கூவி நம்மைக் காத்துக்கொள்ள ஏன் முயல வேண்டும்?" என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். இந்த ஆக்ஷேபம் தவறானது. யாங்ஙன மெனில், சொல்லுகிறேன். முந்திய கர்மங்களால் நமக்கு விளையும் நன்மை தீமைகளை ஸமமாகக் கருதி நாம் மனச் சஞ்சலத்தை விட்டுக் கடவுளை நம்பினால், அப்போது கடவுள் நம்மைச் சில வலிய சோதனைகளுக்கு உட்படுத்துகிறார். அந்தச் சோதனைகளில் நாம் மனஞ் சோர்ந்து கடவுளிடம் நம்பிக்கையை இழந்துவிடாமல் இருப்போமாயின், அப்போது நமக்குள் ஈசனே வந்து குடி புகுகிறான். அப்பால் நமக்குத் துன்பங்களே நேர்வதில்லை. ஆபத்துக்கள் நம்மை அணுகா. மரணம் நம்மை அணுகாது. எல்லா விதமான ஐயுறவுகளும் கவலைகளும், துயரங்களும் தாமாகவே நம்மை விட்டு நழுவி விடுகின்றன. இந்த உலகத்திலேயே நாம் விண்ணவரின் வாழ்க்கை பெற்று நித்யானந்தத்தை அனுபவிக்கிறோம்.

மேலும், எல்லாவற்றையும் ஞானி ஸமமாகக் கருத வேண்டுமென்ற இடத்தில், அவன் மனித வாழ்க்கைக்கு உரிய விதிகளை யெல்லாம் அறவே மறந்து போய்ப் பித்தனாய்விட வேண்டுமென்பது கருத்தன்று.

ஒரு குழந்தையைக் கொல்வதும், சிவ பூஜை செய்வதும் இரண்டும் கடவுளுக்கு ஒரே மாதிரிதான். அவன் எல்லா இயக்கங்களும் எல்லாச் செயல்களும் தன் வடிவமாக உடையவன். எனினும், மனித விதிப்படி சிசுஹத்தி பாவமென்பதையும் சிவபூஜை புண்ணியமென்பதையும் கண்ணபிரான் மறுக்கவில்லை. மனிதன் எல்லாத் துன்பங்களினின்றும் விடுபட்டு, என்றும் மாறாத பேரின்பத்தை நுகர விரும்புகிறான். அதற்குரிய வழிகளையே கீதை காண்பிக்கிறது. கஷ்ட நஷ்டங்களை நாம் மனோதைர்யத்தாலும், தெய்வபக்தியாலும் பொறுத்துக் கொள்ளவேண்டும். ஆனால், நாம் மனமாரப் பிறருக்குக் கஷ்டமேனும் நஷ்டமேனும் விளைவிக்கக் கூடாது. உலகத்துக்கு நன்மை செய்து கொண்டே இருக்கவேண்டும். தன்னுயிரைப்போல் மன்னுயிரைப் பேண வேண்டும். நாம் உலகப் பயன்களை விரும்பாமல் நித்ய ஸுகத்தில் ஆழ்ந்திய பின்னரும், நாம் உலகத்தாருக்கு நல்வழி காட்டும் பொருட்டுப் புண்ணியச் செயல்களையே செய்து கொண்டிருக்க வேண்டுமென்று பகவான் கீதையில் உபதேசிக்கிறார்.

மேலும், நமக்கே துன்பங்கள் நம்மை மீறி எய்தும்போது நாம் அவற்றைப் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்பதே நன்மையையும் தீமையையும் நிகராகக் கருதவேண்டுமென்ற உபதேசத்தின் கருத்தாகுமல்லாது, ஒரேயடியாக ஒருவன் தனக்கு மிகவும் இனிய காதலியை மருவும் இன்பத்துக்கும், தீராத க்ஷய ரோகத்தால் நேரும் துன்பத்துக்கும் யாதொரு வேற்றுமையும் தெரியாமல் புத்தி மண்ணாய் விடவேண்டுமென்பது அவ் வுபதேசத்தின கருத்தன்று. ஏனென்றால், ஸாதாரண புத்தி இருக்கும் வரை ஒருவன் காதலின்பத்துக்கும் க்ஷயரோகத் துன்பத்துக்குமிடையே உள்ள வேற்றுமையை உணராதிருத்தல் ஸாத்தியமன்று. ஆத்ம ஞானம் எய்தியதால் ஒருவன் ஸாதாரண புத்தியை இழந்து விடுவானென்று நினைப்பது தவறு. க்ஷயரோகம் நேரும்போது ஸாமான்ய மனிதன் மனமுடைந்து போய்த் தன்னை எளிதாகவும் அந்நோயை வலியதாகவும் கருதி, ஆசையிழந்து நாளடைவில் மேன்மேலும் தன்னை அந்த நோய்க்கு இரையாக்கிக்கொண்டு, க்ஷயரோகி என்று தனக்கு ஒரு பட்டஞ் சூட்டிக்கொண்டு வருந்தி மடிவதுபோல் ஞானி செய்ய

மாட்டான். ஞானி அத்தகைய நோய் ஏதேனும் பூர்வ கர்ம வசத்தால் தோன்றுமாயின், உடனே கடவுளின் பாதத்தைத் துணை என்று நம்பித் தன் ஞானத் தீயால் அதை எரித்துத் தள்ளிவிடுவான்.

"ஞானக்நிஸ் ஸர்வ கர்மாணி பஸ்மஸாத் குருதே"—ஞானத்தீ எல்லா வினைகளையும் சாம்பலாக்குகிறது. கடவுளிடம் தீராத நம்பிக்கை செலுத்தவேண்டும். கடவுள் நம்மை உலகமாகச் சூழ்ந்து நிற்கிறான். நாமாகவும் அவனே விளங்குகிறான். அக வாயிலாலேனும் புற வாயிலாலேனும் நமக்கு எவ்வகைத் துயரமும் விளைக்க மாட்டான். ஏன்? நாம் எல்லா வாயில்களாலும் அவனைச சரண் புகுந்து விட்டோமாதலின்.

அவனன்றி ஓரணுவும் அசையாது. அவன் நமக்குத் தீங்கு செய்ய மாட்டான். தீங்கு செய்ய வல்லான் அல்லன். ஏன்? நாம் அவனை முழுதும் நம்பிவிட்டோமாதலின்.

'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்.' இதுவே பக்தி.

அந்தக் கடவுள் எத்தன்மையுடையான்? எல்லா அறிவும், எல்லா இயக்கமும், எல்லாப் பொருளும், எல்லா வடிவமும் எல்லாம் தானேயாகி நிற்பான்.

அவனை நம்பினோர் செய்யத்தக்கது யாது? எதற்கும் துயரப்படாதிருத்தல்; எதற்கும் கவலைப்படாதிருத்தல்; எதனிலும் ஐயுறவு பூணாதிருத்தல்.

"ஸம்சயாத்மா விநச்யதி"—ஐயமுடையோன் அழிவான். நம்பினவன் மோக்ஷமடைவான்.

எ.

'குந்தியின் மகனே, சீதம், உஷ்ணம், இன்பம், துன்பம் என்பவற்றைத் தரும் இயற்கையின் தீண்டுதல்கள் வந்து போகும் இயல்புடையன; அநித்யமாயின; அவற்றைப் பொறுத்துக்கொள், பாரதா!' (பகவத் கீதை, 2-ஆம் அத்யாயம், 14-ஆம் சுலோகம்.)

'ஆண்களையே! இவை எந்த மனிதனைத் துன்புறுத்த மாட்டாவோ, இன்பத்தையும் துன்பத்தையும் நிகராகக் கருதும் அந்தத் தீரன் சாகாதிருக்கத் தகுவான்.' (ஷை 15-ஆம் சுலோகம்.)

இஃதே பகவத் கீதையின் சிகரம்.

சாகாதிருத்தல் ; மண் மீது மாளாமல் மார்க்கண்டேயன் போல் வாழுதல் ; இதுவே கீதையின் ரஸம்.

அமரத்தன்மை : இஃதே வேத ரஹஸ்யம்.

இந்த வழியைக் காட்டுவது பற்றியே வேதங்கள் இத்தனை மதிக்கப்படுகின்றன.

இறந்து போன ஜீவன் முக்தர்கள் யாவரும் ஜீவன் முக்தியை எய்திய பின் அந்த நிலையினின்றும் வழுவியவர்களாகவே கருதப்படுதல் வேண்டும். நித்ய ஜீவிகளாய் மண்மேல் அமரரைப்போல் வாழ்வாரே நித்ய ஜீவன் முக்தராவர். அத்தகைய நிலையை இந்த உலகில் அடைதல் ஸாத்யமென்று மேற்கூறிய இரண்டு சுலோகங்களிலே கடவுள் போதித்திருக்கிறார். அதற்கு உபாயமும் அவரே குறிப்பிட்டிருக்கிறார். குளிர், வெம்மை, இன்பம் துன்பம் எனும் இவற்றை விளைக்கும் இயற்கையின் அநுபவங்கள், தெய்வ கிருபையால், சாசுவதமல்ல, அநித்யமானவை, தோன்றி மறையும் இயல்புடையன. ஆதலால், இவற்றைக் கண்ட இடத்தே நெஞ்சம் இளகுதலும் நெஞ்சுடைந்து மடிதலும் சால மிகப் பேதமையா மன்றோ ? ஆதலால் இவற்றைக் கருதி எவனும் மனத் துயரப்படுதல் வேண்டா. அங்ஙனம் துயர்ப்படாதிருக்கக் கற்பான் சாகாமலிருக்கத் தகுவான். இஃது ஸ்ரீ கிருஷ்ணனுடைய கொள்கை. இதுவே அவருடைய உபதேசத்தின் ஸாராம்சம். பகவத் கீதையின் நூற்பயன். எனவே பகவத் கீதை அமிர்த சாஸ்த்ரம்.

அ

'அமிர்த சாஸ்த்ரம்—அதாவது சாகாமலிருக்க வழி கற்றுக் கொடுக்கும் சாஸ்த்ரமாகிய பகவத் கீதையைச் சிலர் கொலை நூலாகப் பாவனை செய்கிறார்கள். துர்யோதனுதிகளைக் கொல்லும்படி அர்ஜுனனைத் தூண்டுவதற்காவே, இந்தப் பதினெட்டு அத்யாயமும் கண்ணபிரானால் கூறப்பட்டன. ஆதலால், இது கொலைக்குத் தூண்டுவதையே தனி நோக்கமாக உடைய நூலென்று சிலர் பேசுகிறார்கள். கொலை செய்யச் சொல்ல வந்த இடத்தே, இத்தனை வேதாந்தமும், இத்தனை ஸத்வ குணமும், இத்தனை துக்க நிவர்த்தியும், இத்தனை சாகாதிருக்க வழியும் பேசப் படுவதென்னே என்பதை அச் சில மூடர் கருதுகின்றிலர்.

துர்யோதனாதியர் காமக் குரோதங்கள் ; அர்ஜுனன் ஜீவாத்மா ; ஸ்ரீ கிருஷ்ணன் பரமாத்மா.

இந்த ரஹஸ்யம் அறியாதவருக்குப் பகவத் கீதை ஒரு போதும் அர்த்தமாகாது.

க்ஷத்திரிய அரசர் படித்துப் பயன் பெறச் செய்யவேண்டும் என்பதே இந்த நூலின் விசேஷ நோக்கம். பூமண்டலத்தார் அனைவருக்கும் பொதுமையாகவே விடுதலைக்கு உரிய வழிகளை உணர்த்தவேண்டுமென்று கருதி எழுதப்பட்டதே பகவத் கீதை ; இதில் ஐயமில்லை. எனினும், இந்த நூல் க்ஷத்திரிய மன்னருக்கு விசேஷமாக உரியது. இது அவர் களுக்குள்ளேயே அதிகமாக வழங்கி வந்தது. வேதங்கள், எப்படி உலகத்துக்கெல்லாம் பொதுவே ஆயினும், பிராமணர் களுக்கு விசேஷமாக உரியனவோ, அதுபோலே புராணங்கள் க்ஷத்திரியர்களுக்கு உரியன.

மேலும் கீதையைச் சொன்னவன் ராஜா ; கேட்டவன் ராஜா.

ஆதலால் க்ஷத்திரிய அரசருக்கு இதில் ரஸம் உண்டாகும் பொருட்டாக இது போர்க்களத்தை முகவுரையாகக் கொண்ட மஹா அற்புத நாடகத் தொடக்கத்துடன் ஆரம்பிக்கிறது. இஃது 'இந்நூல் ஞான சாஸ்த்ரங்களில் முதன்மைப்பட்டி ருப்பது போல், காவிய வரிசையிலும் மிக உயர்ந்தது' என் பதற்குச் சான்றும்.

ஆனால் அதிலிருந்து இது ஞான சாஸ்த்ரமே இல்லை என்று மறுக்கும் மூடர், முகவுரையை மாத்திரமே வாசித்துப் பார்த் தார்களென்று தோன்றுகிறது.

"முகவுரையில் மாத்திரமன்றே ? நூலில், நடுவிலும் இடையிடையே, 'தஸ்மாத் யுத்யஸ்வ பாரத'—'ஆதலால் பாரதா, போர் செய் , என்ற பல்லவி வந்து கொண்டே இருக்கிறதன்றோ ?" என்று கூறிச் சிலர் ஆக்ஷேபிக்கலாம். அதற்குத்தான் மேலேயே கீதா ரஹஸ்யத்தின் ஆதார ரஹஸ் யத்தை எடுத்துச் சொன்னேன். அதனை இங்கு மீட்டும் சொல்லுகிறேன். துரியோதனாதிகள்—காமம், குரோதம், சோம்பர், மடமை, மறதி, கவலை, துயரம், ஐயம் முதலிய பாவ சிந்தனைகள். அர்ஜுனன் ஜீவாத்மா. ஸ்ரீ கிருஷ்ணன் பரமாத்மா.

இந்த ரஹஸ்யம் உனக்கு எங்ஙனம் தெரிந்ததென்று கேட்பீர்களாயில், சொல்லுகிறேன்.

கண்ணனை நோக்கி அர்ஜுனன் சொல்லுகிறான் :—

நீ வாயு ; நீ யமன் ; நீ சந்திரன் ; நீ வருணன் ; நீ அனைத்திற்கும் பிதா ; பிதாமஹன் ; (கீதை : 11-ஆம் அத்யாயம் - 39-ஆம் சுலோகம்.)

கண்ணன் சொல்லுகிறான் :—' மறுபடியும், பெருந் தோளுடையாய், எனது பரம வசனத்தைக் கேட்பாய். என் அன்புக்குரிய நினக்கு நலத்தைக் கருதி (அதனைச் சொல்லுகிறேன்) ' (கீதை : 10-ஆம் அத்யாயம், முதல் சுலோகம்.)

' நான் உலகத்தின் பெரிய கடவுள். பிறப்பற்றவன் ; தொடக்கம் இல்லாதவன் - இங்ஙனம் என்னை அறிவான் மனிதருள்ளே மயக்கந் தீர்ந்தான். அவன் எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகிறான்.' (கீதை : 10-ஆம் அத்யாயம், 3-ஆம் சுலோகம்.)

எனவே கீதையில் கேட்பான் சொல்வான் என்ற இரு திறத்தினரும் ஸ்ரீ கிருஷ்ணன் பரமாத்மா என்பதை வற்புறுத்துகிறார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணன் பரமாத்மா என்ற மாத்திரத்திலே அர்ஜுனன் ஜீவாத்மா என்பதும் துர்யோதனாதியர் காமக் குரோதாதிகளென்பதும் சாஸ்த்ரப் பயிற்சியும் காவியப் பழக்கமும் உடையோரால் எளிதில் ஊஹித்துக்கொள்ளத் தக்கனவாம்.

' பிரபோத சந்திரிகை ' என்று ஒரு நாடக நூல் இருக்கிறது. அதில் விவேகன் என்ற ராஜன் உலோகாயதன், பௌத்தன் முதலியவர்களுடனே யுத்தம் செய்து வென்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. வேதாந்த சாஸ்த்ரப் பயிற்சி இல்லாத ஒரு குழந்தை அந்த நூலைப் பார்த்து விட்டு, அதாவது, முன்பின் பாராமல் நடுவிலே மாத்திரம் பார்த்துவிட்டு ஷை யுத்தம் எந்த வருஷத்தில் நடந்ததென்றும், அதில் இரு திறத்திலும் எத்தனை உயிர்கள் மடிந்தன என்

றும் கேட்கப் புகுவது போல், சிலர் துர்யோதனாதியரைக் கொல்லும் புறப் பொருளிலே கீதையின் உபதேசத்தைக் கொள்ளுகின்றனர்.

ஹிந்துக்களாலே ஹிந்து தர்மத்தின் மூன்று ஆதார நிதிகளாகக் கருதப்படும் ப்ரஸ்தான த்ரயங்களாகிய உபநிஷத், பகவத்கீதை, வேதாந்த ஸூத்ரம் என்பவற்றுள் கீதை இரண்டாவது என்பதை இந்தச் சில மூடர் மறந்து விடுகின்றனர். 'இதற்கு - அதாவது, பகவத் கீதைக்கு - சங்கரர், ராமாநுஜாசார்யர், மத்வாசார்யர் என்ற மூன்று மத ஸ்தாபகாசார்யரும் வ்யாக்யானம் எழுதி, இதனை ஹிந்து தர்மத்தின் ஆதாரக் கற்களில் ஒன்றாக நாட்டியிருக்கிறார்கள்' என்பதை இந்த மூடர் அறிகின்றிலர். கொலைக்குத் தூண்டும் நூலொன்றுக்குச் சங்கராசார்யர் பாஷ்யம் எழுதுவதென்றால், அஃது எத்தனை விநோதமாக இருக்கும் என்பதைக் கருதித் தம்மைத் தாமே நகைக்கும் திறமையிலர்.

கொலை எவ்வளவு தூரம்! பகவத்பாத சங்கராசார்யர் எவ்வளவு தூரம்!

மேலும், நாம் மேலே கூறியபடி, பகவத் கீதையைக் கொலை நூலென்று வாதாடுவோர் அதில் முகவுரை மாத்திரம் படித்தவர்களேயன்றி நூலில் உட்பகுதியில் நுழைந்து பார்த்தவரல்லர் என்பதில் சந்தேகம் இல்லை.

ஈசனைச் சரணாகதியடைந்து இஹலோகத்தில் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை எய்தி நிகரற்ற ஆனந்தங்களில் மூழ்கி வாழும்படி வழி காட்டுவதே பகவத் கீதையின் முக்கிய நோக்கம். ஆதலால், இஃது கர்ம சாஸ்த்ரம்; இஃது பக்தி சாஸ்த்ரம்; இஃது யோக சாஸ்தரம்; இஃது ஞான சாஸ்த்ரம், இஃது மோக்ஷ சாஸ்த்ரம், இஃது அமரத்வ சாஸ்த்ரம்.

ம

இங்ஙனம் மோக்ஷத்தை அடைய விரும்புவோனுக்கு முக்கியமான சத்துரு- ஒரே சத்துரு-அவனுடைய சொந்த மனமேயாம். 'தன்னைத்தான் வென்றவன் தனக்குத் தான் நண்பன். தன்னைத் தான் ஆளாதவன் தனக்குத் தான் பகைவன். இங்ஙனம் ஒருவன் தானே தனக்குப் பகைவன், தானே தனக்கு நண்பன்' என்று கடவுள் சொல்லுகிறார்.

தன்னைக் காட்டிலும் உயர்ந்த நட்பும் தனக்குப் பிறிதில்லை. தன்னை யொழியத் தனக்குப் பகையும் வேறுகிடையாது. ஒருவன் தனக்குத் தான் நட்பாகியபோது, உலகம் முழுதும் அவனுக்கு நட்பாய் விடுகிறது. அங்ஙனமின்றித் தான் கட்டி ஆளாமல் தனக்குத் தான் பகையாக நிற்போனுக்கு வையக மெல்லாம் பகையாகவே முடிகிறது. உள்ளப்பகையே பகை; புறப்பகை பகையன்று. உள்ளப்பகையின் வெளித் தோற்றமே புறப்பகையாவது. உள்ளப்பகையைக் களைந்துவிட்டால், புறப்பகை தானே நழுவிப்போய்விடும்.

புறத்தே எல்லாம் கடவுளாகப் போற்றத் தக்கது. உள்ளப் பகையாகிய அஞ்ஞானம்—அதாவது, வேற்றுமை யுணர்ச்சி—ஒன்று மாத்திரமே அழித்தற்கு உரியது.

வேற்றுமை யுணர்ச்சியை நீக்கி, நம்மைச் சூழ நடை பெறும் செயல்களெல்லாம் ஈசன் செயல்களென்றும், தோன்றும் தோற்றங்களெல்லாம் ஈசனுடைய தோற்றங்க ளென்றும் தெரிந்து கொள்ளுமிடத்தே பயநாசம் உண்டா கிறது.

"சொல்லடா ஹரி என்ற கடவுளெங்கே ?
சொல்' லென்று ஹிரணியன் தான் உறுமிக்கேட்க
நல்லதொரு மகன் சொல்வான் தூணிலுள்ளான்,
நாராயணன் துரும்பினுள்ளா னென்றான்.

வல்லமைசேர் கடவுளிலா இடமென்றில்லை:
மஹா சக்தி இல்லாத வஸ்து இல்லை,
அல்ல லில்லை : அல்ல லில்லை ; அல்ல லில்லை,
அனைத்துமே தெய்வ மென்றா லல்ல லுண்டோ ?"

'தன் மனமே தனக்குப் பகை என்பது பேதைமை யன்றோ ? எல்லாம் கடவுளாயின், என் மனமும் கடவுளன்றோ ? அதனைப் பகைவனாகக் கருதுமாறு என்னே ?' எனில்,—தன்னைத் தான் வென்று தனக்குத் தான் நன்மை செய்யும்போது, தன்னுடைய மனம் தெய்வத் தன்மை உடையதாகக் கருதிப் போற்றத் தக்கது. மற்றப் போது பகையாம்.

எல்லாம் கடவுளாயின், மனம் தீமை செய்யும் போது கடவுளாகுமன்றோ ? 'எப்பொருள் யாது செய்யுமே யாயினும், அப்பொருள் கடவுள், அதன் செய்கை கடவுளுடைய செய்கை' என்னும் விதி மாறாதன்றோ ? எனில் :—அவ்

வுரை மெய்யே, எனினும், நமக்கு லோகாநுபவம் மறுக்கத் தக்க பிரமாணமாகும். லோகாநுபவத்தில் மனம் நமக்குத் தீமைசெய்கிறது. அதை வென்று நன்மை செய்யத்தக்கதாகப் புரிதல் ஸாத்யம்.

அங்ஙனம் செய்யும் பொருட்டாகவே, சாஸ்த்ரங்களும் வேதங்களும் எண்ணிறந்தனவாகச் சமைக்கப்பட்டிருக்கின்றன.

மனம் துன்பம் இழைப்பதையும், அதனால் உயிர்கள் கோடானுகோடியாக மடிவதையும் நாம் கண் முன்பு காணும் போது, அதை ஒரேயடியாக மறுத்துவிடுவதில் பயனில்லை,

மனம் இயற்கையாலும் தீய ஸஹவாஸத்தாலும் ஆத்மாவுக்குத் துன்பமிழைத்தல் ப்ரத்யக்ஷம். நல்ல கூட்டத்தாலும், நல்ல பயிற்சியாலும் அதனை உபகார வஸ்துவாகச் செய்தல் ஸாத்யம் என்பது யோகிகளின் ஸர்வ ஸாதாரண அநுபவம்.

எல்லாம் கடவுளுடைய செயலென்பது பொது உண்மை ; பரம ஸத்யம். ஆயினும் மனிதருக்குத் துன்பம் உண்டு. எல்லாம் கடவுளுடைய வடிவம் என்பது பரம ஸத்யம். எனினும், ஜீவர்கள் துயரப்படுவதை ப்ரத்யக்ஷமாகக் காணுகிறோம்.

அதாவது, கடவுளுக்கு எல்லாம் ஒன்று போலவேயாம். எத்தனை கோடி உயிர்கள் வாழ்ந்தாலும், எத்தனை கோடி உயிர்கள் மடிந்தாலும், கடவுளுக்கு யாதொரு பேதமும் இல்லை. அண்டகோடிகள் சிதறுகின்றன. பூகம்பம் உண்டாய்த் தேசங்கள் அழிகின்றன.

ஸூர்ய கோளங்கள் ஒன்றோடு ஒன்று மோதித்தூளாகின்றன. இவை அனைத்தும் புதியன புதியனவாகத் தோன்றுகின்றன. கோடிப் பொருள்கள்—

கோடியா ? ஒரு கோடியா ? கோடி கோடியா ? கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடியா ? அன்று. அநந்தம், எண்ணத் தொலையாத பொருள்கள் க்ஷணந்தோறும் தோன்றுகின்றன. எண்ணத் தொலையாத பொருள்கள் க்ஷணந்தோறும் மடிகின்றன. எல்லாம் கடவுளுக்கு ஒரே மாதிரி. சலித்தல் அவருடைய இயல்பு. அவருடைய சரீரமாகிய ஜகத் ஓயாமல் சுழன்று கொண்டிருத்தல்—இயற்கை. இதனால் அவருக்கு அசைவில்லை. அவருக்கு அழிவில்லை.

கடவுள் எங்கும் இருக்கிறார். எப்போதும் இருக்கிறார். யாதும் ஆவார். எனினும் தனி உயிருக்கு இன்பமும் துன்பமும் இருப்பதைக் காண்கிறோம். ஜீவர்கள் அஞ்ஞானத்தாலேதான் துன்பங்கள் ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பது மெய்யே. அவர்களுக்கு யதார்த்தத்தில் தீமைகளேனும் துன்பங்களேனும் இல்லை என்பது மெய்யே.

ஆனாலும், அந்த அஞ்ஞானம் ஒரு தீங்குதானே ? அதைத் தொலைக்கத்தானே வேண்டும் ? மனத்தைக் கட்டுதல், மனத்தை வெல்லுதல் என்பதெல்லாம் அஞ்ஞானத்தைத் தொலைத்தல் என்ற பொருளன்றி வேறு பொருள் இலதாம்.

கக

'அஞ்ஞானமும் கடவுள் மயந்தானே ? அதை என் தொலைக்கவேண்டும் ?' என்று கேட்டால் :—நீ 'எல்லாம் கடவுள் ; ஞானமும் கடவுள், அஞ்ஞானமும் கடவுள்' எனபதை உண்மையாகத் தெரிந்த அளவில் உன்னைப் பரமஞானம் எய்திவிட்டது. உனது அஞ்ஞானமும் நீங்கிப் போய்விட்டது ; அஞ்ஞானமும் அதனாலாகிய துன்பமும் கடவுள் மயம் என்பது மெய்யே. எனில், பின்னர் அவை நீங்கி, நீ ஞானமும் இன்பமும் எய்தியதும் கடவுள் செயலென்பதை மறந்து விடாதே. அவ்விடத்து அஞ்ஞானம் நீங்கியது பற்றி வருத்தப்படாதே.

கஉ

கடவுள் உபாஸனை செய்வதற்குரிய வழி எங்ஙனமெனில் :— ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிறான் :—நான் எல்லாவற்றுக்கும் பிதா. என்னிடமிருந்தே எல்லாம் இயங்குகிறது. இந்தக் கருத்துடையோரான அறிஞர் என்னை வழிபடுகிறார்கள். (கீதை, 10-ஆம் அத்யாயம், 8-ஆம் சுலோகம்.)

எந்த ஜந்துவுக்கும் ஹிம்ஸை செய்வோர் உண்மையான் பக்தராகமாட்டார். எந்த ஜீவனையும் பகைப்போர் கடவுளின் மெய்த் தொண்டர் ஆகார். எந்த ஜீவனையுங் கண்டு வெறுப்பெய்துவோர் ஈசனுடைய மெய்யன்பர் என்று கருதத்தகார். மாம்ஸ போஜனம் பண்ணுவோர் கடவுளுக்கு மெய்த் தொண்டராகார். மூட்டுப் பூச்சிகளையும் பேன்களையும் கொல்வோர் தெய்வ வதை செய்வோரே ஆவர்.

‘ அஹிம்ஸா பரமோ தர்ம :—‘ கொல்லாமையே முக்ய தர்மம்’ என்பது ஹிந்து மதத்தின் முக்கியக் கொள்கைகளில் ஒன்ரும். கொல்லாமையாகிய விரதத்தில் நில்லாதவன் செய்யும் பக்தி அவனை அமரத்தன்மையிலே சேர்க்காது. மற்ருேர் உயிரைக் கொலே செய்வோனுடைய உயிரைக் கடவுள் மன்னிக்கமாட்டார். இயற்கை கொலேக்குக் கொலே வாங்கவே செய்யும்.

இயற்கை விதியை அநுஸரித்து வாழவேண்டும். அதனுல் எவ்விதமான தீமையும் எய்த மாட்டாது. எனவே ஸாதாரண புத்தியே பரம மெய்ஞ் ஞானம். இதனை ஆங்கிலேயர் ‘ Common ’ sense ’ என்பர். சுத்தமான—மாசுபடாத, கலங்காத, அஞ்சாத, பிழைபடாத—ஸாதாரண அறிவே பரம மெய்ஞ் ஞானமாகும்.

ஸாதாரண ஞானத்தைக் கைக்கொண்டு நடத்தலே எதினும் எளிய வழியாம். ஸாதாரண ஞானமென்று சொல் மாத்திரத்தில் அது எல்லாருக்கும் பொது வென்று விளங்குகிறது. ஆனுல், ஸாதாரண ஞானத்தின்படி நடக்க எல்லாரும் பின் வாங்குகிருர்கள். ஸாதாரண ஞானத்தின்படி நடக்க வொட்டாமல் ஜீவர்களைக் காமக் குரோதாதிகள் தடுக்கின்றன. ஸாதாரண ஞானத்தின் தெளிவான கொள்கை யாதெனில், ‘ நம்மை மற்ருேர் நேசிக்கவேண்டு மென்ருல் நாம் மற்ருேரை நேசிக்கவேண்டும் ’ என்பது. நேசத்தாலே நேசம் பிறக்கிறது. அன்பே அன்பை விளைவிக்கும்.

நாம் மற்ற உயிர்களிடம் செலுத்தும் அன்பைக் காட்டிடிலும் நம்மிடம் மற்ற உயிர்கள் அதிக அன்பு செலுத்த வேண்டும் என்று விரும்புதல் ஸகல ஜீவர்களின் இயற்கையாக இயல் பெற்று வருகிறது. இந்த வழக்கத்தை உடனேமாற்றி விடவேண்டும். இதனுல் மரணம் விளைகிறது.

நாம் மற்ற உயிர்களிடம் அன்பு செலுத்தவேண்டும். அதனுல் உயிர் வளரும். அதாவது, நமக்கு மேன்மேலும் ஜீவசக்தி வளர்ச்சி பெற்றுக் கொண்டு வரும். நம்மிடம் பிறர் அன்பு செலுத்தவேண்டுமென்று எதிர்ப்பார்த்துக் கொண்டும், ஆனுல் அதே காலத்தில் நாம் பிறருக்கு எப்போதும் மனத்தாலும், செயலாலும் தீங்கு இழைத்துக் கொண்டும் இருப்போமாயின்—அதாவது பிறரை வெறுத்துக் கொண்டும், பகைத்துக்கொண்டும், சாபமிட்டுக்கொண்டும் இருப்போமாயின்—நாம் அழிந்துவிடுவோம் என்பதில் ஐயமில்லே.

கரு

இனி, வேறு சிலர் பகவத் கீதையை ஸந்யாஸ நூலென்று கருதுகிறார்கள். அதாவது, பெண்டாட்டி பிள்ளைகளைத் துறந்து, தலையை மொட்டையிட்டுக் கொண்டு ஆண்டியாய்த் திரிவோருக்கு எழுதப் பட்ட நூலென்று நினைக்கிறார்கள். இதைக்காட்டிலும் ஆச்சர்யமான தப்பிதம் நாம் பார்த்ததே கிடையாது. கீதையைக் கேட்டவனும் ஸந்யாஸியல்லன்; சொல்லியவனும் ஸந்யாஸி அல்லன். இருவரும் பூமியாளும் மன்னர்; குடும்ப வாழ்விலிருந்தோர். ஆஹா! அஃது எப்படிச் சொல்லலாம்? அர்ஜுனன் ஜீவாத்மா என்றும், கண்ணன் பரமாத்மா என்றும் மேலே கூறிவிட்டு, இங்கு அவர்களை உலகத்து மன்னர்களாக விவகரிப்பதற்கு நியாயமென்னே?' எனில்—வேண்டா; இதனை விட்டு விடுக.

பரமாத்மா ஜீவாத்மா இருவருமே உலக காரியங்களில் தலைப்பட்டுத்தான் இருக்கிறார்கள். கீர்த்திபெற்ற வங்கக் கவியாகிய ஸ்ரீமான் ரவீந்த்ரநாத தாகூர் கடவுளை நோக்கி, ஐயனே, நீயே ஸம்ஸார வலையில் அகப்பட்டிருக்கிறாயே? யான் இதினின்றும் விடுதலை வேண்டும் பேதைமை என்னே?' என்று பாடியிருக்கிறார். ஸம்ஸார விருத்திகள் கடவுளுடைய விருத்திகள். செயலெல்லாம் சிவன் செயல். 'அவனன்றி ஓரணுவு மசையா' தெனும் பெரிய ஆப்தர் மொழியுண்டு கண்டீர்.

கீதையிலே, பகவான் சொல்லுகிறான்; "அர்ஜுனா, மூன்று உலகங்களிலும் இனிச் செய்யவேண்டியதென மிஞ்சி நிற்கும் செய்கை ஒன்றும் எனக்குக் கிடையாது. 'அடையத் தக்கது, ஆனால் என்னால் அடையப் படாதது' என ஒரு பேறும் இல்லை. எனினும், நான் தொழில் செய்துகொண்டுதான் இருக்கிறேன்" என.

ஏனெனில், கடவுள் சொல்லுகிறான்: "நான் தொழில் செய்யாதுவாளா இருப்பின், உலகத்தில் எல்லா உயிர்களும் என் வழியையே பின்பற்றும். அதனால் இந்த உலகத்துக்கு அழிவு எய்தும். அந்த அழிவுக்கு நான் காரணபூதனாகும்படி நேரும். அது நேராதபடி நான் எப்போதும் தொழில் செய்துகொண்டே இருக்கிறேன்". என.

கடவுள் ஓயாமல் தொழில் செய்துகொண்டே இருக்கிறான். அவன் அண்ட கோடிகளைப் படைத்த வண்ணமாகவும் காத்தவனுமாகவும் அழித்தவனுமாகவும் இருக்கிறான். இத்தனை வேலையும் ஒரு சோம்பேறிக் கடவுளால் செய்ய முடியுமா ? கடவுள் கர்மயோகிகளிலே சிறந்தவன். அவன் ஜீவாத்மாவுக்கும் இடைவிடாத் தொழிலை விதித்திருக்கிறான்; ஸம்ஸாரத்தை விதித்திருக்கிறான்; குடும்பத்தை விதித்திருக்கிறான்; மனைவி மக்களை விதித்திருக்கிறான். நாட்டில் மனிதர் கூட்டுறவைத் துறந்து ஒருவன், காட்டுக்குச் சென்ற மாத்திரத்தாலே அங்கு அவனுக்கு உயிர்க் கூட்டத்தின் சூழல் இல்லாமற் போய் விடமாட்டாது. எண்ணற்ற விலங்குகளும், பறவைகளும் ஊர்வனவமாகிய ஜீவர்களும், மரம் செடி கொடிகளாகிய உயிர்ப் பொருள்களும் அவனைச் சூழ்ந்து நிற்கின்றன. சூழ மிருகங்களை வைத்துக்கொண்டு அவற்றுடன் •விவகரித்தல் மனிதக் கூட்டத்தினிடையே இருந்து அதனுடன் விவகரிப்பதைக் காட்டிலும் எளிதென்றேனும் கவலைக் குறைவுக்கு இடமாவதென்றேனும் கருதுவோன் தவறாக யோசனை பண்ணுகிறான். மனிதர் எத்தனை கொடியோராயினும், மூடராயினும், புலி, கரடி, ஓநாய், நரிகளுடன் வாழ்வதைக் காட்டிலும் அவர்களிடையே வாழ்தல் ஒருவனுக்கு அதிக நன்மை பயக்கத்தக்கது என்பதில் ஐயமில்லை. ‘ஆனால், கொடுங் கோல் மன்னர் வாழும் நாட்டிற் கடும் புலி வாழுங் காடுநன்றே’ என முன்னோர் குறிப்பிட்டபடி கடும்புலி வாழுங் காட்டைக்காட்டிலும் நாட்டை ஒருவனுக்கு அதிகக் கஷ்டமாக்கக்கூடிய மனிதரும் இருக்கக் கூடுமென்பது மெய்யே. ஆனால், இந்நிலையைப் பொது விதியாகக் கருதலாகாது. பொது விதியை ஸ்தாபனம் செய்வதாகிய விதிவிலக்கென்றே கருதத் தகும்.

கதையை வளர்த்துப் பயனில்லை. பெண்டு பிள்ளைகளைத் துறந்துவிட்ட மாத்திரத்தாலேயே ஒருவன் முக்திக்குத் தகுதி யுடையவனாய் விடமாட்டான்; இஃதே ஸ்ரீபகவான் கீதையில் உபதேசிக்கிற கொள்கை.

பெண்டு பிள்ளைகளையும் சுற்றத்தாரையும் இனத்தாரையும் நாட்டாரையும் துறந்து செல்பவன் கடவுளுடைய இயற்கை விதிகளைத் துறந்து செல்லுகிறான். ஜனஸமூஹ வாழ்க்கையைத் துறந்து செல்வோன் வலி இல்லாமையால் அங்ஙனம் செய்கிறான். குடும்பத்தை விடுவோன் கடவுளைத் துறக்க முயற்சி பண்ணுகிறான்.

துறவிகளுக்குள்ளே பட்டினத்துப் பிள்ளை சிறந்தவரென்று தாயுமானவர் பாடியிருக்கிருர். அந்தப் பட்டினத்துப் பிள்ளை என்ன சொல்லுகிருர் ?

> அறந்தா ணியற்றும் அவனிலுங் கோடியதிக மில்லந்
> துறந்தான் ; அவனிற் சதகோடி யுள்ளத்துற
> வுடையான் ;
> மறந்தா னறக் கற்றறிவோ டிருந்திரு வாதனையற்
> றிறந்தான் பெருமையை என் சொல்லுவேன் கச்சியே
> கம்பனே

இல்லத் துறவைக்காட்டிலும் உள்ளத் துறவு சதகோடி மடங்கு மேல் என்று மேலே பட்டினத்தடிகள் சொல்லுகிருர். பட்டினத்தடிகள் தாம் துறவியாதலால் இங்ஙனம் கூறிஞர். உள்ளத்துறவுதான் செய்தற் குரிய தென்றும், மனைத் துறவு செய்யவொண்ணுதததொரு பாவமென்றும் நான் சொல்லுகிறேன்.

பாவமாவது யாது ? புண்ணியமென்பது எதனை ?

தனக்கேனும் பிறர்க்கேனும் துன்பம் விளைவிக்கத்தக்க செய்கை பாவம் ; தனக்கேனும் பிறர்க்கேனும் இன்பம் விளை விக்கத்தக்க செயல் புண்ணியச் செயல் எனப்படும்.

ஒருவனுக்கு மனைத் துறவைக் காட்டிலும் அதிகத்துன்பம் விளைவிக்கத் தக்க செய்கை வேறொன்றும் இல்லை !

' இல்லாளகத்திருக்க இல்லாததொன்றில்லை. '—கற்புடைய மனைவியுடன் காதலுற்று, அறம் பிழையாமல் வாழ்தலே இவ்வுலகத்தில் ஸ்வர்க்க வாழ்க்கையை ஒத்ததாகும். ஒருவனுக்குத் தன் வீடே சிறந்த வாஸ ஸ்தலம், மலையன்று. வீட்டிலே தெய்வத்தைக் காணத் திறமை இல்லாதவன் மலைச் சிகரத்தை அடுத்ததொரு முழையிலே கடவுளைக் காண மாட்டான்.

கடவுள் எங்கிருக்கிருர் ? எங்கும் இருக்கிருர். மலைச் சிகரத்திலே மாத்திரமா இருக்கிருர் ? வீட்டிலும் இருக்கத் தான் செய்கிருர்.

> அங்கமே நின்வடிவமான சுகர்கூப்பிட நீ
> எங்கும் ' ஏன் ? ஏன் ? ' என்ற தென்னே பராபரமே ?

என்று தாயுமானவர் பாடியிருக்கிருர்.

எங்ஙனமேனும், கடவுளை நேரில் பார்க்கவேண்டுமென்ற பேராவலுடன், சுகப் பிரம்ம ரிஷி, காட்டு வழியே 'கடவுளே, கடவுளே யோ!' என்று கதறிக்கொண்டுபோயினராம். அப்போது அங்கிருந்த மலை, சுனை, மேகம், நதி, ஓடை, மரம், செடி, கொடி, இலை, மலர், பறவை, விலங்கு—எல்லாப் பொருள்களும் 'ஏன்? ஏன்?' என்று கேட்டனவாம்.

எங்கும் கடவுள் நிறைந்திருக்கிறார். 'ஸர்வமிதம் ப்ரஹ்ம'—உலகமெல்லாம் கடவுள்மயம் என்று வேதம் சொல்லும் கொள்கையையே மேற்படி கதை விளக்குகிறது.

இங்ஙனமாகையில், வீட்டிலிருந்து பந்துக்களுக்கும் உலகத்தாருக்கும் உபகாரம் செய்துகொண்டு, மனுஷ்ய இன்பங்களையெல்லாம் தானும் புஜித்துக்கொண்டு, கடவுளை நிரந்தரமாக உபாஸனை செய்து அதனால் மனிதத் துன்பங்களினின்றும் விடுபட்டு ஜீவன்முக்தராய் வாழ்தல் மேலான வழியா? அல்லது, காட்டிலே போய் உடம்பை விழலாக வற்றடித்து மடித்தும், புலி, பாம்பு முதலிய துஷ்ட ஜந்துக்களுக்கு இரையாய் மடிந்தும், கடவுளைத் தேட முயலுதல் சிறந்த உபாயமா?

ஸூர்யனைக் காணவில்லை என்று ஒருவன் தன் கைப்பெட்டிக்குள்ளே சோதனை போடுதலொக்குமன்றே, ஒருவன் கடவுளைக் காண வேண்டிக் காடுகளிலும் இருண்ட முழைகளிலும் புகுந்து வாழ்தல்?

'இல்லற மல்லது நல்லற மில்லை.'

தாயுமானஸ்வாமி, தாம் உயர்ந்த துறவு பூண்டிருந்த போதிலும், இதனைப் பின்வரும் பாட்டில் அங்கீகாரம் செய்கிறார். அதாவது, முற்றிலும் அங்கீகாரம் புரியவில்லை. துறவறத்தைக் காட்டிலும் இல்லறமே சிறந்ததென்று அவர் தெளிவுபட உரைத்துவிடவில்லை. முக்திக்கு இரண்டும் ஸம ஸாதனங்கள் என்கிறார். தாயுமானவர் சொல்லுகிறார்:—

மத்த மத கரி முகிற் குல மென்ன நின்றிலகு
  வாயிலுடன் மதி யகடு தோய்
மாட கூடச் சிகர மொய்த்த சந்திரகாந்த
  மணி மேடை யுச்சி மீது

முத்தமிழ்முழக்க முடன்முத்து நகையார்களொடு
முத்து முத் தாய்க் குலாவி
மோகத் திருந்து மென் ? யோகத்தினிலே நின்று
மூச்சைப் பிடித் தடக்கிக்

கைத்தல நகப்படை விரித்த புலி சிங்கமொடு
கரடி நுழை நூழை கொண்ட
கான மலை யுச்சியிற் குகை யூடிருந்து மென் ?
கர தலாமலக மென்ன

சத்த மற மோன நிலை பெற்றவர்களுய்வர் காண் !
ஜனகாதி துணிவி தன்றோ ?
ஸர்வ பரிபூரண அகண்ட தத்துவமான
ஸச்சி தாநந்த சிவமே.

இதன் பொருள் யாதெனில் :—

'மதமேறிய யானைகள் மேகக் கூட்டங்களைப்போல் மலிந்து நிற்கும் வாயில்களை யுடைய அரண்மனையில், சந்திரனை அளாவுவன போன்ற உயரமுடைய மாடங் களும் கூடங்களும் சிகரங்களும் சூழ்ந்திருப்ப, அவற்றி டையே நிலா விளையாட்டுக்காகச் சமைக்கப பட்டிருக்கும் சந்திரகாந்த மேடைகளின் மேலே இனிய தமிழ்ப் பேச்சுக்கும் இனிய தமிழ்ப் பாட்டுக்கும் நாட்டியங்களுக்கு மிடையே முத்தொளி வீசும் நகை புரிகின்ற மாதர் களுடனே முத்து முத்தாக உரையாடி முத்தமிட்டு முத்த மிட்டுக் குலாவிக் காதல் நெறியில் இன்புற்றிருந்தா லென்ன ? அஃதன்றி, யோக வழியிலே சென்று மூச்சை அடக்கிக்கொண்டு ஆயுதங்களைப் போல் வலிய நகங்களை யுடைய புலி, சிங்கம், கரடி முதலியன பதுங்கிக் கிடக்கும் பொந்துகளை யுடைய காட்டு மலை யுச்சியில் தாமொரு பொந்தில் இருந்தால் என்ன ? உள்ளங்கை நெல்லிக்கனி போலே விளங்குவதோர் உண்மை கூறுகின்றோம். 'சலனமின்றி மனத்திலே சாந்த நிலை பெற்றோர் உய்வார்.' இஃதன்றோ ஜனகன் முதலியோரின் முடிவாவது ? எங்கும் நிறைவுற்றதாய்ப் பிரிக்கப்படாத மூலப்பொருளே ! அறிவும், உண்மையும், மகிழ்ச்சியும் ஆகியகடவுளே !

இங்ஙனம், இல்லறத்தைப் பந்தத்துக்கு, அதாவது தீராத துக்கத்துக்குக் காரணமென்றும், துறவறம் ஒன்றே மோக்ஷத்துக்கு ஸாதனமென்றும் கூறும் வேறு

சில துறவிகளைப் போலே சொல்லாமல், இரண்டும் ஒருங்கே மோக்ஷத்துக்கு ஸமமான ஸாதனங்கள் என்று சொல்லியதே நமக்குப் பெரிய ஆறுதலாயிற்று. ஸம்ஸார ஸுகங்கள்கூடத் துன்பங்களுக்கே வழி காட்டுகின்றன என்றும், ஆகவே எல்லா வகையிலும் இஹலோக வாழ்க்கை துன்பத்தைத் தவிர வேறில்லை என்றும் சொல்லிச் சில பிற்காலத்துத் துறவிகள் 'வீட்டையும் பெண்டு பிள்ளைகளையும் துறந்து விட்ட மாத்திரத்திலேயே ஒருவன் இஹலோக வாழ்வைத் துறந்துவிட்டானாகிறான்', என்ற பிழைக் கருத்துக்கொண்டவர்களாய், ஊர்தோறும் சுற்றிக்கொண்டு, வீடு, வாயில், சுற்றம், துணை, இனம் ஏதும் இல்லாதவர்களாய்ப் பிச்சையெடுத்து வயிறு வளர்க்கிறார் கள். இக் கூட்டத்தாரின் வாழ்க்கை மஹா பரிதாபகர மானது. இந்தக் கூட்டத்தாரில் இடையிடையே சிற்சில இடங்களில் சிற்சில மஹான்கள் அளவற்ற கல்வியுடையோ ராகவும், அளவற்ற தெய்வ பக்தியுடையோராகவும், வரம் பற்ற ஜீவ காருண்ய முடையோராகவும் தோன்றுகிறார்கள். மற்றும், அவர்களில் பெரும்பான்மையோருக்கு ஒருவித மான முக்தித் தேட்டம் இருக்கத்தான் செய்கிறது. எனினும், இவர்களில் மிகப் பெரிய மஹான்கள்கூட, உலகத்தில் மானுடர் எய்தற்குரியதாகிய பரிபூர்ண வாழ்க்கை வாழ்ந்தனர் என்று கூறத்தகாது. வேத காலத்தில் இந்தத் துறவு வழி ஹிந்துக்களுக்குள்ளே கிடையாது. வேதகாலத்தில், ஸந்யாசம் நமக்குள்ளே இருந்திருப்பதாக ஸ்வாமி விவேகாநந்தர் சொல்லியிருக் கிறார். வஸிஸ்டர், வாமதேவர் முதலிய வேத ரிஷிகள் அத்தனை பேரும் மணம் புரிந்துகொண்டு மனைவி மக்களு டனேயே இன்புற்று வாழ்ந்தனர். புலன்களை அடக்கி யாளும் பொருட்டாக, அக்காலத்து ரிஷிகள் பிரம்மசாரி களாக இருந்து நெடுங்காலம் பலவகைக் கொடிய தவங் கள் செய்தது உண்டு. ஆனால், குறிப்பிட்ட காலம்வரை தவங்கள் செய்து முடித்துப் பின்பு இல்வாழ்க்கையுட் புகுதலே மஹரிஷிகளுக்குள் வழக்கமாக நடைபெற்று வந்தது. மஹா பாரதத்திலும் மற்றப் பூர்வ புராணங் களிலும் வேத ரிஷிகளைப் பற்றிய கதைகளும் சரித்திரங் களும் ஒரே ஸித்தாந்தமாக வேத ரிஷிகளுக்குத் துறவறம் என்ற விஷயமே இன்னதென்று தெரியாது என்ற என் வார்த்தையை நிலைநிறுத்துகின்றன. மேலும் ஸ்வாமி விவேகாநந்தர் வேதத்தின் பிற்சேர்க்கைகளாகிய உப நிஷத்துக்களையே முக்கியமாகப் பயின்றவர். இந்த உப

நிஷத்துக்கள் வேதாந்தம் என்ற பெயர் படைத்தன; அதாவது வேதத்தின் நிச்சயம். இவை வேதரிஷிகளால் சமைக்கப்பட்டன அல்ல. பிற்காலத்தவர்களால் சமைக்கப் பட்டன. ஸம்ஹிதைகள் என்று மந்திரங்கள் சொல்லப் படுவனவே உண்மையான வேதங்கள். அவையே ஹிந்து மதத்தின் வேர். அவையே வஸிஸ்டவாமதேவாதி தேவரிஷிகளின் கொள்கைகளைக் காட்டுவன. உபநிஷத் துக்கள் மந்திரங்களுக்கு விரோத மல்ல; அவற்றுக்குச் சாஸ்த்ர முடிபு. அவற்றின் சிரோ பூஷணம். ஆனால் பச்சை வேதமென்பது மந்திரம் அல்லது ஸம்ஹிதை எனப்படும் பகுதியேயாம்.

இந்த மந்திரங்கள் அல்லது ஸம்ஹிதைகள் பழைய பழைய மிகப் பழைய ஸம்ஸ்க்கிருத பாஷையில் எழுதப்பட் டிருக்கின்றன. அதாவது, வேதங்களின் ஸம்ஸ்க்ருதம் மதுரைச் சங்கத்துக்கு முந்திய தமிழைப் போலவும் உபநிஷத்துக்களின் பாஷை சங்கத்துக்குப் பிந்திய தமிழைப் போலவும் இருக்கின்றன.

ஆனால், இந்த உவமானம் முற்றிலும் பொருந்தியதாகக் கூறலாகாது. இன்னும் அதை உள்ளபடி விளக்குமிடத்தே, ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள மற்ற எல்லா நூல்களும் ஒரு பாஷை; வேதம் மாத்திரம்—அதாவது, ஸம்ஹிதை அல்லது மந்திரம் மாத்ரம்—தனியான பாஷையாக இருக்கிறது. இஃதொரு பெருவியப்பு அன்றோ? வேத ஸம்ஸ்க்ருதம் வேறு எந்த நூலிலும் கிடையாது. உப நிஷத்தில், ஒரு சில மிகச் சில பகுதிகளில் விசேஷமாக வேத மந்திரங்களை மீட்டும் உரைக்குமிடத்தே, வேத பாஷையைக் காணலாம். மற்றப்படி உபநிஷத்து முழுதும் பிற்காலத்துப் பாஷையிலேயே சமைந்திருக்கிறது.

இங்ஙனம் இருக்கப் பிற்காலத்து ஆசார்யர்களிலே சிலர் வேதத்தைக் கர்மகாண்டம் என்றும் அதனால் தாழ்ந்த படியைச் சேர்ந்ததென்றும் உபநிஷத்தே ஞானகாண்டம் என்றும் ஆதலால் அது வேதத்தைக் காட்டிலும் உயர்ந்த தென்றும் கருதுவாராயினர்.

இங்ஙனம் பிற்காலத்து ஆசார்யர்கள் நினைப்பதற்கு உண்டான காரணங்கள் பல. அவற்றுள் சிலவற்றை இங்கே தருகிறேன். முதலாவது காரணம், வேத பாஷை

மிகவும் பழமைப் பட்டுப் போனபடியால் அதன் உண்மை யான பொருளைக் கண்டுபிடித்தல் மிகவும் துர்லபமாய் விட்டது. நிருக்தம் என்ற வேத நிகண்டையும் பிராம் மணங்கள் என்று சொல்லப்படும் பகுதிகளிலே காணப்படும் வேத மந்திர விளக்கங்களையும் கற்ற பின்னரே, ஒருவாறு வேத மந்திரங்களின் பொருளை அறிதல் ஸாத்யமாயிற்று. வேதம் பிரம்மாண்ட நூல். அதில் இத்தகைய ஆராய்ச்சி செய்வார் மிக மிகச் சிலரே யாவர். இப்போது வேதத் திற்கு விளக்குப் போலே நிற்கும் ஸாயணரென்ற வித்யாரண்ய சங்கராசார்யரின் பாஷ்யம் பிராம்மணங்களையும் நிருக்தத்தையுமே ஆதாரமாக உடையது. பிராம்மணங்களில் பெரும்பாலும் கற்பனைக் கதைகளும் கற்பிதப் பொருள் களுமே கூறப்பட்டிருக்கின்றன. நிருக்தத்திலோ என்றால் பெரும்பாலும் வேத பதங்களுக்குச் சரியான பொருளே கூறப்பட்டிருக்கிறது. ஆனால், பல இடங்களில் அதன் தாது நிச்சயங்கள் மிகவும் ஸம்சயத்துக்கு இடமாகவும் சில இடங் களில் அதன் பொருட்கோளே பிழைப்பட்டதாகவும் இருக்கிறது.

வேத மந்திரங்களுக்குச் சரியான அர்த்தம் கண்டு பிடிக்க வேண்டுமென்று தற்காலத்தில் ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் அநேக பண்டிதர்கள் மிகவும் சிரமப் படுகிறார்கள். சில வருஷங்களுக்கு முன்னே காலஞ்சென்ற வராகிய ஸ்வாமி தயாநந்த ஸரஸ்வதி வேதத்துக்குத் தாம் எப்போதுமில்லாத புதிய அர்த்தமொன்று கற்பித்து அதற் கிணங்க 'ஆர்ய ஸமாஜம்' என்று புது மதக் கொள்கை யொன்று ஸ்தாபித்தார்.

ஆனால், சிற்சில பதங்களுக்கு ஸாயணாசார்யர் சொல்லும் உரை ப்ரதக்ஷ்யமாகப் பிழை யென்று தோன்றினும், பொதுப்படையாகச் சொல்லுமிடத்தே தற்காலத்து ஹிந்து வைதிகர்களால் அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கும் ஸாயண பாஷ்யமே பூர்வ வ்யாக்யானங்களுக்கு விரோதமில்லாமலும், தெளிவாகவும், உண்மையாகவும் அமைந்திருக்கிறது.

ஸாயண பாஷ்யம் இல்லாவிட்டால், வேதம் ஹிந்து ஜாதிக்குப் பயன்படாமலே போயிருக்கும். சரியான ஸமயத் தில் ஸாயணர் வேதங்களுக்குப் பாஷ்யம் எழுதி வைத்தார். எனினும், ஸாயணாசார்யர் கூடத் தம்முடைய குருக்களைப்

போலவே வேதம் கர்மநூலென்று கருதி விட்டார். அதனால், அது ஹிந்து மதத்துக்கு ஆதிவேர் என்பதை இந்த ஆசார்யர்களால் மறுக்க முடியாவிடினும், அதற்கு ஞான நெறியில் எவ்விதப் பிரமாணமும் இல்லை என்று அவர்கள் நவருக எண்ணும்படி நேர்ந்துவிட்டது. ஏனென்றால், வேதத்தைக் கர்மங்களைப் டுபாற்றுகிற நூலாகக் கருதிய இவர்கள் கர்மங்களென்ற இடத்தே யாகங்களைக் கருதிக்கூறினர். அதாவது, யாகங்களுக்கு மாத்திரம் உபயோகப்படும் நூலாக எண்ணி, கர்மங்கள் என்றால் யாகங்களெனப் பொருள் கொண்டு அவர்கள் வேதத்தைக் கர்ம காண்டம் என்றார்கள்.

மேற்படி யாகங்களே பெரும்பாலும் பசுவதைகளும், குதிரைக் கொலைகளும், ஆட்டுக் கொலைகளும் முக்கியமாகப் பாராட்டிய கொலைச் சடங்குகள். இவ்விதமான கொலைகளைச் செய்தல் மோக்ஷத்துக்கு வழி என்ற போலி வைதிகரைப் பழி சூட்டி, அந்தக் கொலைச் சடங்குகளால் மனிதன் நரகத்துக்குத் தான் போவான் என்பதை நிலை நாட்டிய புத்த பகவானும், அவருடைய மதத்தைத் தழுவிய அரசர்களும் இந்தியாவில் யாகத் தொழிலுக்கு மிகவும் இகழ்ச்சி ஏற்படுத்தி விட்டார்கள். அந்தத் தருணத்தில், புத்த மதத்தை வென்று ஹிந்து தர்மத்தை நிலை நாட்ட, சங்கராசார்யர் அவதரித்தார். அவர் புத்த மதக் கருத்துக்களைப் பெரும்பாலும் ருசி கண்டு சுவைத்துத் தம்முடைய வேதாந்தத்துக்கு ஆதாரங்களாகச் செய்து கொண்டார். ஷண்மத ஸ்தாபகாசார்யராய், சைவம் வைஷ்ணவம் முதலிய ஆறு கிளைகளையும், வேதாந்தமாகிய வேரையுமுடைய ஹிந்து மதம் என்ற அற்புத விருக்ஷத்தை ஸ்ரீ சங்கராசார்யர் தமது அபாரமான ஞானத் திறமையாலும், கல்வி வலிமையாலும் மீள உயிர்ப்பித்து அதற்கு அழியாத சக்தி ஏற்படுத்தி வைத்து விட்டுப்போனார். தம்மாலே வெட்டுண்ட புத்த மதம் என்ற விருக்ஷத்தின் கிளைகள் பலவற்றை ஹிந்து தர்மமாகிய மரத்துக்கு நல்ல வளர்ச்சி உண்டாகும் படி எருவாகச் செய்து போட்டார். இங்ஙனம் புத்த மதக் கொள்கைகள் பலவற்றை ஹிந்து தர்மத்துக்கு ஆதாரமாகச் சேர்த்துக் கொண்டது பற்றியே, சங்கராசார்யரை அவருடைய எதிர்க் கக்ஷியார் பலர் 'ப்ரச்சன்ன பௌத்தர்' (மறைவுபட்ட பௌத்தர்) என்று சொன்னார்கள். எனினும் அவர் ஹிந்து தர்மத்துக்குச் செய்த பேருபகாரத்துக்காக ஹிந்துக்களிலே பெரும்பாலோர் அவரைப் பரமசிவனுடைய அவதாரமாகக் கருதிப் போற்றினார்கள்.

பௌத்த மதமே துறவு நெறியை உலகத்தில் புகுத்திற்று. அதற்கு முன் அங்கங்கே சில சில மனிதர் துறவிகளாகவும் சில சில இடங்களில் சிலர் துறவிக் கூட்டத்தாராகவும் இருந்தனர்.

துறவிகளின் மடங்களை இத்தனை தாராளமாகவும் இத்தனை வலிமையுடையனவாகவும் செய்ய வழி காட்டியது பௌத்த மதம். எங்கே பார்த்தாலும் இந்தியாவை அம்மதம் ஒரே ஸந்யாஸி வெள்ளமாகச் சமைத்து விட்டது. பாரத தேசத்தை அந்த மதம் ஒரு பெரிய மடமாக்கி வைத்துவிட்டது. ராஜா, மந்திரி, குடி, படை எல்லாம் மடத்துக்குச் சார்பிடங்கள். துறவிகளுக்குச் சரியான போஜனம் முதலிய உபசாரங்கள் நடத்துவதே மனுஷ நாகரிகத்தின் உயர் நோக்கமாகக் கருதப் பட்டது. துறவிகள்தாம் முக்கியமான ஜனங்கள்! மற்ற ஜனங்களெல்லாரும் அவர்களுக்குப் பரிவாரம்! மடந்தான் பிரதானம்; ராஜ்யம் அதற்கு ஸாதனம்.

பாரத தேசத்தில் புத்த மதம் ஜீவகாருண்யம், ஸர்வஜன ஸமத்வம் என்ற இரண்டு தர்மங்களையும் நெடுந்தூரம் ஊன்றும்படிச் செய்தது. ஆனால், உலக வாழ்க்கையாகிய ஜகத்தின் ஒளி போன்றவளாகிய பத்தினியைத் துறந்தவர்களே மேலோர் என்று வைத்து, அவர்களுக்குக் கீழே மற்ற உலகத்தை அடக்கி வைத்து உலகமெல்லாம் பொய் மயம் என்றும், துக்கமயம் என்றும் பிதற்றிக்கொண்டு வாழ்நாள் கழிப்பதே ஞான நெறியாக ஏற்படுத்தி, மனுஷ நாகரிகத்தை நாசஞ் செய்ய முயன்றதாகிய குற்றம் புத்தமதத்துக்கு உண்டு. அதை நல்ல வேளையாக இந்தியா உதறித் தள்ளிவிட்டது. பின்னிட்டுப் புத்த தர்மத்தின் வாய்ப்பட்ட பர்மா முதலிய தேசங்களிலும் புத்த மதம் இங்ஙனமே மடத்தை வரம்பு மீறி உயர்த்தி மனித நாகரிகத்தை அழித்துக் கொண்டுதான் வந்திருக்கிறது. பிற்காலத்தில் பௌத்த வழியைத் தழுவி, பலமான மட ஸ்தாபனங்கள் செய்த ரோமன் கத்தோலிக்க மதத்திலும் குருக்களுடைய சக்தி மிஞ்சிப்போய் மனித நாகரிகத்துக்குப் பேராபத்து விளையும்போல் இருந்தது. அதை ஐரோப்பிய தேசத்தார்கள் பல புரட்சிகளாலும் பெருங் கலகங் களாலும், யுத்தங்களாலும் எதிர்த்து வென்றனர். அதுமுதல் ஐரோப்பாவில் மடாதிபதிகளுக்கு ராஜ்யத்தின் மீதிருந்த செல்வாக்கும், அதிகாரமும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகின்றன. இது நிற்க.

ஹிந்து தர்மம் புத்த மதத்தை ஜயிக்கவேயில்லை என்றும், பௌத்த மதமே ஹிந்து மதத்தை ஜயித்து விட்டதாகவும் சில மாஸங்களின் முன்பு காரைக்குடியில் ஒரு நண்பர் என்னிடம் தர்க்கித்தார். சரித்திரத்திலும், ப்ரத்யக்ஷத்திலும் ஐயமறப் புத்த மதம் இழிந்து, ஹிந்து மதம் வெற்றி பெற்று நிற்கும் செய்தி விளங்குகையில், பட்டப் பகலை இரவென்று கூறுதல் போல் மேற்படி காரைக்குடி நண்பர் சொல்லிய பச்சைப் பொய்யை இங்கு எடுத்துச்சொல்ல வந்த முகாந்தரம் யாதெனில் :—'அவர் சொல்லியது பச்சைப் பொய்யன்று. அதில் சிறிதளவு உண்மையும் கலந்திருக்கிறது. எங்ஙன மெனில், பௌத்த மார்க்கத்தைக் களைந்தெறிந்து மிஞ்சி நின்ற ஹிந்து மதம் பல அம்சங்களில் பௌத்தமதக் கருத்துக் களை முழுமையாகவும் பல அம்சங்களிற் சற்றே மாற்றியும் தன்னுள்ளே சேர்த்துக் கொண்டு விட்டது. ஆகவே, பௌத்த மதம் இந் நாட்டில் இருந்த இடந்தடம் தெரியாமல் மண்ணோடு மண்ணாய் மடிந்துபோகவில்லை. அதன் கொள்கைகளில் பல ஹிந்துமதக் கொள்கைகளுடன் கலந்து இந்நாட்டில் வழங்கி வருகின்றன.'

இந்தச் செய்தியையே அந்தக் காரைக்குடி நண்பர் மிகவும் அதிசயோக்தியாக மேற்கண்டவாறு பச்சைப் பொய் வடிவத்தில் கூறினார். புனர்ஜன்மக் கொள்கை, புலால் மறுத்தல்—இவை இரண்டுமே பௌத்த மதத்திலிருந்து ஹிந்து மதத்துக்குள் நுழைந்த கொள்கைகளில் முக்கியமானவை என்று கருதப்படுகின்றன. ஆனால், இக் கொள்கைகள் பௌத்த மதத்திலிருந்துதான் ஹிந்து மதத்தில் புகுந்தன என்று கூறுவதற்குப் பலமான ஆதாரங்கள் இல்லை. புனர் ஜன்மக் கொள்கை பூர்வ புராணங்களிலேயே இருந்தது. பௌத்த மதம் அக்கொள்கையை, அறிஞர் கண்டு நகைக்கத் தக்கபடியாக, வரம்பு மீறி வற்புறுத்திற்று ; பிற்கால ஹிந்து மதத்தில் அக் கொள்கை அளவுக்கு மிஞ்சி, நிரார்த்தகமாக ஏறிப்போய் இப்போது ஹிந்து நம்பிக்கையிலுள்ள குறைகளில் ஒன்றாக இயல்கிறது. ஸாதாரணமாக ஒருவனுக்குத் தலை நோவு வந்தாலுங்கூட, அதற்குக் காரணம் முதல் நாள் பசி இல்லாமல் உண்டதோ, அளவு மீறித் தூக்கம் விழித்ததோ, மிகக் குளிர்ந்த அல்லது மிக அசுத்தமான நீரில் ஸ்நாநம் செய்ததோ என்பதை ஆராயும் முன்பாகவே, அது பூர்வ ஜன்மத்தின் கர்மப் பயனென்று ஹிந்துக்களிலே பாமரர் கருதக் கூடிய நிலைமை வந்துவிட்டது. உலகத்து வியாபார நிலைமையையும், பொருள் வழங்கும் முறைகளையும் மனித

தந்திரத்தால் மாற்றிவிடலாம் என்பதும், அங்ஙனம் மாற்றுமிடத்தே செல்வ மிகுதியாலும், செல்வக் குறைவாலும் மனிதர்களுக்குள்ளே ஏற்படும் கஷ்டங்களையும், அவமானங்களையும், பசிகளையும், மரணங்களையும் நீக்கிவிடக்கூடும் என்பதும் தற்காலத்து ஹிந்துக்களிலே பலருக்குத் தோன்றவே இடமில்லை. பிறர் சொல்லிய போதிலும் அது அவர்களுக்கு அர்த்தமாவது சிரமம். ஏனென்றால், பண விஷயத்தில் ஏற்பட்ட பயங்கரமான பேதங்களையும் தாரதம்மியங்களையும், பாரபக்ஷங்களையும் கண்டு, அதற்கு நிவாரணம் தேட வழி தெரியாத இடத்திலேதான், பெரும்பாலும் இந்தப் பூர்வ ஜன்ம கர்ம விஷயம் விசேஷமாக ப்ரஸ்தாபத்துக்கு வருகிறது. அற்பாயுள், நீண்ட ஆயுள், நோய், நோயின்மை, அழகு, அழகின்மை, பாடத் தெரிதல் அது தெரியாமை, படிப்புத் தெரிதல், அது தெரியாமை—முதலிய எல்லாப் பேதங்களுக்கும் பூர்வ ஜன்மத்தின் புண்யபாவச் செயல்களையே முகாந்தரமாகக் காட்டினார்கள் எனினும், பண விஷயமான வேறுபாடுகளே இவை எல்லாவற்றைக் காட்டிலும் மனிதர்களுக்கு உள்ளக் கொதிப்பையும் நம்பிக்கைக் கேட்டையும் விளைத்து அவர்களை இந்த ஜன்மத்தின் துக்கங்களுக்குப் பூர்வ ஜன்மத்திலே காரணம் தேடுவதும் அடுத்த ஜன்மத்தில் பரிஹாரம் தேடுவதுமாகிய விநோதத் தொழிலிலே தூண்டின.

எனவே, இந்தப் பூர்வ ஜன்ம ஸித்தாந்தத்தைப் பௌத்த மதம் நமது தேசத்தில் ஊர்ஜிதப்படுத்தியது பற்றி நாம் அதற்கு அதிக நன்றி செலுத்த இடமில்லை.

பௌத்த மதத்தால் நாம் அடைந்த நன்மைகளிலே உண்மையான நன்மை ஒன்றுதான். அதாவது, விக்ரஹாராதனையை பௌத்த மதம் ஊர்ஜிதப் படுத்திற்று. புதிதாக உண்டாக்கவில்லை. ஏற்கனவே இருந்த வழக்கத்தை மிகவும் விஸ்தாரமாக்கி ஊர்ஜிதப்படுத்திற்று. பௌத்தர்கள் மனிதருக்கு ஏற்படுத்திய சிலைகளை நம்மவர் தம்முடைய அற்புத ஞான சக்தியின் விரிவாலும், கற்பனா சக்தியின் தெளிவாலும் தேவர்களுக்குச் சமைத்துக்கொண்டனர். தேவர்களைச் சிலைகளில் வைத்து வணங்குதல் முக்திக்கு மஹத்தான ஸாதனங்களில் ஒன்றும். ஆனால், உண்மையான பக்தியுடன் வணங்கவேண்டும்.

இனி, புத்த மதம் இழைத்த பெருந் தீங்கு யாதெனிலோ, இடைக்காலத்து மாயா வாதத்தை நம்முள்ளே எழுப்பி

விட்டது. உபநிஷத்துக்களிலும் வேதத்திலும் ' மாயா ' என்ற சொல் பராசக்தியைக் குறிப்பது. இடைக் காலத்தில் மாயை பொய் என்றதொரு வாதம் உண்டாயிற்று. இதனால், ' ஜகத் பொய் ; தேவர்கள் பொய் ; ஸூர்ய நக்ஷத்திராதிகள் பொய் ; பஞ்சபூதம் பொய் ; பஞ்சேந்திரியம் பொய் ; மனம் பொய் ; சைதந்யம் மாத்திரம் மெய் ; ஆதலால், இந்த உலகத்துக் கடமைகளெல்லாம் எறிந்துவிடத் தக்கன. இதன் இன்பங்களெல்லாம் துறந்துவிடத் தக்கன ' என்றதொரு வாதம் எழுந்தது. ' இவ்வுலக இன்பங்களெல்லாம் அசாசுவதம் ; துன்பங்கள் சாசுவதம். இத்தகைய உலகத்தில் நாம் எந்த இன்பங்களையும் தேடப் புகுதல் மடமையாகும். எனவே, எந்தக் கடமைகளையும் செய்யப் புகுதல் வீண் சிரமமாகும் ' என்ற கக்ஷி ஏற்பட்டது.

ஆனால், இவர்கள் எல்லா இன்பங்களையும் துறந்துவிட்டதாக நடிக்கிறார்களே யன்றி, இவர்கள் அங்ஙனம் உண்மையிலே துறக்கவில்லை. இவ்வுலகத்தில் ஜீவர்கள் எல்லா இன்பங்களையும் துறப்பது ஸாத்யமுமில்லை. கடமைகளைத் துறந்துவிட்டுச் சோம்பேறிகளாகத் திரிதல் ஸாத்யம் ; அது மிக ஸுலபமுங்கூட. இந்தச் சோம்பேறித்தனத்தை ஒரு பெரிய ஸுகமாகக் கருதியே அநேகர் துறவு பூணுகிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.

இவர்கள் கடமைகளைத் துறந்தனரே யன்றி இன்பங்களைத் துறக்கவில்லை. உணவின்பத்தைத் துறந்து விட்டார்களா ? சோறு இல்லாவிட்டால் உயிர் போய்விடுமே என்றால், அப்போது நீங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுத் தொழில் செய்து ஜீவிக்கவேண்டும். ஆடையின்பத்தை இவர்கள் துறக்கவில்லை. ஸ்நான இன்பத்தைத் துறக்கவில்லை. தூக்க இன்பத்தை துறக்கவில்லை. கல்வியின்பத்தைத் துறக்கவில்லை. புகழின்பத்தைக் துறக்கவில்லை. உயிரின்பத்தைத் துறக்கவில்லை. வாதின்பத்தைத் துறக்கவில்லை. அவர்களுள் முக்யஸ்தர்களாகிய மடாதிபதிகள் பண இன்பத்தையும் துறக்கவில்லை. இவர்களுடைய போலி வேதாந்தத்தை அழிக்கும் பொருட்டாகவே பகவத் கீதை எழுதப்பட்டது.

உலகமெல்லாம் கடவுள் மயம் என்ற உண்மையான வேதாந்தத்தைக் கீதை ஆதாரமாக உடையது. மாயை

பொய்யில்லை. பொய் தோன்றுது. பின் மாறுகிறதே எனில், மாறுதல் மாயையின் இயற்கை. மாயை பொய் இல்லை. அது கடவுளின் திருமேனி. இங்குத் தீமைகள் வென்றொழித்தற்கு உரியன. நன்மைகள் செய்தற்கும் எய்துதற்கும் உரியன. சரணாகதியால் கடவுளிடம் தீராத மாருத பக்தியால்—யோகத்தை எய்துவீர்கள். எல்லா ஜீவர் களையும் ஸமமாகக் கருதக்கடவீர்கள். அதனுல், விடுதலை யடைவீர்கள். ஸத்ய விரதத்தால் ஆனந்தத்தை அடைவீர்கள். இல்லறத் தூய்மையால் ஈசத் தன்மை அடைவீர்கள்.

இந்த மஹத்தான உண்மையையே கீதை உபதேசிக்கிறது.

---

௨

# ஞான ரதம்

## பீடிகை

**பி**ன்மாலைப் பொழுது. திருவல்லிக்கேணி, வீரராகவ முதலித் தெருவில கடற்பாரிசத்தை நோக்கியிருக்கும் ஓர் வீட்டு மேடையின்மீது சிரமபரிகாரத்தின் பொருட்டு ஓர் மஞ்சத்தின் மீது படுத்துக்கொண்டிருந்தேன். ஆனந்தகரமான கடற்காற்று நான் படுத்திருந்த முன்னறையிலே நான்கு பக்கங்களிலிருந்தும், கண்ணாடிச் சாளரங்களின் மூலமாகவும், புறக் கதவின் நிலைகளின் மூலமாகவும், வந்து நிரம்பிய வண்ணமாக இருந்தது. அந்தக் காற்றும், பின் மாலை யொளியும் கலந்ததினால் உண்டாகிய தெளிவும் இன்பமும் என்னால் கூற முடியாது. "ஆஹா! இப்போது போய் ஸ்நானம் செய்துவிட்டு, நேர்த்தியான ஒரு குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு, கடற்கரை யோரமாகத் தெற்கே அடையாற்றுக்குப் போய்,—வழியெல்லாம் காளிதாஸனுடைய சாகுந்தலத்தையேனும், அல்லது ஓர் உபநிஷத்தையேனுங் கொண்டுபோய்ப் படித்து இன்பமடைந்துகொண்டே திரும்பினால் நல்லது" என்ற சிந்தனை உண்டாயிற்று. ஆனால் என்னிடம் குதிரை வண்டி கிடையாது என்ற விஷயம் அப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வந்தது.

"அடடா! மிகுந்த செல்வம் இல்லாததனால், உலகத்திலே பலவிதமாகிய இழிவான இன்பங்கள் மட்டுமல்ல, உயர்ந்த இன்பங்கள் கூடப் பெறுவதற்குத் தடை ஏற்படுகிறதே!" என்று எண்ணினேன். அப்பொழுது, என் மனம்—"மூடா, ஸகல மனிதர்களிடத்திலும், ஈசன் ஞானம் என்பதோர் தெய்வீக ரதத்தைக் கொடுத்திருக்கின்றார். அது விரும்பிய திசைகளுக்கெல்லாம் போய் விரும்பிய காட்சிகளையெல்லாம் பார்த்து வரக்கூடிய வல்லமை உடையது; அதைப் பயன் படுத்தி இன்பமடையாமல் எந்த நிமிஷத்திலும் உன்னைக் கீழே தள்ளித் தீங்கு செய்யக் கூடியதாகிய இழிந்த மர வண்டியிலே ஏன் விருப்பம் கொள்கிறாய்?" என்றது. உடனே ஞானமாகிய ரதத்தைக்கொண்டு தயார் செய்து வைக்கும்படி எனது சேவகனாகிய "ஸங்கற்ப"னிடம் கட்டளையிட்டேன். ரதம் வந்து நின்றது. அதில் ஏறிக்

கொண்டேன். ஆனால் எனது ஞான ரதம் மற்றவர்களுடைய தைப் போல் அத்தனை தீவிரம் உடையதன்று. எளிதாக நெடுந்தூரங் கொண்டுபோகத்தக்கதும் அன்று. கொஞ்சம் நொண்டி. என்ன செய்யலாம்? இருப்பதை வைத்துக் கொண்டு தானே காரியங் கழிக்கவேண்டும்? ஆகவே, அந்த ரதத்தின் மீது ஏறிக்கொண்டேன். அதிலேறி நான் கண்டுவந்த காட்சிகளும் அவற்றின் அற்புதங்களுமே இந்தப் புஸ்தகத்தில் எழுதப்படுகின்றன.

# முதல் அத்தியாயம்

## உபசாந்திலோகம்

### (கவலையற்ற பூமி)

**எ**னது ஞானத்தேரை நோக்கி "இந்த க்ஷணமே என்னை, துக்கமில்லாத பூமி எங்கேனும் உளதாயின், அங்குக் கொண்டுபோ" என்று ஏவினேன். ஆஹா! இந்த ரதத்தை வைத்துக்கொண்டிருந்தும், இத்தனை நாள் எனக்குக் கவலையும், மன உளைச்சலும் இல்லாதிருக்க வழி தெரியாமல் போய்விட்டதே! எத்தனை நாள் எனது மனம் தூண்டிற்புழுவைப்போலத் துடித்துக்கொண்டிருக்க, அதை நிவிருத்தி செய்வதற்கு யாதொரு உபாயமும் அறியாமல் பரிதபித்திருக்கின்றேன். அம்மம்மா! இந்த உலகத்துக் கவலைகளை நினைக்கும்போதே நெஞ்சம் பகீரென்கிறது. அவற்றுக்குள்ள விஷ சக்தியை என்னென்பேன்? ஒருவனது முகத்திலுள்ள அழகையும், குளிர்ச்சியையும், இளமையையும் இந்தக் கவலைகளே அழித்து விடுகின்றன. கண்களின் ஒளியை மாற்றிப் பசலையும், உடல்நிறம் மங்குதலும் உண்டாக்கி விடுகின்றன. நெற்றியிலே வரிகளும், கன்னங்களிலே சுருங்கல்களும், இந்த நீசக் கவலைகளினாலேயே ஏற்படுகின்றன. எனது தொண்டையின் இனிய குரல் போய், கடூரமான கரகரப்புச் சத்தம் உண்டாகிறது. மார்பிலும், தோளிலும் இருந்த வலிமை நீங்கிப்போய்விடுகிறது. இரத்தம் விரைவாக ஓடுதலின்றி, மாசு நீரோடைபோல மந்தம் அடைகின்றது. கால்களில் தீவிரமில்லாமற் போய் விடுகிறது. கவலைகள் என்ற விஷ ஜந்துக்கள் ஒருவனுடைய சரீரத்தை உள்ளூர அரித்து விடுகின்றன. சரீரத்தை மட்டுமா? அறிவையும் பாழாக்குகின்றன. மறதியை அதிகப்படுத்திவிடுகின்றன. முக்கியமான செய்திகளெல்லாம்

நல்ல ஸந்தர்ப்பத்திலே நினைவிற்கு வராமல் போய் விடுகின்றன. படித்த படிப்பெல்லாம் பாலைவனத்திலே பெய்த மழைபோலே நிஷ்பலனாய் விடுகின்றது. அறிவிலே பிரகாசமில்லாமல், எப்போதும் மேகம் படர்ந்தது போலாய் விடுகிறது. யோசனை தட்டுகிறது. ஐயோ! இந்தக் கவலைகளாகிய சிறிய சிறிய விஷப் பூச்சிகளுக்குள்ள திறமை வைத்திய சாஸ்திர நிபுணர்கள் கூறும் மஹா கொடூரமான—கண்ணுக்குத் தெரியாத—நோய்ப் பூச்சிகளுக்குக்கூடக் கிடையாது.

" ஞான ரதமே, நீ நம்மை இப்போது கவலையென்பதே இல்லாத உலகத்திற்குக் கொண்டுபோய்ச் சேர் " என்று கட்டளையிட்டேன். அப்போது மனம் வந்து ரதத்தைத் தடுத்துக்கொண்டது. " அது அத்தனை ஸுகமான உலக மன்று. கவலை இல்லாமலிருந்தால்மட்டும் போதுமா? வேறு இன்பங்கள் அனுபவிக்கக்கூடிய இடம் ஏதேனும் தமக்குத் தோன்றவில்லையா? கவலையே இல்லாத இடத்தில் ஸுகமும் இராது என்று எனக்குத் தோன்றுகிறது. மேலும்,—மேலும்,—என்னவோ; இன்ன காரணமென்று சொல்லமுடியாது. ஆனால் அங்குப் போவதில் எனக்குப் பிரியமில்லை " என்று மனம் கூறிற்று.

நான் கோபத்துடன், " சீச்சீ! பேதை மனமே, உனக்கு ஓயாமல் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் வேதனைகளையும் உளைச்சல்களையும் கண்டு இரங்கி, நான் உன்னைச் சிறிது நேரமேனும் அமைதி யுலகத்திற்குக் கொண்டுபோய் வைத்துத் திரும்பலாம் என்று உத்தேசித்தேன். இதற்கு நீயே ஆக்ஷேபம் சொல்ல வருகிறாயா?" என்று கண்டித்தேன். மனம் பிணங்குதல் மாறாமல் மறுபடியும் எதிர்த்து நின்றது.

எனக்கு இந்த மனம் என்ற மோஹினியிடத்தில் காதல் அதிகமுண்டு. ஆதியில் எவ்வாறு இந்த மோஹம் உண டாயிற்று என்பதை இங்கே விஸ்தரிக்க முடியாது. அது ரஹஸ்யம். ஆனால், நாளேற நாளேற நான் வேறு இந்த மனம் வேறு என்ற த்வைத சிந்தனையே பெரும் பாலும் மறந்து போகும் வண்ணமாக எனக்கு இம் மோஹினியிடத்தில் பிரேமை மிகுந்து போய்விட்டது. இந்த மனம் படும் பாடுகளைக் கண்டு பொறுக்காமலேதான் நான் சாந்திலோக தரிசனத்திலே விருப்பம் கொண்டேன். இப்போது மனம் அந்த யோசனையில் நிஷ்காரணமாக வெறுப்

புக் கொள்வதைக் கண்டு எனக்குத் திகைப்பும், இராகமும், கோபமும் கலந்து பிறந்தன. எவ்வளவோ விதங்களில் மனத்தைச் சமாதானம் செய்ய முயன்றேன். மனம் பின்னும் கண்ணை மூடிக்கொண்டு ஒரேயடியாக மூடச் சாதனை சாதிக்கத் தொடங்கிற்று. எனக்கு இன்ன செய்வதென்று தெரியவில்லை. பிறகு ஒரே நிச்சயத்துடன், " மனமே, நான் இந்த விஷயத்தில் உன் பேச்சைக் கேட்கவே மாட்டேன். உன்னுடைய நன்மையைக் கருதியே நான் செய்கிறேன்.—ஞான ரதமே, உடனே புறப்படு" என்றேன்.

அடுத்த நிமிஷத்தில் உபசாந்தி பூமிக்கு வந்து சேர்ந்தோம்.

நெடிதோங்கி வளர்ந்த கோட்டைச் சுவர் வாயிலிலே போய் ரதம் நின்றுவிட்டது. நான் தூரத்திலிருந்தே அந்தக் கோட்டையைப் பார்க்க முடிந்ததாயினும், எனது ஞானத் தேர் போனவுடன் அந்த வாயிற் கதவுகள் தாமே திறந்துவிடும் என்று எண்ணினேன். அவ்வாறு திறக்கவில்லை. என்ன ஆச்சரியம்! ஞானத்தேர்கூட நுழைய முடியாதபடி அத்தனை பரிசுத்தமானதா இந்த லோகம் என்று வியப்புற்றேன். எனது மனமோ முன்னைக் காட்டிலும் ஆயிர மடங்கு அதிகமாக நடுங்கத் தொடங்கிற்று. அதற்கு என்னிடம் பேசக்கூட நாவெழவில்லை. கோட்டை வாயிலுக்கு வெளியே ஒரு வாயில்காப்பான் உருவின கத்தியுடன் நின்று கொண்டிருந்தான். நெருப்பு நிறங் கொண்டதும். இமயமலையைக்கூட ஒரே வெட்டில் பொடிப் பொடியாகச் செய்து விடுமென்று தோன்றியதுமாகிய அந்த வாளின்மீது " விவேகம் " என்று கண்ணைப் பறிக்கக் கூடிய ஜோதி யெழுத்திலே எழுதப்பட்டிருந்தது. வாயில் காப்பான் :—" யார் அது ? எங்கு வந்தாய் ?" என்றான்.

நான் அவனுக்கு வந்தனம் கூறிவிட்டு. " உபசாந்தி லோகத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பலாமென்ற எண்ணத்துடன் வந்தேன்" என்று சொன்னேன். அதைக்கேட்டு அவன் கடகடவென்று குலுங்கக் குலுங்க நகைக்கலாயினன்.

" ஏனையா சிரிக்கிறீர் ?' என்று கேட்டேன். அவன் மறுமொழி கூறாமல் சிரித்துக் கொண்டிருந்தான்.

ஏழை மனமோ நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகத் திகிலுறுவதாயிற்று. எனக்கு மிகவும் திகைப்புண்டாய் விட்டது. எனவே கோபத்துடன் வாயில் காப்பானை நோக்கி " ஏனப்பா

உள்ளே போகலாமா, கூடாதா? ஒரே வார்த்தையில் சொல்லிவிடு. கலகலவென்று சிரித்துக் கொண்டிருக்கிறாயே ?" என்று கேட்டேன்.

அதற்கு வாயில்காப்பான், "உனக்கும் உபசாந்திக்கும் வெகு தூரம்" என்று தனது வாய்க்குள்ளேயே (ஆனால் எனது செவியிலே படும்படி) முணுமுணுத்து விட்டுப் பிறகு "கோபம் கொள்ளாதே அப்பா. நீ உபசாந்தி லோகத்தை ஏதோ நாடகசாலை போலக் கருதிப் பார்த்துவிட்டுத் திரும்ப உத்தேசமிருப்பதாகக் கூறியது எனக்கு நகைப்பை உண்டாக்கிற்று. ஸாதாரணமாக, இவ்வுலகத்துக்கு வருபவர்கள் திரும்ப வெளியே போகும் வழக்கம் கிடையாது" என்று இரைந்து கூறினான்.

"அது சரி, உள்ளே நாங்கள் பிரவேசிக்கலாமா, கூடாதா? தயவு செய்து சொல்லும்."

"நீ ஸாதாரணமாகப் பிரவேசிக்கலாம். இது ஸகல ஜீவர்களுக்கும் தாய்வீடு. இங்கு வரக்கூடாது என்று எந்த ஜீவனையும் தடுக்க எனக்கு அதிகாரமில்லை. ஆனால் வைராக்கியக் கோட்டையைக் கடந்து உள்ளே செல்லும் உரிமை உன்னுடன் வந்திருக்கும் மனம் என்ற பொய்ப் பொருளுக்குக் கிடையாது. அது உள்ளே போகுமானால், அக்கினி லோகத்திலே பிரவேசித்த பஞ்சுப் பொம்மைபோல நாசமடைந்து விடும்" என்றான்.

மனம் ஆரம்பத்திலேயே உபசாந்திலோகம் என்ற பெயரைக் கேட்டவுடன் நடுங்கத் தொடங்கியதற்கும், அது என்னை அங்குப் போகவேண்டாமென்று பிரார்த்தனைகள் செய்ததற்கும், கோட்டையருகே வந்தவுடன் தர்ம தேவதையின் முன் வந்து நிற்கும் கொடுங்கோலரசரைப் போல் நிலை மயங்கி அதற்கு அளவு கடந்த திகிலுண்டானதற்கும் காரணம் இன்னது என்பதை இப்போதுதான் அறிந்தேன். அப்பால் அந்த உலகத்திற் பிரவேசிக்கவேண்டும் என்ற விருப்பம் எனக்கு நீங்கிப் போய்விட்டது. மனத்தினிடம் வைத்திருந்த மோஹத்தால், அதைக்கொன்று விட்டு நான் இன்பமடைவதில் பிரியங் கொள்ளவில்லை.

"என்னை இப்போது என்ன செய்யச் சொல்லுகிறீர் ?" என்று வாயில் காப்பானிடம் கேட்டேன். அதற்கு அவன் "மானுடா, மனம் இறந்த பிறகுதான் உபசாந்தியுண்டு" அது இருக்கும் வரையில், கவலைகள் நீங்கி இருக்கலாம் என்ற

எண்ணம் வீண். கவலைகளாகிய அஸுரர்களை இடைவிடாது பெற்றுத் தள்ளிக்கொண்டே இருக்கும் தாய் மனமேயாகும். உனக்கு அந்தப் பொய்யரக்கியிடம் இன்னும் ப்ரேமை தீர வில்லை, பக்குவம் வந்தபிறகு, நீ தானே இங்கு வந்து சேரலாம். இப்போது போய்வா" என்று சொன்னான். திடீரென்று அந்தக் கோட்டை, வாயில் காப்பான், எல்லாம் மறைந்து போய்விட்டது. அரைக்ஷணம் கண்ணிருட்சி உண்டாயிற்று. பிறகு கண்ணை விழித்துப் பார்த்தேன். மறுபடி, வீரராகவ முதலித் தெருவில், முன்னே கூறப்பட்ட வீட்டு மாடியில், தனியே கட்டிலில் நான் படுத்துக்கொண்டிருப்பதையும், கடற் பாரிசத்தினின்றும் இனிய காற்று வீசிக் கொண்டிருப்பதையும் கண்டேன்.

"சரி, போனது போகட்டும். இந்த உபசாந்திப் பேறு நமக்கு இப்போது கிடைக்கவில்லை. ஆயினும், பாதகமில்லை. ஏழை மனத்தைக் கொன்றுவிட்டு நாம் மட்டும் தனியே இன்பமுற விரும்புவதும் நன்றிகெட்ட செய்கை யாகுமல்லவா? அதன் கவலைகளையும், உளைச்சல்களையும் பற்றி யோசித்தேனேயொழிய அதன் மூலமாக எனக்குக் கிடைத்திருக்கும் பெரிய பெரிய நன்மைகளைச் சிந்தித்தேனில்லை. எனக்கு உலக வாழ்க்கையே இந்த மனத்தினால் தானே எய்திற்று. இதை ஈசனென்றே சொல்லத்தகும். மேலும், எனக்கு அதையும், அதற்கு என்னையும் காட்டிலும் உயிர்த்துணைவர் யார் இருக்கிறார்கள்? அதற்குத் துரோகம் செய்யலாமா? எத்தனை கோடிக் கவலைகள் இருப்பினும் பெரிதில்லை. மனம் செத்து நான் தனியே வாழ்வதாகிய உபசாந்திலோகம் எத்தனை அரிதாயிருப்பினும், அது எனக்கு வேண்டாம்" என்று தீர்மானம் செய்து கொண்டேன். "உபசாந்தி என்று சத்தும் மனிதர்களை உலகத்தார் ப்ரம்மஞானிகளென்றும், மஹர்ஷிகளென்றும் புகழ்கிறார்களே! அந்த மனிதர்களெல்லாம் மூடர்களும், துரோகிகளுமாவார்களென்று எனக்குத் தோன்றுகிறது" என்று சொல்லிக் கொண்டேன்.

நான் இவ்வாறு ஆலோசிப்பதை அறிந்து கொண்ட மனம், "அப்பாடா!" என்று பெருமூச்சுவிட்டு, தன் நடுக்கமெல்லாம் தீர்ந்து ஆறுதலுடனிருந்தது. எனக்கும் ஸந்தோஷம் உண்டாயிற்று. எனது மன மோஹினிக்கு ஓர் முத்தம் கொடுத்தேன்.

---

# இரண்டாம் அத்தியாயம்

## கந்தர்வலோகம்

### (இன்ப வுலகம்)

மறுநாள் மனத்தினிடம், "இப்போது, எங்கே போகலாம்?" என்று கேட்டேன்.

"துன்பக் கலப்பற்ற இன்பங்கள் நிறைந்திருக்கும் உலகத்திற்குப் போய் வருவோமே" என்றது.

"நன்று கூறினை" என நான் மகிழ்ச்சி பாராட்டி, அப்பால் முன் போலவே எனது ஞானத்தேரில் ஏறிக் கந்தர்வ லோகத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே கண்ட காட்சிகளையும், அனுபவித்த போகங்களையும் என்னால் கூடிய வரையும் உள்ளது உள்ளவாறு கீழே எழுதுகிறேன். அந்தப் போகங்களிற் சில, தற்காலத்தில் நமது தேசத்து ஜனங்களால் மதிக்கப்பெறும் ஆசார தர்மங்களுக்கு விரோதம் என்று நம்மவர் கருதுவார்களாயின், அதன் பொருட்டு, என் மீது பழி கூறலாகாது. இந்தப் பாரத தேசத்தில் தற்காலத்திலே வாழும் அடிமை ஜனங்கள் "இந்த இன்பம் அதர்மமானது, அந்தச் செய்கை அகாரியமானது" என்று தர்மப்பிரஸங்கங்கள் செய்யும்போது, உண்மையாகவே எனக்கு நகைப்புண்டாகிறது. மஹர்ஷிகளுக்கும் தேவதைகளுக்கும் ஸந்ததியாராகத் தோன்றியவர்களாயினும், தற்காலத்தில் இந்நாட்டு ஜனங்கள் உலகத்திலுள்ள எல்லா அநாகரிக ஜனங்களைக் காட்டிலும் கடைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். மிருகப் பிராயமாகக் காடுகளிலும் தீவுகளிலும் ஆடையில்லாமல் காதுகளிலும், உதட்டிலும், மூக்கிலும் துவாரங்கள் செய்து, சங்குகளையும் வளையங்களையும் தொங்கவிட்டுக்கொண்டு மேலெல்லாம் பச்சை குத்தியவர்களாகத் திரியும் ஜனங்களுக்குக் கூட ஸ்வதந்திரம் உண்டு. இந்தத் தேசத்தார் அப்பெரும் பாக்கியத்தை இழந்துவிட்டார்கள். இந்நாட்டில் கல்வி மங்கிப்போய் விட்டது. நூற்றிலே தொண்ணூறு ஜனங்கள் 'அ' (ஆநா) எழுதச் சொன்னால் தும்பிக்கை யொன்று வரைந்து ஆனை எழுதக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். நமது சாஸ்திரங்களெல்லாம் செல்லரித்துப் போய்விட்டன. தேசத்து ஞானக் களஞ்சியத்திற்குக் காப்பாளிகளாக இருந்த பிராம்மணர் மடைத் தவளைகளைப் போலச் சிற்சில மந்திரங்களைச் சம்ந்தர்

மீல்லாமல் யாதொரு பொருளுமறியாமற் கத்துகிருர்களே யல்லாது, உண்மையான ஞானப் பெருமை இவாகளுக்கு லவலேசமும் இல்லாமல் போய்விட்டது. மஹர்ஷிகளின் வழியில் தோன்றிய பிராமணர் மடைத்தொழில் செய்வதும், நீசர்களிடம் போய்த் தொண்டு புரிந்து பணம் வாங்கிப் பிழைப்பதும், இதைக் காட்டிலும் இழிவாய்ய எண்ணற்ற பிரவிருத்திகளிலே காலங் கழிப்பதும் ஸர்வ ஜனங்களும் அறிந்த விஷயங்களேயாம். இந்நாட்டின் கலைகள் அனைத்தும் மறைந்து போய்விட்டன. வாயம் போய்விட்டது. பலம், ஸுகம், செல்வம் முதலிய நற்பொருள்களெல்லாம் அகன்று விட்டன. மனங்குன்றி உடல் சோர்நது உணண உணவின்றிக் கண் குழிந்து போயிருக்கும் அடிமை ஜாதியார் இந்நாட்டில் மஹா பரிதாபகரமான வாழ்க்கை நிகழ்த்துகின்றார்கள்.

இன்ப நாடாகிய கந்தர்வ லோகத்தைப்பற்றிப் பேசி வருமிடத்தே, இத்துன்ப நாடாகிய பாரத தேசத்தைப்பற்றிச் சில வசனங்கள் எழுதிய பிழையை இந்நூல் படிக்கும் நண்பர்கள் பொறுத்தருள் செய்யுமாறு வேண்டுகிறேன். தர்மமே சூனியமாகப் போயிருக்கும் இத்தேசத்திலே சிலர் கந்தர்வ லோகச் செய்திகளைப்பற்றி நாம் எழுதப் போகும் விஷயங்கள் எழுதத் தகாதவை என்று கருதக்கூடும் என்ற ஸந்தேகம் எனககுண்டாயிற்று. தர்மாதர்ம நிச்சயம் புரியும் அதிகாரமே இந்த அடிமை ஜனங்களுக்குக் கிடையாது என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளும் பொருட்டாகவே மேலே கண்ட வசனங்கள் எழுதப்பட்டவையாகும். இதுநிற்க.

கந்தர்வ லோகத்திற்குப் போய்ச் சேர்ந்தவுடனே என்னை யறியாமால் ஓர் ஆனந்தம் உண்டாயிற்று. அதி ரமணீயமான ஸங்கீதத்தொனி கேட்டது. அவ்வொலி பொன்னாற் செய்யப் பட்ட தொண்டையினையுடைய டெண் வண்டுகளின ரீங்காரம் போலிருந்தது. அன்று; அது சரியான உவமையாக மாட்டாது. உயிருக்குள்ளே இன்னிசை மழையை வீசிக் கொண்டேயிருந்தது போலத் தோன்றிய அவ்வொலிக்கு இன்ன உவமை சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. "இது என்ன ஒலி! எங்கிருந்து வருகிறது?" என்று யோசித்தேன். எனது அறிவிற்குப் புலப்படவில்லை. கண்களோ பரவசமடைந்து போயின. அங்குள்ள மாடங்களும், மாளிகைகளும், கோயில்களும், கோபுரங்களும், நாடக சாலைகளும்—எல்லா வீடுகளும் சந்திர கிரணங்களைப் போன்ற

குளிர்ந்த இனிய பொன்னொளி வீசிக்கொண்டிருந்தன. இவற்றிலும், மற்ற மண், கல், தரை முதலிய எல்லாப் பொருள்களிலுமே அவ்வொளி அனேக விதமான வர்ண வேறுபாடுகளுடன் கலந்திருக்கக் கண்டேன்.

இதை வாசிப்பவர்களே, நீங்கள் எப்போதாயினும் மாரிக் காலத்தில், மழையில்லாத மாலைப் பொழுதிலே கடற்கரை மணல் மீது இருந்துகொண்டு, வானத்தில் மேற் புறத்தில் ஸூரியன் அஸ்தமிக்கும்போது, ரவி கிரணங்கள் கீழ்த்திசையிலுள்ள மெல்லிய மேகங்களின் மீதும் இடையிடையே தெரியும் வான வெளிகளின் மீதும் வீச, அதனின்றும் ஆயிர விதமான மெல்லிய அற்புதகரமான வர்ண வேறுபாடுகள் தோன்றுவதைப் பார்த்திருக்கிறீர்களா? இந்த அடிமை நாட்டிலே உங்களுக்குப் பிரகிருதி தேவியின் ஸௌந்தர்யங்களைப் பார்த்துப் பரவசமடைய ஸாவகாசம் அடிக்கடி ஏற்பட்டிராது. ஆனால், மேற்கூறப்பட்ட வர்ணக் காட்சியை ஒரு முறையேனும் கண்டிருக்கமாட்டீர்களா? அவ்வாறு கண்டிருப்பீர்களானால், நான் பார்த்த கந்தர்வ லோகத்தின் இயற்கை ஒரு சிறிது உங்களுக்குத் தெரியும்படிச் சொல்லக்கூடும். அங்கும் அநேக விதமான மேன்மை பொருந்திய திரவத் தன்மை கொண்ட வர்ணபேதங்களே காணப்பட்டன. ஆனால் அவற்றுடன் சந்திர கிரணங்களின் மோஹினித் தன்மை கலப்புற்றிருந்தது.

இந்த ஒளியிலும், இன்னிசையிலும் களிப்புற்று நான் ஒரு க்ஷணம் இருக்கு முன்னாகவே, ஒரு கந்தர்வ யுவதி என் முன் வந்து "வாராய், மானுட வாலிப, உனக்கு எங்கள் உலகத்தின் புதுமைகளையெல்லாம் காட்டுகின்றேன்" என்று கைகோத்து அழைத்துச் சென்றாள். நான் அந்த யுவதியின் வடிவைக் கண்டு மயங்கி மூர்ச்சித்து விடுவேன் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆயினும், அறிவைச் சிறிது ஸ்திரப்படுத்திக்கொண்டு, அவளை நோக்கி, "இங்கிருந்து நகர்வதற்கு முன்பு முதலாவது ஒரு கேள்வி கேட்கிறேன், அதற்கு விடை கூறவேண்டும்" என்றேன்.

"கேள்" என்று அவள் பொன் வீணையொன்று மனிதர் பாஷையிலே பேசுவதுபோலச் சொல்லினள்.

"இந்த இனிய ஒலி என்னைப் பரவசப்படுத்துகிறதே! அது எங்கிருந்து வருகிறது?" என்றேன்.

"மேலே பார்" என்றனள். நீல வானத்தில் சந்திரன் தாரகைகளினிடையே, கொலுவீற்றிருக்கக் கண்டேன்.

" அவருடைய கிரணங்கள் " என்றாள்.

" சந்திர கிரணங்களா! சந்திர கிரணங்களுக்கும் இந்த மனோகரமான தொனிக்கும் என்ன ஸம்பந்தம்?" என்று கேட்டேன்.

" சந்திர கிரணங்களுக்கு இந்த இனிய ஓசை இயற்கை. அது இந்த உலகத்தில் நன்றாகக் காதில் விழுகிறது. உங்கள் மண்ணுலகத்திலே ஜனங்களுடைய செவியில் விழுவது கிடையாது. ஆனால் அங்கேகூட அருமையான கவிகளின் செவியில் இந்த ஓசைபடும்" என்றாள். இதைக் கேட்டு வியப்படைந்து, பிறகு அந்த யுவதியுடனே நடந்து சென்றேன்.

" பற " என்றாள்.

நான் கலீரென்று நகைத்துப் " பறக்கவா சொல்லுகிறாய்!" என்று வியப்புற்றேன்.

பால் போல வெண்மை கொண்ட வானத்தாற் செய்த இரண்டு சிறகுகள் அவளுக்கிருப்பதை நான் கண்டேன். முன்பு நோக்கியபோதே எனக்கு மூர்ச்சை யுண்டாகத் தக்கதாக விருந்த அந்த யுவதியைச் சிறிது வருணித்துப் பார்க்கலாமா? ஏதோ முயற்சி செய்கின்றேன்.

சந்திரகலை வீசும் முகம். அதன்மீது சிறியதும் மூன்று விரல் உயர முடையதுமாய், மலர்களாற் செய்யப்பட்ட ஓர் கிரீடம். உயிரென்ற வண்டு வீழ்ந்து சிறகிழந்து தள்ளாடும் கள்ளூற்றுக்களாகிய இரண்டு கரிய விழிகள். தின்பதற் கல்லாது, தின்னப்படுவதற்கமைந்தன போன்ற பற்கள்.

தனது பாலிறகுகளால் விகாரம் செய்யப்படாத திவ்விய உருவம். தீண்டுவோன் உடற்குள்ளே இன்பமயமான மின்சாரம் ஏற்றுகின்ற கைகள். மண்ணுலகத்துப் பெண்களைப் பேசுமிடத்து கந்தர்வச்சாயல் என்கிறார்கள். இவளது இயலையும், சாயலையும் என்னென்பேன்? தெய்வ இயல், தெய்வச் சாயல்.

" மண்ணுலகத்தவனாக இருந்த போதிலும் நல்ல பார்வைகள் பார்க்கிறாய்" என்று நாண முணர்த்தி, " யோசித்துக் கொண்டு நில்லாதே, பற" என்றாள்.

" உன் பெயரென்ன?" என்று கேட்டேன்.

" வெகு நேர்த்தி! நானென்று சொன்னால் நீ யொன்று பேசுகிறாய், என் பெயர் எதற்கு?"

" சொல்லு, பார்ப்போம்."

என் பெயர்—பர்வதகுமாரி. என்னை ஸாதாரணமாகக் குமாரி என்று அழைப்பார்கள்."

" நல்லது, நான் உன்னைப் பெயர் சொல்லிக் கூப்பிட லாமா?"

" ஓ!",

" சரி, பர்வதகுமாரி, நான் பறப்பதெப்படி? உன்னைப் போல் எனக்கு இறகுகள் இருக்கின்றனவா?" என்று கேட்டேன்.

" நான் வந்தபொழுது என் மீது இறகுகள் இருக்கக் கண்டாயா?" என்றாள்.

" உன் முகத்தைக் கண்டு பரவசமடைந்ததில் இறகுகளைக் குறிப்பிட முடியவில்லை. நீ பறக்கும் பிரஸ்தாபம் தொடங்கிய போதுதான் பார்த்தேன்."

" ஸ்துதி பிறகு பேசலாம். ஆரம்பத்திலே இறகுகள் கண்ணுக்குத் தெரிந்ததா? சொல்."

" தெரியவில்லை."

" இந்த உலகத்தில், பறக்கவேண்டுமென்ற நினை வுண்டானவுடனே, இந்த வெண்மை நிறங்கொண்ட வானிறகு கள் தோன்றுகின்றன. நீ பறக்க வேண்டுமென்று உள்ளத் திலே ஸங்கல்பஞ் செய்துகொள்."

" சரி."

" இப்போது என் கண்ணுக்குள்ளே உன் வடிவத்தைப் பார்."

பட்டப் பகற்போல் வீசிய நிலா வெளியிலே, அவளுடைய அழகிய கண்களுக்குள் உற்றுப் பார்த்தேன். அங்கே, எனது வடிவம் கந்தர்வ ரூபமாகத் தோன்றியது கண்டு வியப் படைந்தேன். அஹா! நான் கனவுகளிலே என்னைக் கண்ட போது தோன்றிய வடிவம்! நோயற்றது; சுருங்கலற்றது;

மண் தன்மையில்லாதது; ஸௌந்தரியமானது. எனக்கும் இரண்டு வான இறகுகள் திடீரென்று முளைத்திருக்கக் கண்டேன். எனது ரூபம் இத்தனை மாறுபாடு அடைந்திருப்பதைக் கண்டு களிப்புற்று உடனே அவள் முகத்தையும் பார்த்தேன். எனது கண் குறிப்பை நோக்கி என் மனநிலையே அப்போது நிகழ்ந்த எண்ணத்தை அவள் அறிந்துகொண்டு விட்டாள்.

"அடா! உன்னைக் கண்ணுக்குள் பார்க்கச் சொல்லிய தன்றோ பிழையாய்விட்டது" என்றாள்.

"ஏன்?" என்று கூறிச் சிரித்தேன்.

"இதுவரை நீ உன்னை மனித சரீரமுடையவனாகவும், என்னைக் கந்தர்வ சரீர முடையவளாகவும் எண்ணி நடத்தி வந்தாய். இனி என்னை 'இணை' யென்று கருதி விடுவாய்."

"ப்ரிய ரூபிணி! நான் ஈசனாய் விட்டபோதிலும் உன்னைக் கண்டு வியப்படைவதை நீக்க மாட்டேன். எனினும், நான் உன்னை இணையாகக் கருதுவதில் உனக்கு ஸந்தோஷம் தானே!"

"ஓ"

பிறகு கண்களைக் கலந்தோம். 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில.''

"பற" என்றாள்.

புதிதாக உள்ளத்திலே எழுந்த காதற் கிளர்ச்சி கொண்டோ, அல்லது இறகுகளின் உதவி கொண்டோ, அல்லது காந்தத்தின் பின்னே செல்லும் ஊசியென அவள் பறந்து செல்வதை இயற்கை முறையாற் பின்பற்றியோ, அவளொடு நானும் பறந்து செல்வேனாயினேன். இறகுகளின் உதவி கொண்டு பறந்ததாக எனக்குத் தோன்றவில்லை. ஏனெனில், பறத்தல் அத்தனை ஸுலபமாகவும், ஸஹஜமாகவும் தோன்றிற்று.

"எங்கே போகிறாய்? உனது மாளிகைக்கா?" என்று கேட்டேன்.

"என் வீடு, உன் வீடு என்ற பேதக் கதையெல்லாம் இங்கே கிடையாது. இது ஸ்வேச்சாலோகம்; முற்றிய

ஞானத்திலே எவ்வாறு அபேத நிலை ஏற்படுகிறதோ, அது போலப் பரிபூர்ணமான போகத்திலேயும் அபேத நிலை தோன்றுகிறது. இங்கே எல்லோருக்கும் எல்லா மாளிகைகளும் உரிமைதான். யார் எங்கு வேண்டுமென்றாலும் யதேச்சையாக வாழலாம். நான் உன்னைக் கடலோரத்தில் ஸுகந்த மாளிகைக்கு அழைத்துப் போகிறேன்."

"அபேதம், பேதம் என்று மிகப் பெரிய பேச்சுகள் பேசுகிறாயே? வேதாந்தம் எங்கே படித்தாய்?"

"போக நிலை நன்றாக உணர்ந்தவர்களுக்கு அத்வைத ஞானம் இயற்கையிலேயே உண்டாகும். போகமறியாதவர்கள் பேசும் அத்வைதம் பொய். உங்கள் மண்ணுலகத்திலே அந்த ஞான நடிப்பு மிகுதியாக உண்டு. எங்களுக்கு அபரோக்ஷ ஞானம் ஸுலபம் பரோக்ஷமும் எளிதுதான். இங்கிருந்து உபசாந்தி லோகம் வெகு ஸமீபம். போக மூர்த்தியாகிய விஷ்ணுவும், யோகநாதனாகிய சிவனும் ஒன்றென்பதை அறியாயா? இதெல்லாம் போகட்டும். இப்போது ஞானம் பேசத் தருணமன்று. கீழெல்லாம் பார்" என்றாள்

நகரத்திலே இரண்டு பனை யுயரத்தில் பறந்து போய்க் கொண்டு கந்தர்வநாட்டு மாளிகைகள், ஸங்கீத சாலைகள், லீலா மண்டபங்கள், என்பவற்றின் அற்புதங்களை யெல்லாம் நோக்கிச் சென்றேன்.

பறப்பதிலே உண்டான இன்பம் கொஞ்சமன்று. மண்ணுலகத்திலுள்ள ஸகல ஜந்துக்களிலும் பக்ஷிகளே அதிக ஸுகம் அனுபவிப்பதாகக் கருதவேண்டும். ஓடும் தண்ணீரிலே நீந்துவது சிறிது நேரம் இன்பமாயிருக்கும். ஆனால், வானத்தில் நீந்திச் செல்வது ஸதா இன்பம். அதிலும் பார்வதகுமாரியைப் போல் ஓர் வழித்துணை கிடைக்குமாயின், வாழ்நாள் முழுதும் பறந்துகொண்டேயிருக்கலாம். ஐரோப்பியர்கள் கந்தர்வ போகங்களையே ஆதர்சமாகக் கொண்ட ஜாதியார். வான ரதங்கள் செய்து நடத்துகிறார்கள். ஆனால், அவர்களிடம் தமோகுணம் அதிகமாதலால், அந்தப் புதுமையை இன்ப வழிகளிலேயே விருத்தி செய்து கொண்டுபோகத் தெரியவில்லை. வான ரதங்கள் ஏற்பட்டு இன்னும் சரியாக நடத்தத் தெரிவதற்கு முன்னாகவே 'எதிர்காலத்துப் போர்கள் வானத்திலேயே நடக்கக் கூடுமல்லவா?' என்ற விஷயத்தைப் பற்றிப் பலவாறு ஆலோசனைகள் செய்யத்

தலைப்பட்டு விட்டார்கள். அவர்களுக்கு ஞாபகமெல்லாம் யுத்தத்திலேயும் கொலையிலேயும் இருக்கிறபடியால், அவற்றை அனுசரிக்கத் தகுதி யில்லாதவர்களாகிருர்கள். இது நிற்க.

யக்ஷர் நாட்டிற்கு வந்த ஆரம்பத்திலே எனக்குப் பொறுக்க முடியாத மயக்கமும் திகைப்பும் விளைந்திருந்தன வென்று மேலே கூறியிருக்கிறேன். அவை சிறிது சிறிதாக நீங்கி இன்ப வுணர்ச்சி மட்டும் மிஞ்சி நின்றது. அறிவிலே தெளிவுண்டாயிற்று. காலையில் விழித்தெழுந்து, முகந் துடைத்துக் கடலருகே சென்று பார்ப்பவனது கண்ணுக்குப் புலப்படுவது போல, வானத்திலே பறந்து செல்லும் எனக்கும் கீழே யிருந்த விஷயங்களெல்லாம் மிகத் தெளிவோடு விளங்கலாயின. அப்பொழுது நான் கண்டு சென்ற செய்திகளை யெல்லாம் விஸ்தரிக்க வேண்டுமானுல் ஆயிரம் அத்தியாயங்கள் போதா. ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்.

**பந்தாட்டம்.**

ஓர் மேடையின் மீது கந்தர்வக் குழந்தைகள் பூப் பந்தாடிக் கொண்டிருந்தன. ரோஜாப் பூப் பந்துகள்.

ஒரு சிறுவன் "அடீ ரஸிகே! நீ பந்தை எறியும்போதெல்லாம் என் கைக்கோலுக்கு அகப்படாமல், வேண்டுமென்று கோணலாக, என் முகத்தைப் பார்த்து எறிகிருய். இனி நான் உன்னேடு விளையாட மாட்டேன்" என்றுன். இது கேட்டு மற்றக் குழந்தைகளெல்லாம் கலீரென்று நகைத்தார்கள். எல்லாக் குழந்தைகளும் இவ்வாறு ஒன்று சேர்ந்து பல வார்த்தைகள் பேசியும், ஒருவர் மேல் ஒருவர் மோதியும், ஆடியும், பாடியும் சிரித்தும் விளையாடிக் கொண்டிருக்க, அவன் மட்டும் ஓர் ரோஜா நிறங்கொண்ட பளிங்காஸனத்தின் மீது தனியே சாய்ந்திருந்துகொண்டு, பாதி குவிந்த விழிகளோடு ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நான் பார்வதகுமாரியை நோக்கி, "அதோ, விலகி உட்கார்ந்திருக்கிறுனே, அந்தப் பையன் யார்?" என்று கேட்டேன்.

"அவன் எனது தம்பி. அவன் பெயர் சித்தரஞ்சனன். அவன் குழந்தைப் பருவமாயிருந்த போதிலும், எங்கள் குல தெய்வமாகிய காமதேவனுடைய அருள் பெற்றவனுதலால்,

குழந்தைகளோடு சேர்ந்து விளையாடுவதிலே விருப்பமில்லாமல், கவிதைகள் புனைவதிலேயும், மோஹனமாகிய பகற்கனவுகள் காண்பதிலேயும் பொழுது கழிக்கின்றான். ரோஜாப் பந்தை இந்தக் கிரீடாராமன் மீது எறிந்த ரஸிகா என்ற அந்தக் கன்னிகையின் மீது சித்தரஞ்ஜனன் தெய்வீகமான காதல் செலுத்துகின்றான். இப்பொழுது அவன் ஏதோ கவிதை புனைகிறான் என்று தெரிகிறது அவனை இங்கே அழைக்கிறேன். அவன் கவிதை கேட்பதில் உனக்குப் பிரியந்தானா ?" என்றாள்.

நான் வியப்படைந்து, "எனக்கு அளவில்லாத பிரியம்" என்று சொன்னேன்.

பர்வதகுமாரி அவனிருக்குந் திசையை நோக்கிக் கையால் சைகை காட்டினாள். அவன் உடனே வான இறகுகள் விரித்துக் கண்ணிமைக்கு முன் நாங்களிருந்த உயர வெளிக்கு வந்துவிட்டான்.

பர்வதகுமாரி அவனைத் தழுவி முத்தமிட்டு "இவர் நம் நாட்டிற்குத் தரிசனத்தின் பொருட்டு வந்திருக்கிறார். நமது விருந்தாளி என்று என்னைக் காட்டினாள். பாலகன் என்னை நோக்கி "வந்தே" என்று வணங்கினான். நானும் அவனைத் தழுவி உச்சி மோந்து வாழ்த்துக் கூறினேன். பிறகு பர்வதகுமாரியைக் கடைக்கண்ணால் நோக்கிக் கவிதை விஷயத்தை நினைப்புறுத்தினேன்.

அவள் தம்பியைப் பார்த்து "ரஞ்சனா, இப்போது உன் மனதிற்குள்ளே ஒரு பாடலைப் புனைந்துகொண்டிருந்தாயே, அதைச் சொல். இவர் கேட்க வேண்டுமென்கிறார்" என்றாள்.

சிறுவன் சிறிது நாணமடைந்தான்.

நான் "குழந்தாய், லஜ்ஜைப்படாதே! சும்மா சொல்" என்றேன்.

அவன், மண்ணுலகத்துப் பிராகிருத பாஷையைப் போலிருக்கும் இன்சொல் நிரம்பிய கந்தாவ பாஷையிலே, ரஸிகா பந்தெறிந்ததன் பொருட்டுக் கிரீடாராமன் சினமுற்றதைக் குறித்து ஓர் பாட்டுப் பாடினான். பர்வதகுமாரியின் தம்பியின் குரல் இன்பமாயிருந்ததென்று நான் எழுதவா வேண்டும் ?

அவன் சொல்லிய பாடலை, எனது திறனற்ற தமிழ்ச் சொற்களிலே, ஸூர்யனைச் சித்தரித்துக் காட்டுவதுபோல், ஒருவாறு மொழி பெயர்த்துக் காட்டுகிறேன்.

இடியேறு சார்பிலுற உடல் வெந்தோன்
ஒன்றுரையா திருப்ப ஆலி
முடியேறி மோதியதென் றருள் முகிலைக்
கடுஞ்சொற்கள் மொழிவான் போலக்
கடியேறு மலர்ப்பந்து மோதியதென்
றினியாளைக் காய்கின்றானால்
வடியேறு வேலெனவெவ் விழியேறி
யென்னாவி வருந்தல் காணான்.

[இதன் பொருள் :—மேகத்திலிருந்து வெய்ய இடி தன் பக்கத்திலே விழ உடல் வெந்து போனவன் ஒன்றும சொல்லாது சும்மா இருக்க; ஆலங்கட்டி தலையிலே விழப் பெற்றமற்றொருவன் மேகத்தின் மீது சினங்கொண்டு நிந்தை வார்த்தைகள் பேசுவது போல, வாஸனை பொருந்திய ரோஜாப் பந்தைக்கொண்டு தன் மேலெறிந்து விட்டாளென்று இன்ப வடிவத்தாளாகிய ரவிகையைக் கோபிக்கின்ற இந்தக் கிரீடராமன் அவள் வடிவுற்ற வேல்களை எறிவதுபோல, விழிகளை என் மீது மோதிக்கொண்டே யிருபபதால், என்னுயிர் வருந்துவதைக் காண்கிறானில்லை.]*

* ஆரம்பத்தில் இக்கதை பத்திரிகையில் துண்டு துண்டாக வெளிப்பட்ட போது இடையே இரண்டு வாரம் தாமதம் நேரிட்டது குறித்து இவ்வுரை எழுதப்பட்டது :—

" ஆசிரியன் உரை.—ஆரம்பத்திலேயே, எனது ஞான ரதம் செப்பனிட வேண்டிய நிலைமையிலிருக்கிறதென்ன தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். எனது ரதத்திலே பயிற்சி, தெளிவு என்ற சக்கரத்திலும் அச்சாணியிலும் சில பிழைபாடுகள் இருக்கின்றன. ஊக்கம் என்னும் குதிரைக்கு முன்னைக் கால்கள் கொஞ்சம் முடம். திடளங்கல்பனுகிய ஸாரதி நோயாளி. இவ்வளவுக்கும் மேலாக இந்த ரதத்திற்கு வேறொரு இடையூறு இருக்கின்றது. பாலைவனம் போலாயிருக்கும் 'பாரத ஜன நிலை' என்ற பிரதேசத்தை ஆறும், ஓடையும். குளிர் பொழிலுமுள்ள ஓர் நகரமாக நிர்மிக்க வேண்டுமென்று பூலோகத்தில் ஓர் பெரிய முயற்சி நடந்து வருகிறது. அங்கே அநேக நல்லோர்கள் பெரிய பெரிய வயிரத் தேர்களை நிறுத்திக்கொண்டு இரவும் பகலும் இடைவிடாமல் பாடுபடுகிறார்கள். அந்த இடத்திற்கு நமது முதத் சேர் ஆசை மிகுதியால் போய் ஏதோ கொஞ்சம் வேலை செய்து அடிக்கடி ஆயாஸமடைந்து போய் விடுகிறது. ஆகவே நமது கதாநாயகனையும் கந்தர்வ யுவதியையும் கந்தர்வ லோகத்தில் அந்தரத்திலே கொண்டு நிறுத்திவிட்டு இரண்டு வாரம் அவர்களைக் கவனியாமல் இருந்து விட்டது. இப்போது மீண்டும் அதனை அங்கே செல்ல விடுகின்றேன்.

சிறிது நேரத்திற்குப் பிறகு சித்தரஞ்சனன் எங்களிடம் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டான். நாங்கள் அப்பால் பறந்து செல்லலாயினோம். போகும் வழியெல்லாம் நிலவுக் கதிர் செய்யும் மெல்லிய இசையும், மாடங்கள் தோறும் கந்தர்வ யுவதிகளும், வாலிபர்களும், குழந்தைகளும், பெரியோரும் ஆயிர விதமான போகங்களிலே பொழுது கழிக்கும் காட்சியும் அற்புதமாயிருந்தன. பூலோகத்தி லிருக்கும்போது நான் போகங்களில் இத்தனை வித முண்டென்பதைப் பிரதிபாசத்தியினால்கூடக் கண்டிருந்த தில்லை. கொஞ்ச தூரம் போனவுடனே, பர்வதகுமாரி "அதோ, பார்!" என்று காட்டினாள்.

"அஹஹா! அஹஹா! அங்கே என்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

அதிவிசாலமான மாடம் காணப்பட்டது. அதில் ஐம்பதினாயிரம் பேருக்குமேல் இருப்பார்கள் என்று தோன்றிற்று. பெரிய கூட்டம். ஆனால் பூலோகத்திலுள்ள கூட்டங்களைப் போல, ஒருவருக்கொருவர் நெருக்கி மேலே விழுந்து தள்ளிக் கையால் ஒதுக்கிக் காலால் மிதித்து முகங் களைச் சுழித்துக்கொண்டு வெயர்த்து வெந்து போயிருக்க வில்லை. அந்தக் கந்தர்வக் கூட்டத்தார் வளைய வளைய அங்கு மிங்கும் சலித்துக் கொண்டிருந்தபோதிலும் ஒருவருக் கொருவர் சிறிதேனும் தொந்தரை செய்யாமல் விஸ்தார மான இடம் விட்டு முகமலர்ச்சியுடன் ஸஞ்சரித்தனர். எதிரே ஸ்திரீகள் வந்து விலக இடமில்லாமற் போனால் உடனே இறகு விரித்து மேலே எழும்பி அந்த ஸ்திரீகள் போனபிறகு இறங்கிக் கொள்வார்கள். இத்தனை பெரிய கூட்டம் இத்தனை மனோஹரமாயிருந்ததைப் பார்த்து எனக்குண்டான வியப்பு கொஞ்சமில்லை. அவர்கள் ஒருவரையொருவர் தழுவிக் கொள்வதும், முத்தமிட்டுக் கொள்வதும், சில ஸமயங்களில் மிக வணக்கத்துடன் நமஸ்கரித்துச் செல்வதும், சிரித்துச் சிரித்துப் பேசுவதும்—என்ன அன்பு! என்ன மரியாதை! என்னால் வருணிக்குந் தரமன்று.

"பர்வதகுமாரி, அங்கே என்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

"மாட நிலத்தினிடையே ஒரு மண்டபந் தெரிகிறது பார்."

"ஆம்."

"அங்கே கிளிவாஹனத்தின்மீது என்ன வைத்திருக்கிறது ?"

"மன்மத விக்ரஹம்."

"அவருடைய திருவிழா" என்றாள்.

அந்த மன்மத விக்ரஹத்தைக் கண்டவுடனே நான் ஸ்தம்பிதனாய் விட்டேன். "குமாரி, இது யாரால் செய்யப்பட்ட பிரதிமை ?" என்றேன்.

"எங்கள் நாட்டுச் சிற்பிகளால்" என்றனள். எனக்குத் திடீரென்று பாரத நாட்டிலே சிலைத்தொழில் இப்போது சீர்குன்றி நாசமடைந்து போயிருக்கும் விஷயம் ஞாபகத்திற்கு வந்தது.

"அடடா ! கந்தர்வ நாட்டிற்கு வந்ததும் அந்தக் கஷ்ட தேசத்தினுடைய ஞாபகம் மறக்கவில்லை" என்று வாய்விட்டுக் கூறினேன்.

"உனது ரூபம் சிறிது காலத்திற்குக் கந்தர்வ ரூபமாக மாறியிருந்த போதிலும், ஜன்மம் மாறவில்லை என்பதை அறி" என்றனள் குமாரி.

"அது போகட்டும், இப்படிப் பிரதிமைகள் உங்கள் நாட்டிலே அதிகமாக உண்டோ ?" என்றேன்.

"நாளைக்கு உன்னை அமிருத அருவிக்கு அருகேயுள்ள சித்திர சாலைக்கு அழைத்துச் செல்லுகிறேன். அப்போது எல்லாம் பார்க்கலாம்" என்றனள்.

இப்படிக் குமாரியுடன் பேசிக்கொண்டிருந்த நேரமெல்லாம் எனது விழிகள் கீழே தோன்றிய மன்மத விக்ரஹத்தினின்றும் அகலவில்லை.

"உங்கள் நாட்டுச் சிற்பிகளுக்கு இத்தனை சிற்பத்திறமை இருந்தபோதிலும் அநங்கனுக்கு உருவம் ஏற்படுத்தலாகாது என்பது தெரியவில்லை. இஃதோர் விந்தையே" என்றேன்.

" சபாஷ்! மனித நாட்டிலிருந்து வந்து, கந்தர்வத் தொழிலுக்குப் பிழை கூறத் தொடங்கி விட்டாய்! எங்கள் நாட்டுக்குள்ளே இதைப் போன்ற பெருமை கொண்ட பிரதிமை வேறே கிடையாது. கொஞ்சம் உற்றுப் பார். எவ்வளவு உற்றுப் பார்த்த போதிலும் உனக்கு அப் பிரதிமையைப் பற்றிய உண்மை சொன்னாலொழியத் தெரியாது.

அந்தப் பிரதிமை மண்ணாலேனும் பளிங்காலேனும் செய்யப்பட்ட தன்று. மனோமயமாகிய நுண்வான் (ஸூக்ஷ்ம ஆகாசம்) கொண்டு செய்யப்பட்டது. மனதிலே பிறந்த காம தேவனுடைய உண்மை உருவம் இதுவே. இதைச் செய்த மயனை நாங்கள் த்விதீய ப்ரம்மா (இரண்டாவது ப்ரம்மா) என்று சொல்வதுண்டு. ப்ரமமாவால் செய்யப்பட்ட காம தேவன் ஜீவஸஹிதனாக இருக்கிறான், இப்பதுமைக்கு உண்மையுயிர் இல்லாவிடினும் கலையுயிர் (சைத்திரிக ஜீவன்) கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றனள்.

ஒவ்வொரு காட்சியைப்பற்றி எழுதும் பொழுதும், 'வியப் புற்றேன்', 'வியப்புற்றேன்' என்று ஒரே வண்ணமாக மீட்டும் மீட்டும் சொல்லி எனக்கு அலுத்துப் போய்விட்டது. கந்தர்வ நாடே வியப்பு நாடு.

" மன்மதனுடைய பிம்பத்துக் கருகே ரதி பிம்பத்தைக் காணோமே?" என்று கேட்டேன்.

" அது கந்தர்வலோக ரஹஸ்யம் உன்னிடத்தில் சொல்லக் கூடாது" என்றாள்.

" நானும் தற்காலத்திற்குக் கந்தர்வனென்பதை நீ மறந்து விடுகிறாய்!"

" அப்படியானால், நீ யோசனை செய்யும் விஷயத்தில் உனக்கே விளங்கும். அது போகட்டும். சற்றுக் கீழே யிறங்கி நன்றாக எல்லாவற்றையும் பார்ப்போம், வா. இங்கிருந்து பேசிக்கொண்டிருப்பதைவிட அங்கே போய்ப் பார்ப்பது நலம்" என்றாள். சற்றுக் கீழேயிறங்கி அத்திருவிழாவின் விநோதங்களை யெல்லாம் பார்த்தோம். இப்புறம் மன்மத விக்ரஹத்துக்குப் பூசைகள் நடந்து கொண்டிருந்தன; அப்புறத்திலே மன்மதன் தஹன கதை, அவன் திரும்பவும் உயிர்த்தெழுந்த பருவம் வரை, பிரதிமைக் காட்சிகளாலும், சித்திரக் காட்சிகளாலும் நன்கு விளக்கப் பட்டிருந்தது.

வளர்ந்த காலம் சித்திரிக்கப் பட்டிருப்பதைக் கண்டேன் யதார்த்தத்திலேயே கந்தர்வ நாட்டில் அப்போது வஸந்த காலம். அது பற்றியே காமன் திருவிழாக் கொண்டாடினர் கள். எனவே, கந்தர்வச் சிற்பர்களின் அற்புதத் தொழி லுக்குப் பிரகிருதி தேவியும் துணைபுரிவாளாயினள்.

பாடுகின்ற குயில்கள், மலர் புனைந்த மரங்கள், வாவி, கூடி விளையாடும் மான்கள், வண்டுகள் முதலாகத் தென்றல் கொண்டு வரும் மெல்லிய மகரந்தத்தூள் வரை, வஸந்த காலத்தின் காட்சிகளெல்லாம் உண்மையினும் உண்மையாகத் தோன்றின. அங்கு, தேவதாரு மரங்களால் அமைக்கப்பட்ட ஒரு பெரிய மண்டபத்தில் ஸூரிய காந்தக்கல் மேடையில் உட்கார்ந்து, சித்தத்தை யடக்கி நிலையில் நிறுத்தி, முக்கண் களின் பார்வைகளையும் மூக்கின் நுனியிலே செலுத்தி அலை யோய்ந்த ஸமுத்திரம் போல அசைவற்றிருந்த சிவபெரு மானின் உருவப் பதுமை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

எதிரே, தவத்தால் மெலிந்த ஸௌந்தரிய தேவதை வந்து நிற்பது போல, தவவேடங்கொண்ட பார்வதி தேவி நின்று அர்ச்சனை செய்து கொண்டிருந்தாள். அவளுக்குப் பின் பக்கத்திலே மதனன் தனது கரும்பு வில்லில் நாணேற்றிப் புஷ்ப பாணந் தொடுத்துக் காத்து நிற்பது போல ஓர் உருவம் நின்றது.

மற்றொரு பாரிசத்திலே, மன்மத தஹனம் சித்திரித்துக் காட்டப்பட்டிருந்தது. பின்புறமாகத் திரும்பி, ஸத்திய தேவதை கொடுங்கோபத்தில் நிற்பதுபோலப் பரமசிவன் முகத்திலே கோபத்தழல் பொங்க நிற்பதும், அவனது நெற்றியிலுள்ள 'ஞான' விழியினின்றும் தீ வெள்ளமாகப் பாய்ந்து மன்மதனுடைய உருவில் நெருப்புப் பற்றி எரியும் காட்சியும் எழுதி யிருந்ததைப் பார்த்து என் மனதிலே நடுக்கமுண்டாயிற்று. பர்வதகுமாரியின் கையோடு கோத் திருந்த எனது கையைப் படீரென்று பிடுங்கிக்கொண்டேன்.

பர்வதகுமாரி கடகட வென்று நகைத்து, "சித்திரத்துக்கு அஞ்சுகிறாய்", என்றாள். அது வெறுஞ் சித்திரந்தான் என்று என் மனதில் உறுதி செய்துகொள்ள முடியவில்லை. கோயிலிடையில் மதன வடிவத்தின் அருகே ரதி யுருவம் காணவிடினும், இங்கே அவனது எரியும் உடலருகே ரதிதேவி, ஆ! ஆ! என்று கதறி நிற்பது போல எழுதி

யிருந்தது. அவள் முகத்தில்—உடல் முற்றிலும்—காணப் பட்ட சோகத்தையும் பரிதாபத்தையும் என்னால் வருணிக்க முடியாது. கந்தர்வச் சிற்பனுடைய சித்திர சலாகை எங்கே ? எனது பேதை யெழுதுகோ லெங்கே ? எத்தனைக் கெத்தனை !

மற்றொரு பாரிசத்தில், சிவனுக்கு விவாஹம் முடிந்து பார்வதி பாகனாக விளங்குகின்றார். ரதி தேவி வந்து வணங்கி நிற்கின்றாள். சிவன் புன்னகை பூத்து அருள் புரிய, மதனன் சாம்பலிலிருந்து மீண்டும் உயிருடன் எழுந்து சிவனையும் பார்வதியையும் முடியால் வணங்கிக்கொண்டு கையினால் அவ்விருவரின் மீதும் அம்புகள் தொடுக்கின்றான். பார்வதி ஐயனைத் தழுவிக்கொள்ளுகின்றாள். இவ்வாறு மதனன் கோயிலிலே இருக்கும் ஒவ்வொரு காட்சியின் முன்னேயும் கந்தர்வ ஜனங்கள் வந்து பலவாறாகத் தொழுது கொண் டிருந்தனர். சில ஸ்திரீகள் கையில் யாழ்வைத்துக் கொண்டு பாடினர். ஒரு பக்கத்தில் வாலிபரும், மாதர்களும் இணை யிணையாகப் பலவிதக் கூத்துக்களாடி ஓர் வளையமாகச் சுற்றிக் கொண்டிருந்தனர்.

### பறவைக் கூத்து

ஒரு திசையிலே ஒரு வாலிபனும் யுவதியும் ஒருவரை ஒருவர் நோக்கி அப்படியே மயங்கிப் பதுமைகளைப் போல நின்று கொண்டிருந்தார்கள். இஃதன்றிப் பலப்பல காட்சி கள். இன்னுமோர் புறத்திலே "பறவைக்கூத்து" நடை பெற்றது, அவர்கள் அந்தரத்திலே ஆயிரவிதமாக ஒரு வரையொருவர் சுழற்றிக்கொண்டு, அத்தனையிலும் இசை நெறி தவறாமல் கூத்திட்ட விந்தை சிறிதன்று, அக்கூத்து களிலே ஒன்று மிகவும் நயமா யிருந்தது. இடையில் ஓர் யுவதி. அவளினின்று நான்கு முழத் தொலை இடையிட்டு இரண்டு வாலிபர்கள் வண்டிச்சக்கரம் தனது குடத்தைச் சுற்றுவதுபோல மேலுங் கீழுமாய் வடடமிடுவார்கள். ஒருவன் உச்சிமீது நிற்கும்போது மற்றொருவன் தாளின் கீழ் நிற்பான். இவளது கைப்பாரிசங்களில் அவ்வளவே தொலையிட்டு இரண்டு ஸுந்தரிகள் முளையைச் சுற்றித்திரிகை சுழல்வதுபோலச் சுழன்றுகொண்டிருப்பார்கள். ஒருத்தி இடக்கைக்கு நேரே வரும்போது மற்றொருத்தி வலக்கைக்கு நேரே இருப்பாள். இங்ஙனம் சுற்றும்போது ஒவ்வொரு சுழற்சியிலும் இவ்விரண்டு சந்தி ஸ்தானங்கள் ஏற்படு மல்லவா ? அப்பொழுது அவர்கள் முத்தமிடுவதுபோல

இதழ்த் தொனி செய்வது, இடையில் நிற்பவள் வாசிக்கும் புல்லாங்குழல் கீதங்களுக்குத் தாளமாகும். இப்படி ஆயிரம் சேர்ந்து ஒரு பெரிய வளையம்! அரை நாழிகை கழிந்தவுடனே, இந்தப் பாணி கழிந்து மற்றோர் பாணி.

"நேரமாய் விட்டது, நாம் கடற்கரைக்குப் போகலாம்" என்றாள் பார்வத குமாரி. எனக்கு அந்தத் திருவிழாவை விட்டுப் பிரிந்து செல்ல மனமே யில்லை. ஆனால் பார்வத குமாரியின் சொல்லைத் தட்ட யாருக்கேனும் மனம் வருமா?

## கடற்கரை

பறந்து பறந்து கடலுக்கருகே வந்து சேர்ந்தோம். நெருங்கி வரவே, உள்ளுயிரிலே புகுந்து இனியசலனங்கள் தருவதும், காரமில்லாத தழதழத்த இயற்கையுடையதுமான மனோஹரத் தன்மை கொண்டதோர் ஸுகந்தம் புலப்பட்டது. குமாரி சொல்லியிருந்த ஸுகந்த மாளிகை ஸமீபித்து விட்ட தென்பதை அறிந்து கொண்டேன். "இம்மாளிகைக்கு இத்தனை இனிய கந்தம் எப்படி ஏற்பட்டது?" என்று நான் கேட்க வாயெடுக்கு முன்பாகவே அவள் எனது உள்ளக் கருத்தைத் தெரிந்துகொண்டு பின்வருமாறு கூறலா யினள் :—

"கஸ்தூரிக் கற்களாலும், தேவ சந்தன மரத்தாலும் இம்மாளிகை ஆக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும், இதைச் சூழ்ந்துள்ள பூங்காவனத்திலே உங்கள் உலகத்தில் கண்டறியாத அதிஸுகந்த முடைய பலவித மலர்ச் செடிகள் இருக்கின்றன" என்றாள்.

இங்ஙனம் பேசிக்கொண்டே, ஸுகந்த மாளிகையின் உச்சி மேடையில் போயிறங்கினோம். எங்களைப் போலவே இணையிணையாகப் பலர் அங்கே வந்திருந்து கடற்காட்சியை நோக்கிக் களித்துக் கொண்டிருப்பது கண்டேன். ஓர் ஓரத்திலே போடப்பட்டிருந்த இரண்டு ஆஸனங்களில் போய்ச் சிரம பரிஹாரமாகச் சாய்ந்து கொண்டோம். அவ் வாஸனங்கள் இலவம் பஞ்சு போன்ற யாதோ ஒரு பொருள் பொதிந்தனவாய், வெண்பட்டால் மறைக்கப்பட்டிருந்தன. அவற்றில் சாய்ந்தவுடனே, தாயின் மடியிலே சாய்ந்தது போல உள்ளத்திற்கு ஆறுதல் உண்டாயிற்று.

எதிரே கடல், சந்திரகிரணங்களால் ஜோதியுயிர் கொடுக்கப் பெற்ற அலைகள். வெள்ளை மலர்கள் புனைந்து, புஷ்பக் குன்றுகள் கிடப்பது போலத் தோன்றிய கப்பல்கள். தூரத்திலே, அன்னங்கள் மிதப்பது போல மிதந்த இன்பப் படகுகள். மேலே, சந்திரன், வெள்ளி மேகங்கள்; இம் மேகங்களிலே சில வலைகள் பரப்பி யிருப்பது போலத் தோன்றும்; சில அலைகளடிப்பது போலிருக்கும்; ஒன்று பூச் சிதறியது போலத் தோன்றும்; கீழே மிதக்கும் படகு களுக்கு வானக் கண்ணாடியிலே தோன்றும் சாயைகள் போலச் சில மிதந்து செல்லும். இனி நக்ஷத்திரங்கள்! வானக் கடலிலே வெடித்தெழுந்த வயிரங்கள்! சிதறுண்ட இன்பங்கள்! வானப் பொய்கையிலே மனமெனும் சிறிய வண்டு போய் ஒளித் தேன் குடிப்பதற் கமைந்த எண்ணில்லாத மலர்கள்! திசையென்ற அநந்த வஸ்து வுடன் ஈசனறிவு என்ற அநந்த வஸ்து தாக்கியபோது பொறித்தெழுந்த சுடர்ப் பொறிகள்!

படகுகளிலே இணையிணையாகக் கந்தர்வ இளைஞர்களும் பெண்களும், சிலர் பாட்டிலும், சிலர் ஆட்டத்திலும், சிலர் வாத்தியங்கள் வாசிப்பதிலும், களிப்பவராகி, அலைமுழக்க மாகிய பிராகிருதப் பேரிகைக்கு இவர்கள் பல விதங்களிலே அனுமோதஞ் செய்வாராயினர். சந்திரகிரணங்களும் இவற் றிடையே மாறுப் புதுமை கொண்ட பொன்வண்டொலி யிசைத்துக்கொண்டிருந்தன. கடற் காற்றோ, பர்வத குமாரி யின் நெற்றி மீதுள்ள குழற் சுருள்களுடன் விளையாடிக் கொண்டிருந்தது.

ஆ! உருவம் காந்தர்வமாக மாறிவிட்ட போதிலும், எனது ஜீவன் மானிட ஜீவனாதலால் இத்தனை இன்ப மிகுதியை என்னால் பொறுக்க முடியவில்லை. புலன்கள் திகைத்துப் போய்விட்டன. அறிவு மயங்கி விட்டது. இன்ப மாகிய கடலின் அலைகளிலே எனதுயிர் சிறிய நுரைபோல எற்றுண்பதாயிற்று. இன்பமாகிய புயற் காற்றிலே எனதுயிர் சிறு துரும்புபோலச் சுழல்வதாயிற்று. என்ன ஸுகந்தம்! என்ன இசை! என்ன காட்சி! பர்வத குமாரியுடன் நான் ஏதேதோ, தொடர்பற்ற மொழிகள் பேசுவேனாயினேன். இன்பங்கள் அறிவினை அமிழ்த்தி விடவே, நா, கடிவாள மிழந்த காட்டுக் குதிரை போல, கண்ட கண்ட இடங்களில் ஸஞ்சரிப்பதாயிற்று. இன்பம் தெவிட்டிப்போய் விட்டதென்று நான் சொல்லவில்லை. நான் போக்தா (அனுபவிப்பவன்)

ஆக இருந்தது போய், அது போக்தாவாகி என்னை விழுங்கித் தீர்த்துவிட்டது. பேசிக் கொண்டிருந்தபடியே கண்ணயர்ந்து விட்டேன்.

சில பொழுது கழிந்ததின் பிறகு, விழிப்படைந்தேன். ஸூரியோதய காலம். கடலும் வானும் கூடித் தழுவிய இடத்தில், அவற்றின் கூட்டத்திலே தோன்றிய ஜோதிக் குழந்தை போலப் பரிதிவட்டம் பிறந்தது ; கிழக்குத் திசையில் வானமெங்கும் நெருப்புக் குழம்பு பரந்திருந்தது. தீப்பட்டெரியும் தீவுகள்போல மேகங்கள் காணப்பட்டன. மேகங்களுக்கு மனிதபுத்தி யுண்டென்று நினைக்கிறேன். தமது இருளியற்கையை மாற்றித் தம்மை ஒளியுடையனவாகச் செய்யும் ஸூரியனை இவைகள் அமுக்கிக் கொன்றுவிடப் போகின்றன.

"பரஸ்பரம் அன்போடு வாழுங்கள்"—"அன்பே சிவம்"—என்ற பெருந் தர்மத்தைக் கூறி யூத ஜாதியாரை ஒளிபெறச் செய்ய வேண்டுமென்று நாடிய கிறிஸ்து முனியை—தான் பிறந்ததால் யூத ஜாதிக்கே ஓர் புகழும் மாண்புங் கொடுத்த கிருஸ்து முனியை—யூத ஜாதியார் பகைத்துக் கொல்ல வில்லையா ? அதாவது கொல்ல முயன்றார்கள் : அவர்களால் கொல்ல முடியவில்லை. கிருஸ்து முனி இன்றுவரை உயிரோடிருக்கிறார். தர்மத்தின் பொருட்டாகவும், மக்கள் மீதுள்ள அன்பின் பொருட்டாகவும், உலகத்தாரின் தூற்றுதல், உலகத்தார் செய்யும் நிஷ்டூரம் என்ற சிலுவையில் எற்றுண்டு வருந்தும் ஒவ்வொரு மனிதனிடத்தேயும் கிருஸ்துவே விளங்குகின்றார்.

எனக்கு அந்த மேகங்களைப் பார்க்கும்போது பாரிசேயர்கள் முதலிய யூதக் குருக்களின் நினைப்பு வந்தது. க்ஷணப் பொழுது. பின்பு அந்த ஜோதிக்கோளம் மேலெழுவதாயிற்று. வஜ்ராயுதங்கள் போலத் தோன்றிய தனது கிரணங்களால் அம்மேகங்களை உடைத்துச் சிதறி, எற்றி, அசைத்துக் குழப்பிப் புரட்டி ஓட்டித் தொலைத்து விட்டு, பால ஸ்ரியன், மிகுந்த வெற்றிக் கோலத்துடன் கிரணங்களை உலக முழுவதிலும் பரப்பி, விடுதலைபெற்ற ஓர் பேருண்மை போல ஒளி வீசுவானாயினன். உலகம் மகிழ்ச்சி பெற்றது. கந்தர்வ மாதர்களெல்லாம் பூபாள ராகத்தில் காயத்ரி பாடித் துதித்தார்கள்.

## அருவி

" அருவிக்கு வா. எழுந்திரு, நீராடப் போவோம்" என்றனள், எனது உயிர்ப் படகிற்கு மீகாமனாக வந்து முளைத்த இளையவள்.

அருவிக் கரைக்கு வந்து சேர்ந்தோம். அருவி உயர்ந்த குன்றுத் தலையிலிருந்து இரண்டு படிகளாக இடைநிலத்திலுள்ள பொய்கையில் வீழ்ந்து, அங்கிருந்து மறுபடி தரையில் விழுகின்றது. நீரருவிக்குப் பல புலவர்கள் மாலை முதலிய வற்றை உவமையாகச் சொல்லியிருக்கிறார்கள். அது எனக்கு ஸம்மதமில்லை. வானும், கடலும், இராமாயாணமும் தமக்குத் தாமே நிகர் என்று பெரியோர் சொல்லியிருப்பது போலவே அருவியையும் உவமையற்றதாகக் கொள்ள வேண்டும். நாங்கள் வருவதற்கு முன்னாகவே அங்குப் பலர் வந்து ஸ்நானம் செய்த விநோதங்களைப் பார்க்கும்போது அற்புதமாயிருந்தது. இப்பொழுது, மண்ணுலகத்திலிருந்து திரும்ப எழுதும்போது, உள்ளபடி யெழுதச் சிறிது கூசுகின்றது. மண்ணுலகத்திலே சிலர் எழுத்திலும் பேச்சிலும் மஹா சுத்தர்கள். நினைப்பிலும், நடையிலும்—கீழே விழுந்த அருவி சிறிய ஆறாக ஓடுகின்றது. அந்த ஆற்றில் வழியெங்கும் சிறு சிறு பாறைகள்- ஒவ்வொரு பாறையிலும் ஒவ்வோரிணை பார்க்கலாம். பாறை மீதிருந்து சிவ்வென்று பறந்து வந்து அருவியை வலம் செய்து இடையே நின்று கொண்டிருந்து விட்டு மறுபடி தத்தம் பாறைக்குப் போய் விடுவார்கள். தூய நெஞ்சுடையவர்களுக்கு எல்லா விஷயங்களும் தூய்மை கொண்டனவாகவே தோன்றும். கந்தர்வ நாட்டில் எவர் மனதிலும் விகல்பம் கிடையாது. ஆகையால் ஆடை முதலிய விஷயங்களில் அவர்கள் அதிக நாணம் பாராட்டுவதில்லை. ஆ! என்ன ஸௌந்தர்யம்!

அருவியில் ஸ்நானம் செய்து முடிந்த பிறகு பக்கத்திலுள்ள ஓர் ஆலயத்திற் சென்று அநேகர் தத்தம் இஷ்ட தெய்வங்களுக்குப் பல வகைகளிலே பூஜை புரிந்தார்கள். சித்திரவித்தையிலே, ஒப்பற்று விளங்கும் கந்தர்வ நாட்டார் தமது கோயில்களிலே யாதொரு பிரதிமைகளும் இல்லாதனவாகச் சில கோயில்கள் வைத்திருக்கின்றார்கள். அக்கோயில்களின் சிகரத்திலே 'ஓம்,' என்று ஒளியெழுத்தில் எழுதப் பட்டிருக்கிறது. உற்சாகக் கொண்டாட்டங்களும் வேடிக்கைகளும் பிரதானமாகக் கொண்ட ஆலயங்களிலேதான் பிரதிமைகள் வைத்திருக்கின்றார்கள். மனப்பூர்வமாக ஆத்ம

சுத்தி தேட விரும்பும் இடங்களில் பிரதிமைகள் வைப்பதில்லை! அவரவர்கள் தத்தம் இஷ்ட தெய்வங்களைத் தியானரூபமாக வணங்குகின்றார்கள். "போகத்திற்கும் யோகத்திற்கும் ஸம்பந்த முண்டு. கந்தர்வ லோகத்திலிருந்து சாந்தி லோகம் வெகு ஸமீபம்'' என்று குமாரி சொல்லியதில் பொருள் எனக்குச் சிறிது சிறிதாக விளங்குவதாயிற்று. ஸௌந்தரியத்தைத் தாகத்துடன் தேடுவோர்களுக்கு ஸத்தியமும் அகப்பட்டுவிடும். "உண்மையே வனப்பு, வனப்பே உண்மை'' என்று ஓர் ஞானி சொல்லியிருக்கிறான். ஆலயத்துக்குள்ளே நானும் குமாரியும் பிரவேசித்தோம். "குமாரி! இஷ்ட தேவதா பூஜைக்குரியது. இவ்வாலயம் என்கிறாய். உனக்கு இஷ்ட தெய்வம் எது? நீ எதை வணங்கப் போகிறாய்?'' என்று கேட்டேன். குமாரி—"எனக்கு இஷ்ட தெய்வம் மதனன். நான் அவனைத் தியானம் செய்வேன். நீ உனக்கு விருப்பமான தெய்வத்தை வரித்துக்கொள'' என்றாள்.

"எனக்கு இஷ்ட தெய்வம் நீயே. நான் உன்னையே தியானம் செய்யப் போகிறேன்'' என்று நான் சொன்னேன்.

"நன்று! நன்று!'' என்று கூறிச் சிரித்தாள். பிறகு "தோழா, மனங்கொண்டது தெய்வம். நீ எந்த வடிவத்திலே தெய்வத்தை வணங்குகிறாயோ, தெய்வம் உனக்கு அந்த வடிவமாக வந்து அருள் செய்கின்றது. தெய்வமென்பது யாது? தெய்வமென்பது ஆதர்சம்; தெய்வமென்பது உண்மை. தெய்வ மென்பது வனப்பு'' என்றாள்.

ஆம். "உலகத்திலே மனிதனாகப் பிறந்தால் இராமனைப்போல ஒழுக வேண்டும். அதிற் சிறந்தது வேறேதுமில்லை'' என்று சொல்பவனுக்கு இராமன் தெய்வம். தன்னை மறந்து, தனதின்பம் கருதாமல், ஸௌந்தரிய வெள்ளத்திலே தனது உயிரை யிழந்து பர்வத குமாரியை நான் தெய்வமாகக் கொள்ளும் பக்ஷத்தில் எனக்கு அதுவே மோக்ஷஸாதனம். காளிதாஸன் தாஸி வீட்டில் செய்த பூஜையைப்பற்றி நம்மவர் சொல்லும் பொய்க் கதையிலே கூட உண்மையிருக்கின்றது.

பர்வதகுமாரி, ஆலயத்துள்ளே ஓர் தனியிடத்தில், கீழ்த்திசை நோக்கிப் பத்மாஸனமிட்டு உட்கார்ந்து கொண்டு கண்ணிலே பரவசவெறி மிதக்க, "ஓம் நம: ப்ரம்மணே'' என்று சொல்லிச் சொல்லி ஜபித்தாள். நானும்—வினை

யாட்டன்று, யதார்த்த மாகவே—அவளெதிரில் பத்மா ஸனத்தி லிருந்துகொண்டு, திரிகரணங்களையும் அவள்மீது செலுத்தி '' ஓம் நம: குமார்யை '' என்று யோகத்திலே அமர்ந்து விட்டேன். யோகந்தெளிந்து எழுந்து நின்றோம். பர்வதகுமாரி ' புறப்படு ' என்று சைகை காட்டினாள். காலை ஞாயிற்றின் பால கிரணங்களைத் தாகந்தீரக்குடித்துக்கொண்டு பறக்கலாயினோம். பறந்து சித்திரசாலைக்கு வந்து சேர்ந் தோம்.

ஆஹா ! எத்தனை பெரிய முயற்சியிலே தலையிட்டு, விட் டேன் ! சாதாரணமாகக் கல்கத்தாவிலுள்ள காட்சிச் சாலையை வர்ணிக்க வேண்டு மென்றால், அதற்கென்று ஓர் நூல் எழுதவேண்டும். கந்தர்வ லோகத்துச் சித்திர சாலையிலுள்ள காட்சிகளை நாம் எப்படி எழுதிக் காட்டுவது ?

'' சித்திரசாலைக்குப் போவோம், வா ; நேற்றெல்லாம் இயற்கை நலம் பார்த்தாய்விட்டது. இன்று காலை அருவி பார்த்தோம். இனி உங்கள் நாட்டுச் செயற்கை நலங்களைக் காணவேண்டும் என்ற விருப்பம் எனக்கு உண்டாகிறது. இந்த வானமோ மிகப் பெரியது, அதிஸுந்தரமானது. அதோ தூரத்திலே தெரியும் குன்றும் அதன் முடியிலே வானமும் சேர்ந்து நிற்கு மிடத்தில், எத்தனை அழகா யிருக்கிறது பார் ! ஓஹோ ! —இதையெல்லாம் நின்று பார்த்துக்கொண்டே யிருந்தால், இப்படியே பொழுது போய் விடும். சித்திரசாலைக்குப் போகலாம் '' என்றேன். பர்வத குமாரி கல்லென்று நகைத்தாள். அவள் விழிக்கடை களிலே குறும்புக் குணம் தோன்றியது.

'' குமாரி ! இப்படி யெல்லாம் சிரித்தால் பிறகு நீ எனக்கு இஷ்டதேவதை யில்லை. உன்னை முத்தமிடுவேன் பார்த் துக்கொள் '' என்றேன்.

பர்வதகுமாரி முன்னிலும் இரு மடங்கு நகைத்தாள். நானும் அவளைப் பயமுறுத்தியபடியே தண்டனை செய் தேன். அவள் சினந்தோன்றிய விழிகளோடு பார்த்தாள். '' நான் தான் முதலிலேயே எச்சரித்தேன். நீ ஏன் இரண் டாம் முறை சிரித்தாய் ?'' என்று வணக்கத்தோடு சொன் னேன்.

"நான் அதன் பொருட்டுக் கோபிக்கவில்லை. கந்தர்வ நாட்டு யுவதிகளை உண்மையான பக்தர்கள் இவ்விதத் தண்டனை செய்யும்போது கன்னத்தைத் தீண்டுவதில்லை. நீ..க..க" என்று குழறிவிட்டாள்.

நான் கந்தர்வ விதிப்படியே அந்த அற்புதக் குற்றவாளி யின் இதழிலே தண்டனை நிறைவேற்றினேன்.

கலீரென்று நகைத்து, "மூடத்தோழா! இது தான் சித்திர சாலை" என்ருள்.

ஸ்தம்பித்துவிட்டேன்.

"குமாரி, பரிஹாஸம் செய்கிருய். இதுவா சித்திரசாலை!"

"ஆம், இது எங்கள் சித்திர சாலையிலே பூர்வத்தில் ராம நாதர் என்பவரால் அமைக்கப்பட்ட வனக்காட்சி. இதை வனமென்று நீ நினைத்தது பெரிதில்லை. எங்கள் உலகத் தார்களே இது இயற்கைவனமென்றும் செயற்கை வனமென்றும் தெரியாமல் அடிக்கடி ஏமாந்து போவ துண்டு" என்ருள்.

அப்பால் பிரதிமைகள் வைத்திருக்கும் மண்டபத்திற்குப் போனேம். ஒரு பக்கத்தில் ஜீவராசிகளின் வடிவங்கள் காணப்பட்டன. கண்ணுக்குத் தெரியாமல் பூதக் கண்ணடி யால் பார்ப்பதற்குரிய சிற்றுயிர்களைத் தவிர மற்றப்படி அனேகமாக எல்லா ஜந்துக்களின் உருவங்களும் அங்கே யிருப்பது கண்டேன். எனக்கு ஜந்து நூலில் தக்க பயிற் சியும், அபிருசியும் இல்லையாதலால், அக் காட்சியின் ரஸங் களைப் போதியபடி அனுபவிக்க முடியவில்லை. மற்ருெரு புறத்திலே, கந்தர்வப் பிரதிமைகள் வகுப்புற்றிருந்தன. அங்கு மிகுந்த ஆவலுடன் போனேன். பெண்ணிடத் தேனும், ஆணிடத்தேனும் ஸுந்தரமான வடிவம் காணப் படுமாயின், அதைப் போன்ற இனிய காட்சிகள் உலகத்திலே பல இல்லை. அசேதனப் பொருள்களிலே கூடச் சிறந்த அழகு தோன்றுமிடத்துக் கையெடுத்து கும்பிடத்தக்கதாக இருக்கின்றது. அவ்வாறிருக்க, ஓர் ஸ்திரீ அல்லது புருஷ னுடைய முகத்திலே சைதன்ய ஒளியுடன் கலந்து அழகு தோன்றுமாயின், அது மிகவும் கவர்ச்சியுடையதாகு மென்பது சொல்லியாகவேண்டுமோ? மனுஷ்ய வடிவம் ஸௌந்தரியமா யிருப்பதைக் காண்பதில் எனக்கெப்போதுமே ஆனந்தம் அதனிடத்தே சுத்தமும் சாந்தியும் இல்லாதபடியால் பூமண்ட

லத்து மனிதர்கள் பொதுவாகப் பார்ப்பதற்கு விகாரமாயிருக்கிறார்கள். உள்ள நிலை உடலிலே தோன்றி விடுகிறதாதலின். அதிலும் நான் பிறந்த நாட்டிலே பஞ்சத்தாலும், நோயினாலும், அவற்றின் மூலமாகிய அடிமை நிலையாலும் ஆண்களும் பெண்களும் கண்ணால் பார்ப்பதற்குக் கூசும்படி அத்தனை குரூபிகளாய் யிருக்கிறார்கள். [இது பாரத நாட்டிலே தற்காலத்தில் விதியாயிருக்கின்றது. இதற்கு விலக்குகள் உண்டென்பது சொல்லாதே அமையும்.] வல்லோர் தீட்டிய சித்திரங்களும், வல்லோர் செய்த பதுமைகளுமே பாரதவாஸிகள் சௌந்தரியக் காட்சியை இழந்து விடாமல் காக்கின்றன. நமது புராதனக் கவிஞர் முதலாயினோரும் நமக்கு இவ் விஷயத்தில் துணை செய்கிறார்கள். இத்தருணத்தில் நமது நாட்டுச் சித்திரத் தொழிலை நாம் பாதுகாக்காமலிருப்போமானால், இன்னும் இரண்டு மூன்று தலைமுறைகளுக்கப்பால் பாரத நாட்டில் எவருக்கும் கண் தெரியாமல் போய் விடும். நிற்க, சித்திரசாலையிலே கந்தர்வ வடிவங்களைப் பார்த்த போது எனக்கு முன்பு மதன விக்கிரகத்தைக் கண்டவுடன் பிறந்த பரவசநிலை பிறக்கவில்லை. ஏனென்றால், கந்தர்வ நாட்டில் தெய்வப் பிரதிமைகளைத் தவிர, மற்றப் பிரதிமைகள், அந்நாட்டுச் சிற்பிகளின் தொழில் வன்மையைக் காட்டுகின்றனவேயல்லாது. அவர்களுடைய உள்ளத் தேட்டத்தை விளக்குந் தகைமை யுடையன அல்ல. எப்படி யெனில், பூலோகத்திலே யவன (சீப்ஸ்) தேசத்துப் பிரதிமைகள் மிக்க கீர்த்தி கொண்டவை. இப்பிரதிமைகளைச் செய்த சிற்பிகள் குறைவு பட்ட மனித வடிவங்களையே பார்த்தவர்களாயினும், தமது உள்ளத் தேட்டத்தால் பரிபூர்ண ஸௌந்தரியத்தைக் கண்டுபிடித்து அதைக் கல்லிலே ஸ்தாபித்திருக்கிறார்கள். இத் தன்மை கொண்ட மேலோரை நாம் நல்ல தொழிலாளிகளென்பது மட்டுமேயன்றி வரபுமான்களென்றும், அருட்காட்சி பெற்றோரென்றும் சொல்லுகிறோம். கந்தர்வ லோகத்திலோ ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்திலே பரிபூர்ண ஸௌந்தரிய முடையவர்களாயிருப்பதால், சிற்பிகளுக்குப்பிரதிபா சக்தியை உபயோகப்படுத்த இடமில்லாமற்போய்விடுகின்றது. நான் அங்கே கண்ட பிரதிமைகள் அளவற்ற வனப்போடு விளங்கின வென்பது மெய்யேயாகும். ஆனால் அவற்றை யொத்த வனப்புடையவர்களாகவே அந்நாட்டு ஸ்திரீ புமான்களும் விளங்குகின்றார்கள். என் பக்கத்திலே யிருந்த ஜீவப் பிரதிமையாகிய பிரியகுமாரியைவிட அழகான பிரதிமை ஒன்று அகப்படுமா என்று தேடித் தேடிப் பார்த்தேன், கிடைக்கவில்லை.

உணவுக்குப் புறப்பட்டோம். ஐம்புலன்களுக்கும் தெவிட்டாத நல்லின்பம் கொடுக்கும் உலகமாதலால் அங்கு நாப் புலனுக்குச் சிறந்ததோர் விருந்து கிடைக்குமென்றெண்ணி நான் புகழ்ச்சியோடு சென்றேன். ஓர் பூஞ்சோலைக்கு வந்து சேர்ந்தோம். அங்கு ஓர் குளிர்ந்த லாதா மண்டபத்தில் இருந்துகொண்டு குமாரி "ரஞ்ஜன், ரஞ்ஜன்" என்று கூவினள். சிறிது தூரத்திலிருந்து குமாரியின் தம்பியாகிய சித்தரஞ்ஜனன் வந்தான். எனக்கும் நமது விருந்தாளியாகிய இவருக்கும் உணவு கொண்டுவந்து கொடு" என்றாள். ஒருவிதமாக நகைத்துக்கொண்டு இளைஞன் சென்றான். சில நிமிஷங்களுக்கப்பால் அவனும் அவனுடைய நண்பன் ஒருவனும் கையில் பொற்றட்டுகள் ஏந்திகொண்டு வந்து அவற்றை எங்கள் பீடங்களுக்கு முன்னே போடப்பட்டிருந்த பளிங்கு மேஜையின் மீது வைத்தார்கள். அவ்வுணவு யாதாயிருக்கலாமென்று ஆவலுடன் பார்த்தேன். கனிகள், கனிகள், கனிகள். கனிகளைத் தவிர வேறொன்றுமில்லை. எனது உள்ளக் குறிப்பை எப்போதும் அறிய வல்லவளாயிருந்த குமாரி பின் வருமாறு கூறலாயினள் :—

"தோழா, உங்கள் உலகத்தாரைப் போல நாங்கள் உணவிலே மிகுந்த நாட்டம் வைத்துப் பல்வகை கொண்ட சுவைகளைத் தேடுவதில்லை. ஐம்புலன்களிலே நாப்புலன் மற்ற நான்கிற்கும் விரோதி. உணவின்பத்திலே பிரியமுடையவர்கள் செவி, கண் என்ற தெய்வப்புலன்களின் பரம ஸுகங்களை நன்கு தேர்ந்து உண்பதற்கு வலியிழந்து போய் விடுவார்கள். வெறுமே உயிர் நிற்பதற்கு மட்டிலும் நாங்கள் உண்பதல்லாமல், உணவிலே இன்பம் தேடுவதில்லை. ஆயினும், இக்கனிகளின் சுவை ஸாமான்யமானதன்று. தின்று பார், பிறகு தெரியும்" என்றாள். சுவையிலும் பயனிலும் மிகுந்த அக்கனிகளைத் தின்று பசி தீர்த்துக்கொண்டோம். பிறகு மதுக்கிண்ணங்களைச் சித்தரஞ்ஜனன் எங்கள் முன்பு கொண்டு வைத்தான்.

சித்தரஞ்ஜனன் கொண்டு வைத்த கிண்ணங்களை நான் கையால் தொடவில்லை.

பர்வதகுமாரி திரும்பிப் பார்த்தாள்.

"எனக்கு வழக்கமில்லை" என்றேன்.

"இது மண்ணுலகமில்லை" என்றாள்.

"உங்கள் நாட்டுக் காற்றும், ஒளியும், குளிர்ச்சியும், காட்சிகளும், துணைக்கு நீயும்—இத்தனை வகைகள் போதாதா? இத்துடன் மது வேறு குடித்தா அறிவு மயங்க வேண்டும்?" என்று பலவாறு பேசிக் குமாரியின் வற்புறுத்தலினால் மதுக்கிண்ண மொன்றை வெறுங்கிண்ணமாக்கினேன். இன்பக் களி நிலை பிறந்தது.

இன்பம் ஒரு ஜ்வரம். ஜ்வரத்திலே உஷ்ணம் ஓர் வரை கடந்து விட்டால் பிறகு குளிர்ச்சி தோன்றி ஜன்னி பிறந்து விடுவது போலவே, இன்பத்தின் முடி மீது துன்ப மிருக்கின்றது. மேலே பலவாறாக வகுக்கப்பட்ட இன்பங்களும், பிறவும் கண்டேன். நாட்கள் பல கழிந்தன. இப்பொழுது அந்த நாட்களை நினைத்துப் பார்க்கும்போது ஒருவாறு அத்தனை நாட்களும் ஒரு கணம் போலவும், மற்றொரு வகையிலே அந்நாட்களின் ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு இன்ப யுகம் போலவும் புலப்படுகின்றது.

நாட்கள் பல கழிந்தன. குமாரியும் எனது உயிர்த் தோழியாய் விட்டாள். நான் எக்காலத்தும் கனவிலே கூடக் கண்டிராத உள்ளக் கிளர்ச்சியும், சோர்வு, நோய், மனத் தளர்ச்சி, மனத்துயர் என்பவற்றின் முழுமறதியும் ஏற்பட்டன. எனினும், மனது திருப்தி பெறவில்லை. ஏதோ ஒன்று குறைவா யிருப்பது போலவே தோன்றியது. நாளடைவில் கந்தர்வ நாட்டின்பங்கள் கூட, கைத்துப் போகவில்லை. ஆனால் ஸாதாரணமாய்ப் போய்விட்டன. ஆரம்பத்திலிருந்த பரவச நிலைக்கிடமில்லை; கடல், நிலா முதலிய இயற்கை யழகுகளிலே எப்போது லயித்தாலும பரவசந் தோன்று மெனினும், கள்ள மனம் அவற்றில் நிலைத்திருக்க வன்மை யிலதாகி நின்றது. ஆ! குமாரியினிடத்திலே கூட மனம் தொடக்கத்திலே கொண்ட பற்றை நெகிழ்த்து விட்டது.

ஒரு நாட்காலையில் நான் தனியே உட்கார்ந்து கொண்டு பின்வருமாறு யோசிக்கலாயினேன்: "ஆஹா! இன்பக் களஞ்சியமாகிய இந்நாட்டிற்கு வந்துங் கூட நமது மனதிற்குத் திருப்தி விளையவில்லையே. இந்தக் கந்தர்வ நாட்டிலுள்ளவர்கள் ஒரு நாளைப் போலவே அனுதினம் செய்ததைத் திரும்பச் செய்துகொண்டு மகிழ்ந்த முகத்துடனே ஸுகத்தில் வாழ்கிறார்கள். இவர்களுக்கு இதில் அதிருப்தி ஏற்பட்டதாகத் தோன்றவில்லை. நமக்கு மட்டிலுந்தான் எம் மருந்துக்குந் தீராத மனநோய் பிறந்திருக்கிறது. இதென்ன ஆச்சரியம்!"

நான் இங்ஙனம் சிந்தனை செய்துகொண்டிருக்கையில் குமாரி எங்கிருந்தோ பறந்து வந்து என்னருகே தழுவி வீற்றிருந்தாள். பின், வழக்கம் போலவே எனது உள்ளக் கருத்தை எளிதில் தெரிந்து கொண்டவளாகி எனக்குச் சில அரிய உண்மைகள் கூறுவாளாயினள்.

"தோழா! எங்கள் உலகத்தார் செய்கைகளிலே புதுமை யில்லையென்று நீ வியப்படைகிறாய். மண்ணுலகத்தார் வாழ்க்கையை மறந்து விட்டாயா? அதில் ஏதேனும் புதுமை யுண்டா? மனித மிருகங்களிலே பாக்கியம் பெற்ற சில மிருகங்கள் வாலிபத்திலேயே இறந்து விடுகின்றன. சில எண்பது தொண்ணூறு நூறு வருஷங்கள் வரை வாழ்கின் றன. எட்டா மாதத்திலே தின்னத் தொடங்கிய சோற்றை எண்பதாம் ஆண்டிற்கூட ஸாதாரணமாகக் கருதுகிறானில்லை. மானுடா, உங்கள் உலகத்திலே வாழ்வோர் சோற்றுக்கும் ஆடைக்குமாகப் பொய் பேசுகிறார்கள்; வஞ்சனை செய்கிறார் கள்; நடிக்கிறார்கள்; ஏமாற்றுகிறார்கள்; திருடுகிறார்கள்; ஹிம்ஸைகள் செய்கிறார்கள்; கொலை புரிகிறார்கள்; உடலை விற்கிறார்கள்; அறிவை விற்கிறார்கள்; அடிமைகளாகி ஆத் மாவை விற்கிறார்கள்; மானுடா, உங்கள் உலகத்திலே ஏழைகளாயிருப்போர் பெரும்பாலும் மானமற்ற அடிமைகள். அவர்கள் அற்ப லாபத்தின் பொருட்டு எது வேண்டுமாயினும் செய்வார்கள். செல்வராயிருப்போரில் பெரும்பாலார் திருடர்கள். உங்கள் உலகத்திலே எளியோராயிருப்போர் வெறுத்தற்குரிய நீச குணமுடையார். வலியோரா யிருப்போர் காலால் மிதித்து நசுக்குதற்குரிய தீக்குணமுடை யார். அவர்களெல்லாம் செய்ததைச் செய்ததைத் திரும்பிச் செய்யாமல் வேறென்ன செய்கிறார்கள்? உண்டும், உறங்கி யும், நடித்தும் சாகிறார்கள். எங்கள் உலகத்திலே மரண மில்லை, பொய்யில்லை. மேலும், நீய நடிப்பு, நீசப் பாசாங்கு, வேஷம் போடுதல், ஒன்று நினைத்து வேறொன்று பேசுதல் —இந்த மஹா பாதகக் குணமில்லை. இவற்றால் விளையக் கூடிய துன்பங்கள் அனைத்துமில்லை. ஆயினும், உனக்கு எங்கள் வாழ்க்கையிலே திருப்தியுண்டாகாமலிருப்பது ஓர் குற்றமன்று. ஏனென்றால், மானுட ஜன்மம் எவ்வளவு இழிவுகளுடையதாயினும் ஒரு முக்கியமான விஷயத்திலே எங்கள் பிறப்பைக் காட்டிலும் சிறந்தது. ஆத்மத் தேட்டத் திற்கு மனிதப் பிறவி மிகவும் ஸௌகரியமானதாக அமைக் கப் பட்டிருக்கின்றது. 'திருப்தி எதிலும் ஏற்படாதிருத்தல்'. —இந்த ஒரு குணமே மனிதப் பிறவிக்குக் காப்பாகவும்

அதன் பெருஞ் சிறப்பாகவும் விளங்குகின்றது. மாயா ஸம்பந்தமான எந்த நிலையிலும் மனிதன் ஸ்திரமின்மை கண்டு அதிருப்தியடைகின்றான். உங்களிலே பெரும்பான்மை யோர் அறிவைப் பலவாறு குழப்பிக் கொண்டு உண்மை நினைப்பேயின்றிப் புழுக்கள் போல மடிவது மெய்யேயாயினும், ஒரு சிலர் பரம நிலை கண்டுவிடுகிறார்கள். தேவர்கள் கூட மோக்ஷமடைய வேண்டுமாயின், மனித ஜன்ம மெடுத்துத் தீரவேண்டுமென்று நீ கேள்விப்பட்டிருக்கலாம், அது மெய்யே. உங்கள் உலகத்துச் சங்கரன், சுகன், ஜனகன், கிருஷ்ணன், புத்தன், இயேசு முதலியவர்களைப் போன்ற அற்புதப் பெரியோர் எங்கள் நாட்டிலே தோன்றுவது ஸாத்தியமில்லை. மாயை விலங்கு ; அதில், எங்களுக்குப பொன் விலங்கு பூட்டியிருப்பதால் வெறுப்புண்டாவது எளிதன்று. உங்களுக்குக் கோரமான தளைகள் போட்டிருப்பதால் மேலோர் எளிதாக வெறுப்படைந்து விடுகிறார்கள். ஓரிரண்டு மஹான்கள் அத்தளைகளை அறுத்தே தொலைத்து விடுகிறார்கள். ஸ்திரீயாகிய நான் முத்தமிடுவதற்கும், பாட்டுக் கேட்பதற்குமே தகுதியென்று உனக்கு அடிக்கடி தோன்றவும், இப்படி ஓர் பெருந்துறவிபோல வார்த்தைகள் சொல்வதைக் கேட்டு நீ இப்பொழுது உன் மனத்திலுள்ளே பெருவியப்பு அடைகின்றாய். எங்கள் நாட்டினருக்கு அறிவுத் தெளிவு ஸஹஜமாகையால் இந்த விஷயங்கள் எங்களுக்கு ஸுலபமாகப் புத்தியில் பட்டுவிடும். ஆனால், அனுபவத்திற்கு வருவது கஷ்டம். அதற்கு மானுட ஜன்மம் வேண்டும்" என்றாள். எனக்கு இவள் இப்படியெல்லம் பேசுவதுகூட வியப்பாகத் தோன்றவில்லை. இவ்வளவு பேசுவதுடன் என் மாறுபாடுகளை யெல்லாம் நிமிஷந்தோறும் அறிந்துவிடும் இந்தக் கிராதகி, பேச்சு முடிந்தவுடன் ஒன்றும் அறியாத மான் கன்றுபோல, விழிப்பதுதான் வியப்பாவிருந்தது.

"கள்ளி, கள்ளி" என்று முணுமுணுத்தேன். "ஒரு தரம் சிக்ஷை விதித்துவிடு" என்று கெஞ்சினாள். அதாவது பழைய இதழ்ச்சிக்ஷை. "நீ என் காதலியன்று, நீ பெரிய ரிஷிக் கிழவர்" என்றேன். எல்லாம் ஒன்று போலவே தான் ; போ" என்றாள்.

அப்பால் இதழோடு இதழ் பொருந்திப் பல நிமிஷங்கள் உயிர் கலந்திருந்தோம்.

# மூன்றும் அத்தியாயம்

## ஸத்யலோகம்

அடுத்த நாள் ஸத்திய லோகம் சென்றேன். அங்கே மாசற்ற ஸூரியப் பிரகாசம் போன்ற ஒளியொன்று பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். ஆனால் வானத்தில் ஸூரியனில்லை. அவ்வுலகத்தின்கண் மத்திய பாகத்தில் ஓர் திவ்ய வடிவம் உட்கார்ந்துகொண்டிருந்தது. அதன் முகத்திலிருந்தே கிரணங்கள் பொங்கி வெளிப்பட்டன. அக்கிரணங்களின் ஒளியே வானத்திலுஞ் சென்று மோதுவது கண்டேன். பல பல திசைகளிலே என் ரதத்தைத் திருப்பி விட்டேன். அந்நாட்டு ஜனங்களெல்லாம் அவரவர்கள் பாட்டில் மிகுந்த முயற்சி யுடையவர்கள் போலப் போகிறார்கள். சிற்சில ஜனங்கள் வெயர்க்க வெயர்க்கக் கஷ்டத்துடன் நடந்து செல்லுகிறார்கள். சிலர் என்போல ரதங்களில் ஊர்ந்து செல்லுகிறார்கள். வேறு சிலர் சிறகு புடைத்துக்கொண்டு அதிவேகமாய்ப் பறக்கிறார்கள். சிலர் மலர்ந்த முகத்துடன் போகிறார்கள். சிலர் மிகக் களைப்படைந்தவர் போலக் காணப்படுகிறார்கள். சிலர் திடீர் திடீரென்று வந்து தோன்றி அவ்வொளி பொறுக்கமாட்டாமல் கண்ணைக் கையால் மூடிக் கொண்டு அவ்வப்பொழுதே மறைந்து விடுகிறார்கள். இங்ஙனம் மறைந்து செல்வோர் என்னைப்போலப் புதிதாகப் பார்க்க வந்தவர்களென்றும், இங்கிருக்க முடியாமல் ஓடி வேறு வேறு உலகங்களுக்குப் போகின்றார்களென்றும் தெரிந்து கொண்டேன்.

சிலர் தேவர்களைப் போலிருந்தனர். அவர்களே மலர்ந்த முகத்துடன் உல்லாஸமாகவும் வேகமாகவும் சுற்றித் திரியும் கூட்டத்தார். என் போன்ற மனித உருவ முடையோர்களிலே தான் பலர் களைப்புக் காட்டினர். கந்தர்வ லோகத்துக்கு வந்தவுடன் எனக்கு உருவ மாறுபாடு தோன்றியதுபோல இங்கே உண்டாகவில்லை. ஓடிப்போனவர்களும் மனித வர்க்கத்தினரேயாம். பருத்த தொந்தியுடன் கையில் பொற் காப்புப் போட்டுக்கொண்டு ஒருவன் வந்தான். அவன் ஓவென்றலறிக்கொண்டு ஓடிப்போய்விட்டான். ஒருவன் மனைவி மக்களுடன் வந்து சேர்ந்தான். "இங்கேன் காணும் கூட்டிக் கொண்டு வந்தீர்? இங்கே, கடைத்தெருவா, கிடைத்தெருவா கோயிலா, குளமா, வேடிக்கையா, விளையாட்டா? ஒரு மண்ணையும் காணவில்லை. அவனவன் பைத்தியம் பிடித்து

போல ஓடிக்கொண்டு திரிகிறான். நான் குழந்தைகளையுங் கொண்டு இங்கே ஒரு க்ஷணங்கூட இருக்கமாட்டேன். ஊருக்குப் போகலாம் வாரும்" என்று பொதிமாட்டைப் போலிருந்த அந்த ஸ்திரீ கத்தினாள். அந்த மனிதன்— "இரடி இரு. இந்த ஒரு கிரணத்தை மட்டிலும் பார்த்து விட்டு வருகிறேன், அவஸரப் படாதே" என்றான். "கிரணமு மாச்சு, மரணமுமாச்சு, புறப்படும்" என்று அவள் ஏதோ கூச்சலிட்டாள். அவன் மனமில்லாவிடினும் அவள் செய்யும் தொல்லையை எதிர்க்கத் திறனற்றவனாய் மறைந்து விட்டான். இன்னு மொருவன் எட்டு மூட்டைகளை ஒரு வண்டியில் சுமர்த்திக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தான். மற்றவர்க ளெல்லாம் என்னிடம் பேசாமலிருக்க, இவன் மட்டிலும என்னருகே வந்து, "ஏனையா ஏடுகளெல்லாம் மிக விசேஷ மானவை. ஏதேனும் உமக்கு வேண்டியதைப் பரிசோதனை செய்து பார்த்து விலைக்கு எடுத்துக்கொள்ளுகிறீரா ?" என்று கேட்டான். அவன் பேசிக்கொண்டிருக்கும் போதே, பின்னே நின்ற வண்டியில் நெருப்புப் பிடித்து ஏடுகள் சாம்பராவது கண்டு, நான், "அதோ பாரையா !" என்றேன். அந்த மனிதன் வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு ஸத்ய லோகத்தை நிந்தனை செய்து கொண்டே போய்விட்டான்.

இன்னும் எத்தனையோ ஜனங்கள்—மனவுறுதியில்லாதோர், சித்தத்தைப் புலன் வழியிலே சிதறவிட்டோர், ஸத்தியத்தில் மெய்யன்பில்லாது போலி யன்பு பாராட்டும் வேஷதாரிகள் இவர்களனைவரும் வந்து வந்து மறைந்து விட்டார்கள். இது நிற்க. மேற் கூறப்பட்ட ஒரு மனிதனைத் தவிர வேறெவருமே என்னிடம் வார்த்தையாட வில்லையென்று சொல்லியிருக் கிறேன். கல்விப் பயிற்சிக்குத் துணை வேண்டுமென்று பெரியார் சொல்லுகிறார்கள். அது மெய்யே. ஆனால் உண்மைத் தேட்டத்திற்குத் தனித் தனியே போகவேண்டு மென்று இப்போது தான் கண்டேன். உண்மை தேடப் போகும் பொழுது துணை கூட்டிக் கொண்டு போகலாகாது. உண்மையைக் கண்டுமீண்ட பின்பு அதைப் பிறருக்குக் கூறலாம். கூறுதல் கடமை. ஆனால், ஆரம்பத்தில் தன்னந் தனியாகச் செல்ல வேண்டும். இன்னொருவனைத் துணையாக அழைத்துச் செல்வாயாயின், அவனுக்கும் உனக்கும் விவா தங்கள் உண்டாகும். 'மாறுபடு தர்க்கம் தொடுப்'பதனால் அறிவிலே கலக்க முண்டாகு மல்லாது, தெளிவு எற்படாது. அறிவுத் தெளிவிலேதான் உண்மை தோன்றும். மேலும் இன்னொருவனோடு சேர்ந்து உண்மை தேடப் போவாயானால்,

அவன் ஒரு பாதையில் இழுப்பான், நீ மற்றொரு பாதையிலே இழுப்பாய். இரண்டிலொன்று யதார்த்த வழியாக இருக்கும். ஆனால் உங்களுக்குள் விவாதம் தீரும் பொருட்டு, நீங்கள் பெரும்பாலும் என்ன செய்வீர்களென்றால். "அப்பா" நீ சொல்லியதும் வேண்டாம். நான் சொல்லியதும் வேண்டாம். இரண்டுக்கும் நடுவாக ஒரு வழியிலே போவோம்" என்று பொது உடன்பாடு செய்து கொள்வீர்கள்.

இந்தப் பொது உடன்பாடு செய்தாலொழிய இருவருக்கும் திருப்தி யேற்படாது. இந்தப் பொது உடன்பாட்டுப் பாதை உங்களைக் கழுத்து வரை சேறுள்ள குழிகளிலும், ஏரிகளிலும், மடுக்களிலும், முள்ளிலும், கல்லிலும், பொதி மணலிலுங் கொண்டு இறங்கச் செய்யும். ஆரம்பத்திலே உங்களுக்கு இயற்கையாகக் காணப்படும் இரண்டு பாதைகளில், யதார்த்தப் பாதையை நீக்கிப் பொய்ப் பாதையிலே, போனபோதிலும், ஒரு வேளை நல்லது. இறுதி வரையில் போய், அங்கே தேடிய உண்மையில்லா திருத்தல் கண்டு, மறுபடி மீண்டும் நல்ல மார்க்கத்திலே புகலாம். நீங்கள் அப்படிச் செய்யமாட்டீர்கள். உடன்பாட்டுப் பாதையொன்று கொண்டு அதிலேதான் போவீர்கள். அந்த வழி சூனியத்திலேதான் கொண்டுவிடும். ஞானிகளுடைய "ஸமரஸம்" பிழையென்று நான் கூறியதாகக் கொள்ளவேண்டாம். ஸாமானியர்கள் செய்து கொள்ளும் 'ஒப்பு' அதாவது உடன்பாடு எப்போதும் பிழை என்பதையே வற்புறுத்திச் சொல்லுகிறேன். எனவே, ஸத்ய லோக யாத்திரை செய்வோர் யாரும் வீண் ஸம்பாஷணையிலே காலங் கழிப்பதில்லை யென்பதை அறிந்து கொண்டேன். ஆதலால், நானும் பிறரைத் தொந்தரவு செய்யலாகாதென்று சும்மா இருந்து விட்டேன்.

ரண பரிசோதனையிலே எனக்குப் புத்தி செல்லவில்லை. மத்ய பாகத்திலே யிருந்த திவ்ய வடிவத்தினருகே நேராகப் போய்விட வேண்டுமென்று எனக்குத் தோன்றியது. அப்போது உயர ஓர் தொனி பிறந்தது. அதிலே கவனம் செலுத்தினேன். அது சொல்லிற்று :—"நடுவே யிருக்கும் உருவமே பிரமன். அது ஸதய ஸவரூபம். திடீரென்று அதனருகே பாய்ந்துவிடுதல் யாராலும் முடியாது. ஒரு கிரணத்தைப் பற்றிக்கொண்டு, அதன் வழியே அணுவணுவாக நகர்ந்து செல்ல வேண்டும். ஒரே பாய்ச்சலாகப் பாய முயற்சி செய்து நீ வீணே ரதத்தை உடைத்துக் கொள்ள வேண்டாம்" என்று.

எனக்குச் சோம்பர் அதிகம். கிரணங்களோ நெடியவை. இவற்றின் வழியாய் மெல்ல மெல்லப் புழு ஊர்வது போல ஊர்ந்து செல்ல எனக்கு மனம் இணங்கவில்லை.

"நன்று. இப்பிரமன் விஷயத்தைப் பின்பு பார்த்துக் கொள்கிறேன். இப்போது இந்நாட்டைச் சுற்றி ஓரமாக ஓர் வளையமிட்டு வருகிறேன்" என்றெண்ணித் தேரைப் பிரதக்ஷிணமாகச் செலுத்தினேன்.

சிறிது தொலை கடந்தவுடனே வேறு வர்ணங்கொண்ட ஒளி கண்டேன். அவ்விடத்தினின்று எங்கே பார்த்தாலும் அந்தப் புதிய வர்ணமே காணப்பட்டது. "இதென்ன விந்தை!" என்று பிரமிப்பு அடைந்து அப்பால் சென்றேன். போகப் போக, புதிய புதிய வர்ணங்கள் தோன்றிக் கொண்டிருந்தன.

உண்மை பல வர்ணங்களுடையது என்று தெளிந்து கொண்டேன். நெடுநேரத்தின் பிறகு வடக்குக் கோட்டை வாயிலருகே வந்து சேர்ந்தேன். அங்கிருந்து பார்க்கும்போது மறுபடியும் பிரமனுடைய தெய்வீக வடிவம் என் கண்ணுக்கு நேரே எதிர்க்கெதிராக விளங்கிற்று. இதென்ன செய்தியென்று யோசனை செய்தேன். முகம் முன்பு தோன்றியது போலவேதானிருக்கிறதா என்று கூர்ந்து பார்த்தேன். அப்போது ஒரு புதிய அற்புதங் கண்டேன். நான் எவ்வளவுக்குக் கூர்மையாகப் பார்க்கிறேனோ அவ்வளவு அத்திரு முகத்தின் ஒளி அதிகரித்து வரலாயிற்று. சிறிது பொழுதுக்கப்பால் என் கண்கள் கூசத் தொடங்கி விட்டன. அதினின்றும் கண்களை மீட்டுக் கொண்டேன்.

மறுபடியும் முன் கேட்டது போன்ற ஓர் தொனி பிறந்தது:—
"மானிடா! உண்மை தொடக்கத்தில் தெளிவாகத் தெரிவது போலத் தோன்றும். கொஞ்சம் கவனம் செலுத்துவாயானால் கண் கூசத் தொடங்கிவிடும், நீ தளர்ச்சி பெறாமல் ஓர் கிரணத்தைப் பற்றிக்கொண்டு நெருங்கி நெருங்கிப் போவாயாயின், பிறகு கண் வருத்தம் தீர்ந்துவிடும். இறுதியில் நீ அருகே வந்த பிறகு உண்மை உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெற்றெனத் தெளிந்து புலப்படும்."

இதைக் கேட்டவுடனே, எனக்கு ஓர் கிரணத்தைத் தான் பற்றிச் செல்லலாமா என்ற விருப்பம் நிகழ்ந்தது. மறுபடியும் எனது சோம்பர்க்குணம் மனதிலே பிரதானமாய் விட்டது..

"ஐயோ ! இந்தச் சோம்பர் என்ற பாவி ! மண்ணுலகத்துப் பெருமையையும், பொருளையும் நான் விரும்பிய காலத்தில் இதுதான் வந்து குறுக்கிட்டது. இப்பொழுது விதிவசத்தால், அவ்வித விருப்பங்களெல்லாம் அகன்றுவிட்டன. எனவே, ஸத்தியலோகத்திற்கு உண்மைத் தேட்டத்தால் வந்து நிற்கும் போதும் அத்தீய சோம்பர் வந்து கெடுக்கின்றது" என்று பலவாறு வருத்தமடைந்தேன்.

அழுதாற் பயனென்ன, நொந்தாற் பயனென்ன? ஒன்றும் ஆவதில்லை. முன்னர்ச் செய்தது பின்னை விளையும். அவரவர் செய்கைகளின் பயனையே அவரவர் நுகர்தற்குரியர். தர்ம தேவதையின் ஆட்சிக்குட்பட்ட இஜ்ஜகத்தில் தம் தம் செய்கைப் பயனுக்குமேல் ஓரணுக்கூடவேனும், அன்று அதற்கு ஓரணுக் குறையவேனும் உயிர்கள் பெறவொண்ணாது. எனது இயற் கையிலே சோம்பரை வளர்த்துவிட்டேன். இப்போது அதன் பயனை நுகர்கின்றேன். மண்ணுலகத்துப் பொருளும் பெரு மையும் மிக இழிவுடையனவாயினும், அவற்றைக்கூட சோம் பரால் துறந்திருப்பவன் நற்கதி யடையமாட்டான். உழைத் துத்தேடி அவற்றின் இயற்கையை அனுபவித்துப் பார்த்துப் பின்பு துறக்கவேண்டும். பாடுபட்டுத் தேடிப் பணத்தை அடைபவனைக் கவி நிந்தனை செய்யவில்லை ! அதைப் போற்றுதற் குரியதோர் பெருமை யுடையதென்றெண்ணிப் புதைத்து வைப்பவனையே நிந்தை செய்கின்றார். அதை நன்கு செலவிடுகிறானா அல்லது துர்வினியோகம் செய்கிறானா என்பதைப்பற்றி இங்கு விவகாரமில்லை. அது வேறு விஷயம். அதைத் தேடிக்கண்டு அனுபவித்துணர்ந்த பிறகுங்கூட அதன் சிறுமையை அறிந்து வெறுத்துத் தள்ளிவிடாமல், அதில் மேன்மேலும் ஆசைகொண்டு ஆதரிப்பவனே, கேடு கெட்ட பாவியாவா னென்று கவி சொல்லுகிறார்.

ஆம். மண்ணுலகத்துப் புலைப் பொருளைக்கூடச் சோம்பரால் பிரிந்திருப்பவன் புகழ்ச்சிக்குரியவனாகமாட்டான். இடைவிடாத உழைப்பினாலேதான் அண்ட பஹிரண்டங்கள் இயங்குகின்றன. தமோகுணம் நாசத்துக்கு முற்குறி. சோம்பர் அழிவுக்குக் காரணம். யமபடர்கள் மூதேவியின் மக்கள்.

சிறிது நேரம் ஆலோசனை செய்து கொண்டிருந்துவிட்டு, "இந்த மூடத் திகைப்புக்கும், சித்த சலனத்திற்கும், சோம்பருக்கும் இடந் தாலாகாது. இனி நமது வாழ்நாளை

ஸத்ய நாட்டத்திலே நான் செலவிடவேண்டும்" என்று நிச்சயம் செய்து கொண்டேன். அப்போது மனம் சொல்வதாயிற்று :—" கந்தர்வலோகத்திலே யிருந்த ஸுகம் இங்கே யுண்டா ? ஆஹா ! அதிலே நாம் சலிப்படைந்தது பிசகென்று இப்பொழுதுதான் தெரிகிறது. மீண்டும் அங்கே போகலாம் வா உனக்கு அந்நாட்டு இசையும், வானும், நீரும், ஒளியும், மலரும், மாதரும் தந்த இன்பங்களைக் காட்டிலும் அதிகமாகவா இந்தக் கிரண மூர்கின்ற ஆமைத் தொழிலிலே கிடைக்கப்போகின்றது ?" இது கேட்டு, ஒரு க்ஷணம் மறுபடி சலனமடைந்தேன். பின் பூர்வ கர்மப் பயனால் எனக்கு என்று மறியாத தைரியம் பிறந்தது.

" மனமே ! உன்னை அறிந்து விட்டேன். எனது நன்மைக்கெல்லாம் நீ கேடு சூழ்வாய். எனக்கு வருந் தீமைகளுக்கெல்லாம் நீ உபகாரம் செய்வாய். இதோ உன்னைக்கொன்று விடுகிறேன் பார்'' என்று, அதன் கழுத்திலே கைபோட்டு விட்டேன். மனம் கோ கோ வென்றலறிற்று, அப்போது மறுபடியும் ஆகாசத்திலிருந்து பின்வரும் வாக்குப் பிறந்தது :— " மானிடா, வீண் முயற்சி செய்யாதே. மனதை உன்னால் கொல்ல முடியாது. மனங்கடந்த நிலையிலே நீ தாகத்துடன் பாயும் போது அது தானாகவே மடிந்து சூனியமாகிவிடும். அதற்கு உனக்குப் பக்குவம் வரவில்லை. அது வரை நீ எது செய்தாலும் மனம் சாகாது. மேலும், நீ உனது யாத்திரையை விநோதார்த்தமாகத் தொடங்கினாய். வேடிக்கை பார்க்க வந்தவனுக்கு ஸத்தியம் புலப்படாது. கந்தர்வ நாட்டிலேபோய் இன்பங் கண்டதுபோல இங்கும் உண்மையை எளிதில் கண்டு விடலாமென்ற பேதைமை யெண்ணத்தை விட்டுவிடு. நீ பாக்கியவானாதலால். உனது தேர் நீ முன் கண்ட வேறு பலரின் தேர்களைப் போல, இங்கிருந்து தூரத் துண்ணாமல், இங்கே நிற்பதற்கும், ஸஞ்சரிப்பதற்கும் வலிமையுடையதாயிருக்கிறது.

மேலும், பூ, புவ, ஸ்வ, மஹ, ஜன, தப என்ற ஆறுலகமும் கடந்து வந்த ஜீவர்களே ஸத்யலோகத்தில் தரித்து நிற்க முடியும். நீ வரபுருஷனாதலால் உனக்கு அத்தனை கஷ்டம் வேண்டுவதில்லை. நீ ஒரு முறை தர்ம லோகத்திற்குப்போய், அங்கே உள்ள அனுபவங்களை அறிந்து வா. அப்பால் உனக்கு இப்போது நேர்ந்துள்ள உண்மை நாட்டம் பயன்பெறும். தர்மலோகத்திலே மனம் இறந்து போகாவிடினும், நீ விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கெல்லாம் அடங்கி உனக்குத்

தொண்டு புரியும். பின் இங்கு வந்தாயானால், மேல் நடக்கும் செய்திகளை நீயே அனுபவத்தில் தெரிந்து கொள்வாய். போய் வா" என்றது.

கண்கள் சுழன்றன. சிறிது நேரம் மயக்கமுண்டாயிற்று. பின் மயக்கம் தெளிந்தது. கண்ணை விழித்துப் பார்த்தேன். மறுபடி மண்ணுலகத்திலே, திருவல்லிக்கேணி வீரராகவ முதலித் தெருவில், கிழக்கு முகமுள்ள வீட்டு மேன்மாடத்தில், —நானும் என் பக்கத்திலே சில வர்த்தமானப் பத்திரிகைகள், எழுதுகோல், வெற்றிலை, பாக்கு முதலிய என்னுடைய பரிவாரங்களும் இருப்பது கண்டேன்!

---

# நாலாம் அத்தியாயம்

## மண்ணுலகம்

எனக்குத் தலைநோவு பலமாயிருந்தது. படுக்கையை விட்டிறங்கிக் கிழக்கே இரண்டு மூன்று சந்துகளுக்கப்பால், ஏதோ பெயர் மறந்துபோன தெருவில், நான் கூலி கொடுத்து வாஸம் செய்து கொண்டிருந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். அந்த வீட்டைக் கொஞ்சம் வர்ணிக்கலாமா? கந்தர்வ நாட்டைப் பற்றிக் கேட்டீர்களே! இந்த மண்ணுலகத்தில் நமக்குள்ள ஸௌகரியங்களைப் பற்றிச் சிறிது கேளுங்கள்.

நானிருந்த வீட்டிற்கு முன் பக்கத்திலே ஓர் கூடமும் அதைச் சுற்றி இரண்டு மூன்று அறைகளும் உண்டு. மேற்கே பார்த்த வீடு. அந்தக் கூடத்திற்குத் தென்புறத்திலே ஒரு முற்றம். இது முன் பகுதி. பின் பகுதியிலே அறைகள். ஒரு முற்றம். மேல் மெத்தை. அதில் இரண்டறைகள். இவ்விரண்டு பகுதிகளுக்குப் பொதுவாகத் தென் பாரிசத்திலே கொல்லைப் புறத்தில் ஓர் கிணறும், தண்ணீர்க் குழாயும் உண்டு. பின் பகுதியில் நான், என் சிறிய தாயார், மனைவி, மைத்துனிப் பெண், தம்பி, எனது குழந்தை ஆகிய அறுவரும் வசிப்பது. முன் பகுதியில் ஒரு ராயர் பெரிய குடும்பத்தோடிருந்தார். அவருக்குப் பகல் முழுதும் உழைத்துக் கொண்டிருக்கும்படியாகத் தபால் கச்சேரியிலோ, எங்கேயோ ஓர் உத்தியோகம். உடம்பிலே கோபி மண் முத்திரைகள் எத்தனையோ, அத்தனை குழந்தைகள்.

அவர் மனைவி மறுபடியும் கர்ப்பம். அந்த முற்றத்திலேயே ஒரு பசுமாடு. இத்துடன் ஒட்டுக்குடியாக அவருடைய பந்துக்கள் சிலர் வஸித்தார்கள்.

நான் இருந்த பகுதியிலேனும் மேன்மாடமென்று ஒன்றிருந்தபடியால், கொஞ்சம் காற்று வரும். ராயர் கூட்டத்தாருக்கு அதுகூடக் கிடையாது. இரவிலே கொசுக்களின் தொல்லை பொறுக்க முடியாது. எனக்குத் தூக்கமே வராது. ராயருக்குக் காச நோயாதலால் அவர் இருமிக்கொண்டேயிருக்கிற சப்தம் ஓயாமல் கேட்கும். அவருடைய குழந்தைகள் ஒன்று மாறி மற்றொன்று அழுதுகொண்டேயிருக்கும். கர்ப்பிணியாகிய அவர் மனைவி இடையிடையே விழித்துக் குழந்தைகளையோ, அல்லது கடவுளையோ அல்லது ராயரைத்தானே, யாரையோ கன்னட பாஷையிலே திட்டிவிட்டு மறுபடியும் உறங்கி விடுவாள்.

ராயர் வீட்டு விஷயங்கள் இவ்வாறிருக்க, நமது வீட்டுச் சம்பிரமங்கள் இதைக் காட்டிலும் விசேஷம்.

கதையை இடையிலே விட்டு விட்டேனே. வீரராகவ முதலி தெருவிலிருந்து வீட்டிற்கு வந்தேனா? வரும் வழியிலே "ஜட்கா" வண்டிகள், "துரை"கள் போகும் "கோச்சு"கள், புழுதி, இரைச்சல், துர்நாற்றம், இவற்றையெல்லாம் கடந்து, முன் பகுதியிலே பசுமாடு, ராயர் வீட்டம்மாள், குழந்தைக் கூட்டங்கள் முதலிய விபத்துக்களுக்கெல்லாம் தப்பிப் பின்புறத்திலே "மெத்தை"க்கு வந்து சேர்ந்தேன். அங்கே எனது படுக்கை, படிப்பு, எழுத்து, பகலில் ஸ்நேஹிதர்கள் வந்தால் அவர்களுடன் ஸல்லாபம் முதலிய நாலாயிர விஷயங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்ட அறையின் வெளிப்புறத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு என் மனைவியைக் கூப்பிட்டேன். அவள் வந்து ஏனென்றாள். "தலைநோவு பொறுக்க முடியவில்லை. கொஞ்சம் மிளகு அரைத்துக் கொண்டு வா" என்றேன். "ஆமாம்; இரண்டு நாளைக்கொரு முறை இதொரு பொய்த் தலைவலி வந்துவிடும், என்னை வேலையேவுகிறதற்காக. அதெல்லாம் சரிதான். பால்காரி வந்து மத்யானம் பணம் கேட்டுவிட்டுப்போனாள். ராயர் வீட்டு அம்மாள் குடிக்கூலிக்கு ஞாபகப்படுத்தச் சொன்னாள். ராயர் நேற்றே சொன்னாராம். இந்த மாதம் குழந்தைக்குக் காப்பு வாங்க ரூபாய் தருவதாகச் சொல்லியிருந்தீர்கள். என்னைத்தான் ஏமாற்றுகிறது வழக்கமாகவே போய்விட்டது"; இன்னும், அது இது என்று ஆயிரம்

கணக்கு சொன்னாள். அன்று மாலை அவள் சொல்லிய கணக்குகளை எல்லாம் தீர்க்கவேண்டுமானால் குறைந்த பக்ஷம் மூன்று லக்ஷம் ரூபாய் வேண்டும் என்று என் புத்திக்குப் புலப்பட்டது. கடைசியாக "தெருவிலே போகின்ற நாய்களுக்கெல்லாம் பணத்தை வாரியிறைக்கிறது ; வீட்டுச் செலவைப் பற்றிக் கேட்டால் முகத்தைச் சுளிக்கிறது ; இப்படிச்செய்து கொண்டே வந்தால், அப்புறம் என்ன கிடைக்கும் ? மண் தான் கிடைக்கும்" என்று ஆசீர்வாதம் பண்ணிப் பிரசங்கத்தை முடித்தாள்.

"தலை நோவு தீர்ந்து போய்விட்டது. நீ தயவு செய்து கீழே போகலாம்" என்று வணக்கத்துடன் தெரியப்படுத்திக் கொண்டேன்.

"ஆமாம்! ஊர்க்காரர்கூட வெல்லாம் ஓயாமல் பேசித் தொண்டைத் தண்ணீரை வற்ற வைத்துக் கொண்டிருக்கலாம். நான் ஒரு வார்த்தை பேசவந்தால் உடனே கோபம் வந்துவிடும்" என்றாள். அவள் மனதில் என்னை ஸமாதானப் படுத்துவதாக எண்ணம். அப்பால், பல தினங்கள் கழிந்த பின்புதான், நான் தர்மலோக யாத்திரை செய்வதாகத் தீர்மானம் செய்து வைத்திருந்தேன். இடையே நிகழ்ந்த சிற்சில ஸம்பவங்களும், காலதேச வர்ணனைகளுமே இங்கே எழுதப்படும். மண்ணுலகம் மிகப் பெரிது. அதில் என் அனுபவ முழுவதையும் எழுத வேண்டுமானால் மஹா பாரதத்தைப் போலப் பதினெட்டு மடங்கு புஸ்தகமாகும். இங்கு ஓரிரண்டு 'மாதிரி' லீன்களே குறிப்பிடப்படும்.

உ0-ம் தேதி—குழந்தைக்குக் காய்ச்சல். மனைவிக்குக் காதுவலி, எனக்குப் பித்தக் கிறுகிறுப்பு.

உக-ம் தேதி—தம்பிக்குப் பாடசாலைச் சம்பளம் கொடுக்க வேண்டிய கடைசி நாள். நான் காரியஸ்தலத்திலிருந்து பணம் கொண்டுவந்து வைக்க மறந்து விட்டேன். அவன் அதுபற்றிப் பாடசாலைக்குப் போவதையே நிறுத்திவிட்டான். நான் சுதேசிய விஷயத்தில் ஊக்கத்துடன் பாடுபடுவதன் பொருட்டாக, என்னை எப்போதும் கவனித்துவரும் படியாக ராஜாங்கத்தாரால் அனுப்பப்பட்ட ஒற்றர்கள் எனது தம்பியிடம் செய்த ஸம்பாஷணையில் "உம்முடைய அண்ணனது சிநேகிதரான இன்னாரை ராஜாங்கத்தார் பிடிக்கப் போகிறார்கள்" என்ற மங்கள ஸமாசாரம் சொல்லிவிட்டுப் போனதாகத் தம்பி வந்து சொன்னான்.

௨௨-ம் தேதி—மனைவிக்கும் சிறிய தாயாருக்கும் மனஸ்தாபம் வந்துவிட்டது. ஒருவரை யொருவர் மாற்றி என்னிடம் பிழைகூறத் தலைப்பட்டார்கள். என் ஜீவதர்மமாகிய 'சுதேசியம்' தப்பு முயற்சியென்றும், வீணென்றும், அதில் நான் தலையிட்டதிலிருந்து குடும்பத்துக்குப் பற்பல கேடுகளுண்டாகுமென்றும் சிறுதாயார் ஸன்மார்க்க போதனை செய்தாள். என் மூக்கில் அடிக்கடி ஒரு வித ஊறுதல் உண்டாவது போலத் தோன்றிற்று. அது ஓர் பொல்லாத நோயாயிருக்குமோ வென்ற மூடத்தனமான கவலை கொண்டேன். அக் கவலையிலிருந்து மனதை அடிக்கடி திருப்பியும், மனம் மீட்டும் மீட்டும் அதில் போய் விழுந்தது.

௨௩-ம் தேதி—வெற்றிலையில் சுண்ணம்பு அதிகமாகச் சேர்ந்து விட்டபடியால், வாயெல்லாம் புண்ணாய்ப் போய் விட்டது. வாய்க்குள் ஜலம் விடுவதற்குக்கூடத் தகுதியில்லை. எனக்குச் சாதாரணமாகவே உழைப்பு அதிகமாதலால், அத்துடன் சோறும் விழுங்க முடியாமற்போகவே, சோர்வும், முகக் கடுகடுப்பும் அதிகப்பட்டன. இத்யாதி, இத்யாதி.

நாள் தவறினாலும், இந்தக் கணக்குத் தவறுவதில்லை. சீச்சீ ! இந்த மண்ணுலகம் ஓரிடமா ? இதில் மனிதன் வசிக்கலாமா ? ஆமைகளும் ஓநாய்களும் வாழலாம். இது துன்பக் களம். இது சிறுமைக் களஞ்சியம். இது நரகம். இதில் வெறுப்படையாத மனிதர்களின் முகத்திலேகூட விழிக்கலாகாது.

வீட்டு வியாபாரங்களையும், எனது சொந்த வர்த்தமானங்களையும் குறித்துச் சில திருஷ்டாந்தங்கள் காண்பித்தேன். இனி, வெளி வியாபாரங்கள், எனது மித்திரர், அயலார் முதலியவர்களின் செய்திகள் ஸம்பந்தமாகச் சில திருஷ்டாந்தங்கள் காண்பிக்கிறேன். திருவல்லிக்கேணியிலே "செ......ஸங்கம்" என்பதாக ஓர் தேசபக்தர் சபை உண்டு. அதில் தேசபக்தர்கள் தான் கிடையாது. நானும் சிற்சில ஐயங்கார்களுமே சேர்ந்து, "காரியங்கள்"—ஒரு காரியமும் நடக்கவில்லை—நடத்தினோம். நாங்கள் தேசபக்தர்கள் இல்லையென்று, அந்தச் சபை ஒன்றுமில்லாமற் போனதிலிருந்தே நன்கு விளங்கும்.

நான் சோம்பருக்குத் தொண்டன். எனது நண்பர்களெல்லாம் புளியஞ்சோற்றுக்குத் தொண்டர்கள். சிலர் மட்டிலும் பணத்தொண்டர் ; 'காலணா'வின் அடியார்க்கும் அடியார்.

ஆனால், எங்களிலே ஒவ்வொருவனும் பேசுவதைக்கேட்டால் கைகால் நடுங்கும் படியாக இருக்கும். பணத்தொண்டரடிப் பொடி யாழ்வார் எங்களெல்லோரைக் காட்டிலும் வாய்ப் பேச்சில் வீரர், ஒருவன் வானத்தை வில்லாக வளைக்கலா மென்பான். மற்றொருவன் மணலைக் கயிறாகத திரிக்கலா மென்பான்.. ஒருவன் "நாம் இந்த மேட்டில—இந்த விதமாகவே—வேலை செய்து கொண்டு வந்தால் ஆங்கிலே யரின் வர்த்தகப் பெருமை ஆறுமாதத்தில் காற்றாய்ப் போய் விடும்" என்பான். மற்றொருவன் "சியாம்ஜி கிருஷ்ணவர்மா ஸ்வராஜ்யம் கிடைக்கப் பத்து வருஷமாகுமென்று கணக்குப் போட்டிருக்கிறார். ஆறு வருஷத்தில் கிடைத்து விடுமென்று எனக்குத் தோன்றுகிறது" என்பான். தவளை யுருவங் கொண்ட மூன்றா மொருவன். "ஆறு மாதமென்று சொல்லடா" என்று திருத்திக் கொடுப்பான்.

ப.......... ஆழ்வார் எங்களிலே முக்கியஸ்தர். அவர் இதை எல்லாம் கேட்டுப் பரமானந்தமடைந்து கொண்டிருப் பார். ஆனால், ஒரு தேவதை அவரிடம் வந்து, "உங்களுக்கு நான் ஸ்வராஜ்யம் நாளை ஸூர்யோதயத்திற்கு முன்பு சம்பாதித்துக் கொடுக்கிறேன். நீ உன் வீட்டிலிருந்து அதற்காக ஒரு வராகன் எடுத்துக்கொண்டுவா" என்று சொல்லுமாயின், அந்த ஆழ்வார், "தேவதையே, உனக்கு வந்தனம் செய்கிறேன். ஓம் சக்த்யை நம:, ஓம் பராயை நம: இத்யாதி; அம்பிகே, இந்த உபகாரத்துக்கு நாங்கள் உனக்கு எவ்வாறு நன்றி செலுத்தப் போகிறோம்? எங்கள் உடல், பொருள், ஆவி மூன்றும் உன்னுடையதே யாகும். ஆனால், ஒரு வராகன் கேட்ட விஷயத்தைப் பற்றி நான் ஒருவார்த்தை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதைக் கேள். நீ சொல்லுகிற காரியமோ பொதுக் காரியம். அதற்குப் பொது ஜனங்கள் பணம் சேர்த்துக் கொடுப்பதே பொருத்த முடைய தாகும். நான் ஒருவன் மட்டிலும் கையிலிருந்து பணம் செலவிடுதல் பொருத்தமன்று. இவ்விஷயத்தைப்பற்றி நாங்கள் அடுத்த வாரம் கூடப்போகிற 'மீட்டிங்'கில் பேசித் தீர்மானம் செய்கிறோம். அதன் பிறகு நீ பெருங்கருணையுடன் எழுந்தருளவேண்டும். இப்போது போய் வருக வந்தே மாதரம்" என்று மறுமொழி சொல்லி யனுப்பிவிடுவார்.

ஐயோ! என்ன உலகமடா, இந்த மண்ணுலகம்! ஒழியாத ஏமாற்று, ஒழியாத வஞ்சனை, ஒழியாத கவலை, ஸாரமில்லை, ஸத்துக் கிடையாது; உள்ளூரப் பூச்சியரித்துக் குழலாய்

இருக்கும் வாழ்க்கை ; ஒவ்வொருவனும் மற்றவன் மீது பழி கூறுகின்றான். ஒவ்வொருவனும் தன்னிஷ்டப்படி விட்டுவிட்டால் எல்லாம் நேராக நடக்குமென்ற நம்பிக்கை யுடனே தான் இருக்கிறான். ஆனால் " நான் ஒருவன் சரியாக இருந்தால் போதுமா ? மற்றவர்களை நம்புவதற்கிட மில்லையே " என்று நினைக்கிறான். பிறரை நம்புவதற்கிட மில்லை யென்றெண்ணி ஏமாற்றுகிறான். ஐயோ, மூடா ! நீ ஏமாற்றுவதனால், முன்னைக்காட்டிலும் பரஸ்பரநம்பிக்கை அதிகரித்து விடுமென்றா நினைக்கிறாய் ? மனித ஜாதிக்குத் தீரா நோய் ஒன்று பிடித்திருக்கிறது. மாறாத சாபம். இறங்காத விஷம். இதன் பெயர் பணம்.

இப் பேய்க்கு வணங்கும்படி அவனைத் தூண்டி விடுவது விருப்பம். அதாவது ருசி நீங்கிய விருப்பம் ; அறிவற்ற விருப்பம் ; ருசி ஸஹிதமான விருப்பமுடையோர் கந்தர்வர்கள். ஸத்தியலோகக் கருவி.

இன்னும் எத்தனையோ காட்சிகள் மண்ணுலகத்திலிருந்து எடுத்துக் காட்ட வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருந்தது. ஆனால், பயனற்ற இவ்வுலகத்தைப் பற்றி அதிகமாக விஸ்தரிப்பது பயனுடைய கார்யமாகாது என்பது கருதி இத்துடன் நிறுத்தி விடுகின்றேன்.

---

# ஐந்தாம் அத்தியாயம்

## தர்மலோகம்

சில தினங்களின் பிறகு, ஒரு நாள் ஞானரதத்தில் ஊர்ந்து தர்மலோகத்திற்குப் போனேன். கந்தர்வ லோகத்திற்குப் போனவுடன் தேரிலிருந்து இறங்கி யதேச்சையாகத் திரிந்தது போல, இங்கும் ஸஞ்சரிக்கலாமென்று கருதித் தேரை விட்டு இறங்கினேன். அப்போது, தெளிந்த வதனமும், அகன்ற அடங்கிய விழிகளும், கருமையாகச் சுருள்கள் அமைந்த தாடியும், வலக்கையிலே ஒரு சுவடியும் கொண்ட வாலிபன் என் முன்னே வந்து, " தேரை விட்டிறங்க வேண்டாம் அதிலேயே இரு ; நானும் ஏறிக்கொள்ளுகிறேன். உன்னுடன வந்து உனக்கு இந் நாட்டின் விஷயங்களைக் காண்பிக்க வேண்டும் என்று எனக்குத் தர்மதேவதையின் கட்டளை " என்றான்.

நான் அவனைக் கண்டவுடனே, அவனிடம் எனக்கு ஒருவித மான அச்சமும் மதிப்பும் ஜனித்தன. அவனைப் போன்ற துணைவன் இருந்தால் பல அரிய விஷயங்கள் தெரிவதுடன், நற்கதியும் பெறலாம் என்று எனக்கு எக்காரணத்தாலோ மிக நிச்சயமாகத் தோன்றியது. அந்த வாலிபன் தேர்மீது வந்து ஏறிக்கொண்டான். மறுபடியும் அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தேன். ஆஹா ! என்ன அற்புத வடிவம் ! அவன் தேகத்திலே ஒரு சுருங்கல் கிடையாது. ஒரு கோணல் இல்லை. அவனது அங்கங்களெல்லாம் தம் தம் இயற்கையளவுக்குச் சிறிதும் மாறுபடாமல் கணித தேவதையால் அமைக்கப்பட்டன போன்று விளங்கின. உடல் முழுதும் ஒரு பிரகாசம் காணப்பட்டது. அது கந்தர்வ லோகத்தவரிடம் காணப்பெற்ற மயங்குந் தன்மை கொண்ட ' லாஹிரி 'ப் பளபளப்பு அன்று ! இயற்கையின் திகழ்ச்சி. பிரகிருதியிலே, மலர், செடி முதலிய தத் தம் கடமைகளை நேர்மையுறச் செலுத்தும் பொருள்களிலே, ஓர் விதமான திகழ்ச்சி தெரிய வில்லையா ? அவ்வகைப் பட்டது. சாஷ்டாங்கமாக அவன் பாதத்தில் விழுந்து வணங்கினேன். அவன் " தர்மம் சர," (அறத்தை ஒழுகு) என்று ஆசீர்வாதம் செய்தான்.

பின்பு, " மகனே, என் பெயர் தபஸ். நான் இந்நாட்டில் வழி காட்டும் தொழில் உடையவன். அவரவர்கள் எவ் வெத் தருமங்களைக் காண விரும்புகிறார்களோ அவ்வவற்றைக் காட்டுவேன். திமிங்கில முதல் புழுவரை ஒவ்வோருயிரக்கும் அதற்கு குரிய தருமங்கள் உண்டு. நட்சத்திரங்கள் சூரிய சந்திரன் முதலாக அணுக்கள் வரை ஒவ்வொரு வஸ்துவுக்கும் உரிய தர்மங்களுண்டு. மேலும், ஒன்றிற்கே காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி தருமங்கள் மாறுபடுகின்றன. அவற்றை யெல்லாம் ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டு வரவேண்டுமானால் பதினாயிரம் வருஷங்கள் போதா. ஆதலால், நீ எந்தத் தர்மங்களை முக்கியமாக அறிய விருப்பமுள்ளது என்று குறிப்பிடுவாயோ, நான் அவற்றை மட்டும் உனக்குக் கொண்டு காட்டுவேன். வேறு பல விஷயங்களையும் நீ பொதுப்படையாகப் பார்த்துக்கொண்டு போகலாம் " என்று கூறினான். அதற்கு நான், " முனிவரே, நான் பிராமண தருமத்தையும், க்ஷத்திரிய தருமத்தையும் அறிய விரும்புகிறேன் " என்றேன்.

" நல்லது, என்னுடன் வா ; பிரதமத்திலே அறக் கடவுளின் ஆலயத்தில் போய் வழிபாடு செய்துவிட்டு வரலாம் " என்றான். இருவரும் உடன் சென்றோம்.

இடைவழியில் என்ன பொருள்கள் உள்ளதென்பதைப் பார்க்கக்கூட முடியாதபடி கண்மூடித் திறக்கு முன்பாகத் துய்ய வெண்மை நிறங்கொண்ட ஸ்படிகத் தால் மிக விலாசமாகக் கட்டப்பட்ட ஓர் ஆலயத்தினருகே வந்து சேர்ந்தோம். பின்புறத்திலிருந்திறங்கித் தபோமுனி முன் செல்ல, நான் அவரைத் தொடர்ந்து, அவ்வாலயத்துக்குள்ளே இருவரும் புகுந்தோம். "ஜய தர்மராஜாய, ஜய யமாய, ஜய வைவஸ்வதாய, ஜய ஸூர்யதேஜஸ்வினே, ஜய மஹோக்ராய, ஜய மஹா சாந்தாய," என்ற ஒலிகள் கேட்டன என் மனம் திடுக்கிட்டது. கை கால்கள் நடுங்கின. உடம்பெல்லாம் வெயர்த்து விட்டது. பதறிப்போய், "முனிவரே, எங்கே அழைத்துச் செல்லுகிறீர்?" என்று கேட்டேன். "யம ஸன்னிதானத்துக்கு" என்றார். "என்? ஐயா? எதற்கு?" என்று அலறினேன். முனிவர் என் பக்கமாகத் திரும்பி என் மெய்யைத் தடவித் தமது விசாலமான அருள் விழிகளின் பார்வையை எனது கண்களிலே செலுத்தி, "அஞ்சாதே, அறத்துக்கு அஞ்சலாமா?" என்றனர். எனது பொறுத்தலரிய பயம் தெளிந்துவிடும்போல் இருந்தது. அதற்குள் மூர்ச்சை போய் விழுந்து விட்டேன். அப்போது சில கனவுகள் கண்டேன்.

ஆ! என்ன தீய கனவுகள்! பெரிய பெரிய புழுக்கள் வந்து என்னை விழுங்குவது போலிருந்தது. "ஐயோ! என்ன பாதகம் செய்தோ நரகத்தில் வந்து விழுந்து விட்டேன். நரகத்தில் நெருப்பால் சுடுவார்கள், அங்கத்தையெல்லாம் வெட்டி வெட்டிச் சித்திரவதை செய்வார்கள் என்று சொன்னார்களே! அப்படி யெல்லாம் செய்தாலும் கூட நான் பொறுத்திருப்பேனே, பொறுக்க முடியாத அசுசி கொண்ட உயிர்களுக்கும், பொருள்களுக்குமிடையே என்னைப் போட்டு இம்சை செய்கிறார்களே! ஈசா, அசுத்தமான எண்ணங்கள் எண்ணியதற்கும், அசுத்தமான வஸ்துக்களை விரும்பியதற்கும் இதுவா தண்டனை! ஐயோ! அந்த நாளில் தெரியாமற் போய்விட்டதே. உற்றார், நண்பர்கள், அயலார், எல்லோரும் அசுத்த சிந்தைகளில் ஆழ்ந்திருந்தபடியால், அவர்களுடைய ஸஹவாஸத்தாலல்லவோ, நானும் கெட்டுப் போய் விட்டேன். எனக்குத் தெரியாதே" என்று கூவினேன்.

"அதோ, அதோ, அதோ பார்! எனக்குத் தெரிந்தவர்களாக எத்தனையோ பேர் வந்து நான் படும்பாடுகளையே அனுபவித்துக் கொண்டு கிடக்கிறார்கள். சிலர் என்னைக் கண்டு

வெட்கமடைகிறார்கள். ஓர் பிரமாண்டமான சங்குப் பூச்சியின் கொம்புகளின் கீழ் முகத்தை மறைத்துக் கொள்கிறார்கள். சிலர் என்னைக் கண்டு அழுகிறார்கள். அப்பப்பா! நத்தை, நண்டு, பாச்சை, பல்லி—எல்லாம் பெரிய பெரிய ஆகிருதி—இவற்றினிடையேயும், இவற்றைக் காட்டிலும் அசுத்த வஸ்துக்களினிடையேயும், நான் கண்ட அனுபவங்களை இங்கே எழுதவும் கூச்சமுண்டாகிறது. மானிடர்களே! அசுத்த எண்ணங்களை நீக்குங்கள். அன்பினால் சொல்லுகிறேன். அசுசியான சிந்தனைகள் வேண்டாம். ஈசா, அனலிலே போடும், என்னை அனலிலே போடும். எனக்கு இந்த நிலை போதும், போதும். இனிப் பாவம் செய்ய மாட்டேன்'' என்று கூறி விம்மி விம்மி அழுதேன்.

"பின் பார்க்கிறேன். என்னை மற்றோரிடத்தில் போட்டிருந்தார்கள். என் மேலெல்லாம் நோய்கள் தோன்றி இருந்தன. கரிய குஷ்டம், யானைக்கால், பக்ஷவாதம், க்ஷயம், குன்மம்; ஒன்றா, இரண்டா? உடலிலே பிரியங்கொண்டு, அதன் போஷணைக்காக அதர்மங்கள் செய்யும் மூடர்களே, உங்களை எச்சரிக்கின்றேன். ஐயோ! ஏன் கெடுகிறீர்கள்?''

சிறிது நேரம் கழிந்தது. நெருப்புக்குள்ளே என்னைச் சில பிசாசுகள் கொண்டு தள்ளின. ஆரம்பத்தில் அனல் வந்தாலும் பெரிதில்லை என்று எண்ணிய நான் அனற்குழியைக் கண்டவுடன், கால்களால் உதைத்தும், பல்லால் கடித்தும், கையால் மோதியும் அந்தப் பிசாசுகளிடமிருந்து திமிறிக் கொள்ள முயன்றேன். "ஐயோ! அவைகளுக்குத்தான் என்ன பலமடா? என்னை ஒவ்வொரு நெருப்புக் குழியாக முறையே போட்டுப் போட்டு எடுத்தன. மேல் தபிக்கிறதே, அங்கங்களெல்லாம் வேகின்றனவே. ஐயோ, வெட்டி வெட்டி ஆட்டிறைச்சியைத் தொங்க விடுவது போல் எனது கைகளையும், கால்களையும், தொங்கவிடுகிறார்களே, என் முண்டத்தைத் தீப்பாறைகளில் மோதுகிறார்களே. என்னை எவரும் காப்பவர்களில்லையா? காப்பவர்களில்லையா? தபோமுனியே, வந்து ரக்ஷிக்கமாட்டாயா?'' என்று கதறினேன். மூர்ச்சை தெளிந்து கண்களை விழித்துப் பார்த்தேன்.

தபோமுனி என் முகத்தை நீரால் துடைத்து, என்னைத் தூக்கி நிறுத்திக்கொண்டு தனது அருள் விழிகளிலே நீர் பொழிய, "மகனே, இனி நீ சுகம் பெறுவாய். பிராரப்த கருமங்கள் அனுபவித்தா லொழியத் தீரமாட்டா. நீ கண்ட

கனவுகளை எல்லாம் மறந்துவிடு. முன்சென்ற துன்பத்திற்கு இப்போது நினைத்து வருந்துதல் பேதைமை. இனி, நல்லற வழியிலே நான் உன்னைக் கொண்டு சேர்க்கின்றேன். " ஜய தர்மராஜாய என்று சொல் " என்றார்.

' ஜய தர்மராஜாய ' என்று வாழ்த்தினேன்.

பின்பு பல வளைவுப் பாதைகளின் வழியே சுற்றிச் சுற்றி என்னைக் கொண்டு போய், முனிவன் தர்மராஜாவின் சபையிலே கொண்டு சேர்த்தான். பளிங்குத் தளம், பளிங்குச் சுவர்கள், பளிங்குத் தூண்கள், வயிரச் சிங்காதனம், அதன் கீழே பொன்னாற் செய்யப்பட்ட பாம்பு, புலி இவற்றின் உருவங்கள் நசுங்கிக் கிடந்தன. ஸபா மண்டபத்திற்கு மேல்விதானம் கிடையாது. ஆகாயமே கூரை. சூரிய கிரணங்கள் நேரே தர்மராஜாவின் முடிமீது வந்து விழுகின்றன. அவருடைய ரத்தின மகுடத்தை ஜாஜ்வல்யமாகச் செய்கின்றன. ஸூர்யகுமாரனாதலால், அவனையும், அவன் ஸபையிலுள்ளோரையும் ஸூர்ய கிரணங்கள் சுடவில்லையென்று தெரிந்து கொண்டேன். நெருப்பை நெருப்பு சுடுமா ? தர்மராஜாவின் மகுடத்துக்கு நேரே உயர ஓர் அக்கினி வாள் இடைவானிலே பொறிகள் பறக்குமாறு தக தக வென்று ஒளி வீசி நிற்கின்றது. இது தர்மத்துக்கு ரக்ஷணை. தர்மத்தைப் பிறர் துன்பப் படுத்த வந்தால் அவர் தலையிலும், தர்மம் தானே சிறிது தவறுமாயின் அதன் தலையிலும் இவ்வாள் விழுந்து நாசப் படுத்திவிடும் என்பது அறிந்தேன்.

தர்மராஜரவின் முகத்தைப் பார்த்தேன். பாலகங்காதர திலகரின் முகத்துச் சாயல் கொஞ்சம் தென்பட்டது. இலேசான சாயல். ஆனால், தர்மராஜா தாமே காலமாதலால், காலத்தினால் மனிதர் முகத்தில் ஏற்படுத்தப்படும் சிதைவுகள் அவருடைய திவ்விய வதனத்தில் காணப்படவில்லை. பொன் வர்ணமுடையதும், வயிர ஸாரங்கொண்டதும் ஆகிய ஒரு அற்புத உலோகத்திலே வார்த்து, அதனுள்ளே மகா சக்தி கொண்ட உயிர்த்திகழ்ச்சி செலுத்தப்பட்டிருக்கிறது போல விளங்கிற்று. இத்தனைக்கும் மேலே, அருட்ஜோதி கூத்தாடுகின்றது. தர்மம் இரக்கமில்லாதது என்று நான் பல ஸமயங்களில் நினைத்திருக்கிறேன். சிங்காதனத்தைப் போலவே நெஞ்சமும் வயிரத்தால் செய்யப்பட்டதாக இருக்கலாமென்று நினைத்தேன். அது பிழை. தர்மம் பக்ஷபாத மற்றது. குருட்டன்பு இல்லாதது. ஆனால், அருளும் விவேகமும் கலந்து வார்க்கப்பட்ட விக்கிரகம் தர்மம்.

தபோமுனி என்னைக் கொண்டு தர்மராஜாவின் திரு முன்னே நிறுத்தினர். தருமன் முகமலர்ந்து "வருக" என்று சொல்லி, "ஓம்" என்று ஆசீர்வதித்தான். அவன் வாய் திறக்கு முன்பாகவே நான் அவன் தாளில் விழ்ந்து ஸாஷ்டாங்கமாக வணங்கி அவன் பாத விரல்களைக் கண்ணீரால் நனைத்துவிட்டு எழுந்து நின்றேன்.

தர்மன் என்னை நோக்கி "உனது பாவங்களெல்லாம் நீங்கிப் போயின. உன் குறைகளெல்லாம் தீர்ந்து நீ பரிபூர்ணம் பெறும் மார்க்கத்திலே செல்வதற்குத் தகுதியுடையவனாய் விட்டாய். இனி இந்திரிய விருத்திகளிலே உன் மனம் செல்லமாட்டாது. அற்பப் பொருள்களிலே ஆசை வைக்க மாட்டாய். ஆணவத்திலே அடங்கி நிற்க மாட்டாய். மனம் உன் வசப்பட்டு நீ சொன்னபடியெல்லாம் கேட்கும். தபோமுனி நீ விரும்பியதை யெல்லாம் காட்டுவான். உனக்கு மங்கள முண்டாகுக!" என்றான். அவனை மறுபடியும் வணங்கி விடை பெற்றுக்கொண்டேன்.

அடர்ந்ததோர் காட்டிற்கு என்னை முனி அழைத்துச் சென்றான். அதனருகே ஏறக்குறைய இருபது சிறிய கூரை வீடுகளுள்ள ஒரு கிராமம். ஒவ்வொரு கூரை வீட்டையும் சுழ்ந்து ஒரு தோட்டம். வீடுகள் நெருக்கமாகச் சேர்ந்திருக்க வில்லை. விஸ்தாரமான இடைகள் விட்டுக் கட்டப்பட்டிருந்தன. வனப்பு, சுத்தம், வணங்குதற்குரிய எளிமை என்னும் இம்மூன்று குணங்களுக்கும் ஒவ்வொரு வீடும் இலக்கியமாக விளங்கிற்று. அசுசியான தோற்றமேனும், நாற்றமேனும் அங்குத் தேடித் தேடிப் பார்த்தாலும் கிடையாது. அவ் வனத்திலும் அதி சுத்தமாயிருந்த வீட்டிற்குள் நானும் முனிவனும் சென்றோம். அங்கே ஒரு பிராமணன் விசாலமான தோள்களும், ஞானச் சுடர் விடும் முகமும், பரந்த கண்களும், வெளுத்து நீண்ட தாடியும் உடையவனாக வீற்றிருந்தான்.

அவனுக் கெதிரே ஐந்தாறு சிஷ்யர்கள் சுவடிகள் கையிலே வைத்துக் கொண்டு பாடங் கேட்டுக்கொண்டிருந்தார்கள். நானும் தபோமுனியும் போனவுடன் எங்களுக்கு வழக்கப்படி உபசாரங்கள் கூறி உட்கார வைத்துவிட்டு, மாணாக்கர்களை நோக்கி:—

"மக்களே, இன்றைக்குப் பாடம் போதும். போய் வாருங்கள்" என்றான்.

நான் "பாடம் நடத்துங்கள் நாங்கள் இடையூருக வந்ததைக் கருதவேண்டாம்" என்றேன். அதற்குப் பிராமணர் "அதனுல் பாதகமில்லை. ஏற்கெனவே பாடத்தை முடிக்கும் நேரமாய்விட்டது. அதற்கேற்ப நீங்களும் வந்து சேர்ந்தீர்கள். உங்கள் வரவினுல் பாடத்திற்கு விக்கினமில்லை. இந்த உலகத்தில் அவரவர் தர்மஸேவைக்கு விக்கினங்கள் ஏற்பட மாட்டா" என்று கூறினுன்.

தபோமுனி அந்த உபாத்தியாயரை நோக்கி, "கண்வாசாரியரே, இவர்கள் என்ன பாடம் படித்துக்கொண்டிருந்தார்கள்?" என்று கேட்டான். அதற்குக் கண்வர் "இவர்கள் கணித சாஸ்திரம் படிக்கிருர்கள்" என்ருன்.

**தபோமுனி** :—"முன் நான் வரும் போது சிற்ப சாஸ்திரம் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்தீர்கள்?"

**கண்வர்** :—"ஆம், அவர்கள் தொழிலாளிகள். இப்போது இருந்தவர்கள் பிரம, க்ஷத்திரிய என்னும் இரண்டு வகுப்புகளைச் சேர்ந்தவர்கள்."

"ஸர்வ சாஸ்திரங்களின் கடல்" என்று நான் வாய்க்குள்ளே சொல்லிக்கொண்டேன்.

அது கேட்ட **கண்வர்** :—"அப்படி யொன்று மில்லை. எனக்கு வேதாந்த சாஸ்திரம், தர்ம சாஸ்திரம், இவற்றைத் தவிரச் சிற்பம், கணிதம் என்ற இரண்டு தான் தெரியும். வந்து கேட்கும் மாணுக்கர்களுக்குத் தெரிந்ததைச் சொல்லிக் கொடுக்கின்றேன். அது எனது தர்மம்" என்ருர்.

இவ்வளவு நேரத்தின் பிறகு, தபோமுனி கண்வாசாரியாரிடம் என்னைச் சுட்டிக் காட்டி, "இவருக்குப் பிராமண தர்மத்தைக் காட்டவேண்டு மென்பதாகத் தங்களிடம் அழைத்து வந்திருக்கின்றேன்" என்ருர்.

கண்வர், புன்னகை செய்து, "ஆஹா! ஸர்வ தர்மங்களுக்கும் தாமே மூலஸ்தானமா யிருக்கும்போது, என்னை ஒரு பொருளாகக் கருதி வந்தது வியப்பே. தமது கட்டளைக்கிணங்கி அவர் கேட்பதெல்லாம் கூறும் கடமையைச் சிரமேற்கொண்டிருக்கிறேன்" என்றனர். எனக்குத் தொடக்க முதலாகவே இருந்த ஆவலை எவ்வாறே அடக்கி வைத்துக் கொண்டிருந்தேன். இப்போது அவர் சொல்லைக் கேட்டு

மகிழ்ச்சி யடைந்தவனாய், அவ்வாசாரியனிடம் நியாயஸ்தலத்திலே சாக்ஷியிடம் கேட்பது போல— ஆனால், வணக்கம், பக்தி, சிரத்தை, இவற்றுடன்—கேள்விகள் சோனாமாரியாகப் பொழிந்தேன். அவரும் சலிப்பில்லாமல், ஐயந் திரிபற மறுமொழிகள் சுருங்கச்சொல்லி விளங்க வைத்துகொண்டு வந்தார்.

சில கேள்விகளையும் உத்தரங்களையும் இங்கே குறிப்பிடுகின்றேன்.

**கேள்வி :—**" ஸ்வாமி, ஒருவன் பிறக்கும் போதே பிராமணனாகப் பிறக்கிறானா ? அல்லது பயிற்சியில் பிராமணனாகிறானா ! "

**உத்தரம் :—**" பிறக்கும் போது மனிதர்களெல்லாம் மிருகங்களாகப் பிறக்கிறார்கள். பயிற்சியினாலும் குணகர்மங்களினாலும் வெவ்வேறு வர்ணத்தின ராகின்றார்கள். 'சாதுர் வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்ம விபாகச' என்று பகவான் சொல்லியிருக்கிறார்: "

**கேள்வி :—**" ஸ்வாமி, இந்த விதி அனுபவத்தில் இருக்கிறதா ? "

**உத்தரம் :—**" ஆம் , எனது பிதா க்ஷத்திரியர் ; நான் பிராமணன் ; என் மக்கள் பன்னிரண்டு பேரில் ஒருவனை மட்டுமே பிராமண காரியங்களுக்குத் தெரிந்தெடுத்திருக்கிறேன். மற்றவர்களையெல்லாம். பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய என்ற மூன்று வர்ணங்களின் காரியங்களுக்கு அவரவர்களின் தகுதி, ஸ்வபாவம் முதலியவற்றைக் கருதி உரியவாறு பயிலும்படிச் செய்திருக்கிறேன். ?

**கேள்வி :—**" மண்ணுலகத்திலே பாரததேசத்தில் தான் வர்ணாசிரம பேதங்கள் இருக்கின்றன, அங்கே தாம் சொல்வது போல நடக்கவில்லையே ?

**உத்தரம் :—**" பாரத தேசத்தில் தான் வர்ணசிரம பேதங்களிருப்பதாகச் சொல்வது பிழை. ஸகல தேசங்களிலும் உண்டு. ஆனால் பாரததேசத்தில் தான் வர்ணாசிரம நெறி சீர்கெட்டுப் போயிருக்கின்றது. பூர்வத்திலே பாரத தேசத்தில் வர்ணாசிரம நெறி நான் சொல்வது போலத் தான் இருந்தது. அதற்கு அந்நாட்டிலுள்ள வேதங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள், இதிஹாஸங்கள் முதலிய ஸகல நூல்களும் சாக்ஷி. இப்போது பாரத நாட்டை

தவிர மற்றெல்லா நாடுகளிலும் பகவான் சொல்லிய முறை தான் நடைபெற்று வருகிறது. பாரத நாட்டில் அம்முறை தவறி விட்டது. அது பற்றியே, அந் நாட்டினர், வறுமை, நோய், அடிமைத் தனம் என்ற இழிவுகளிலே வீழ்ந்திருக் கிறார்கள் ?

**கேள்வி :**—" பிராமண தர்மங்களை எனக்குப் போதனை செய்யவேண்டும்."

**உத்தரம் :**—" ஸங்கிரஹமாகச் சொல்லுகிறேன். பிராமண வர்ணத்தார் ஒரு ஜன ஸமூஹத்தின் அறிவுச் செல்வத்திற்குக் காவலாளிகள் ; அறிவுப் பயிருக்கு உழவர்கள். அவரவர் தம்மால் இயன்ற சாஸ்திரங்களைப் படித்து வைத்துக்கொண்டு அவற்றை வெவ்வேறு வர்ணத்தாருக்கு உரிமை நோக்கிக் கற்பிக்க வேண்டும். அவ்வாறு கற்பிப்பதற்கு, தமது உணவு மட்டிற்கு மேற்பட்ட எவ்விதமான கிரயமும் வாங்க லாகாது. எவன் வீட்டில் மறுநாள் ஆஹாரத்திற்கு இன்றே நெல் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறதோ அவன் பிராமணன் ஆகமாட்டான் " என்று யாக்ஞ வல்கியர் சொல்கிறார்.

" ஜனங்களுக்கு ஏற்படக்கூடிய துன்பங்களுக்கெல்லாம் அறி வின்மையே காரணமாதலாலும், அந்த அறிவின்மை ஏற் படாமற் பாதுகாப்பதே பிராமணன் கடமை யாதலாலும், பிராமணர்களே பொறுப்பாளிகளாவார்கள். ஜனங்களுக்குள் சூத்திர தர்மம் குறைந்து போனால், அப்போது பிராமணர் சூத்திர தர்ம போதனையே முதல் தொழிலாகக் கொண்டு நாட்டில் உண்மையான சூத்திரர்களை அதிகப்படுத்தவேண்டும். வைசிய தர்மம் குறைந்தால், அறிவு வகுப்பினர் தாம் வைசிய நூல் கற்பதும் கற்பிப்பதுமே முதற் கடமையாகக் கொண்டு, கையில் அகப்பட்டவர்களையெல்லாம் மெய்யான வைசியராக்கி விடுவார்கள். க்ஷத்திரிய தர்மத்திற்கும், பிராமண தர்மத்திற்கும் ஊனம் வர இடங் கொடுக்கவே கூடாது. க்ஷத்திரிய பிராமண தர்மங்களுக்கு ஊனம் நேரிடு மாயின், ஜன ஸமூஹம் முழுவதுமே க்ஷீணமடைந்து போய் விடும்.

" அப்படி ஏதேனும் மஹாவிபத்து நேரிடக்கூடிய தருணத் தில், ' அவரவர் தத்தம் தர்மங்களை மட்டுமே கருதி நிற்போம் மற்றவர் தர்மங்களை நாமேன் கருத வேண்டும் ; என்று சும்மா இருத்தல் கூடாது. வீடு தீப்பற்றி யெரியும் போது, தகப்பன் தனது காரியஸ்தலத்திற்கும், மகன்

பள்ளிக்கூடத்திற்கும், பெண்கள் பூஞ்சோலைக்கும், தாய் கோயிலுக்கும், வேலைக்காரன் காய் கிழங்குகள் வாங்கும் பொருட்டுக் கடைக்கும், பரிசாரகன் சமையலுக்காகத் தண்ணீருக்கும், உல்லாஸமாகப் புறப்பட்டுக் கொண்டிருக்க லாமா? நெருப்பை அவிக்க முயலவேண்டியது எல்லோ ருக்கும் கடமை. காரியஸ்தலத்திற்குப் போவதைப் பற்றிப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்; கோயில்களையும், பள்ளிக் கூடங்களையும் கள்வன் கொண்டுபோய் விடமாட்டான்; மறு நாள் கவனித்துக்கொள்ளலாம். விளையாட்டுக்குப் பூக்கொய்து வருதல் பெரிதன்று; காய்கிழங்குகள் பெரிதில்லை; சமையல் பெரிதில்லை; வீட்டிலே பற்றியிருக்கும் நெருப்பை அவிப்பது தான் பெரிது. அதற்குத்தான் எல்லோரும் பாடுபடவேண்டும். கலியிலே வர்ணவேறுபாடுகள் பொய்; வெறும் ஏமாற்று. பாரத நாட்டைப் பற்றி நீர் கேட்டீர். பாரத நாட்டில் இப்போது கலியுகம். ஆனால், இன்னும் இரண்டு மூன்று தலைமுறை களில் கலியுகம் நீங்கிக் கிருதயுகம் பிறக்கப் போகின்றது. அப்போது அந்த நாட்டிலே உண்மையான வர்ணாசிரம பேதங்கள் ஏற்பட்டு விளங்கும். இப்போதிருக்கும் வஞ்சனைப் பேதங்கள் நீங்கிவிடும்.

"பாரமார்த்திகத்திலே பிரம்மஞான முடையவனே பிராமணன் என்ற பெயருக்குத் தகுதியுடையவனாவான். 'வஜ்ரஸூசிகை' என்ற உபநிஷத்திலே இதை நேர்த்தியாக எடுத்து விளக்கியிருக்கின்றார். ஆனாலும், வியவஹாரத்திலே, உலகத்தாருக்கு அறிவுப் பயிற்சி கொடுக்கும் வகுப்பினர் பிராமண ராவார்கள். ஸகல விதமான நூல்களிலும் பயிற்சி கொண்டிருத்தல், அதனை உலகத்தாருக்குப் போதனை செய்து, உலகத்துத் தொழில்களெல்லாம், இனிது நடப்பதற்கு ஆதரவாயிருத்தல், லௌகிகப் பெருமைகளிலே ஆசையில் லாமை—இவையே சுருங்கச் சொல்லுமிடத்துப் பிராமண தர்மத்தின் ஸாராம்சங்களாகும்" என்று முடித்தார்.

பேசி முடிந்தவுடன் திடீரென்று எழுந்து வெளியே போனார். உடனே திரும்பி எங்களிடம் வந்து ஸந்தியா தியானத்திற்கு நேரமாய் விட்டதென்று தெரிவித்தார். மூவரும் எழுந்து, கிராமத்திற்கு வெளியே சிறிது தூரத்துக்கு அப்பால் மரஞ்சோலையை யடுத்துள்ள ஆற்றங் கரைக்குச் சென்றோம். ஸூர்ய கோளம் மேற்றிசை வானத்திலே பாதி மறைந்திருந்தது. மேகங்கள் எல்லாம் நெருப்புத் தீவுகள் போலத் தோன்றின. பிரகிருதி தேவி அற்புதமான அழகுடன்

விளங்கினள். அத்தருணத்தில் ஸ்நாநம் முடித்துத் தனித்தனியாகத் தூரத்தில் உட்கார்ந்து கொண்டு முனிவர்கள் இருவரும் பிரம்மத் தியானத்திலே அமர்ந்திருந்தார். நான் "ஓம்" என்று ஜெபித்துச் சாந்தி தேவியை வரிக்கலாயினேன்.

* * *

ஜபதபங்கள் முடித்துக்கொண்டு மறுபடியும் கண்வ முனிவரின் வீட்டிற்கு வந்தோம். அங்கு நானும் தபோமுனிவரும் அவரிடம் விடைபெற்றுக்கொள்ள விரும்பிச் சில வார்த்தைகள் சொன்னோம். அதற்குக் கண்வர், "இராப்பொழுதாய் விட்டது. தாம் இருவரும் இன்றிரவை எனது சிறு குடிலிலேயே கழித்துக் கொண்டு போகவேண்டும்" என்றார்.

எனக்கு உடனே, "மறுநாள் காலை ஆஹாரத்திற்கு வீட்டிலே நெல் வைத்திருப்பவன் பிராமணனாகமாட்டான்" என்று சொல்லிய வசனம் ஞாபகத்திற்கு வந்தது. ஆதலால், அவர் மிகவும் எளியவராயிருப்பாரென்பது கருதி "வேண்டியதில்லை. நாங்கள் சென்று வருகிறோம், தயவு செய்து மன்னிக்கவேண்டும்" என்றேன்.

கண்வ முனிக்கு எனது ஹிருதயம் தெரிந்துவிட்டது.

"ஸஹோதரா, தர்மமுள்ள இடத்தில் வறுமைகிடையாது. நீர் அதைப்பற்றி யோசிக்க வேண்டாம். தயவுசெய்து இவ்விரவு தங்கியே போகவேண்டும்" என்றார்.

எனக்கு வெட்கம் பொறுக்க முடியவில்லை. தலைகுனிந்து விட்டேன். முனிவர்கள் இருவரும் புன்னகை செய்தார்கள். பின்பு, இராப்பொழுதை அங்கேயே கழிப்பதாகத் தீர்மானம் செய்துகொண்டோம்.

கண்வர் வீட்டு நடையிலே ஓர் பாயின் மீது உட்கார்ந்திருந்தபோது, கந்தர்வ லோகத்தில் ஸுகந்த மாளிகையின் மாடத்திலே பர்வதகுமாரியுடன் பஞ்சணைமீது உட்கார்ந்திருந்த பொழுதைக் காட்டிலும், என் மனதில் அதிக சாந்தி ஏற்பட்டு விளங்கிற்று. கண்வரும் தபோமுனிவரும் வேதாந்த விசாரணை செய்யத் தொடங்கினார்கள். தபோமுனிவர் விவஹாரத்தின் நடுவிலே சில அருமையான விஷயங்கள் சொல்லினர். அப்போது கண்வருடைய பத்தினியும் வந்து உட்கார்ந்துகொண்டு சிரவணம் செய்தாள்.

கண்வருடைய பத்தினியை நோக்கும்போது, வேதங்களிலே படித்திருக்கும் மைத்ரேயி முதலிய ஸ்திரீகளின் சித்திரம் மனவிழியிலே எழுந்தது. கற்பு, தெளிவு, அடக்கம், அறிவு, தயை என்ற குணங்கள் அனைத்தும் அந்த தேவியைச் சூழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தன. முனிவர்களின் ஜீவகளை ஸம்பாஷணை ரஸத்தால் இயக்கத்தில் விளங்கு வதும், தேவியின் ஜீவகளை அடக்கத்தில் ஒளிர்வதும், ஒப்பு நோக்கும்போது மிக நன்றாய் இருந்தது. சிறிது நேரத்திற்கு அப்பால் கண்வரின் குமாரன் வந்து தாயின் பக்கத்திலே உட்கார்ந்தான். ஆ! இந்த வாலிபனைத் தவவேடத்தில் கண்டபோது என் மனம் பொறுக்கவில்லை. இவனை ராஜகுமாரனாக அமுத விழி கொண்ட மாதர்களோடு கொஞ்சிக்கொண்டிருக்கப்பார்க்கவேண்டும். இவனைச் சேனாதி பதியாக வாலிப வீரர்கள் சேர்ந்திருக்கும் சைன்யமுகத்திலே பார்க்கவேண்டும். கிரக கணங்களை அழைத்துக்கொண்டு பால சூரியன் முன்வருவதைப் போலிருக்கும். இவனுக்கா மரவுரி? இவனுக்கா வெறும் தானியமும், காய் கனிகளும் சேர்ந்த உணவு? இவனுக்கா சுனை நீர்ப்பானம்? இவனுக்கா இடைவிடாத எட்டுக்கவலை, கடபட விவஹாரம்? முனிவர் பன்னிரண்டு குமாரர்களிலே தவத்திற்கென்று இவனைத் தெரிந்தெடுத்தது பிழையென்று என் சிந்தைக்குப் புலப் பட்டது. நான இப்படி யோசனை செய்துகொண்டிருக்கும் போதே முனிவர்களின் வேதாந்த தர்க்கம் முடிந்து விட்டது. தபோமுனி என் சிந்தையை விழியால் நேருக்கு நேராகப் பார்த்தவர் போன்று, "இத்தனை ராஜலக்ஷணம் வாய்ந்த குமாரனைத் தாம் பிராமண தர்மத்திற்கு எடுத்துக்கொண்டு, மற்றப் பிள்ளைகளை யெல்லாம் வெளியே அனுப்பிவிட்டமைக்கு முகாந்தரம் தெரிவிக்கவேண்டும்" என்று கண்வரிடம் கேட்டார்.

கண்வர் மகனை நோக்கிக் "குழந்தாய், இன்றைக்கு ஜ்யோதிஷத்திலே—அதாவது, வானத்துக் கிரக நக்ஷத்திரங்களை அளக்கும் கணித நூல், எருமை மாடு கெட்டுப்போனால், வழி சொல்லப்படிக்கும் பல நூலன்று—தரிசனப்பியாஸம் (பார்த்துப் பழகல்) செய்ய வேண்டிய தின மாயிற்றே. நீ தனியே போயிருந்து நக்ஷத்திர ஸ்தானங்களை சரியாகத் தெரிந்துகொண்டு வா" என்று சொல்லி அனுப்பி விட்டார்.

மகனைப்பற்றிப் புகழ்ச்சியாகச் சில வார்த்தைகள் சொல்ல நேரிடுமாதலால், அவற்றை அவன் காதில் விழும்படி

சொல்ல முனிவருக்கு விருப்பமில்லை. குமாரன் வெளியே சென்றான். பின்பு முனிவர் பின்வருமாறு சொல்லலாயினர் :—

“அதர்மத்தைக் கொல்வதைக் காட்டிலும், அஞ்ஞானத்தைக் கொல்வதற்கு அதிக வீரத்தன்மை வேண்டும். ஜனங்களுக்கு சரீர ஸம்பந்தமான இன்மைகளைத் தவிர்த்து ரக்ஷிப்பது சூத்திர, வைசியர்கள் கடமை. தர்மத்தை க்ஷத்திரியன் ரக்ஷிக்கிறான். நான் முனபு சொல்லியபடி, ஞானத்தைப் பிராமணன் ஸம்ரக்ஷணை செய்கிறான். பிராமணனுக்கு அளவற்ற வீர்யம் வேண்டும். அளவற்ற தேஜஸ் வேண்டும். அளவற்ற திடமும் பராக்கிரமும் வேண்டும், அஞ்ஞானத்தின் படைகள் எண்ணற்றன அஞ்ஞான ஊற்று வற்ற வற்றத் தொலையாது. அஞ்ஞான விருக்ஷத்தின் வேர் ஆதிசேஷன் முடிவரையிலே உண்டு. அப்படைகளை வெல்வதும், அவ்வூற்றை வற்றடிப்பதும், அந்த விஷ மரத்தை வேரறுப்பதும் ஸாமான்யமான காரிய மன்று.

“மஹாபாரதப் போரிலே, பார்த்தனை விடக் கிருஷ்ணனுக்கு வேலை அதிகம். கிருஷ்ணனுக்கு எவ்வளவு வேலையுண்டோ, அவ்வளவு வேலை வேதவியாஸருக்கு முண்டு.”

நானாவிதமான விஷயங்களைப்பற்றி ஸம்பாஷணை செய்துவிட்டு, இலேசான ஆஹாரமுண்டு, பின் நித்திரைக்குப் போய்விட்டோம். மறுநாள் காலையில் எழுந்து தபோமுனிவரும் நானும் நித்யானுஷ்டானங்கள் முடித்துக்கொண்டு, ஸத்யராமன் என்ற க்ஷத்ரிய வீரனுடைய மாளிகைக்குச் சென்றோம். தபோமுனிவர் வரவைக் கேட்டவுடனே, ஸத்தியராமன் எதிர்கொண்டு வந்து உபசாரங்கள் பேசி ஓர் மண்டபத்திற்கு அழைத்துப்போய், எங்களை ஆஸனங்களிலே அமர்வித்துத் தானும் வீற்றிருந்தான். முனிவர் மெல்ல பண் கதையைத் தொடங்கினார்.

ஸத்யராமன் தனது வீரத்தோள்கள் குலுங்க நகைத்துப் பின், “நான் காவலாளி, எனக்குக் சாதுரியமாகவும், தெளிவாகவும் ஒரு விஷயத்தை யெடுத்து உபதேசிக்கும் திறமை கிடையாது. மேலும் தருமராஜனுடைய ஸேனைத் தலைவர்களில் என்னிலும் க்ஷத்திரிய குணங்களிலே சிறந்தோர் பலர் இருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் விட்டுத் தரும திருஷ்டாந்தமாக அடியேனைத் தெரிந்து

கொண்டதை நான், பாக்கியமாகக் கருதுகின்றேனாயினும், எனது தகுதியின்மையைப் பற்றிய உணர்ச்சி என் மனதிலிருந்து மாறவில்லை'' என்றான்.

பின்பு, என்னை நோக்கி, ''தாம் கேள்விகள் கேட்டால் என்னால் இயன்ற மட்டும் மறுமொழிகள் சொல்லிச் சந்தேக நிவர்த்தி செய்யக் காத்திருக்கிறேன்'' என்று கூறினான்.

''க்ஷத்திரியனுக்குரிய கடமைகளிலே, முதற்பட்டதும், மற்றக் கடமைகளுக்கெல்லாம் ஆதாரமுமாகிய மூலதர்மம் யாது? அதை எனக்குத் தெளிவுறக் கூறவேண்டும்'' என்றேன்.

முன்னே வீற்றிருந்த வீரனுடைய சிங்க முகத்திலே ஒளி வீசிற்று. கண்கள் அறிவுப் பொருளை உமிழ்வன போலத் தோன்றின. உடல் முழுவதிலும் ஒரு புதிய திகழ்ச்சியும், பூரிப்பும் கண்டேன்.

பரவசமடைந்து குரு சொல்லும் வசனங்களை அநுபவ நிலையிலிருக்கும் சீடன் கேட்பது போல அடங்காத தாகத்துடன் கேட்கலாயினேன்.

''மித்திரா, க்ஷத்திரியனுடைய கடமைகள் பலவற்றிற்கும் எது தாய் என்று கேட்டாய். க்ஷத்திரியனுடைய முயற்சிகளுக்கெல்லாம் அடியிலுள்ள ஊற்றெது வென்று வினவினாய். அதனைச் சொல்லுகிறேன், கேள். அது போர்! போர்தான் க்ஷத்திரியனுடைய முதல் தருமம். போர்தான் உண்மையான க்ஷத்திரியனுக்கு மூச்சு; போரே அவனுடைய உயிர். எந்த க்ஷணத்திலே போரை நிறுத்துகின்றானோ, அந்தக் கணத்திலே க்ஷத்திரியன் பேடியாய் விடுகிறான். பின்பு அவன் மரம், அவன் பிரேதம், அவன் பொய். அவன் பேசுதற்கரிய இகழ்ச்சியாக முடிகின்றான். மித்திரா, நான் உனக்கு வேதாந்த சாஸ்திரம் சொல்லக்கூடியவனன்று. அதர்மம் ஆதியிலே எப்படி உண்டாயிற்றென்பதை நமது முனிவர் போன்ற ஞானிகளிடம் கேட்டுத் தெரிந்துகொள். ஆனால், ஒரு செய்தி மட்டும் நான் அறிவேன். அதர்மம் எப்போதும் நமது முன்னே நிற்கின்றது. எதன் பொருட்டு நிற்கின்றது? உன் கையால் கொலையுண்டு சாகும் பொருட்டாக. அது என்ன சொல்லுகிறது? 'அப்பா, உன் கையிலேயுள்ள கோடாரியை என் தலையிலே அடித்து என் தலையை இரண்டு கூறாகப் பிளந்து விடு' என்று சொல்லுகிறது.

“ அதர்மங்கள் ரக்த பீஜ முடையவை. கொல்லக் கொல்ல மேன்மேலும் பிறந்துகொண்டே யிருக்கும். க்ஷத்திரியனுடைய கடமை யாதென்றால் அவற்றைத் தன் உயிருள்ளவரை வெட்டித் தள்ளிக்கொண்டேயிருக்கவேண்டும். நாள்தோறும் ஸூர்யன் இருளைச் சுற்றிச் சுற்றித் துரத்திக் கொலை செய்துகொண்டு வருகிறான். சூரியனே முதலாவது க்ஷத்திரியன். எங்கள் குலத்துக்குப் பிதாமஹன்.

“ அதர்ம நாசத்திற்காகப் போர் செய்துகொண்டே யிருப்பதுதான் க்ஷத்திரிய தருமமென்று சொன்னேன். அத்தொழிலுக்கு உரிய பயிற்சியும் ஸாதனங்களும் கைக் கொள்ளுதல் அவசியமென்று கூறுதல் மிகையாம்” என்று முடித்தான்.

நித்தியமாக இருக்கும் அதர்மங்களை நாம் அடிக்கடிக் கொல்வதில்தான் என்ன பிரயோஜனம் என்றெண்ணித் திகைக்கலானேன். அந்தக் கேள்வியை ஸத்ய ராமனிடம் கேட்டதற்கு அவன் சிறிதேனும் மயங்குதலின்றிப் பின் வருமாறு உத்தரமளித்தான்.

“ தமோகுணம் கேட்கின்ற கேள்வி! மித்திரா, கர்மம் (தொழில்) செய்யாமல் மனிதன் அரை க்ஷணமேனும் இருக்க முடியாது. நீ விரும்பினாலும், விரும்பா விட்டாலும் தொழில் செய்துகொண்டேயிருக்கவேண்டும் என்பது விதி. அந்தக் கர்மத்தைக் கடலைப்பட்ட துரும்புபோலச் செய்யாமல், ஸூர்யனைப் போலச் செய்வது பெருமை யல்லவா? ஸாதாரண சரீர ஸௌகங்களைப் பற்றிய காரியங்களிலேகூட மனிதன் இவ்வித யோசனை செய்வதில்லை. ஓயாமல் அழுக்காகும் உடலை நித்தியம் ஏன் தண்ணீரால் கழுவவேண்டும்? கழுவக் கழுவ அதுதான் மேன்மேலும் அசுத்தப் பட்டுக்கொண்டு வருகிறதே, என்று யோசித்து எவனேனும் ஸ்நானம் இல்லாமல் இருக்கிறானா? கணத்திலே தோன்றி யழியும் உடலுக்குச் செய்யும் உபசாரம் நிரந்தரமாகிய தர்மத்துக்குச் செய்யலாகாதா?

“ மேலும், அதர்மம் தர்மத்திற்கு உணவு. ஆதலால் தர்மம் இருக்கும்வரை அதுவும் இருந்தே தீரும். இது நியாயமே. அதர்மம் முற்றிலும் இறந்து சூன்யமாய்ப் போய்விடுமானால், பின்பு தர்மம் உண்ண உணவில்லாமல் தானும் மடிந்துவிடும்” என்றான்.

* * * *

தர்ம லோகத்தில் எனக்கு நெடுங்காலம் வசிக்கும் பாக்கியமில்லே. க்ஷத்திரிய வீரனுடைய வீட்டைவிட்டு வெளியேறிய பிறகு பலவிடங்களுக்கு என்னைத் தபோ முனிவர் கொண்டு சென்றார். அதன் பிறகு ஜீரண மாகாத ஓர் உணவு நெடுநேரத்திற்கப்பால் வயிற்று வலி யுண்டாக்குவது போல, எனது புண்ணியத்தால் எரிக்கப்படாத ஓர் கர்மம் ஏதோ ஓர் மூலேயினின்று வெளிப்பட்டு என் உள்ளத்திலே தர்ம ஸாதனைக்கு விரோதமாகிய ஓர் விருப்பத்தைக் கொண்டு நுழைத்தது. தபோ முனிவர் எனக்குப் பல தார்மிகப் புதுமைகளைக் காட்டிக் கொண்டிருக்கும் போதே அவ்விருப்பம் மீட்டும் மீட்டும் எனது இருதயத்தில் கிளைத்துக்கொண்டிருந்தது.

சில தினங்களுக்கப்பால், ஒரு சமயம் என்னைத் தனியே விட்டுவிட்டுத் தபோ முனி ஏதோ வேலையாகப் போயிருந்தார். பிராரப்த கர்மப் பயன்! நான் தனியேயிருக்கும்போது நீசமனம் இலேசாகப் பர்வத குமாரியின் உருவத்தைக் கொண்டு எதிரே நிறுத்தியது. 'ஆ! என்ன இன்பமா யிருந்தது அந்தக் காலம்!' என்று நினைத்தேன். எதிரே நின்ற மோஹன விக்கிரஹம் இன்னும் சிறிது நெருங்கிற்று. நான் அதைத் தழுவும் பொருட்டாக எழுந்தேன். எனது கைகளுக்கிடையே மின் வெட்டு முன், பர்வத குமாரி வந்து நின்றாள். இதழ்களோடு இதழ் பொருத்தி ஒரு க்ஷணம் மோஹ பரவசத்திலே இருந்தேன். இரண்டு மூன்று பூமிகள் இடிந்து விழுந்தது போலப் "படேர்" என்று ஒரு சப்தம் கேட்டது. "கோ" என்றலறி மூர்ச்சை போட்டு விழுந்தேன்.

கண்ணை விழித்துப் பார்க்கும்போது பழைய திருவல்லிக் கேணியில் பழைய இடத்திலே என்னைச் சுற்றிச் சிலர் விசிறிக் கொண்டு நிற்பதைக் கண்டேன். "என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு, "நீ பேய்கண்டவன் போல அலறினாய். நாங்கள் வந்து பார்க்கும்போது மூச்சில்லாமலிருந்தது. பலவிதமான சைத்யோபசாரங்கள் செய்த பிறகு இப்போது மூச்சு விடுகிறாய்" என்றார்கள்.

"ஐயோ, மூச்சுப் போயிருந்தாலும் பெரிய காரிய மில்லையே, தர்மத்தைத் தவறவிட்டேனே?" என்று கூறிக் கண்ணீர் சிந்தினேன்.

---

# வேத ரிஷிகளின் கவிதை

## முகவுரை

ஸ்ரீ காசியில் ஹிந்து ஸர்வகலா சங்கத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டியபோது, பல வித்வான்கள் வந்து உபந்யாஸம் செய்தார்கள். இவற்றுள்ளே, நவீன சாஸ்திர (ஸயன்ஸ்) பண்டிதர்களின் சிகாமணியாக விளங்கும் ஸ்ரீமான் ஜகதீச சந்திர வஸு செய்த உபந்யாஸம் மிகவும் மாண்புடையது.

'லௌகிக சாஸ்திர ஆராய்ச்சிகளிலே மறுபடியும் பாரத தேசம் தலைமை வகிக்கும்படிச் செய்வது நம்முடைய கடமை, என்பதை இவர் பல வகையிலே விளக்கிய பின்பு, தமது முடிவுரையில் பின்வருமாறு சொல்லுகிறார் :—

'ஹிந்து நாகரிகத்திற்குள்ளே ஒரு விசேஷ சக்தி யிருக்கிறது. காலத்தின் அழிவுகளை யெல்லாம், உலகத்திலேயுள்ள பொருள்களைத்தையும் சிதைவுபடுத்த வரும் மாறுதல்களை யெல்லாம், இந்தச் சக்தியினாலே நமது நாகரிகம் எதிர்க்கவல்லதாயிற்று. (எகிப்து தேசத்தில்) நீலநதிக் கரையிலேயும், அஸ்ஸிரீயா தேசத்திலும், பாபிலோனிலும், பல்லாயிர வருஷங்களுக்கு முன்னே, பெரிய பெரிய அறிவுப் பயிற்சிகள் தோன்றி வளர்ந்ததையும், மாறியதையும், மறைந்ததையும், நமது மஹத்தான நாகரிம் பார்த்துக் கொண்டிருந்தது. (அப்போது கூட நமது நாகரிகம் அளவிட முடியாத பழமை கொண்டதாக விளங்கிற்று.) அந்த நாளிலே பாரதமாதா தனக்கு அழிவில்லையென்ற தீராத பக்தியுடன் விளங்கினாள். இன்றும் யௌவனத்தோடிருக்கிறாள். இனி, எதிர்காலத்திலும் அழியமாட்டோமென்கிற தீராத பக்தியிலே உறுதிகொண்டு நிற்கிறாள்.,

இங்ஙனம், நவீன சாஸ்திரக் கல்வியாகிய குன்றத்தின் மேலே நெருப்புத் தூணைப்போலே ஒளிவீசி நிற்கும் ஸ்ரீமான் வஸு கூறிய வார்த்தைகள் வெறுமே உபசாரமல்ல. நம்முடைய இடைக்காலத்து மடமைகளையெல்லாம் மஹிமைகளென்று நினைத்து வீண் பெருமைகொள்வோரின் பேச்சை நாம் உதறிவிடுதல் நியாயம். ஆனால், வஸு பண்டிதர் சொல்லியதை நாம் மதிப்புடன் ஏற்றுக் கொள்ளுதல் தகும். இடைக் காலத்திலே நமது ஜாதி,

பொய்களும் சோர்வுகளும் குவித்த குப்பையின் கீழே அழுந்திக் கிடந்தது. பாரத மாதா நித்திரையிலிருந்தாள். இப்போது, மறுபடியும் அந்தக் குப்பையிலிருந்து வெளிப் பட்டு, தைரியமென்னும் கங்காநதியில் ஸ்நானம் செய்து விட்டு, நமது பாரத ஜாதி தனது வானத்திலே தோன்றும் ஸூர்யோதயத்தை அன்புடன் அழைத்து வாழ்த்துக் கூறுகின்றது.

மரணமில்லாத இந்த ஹிந்து நாகரிகமாகிய கற்பக விருக்ஷத்துக்கு ஆதியிலே விதை யூன்றியவர்கள் வேத ரிஷிகள். அவர்கள் எக்காலத்திலே—எத்தனை நூற்றாண்டு களின் முன்னே—இருந்தார்களென்பதைக் கணக்கிட்டுச் சொல்ல, நவீன ஆராய்ச்சி யாதொரு கருவியுமில்லாதிருக் கிறது. ஹிமவத் பர்வதம் எப்போதுண்டாயிற்று ? யாருக் குத் தெரியும் ? வேத ரிஷிகள் எக் காலத்தில் வாழ்ந் தனர் ? எப்படிச் சொல்வது ?

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சொல்லுகிறார் :—

‘ நீங்கள் பிரார்த்தனை செய்யும்போது அது உள்ளத்தின் அடியிலிருந்து வெளிப்படவேண்டும். பிறகு சிறிது காலம் காத்துக்கொண்டிருந்தால், எனது தாயாகிய ஜகதாம்பிகை உங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றிக் கொடுப்பாள்.’

நன்று சொல்லினர் ராமகிருஷ்ண முனி. உள்ளத்தின் அடியிலிருந்து வெளிப்படுகிற வேண்டுதலுக்கு ‘ மந்திரம் , என்று பெயர். அது பலிக்கும். ஆனால், அங்கிருந்து பிரார்த்தனை கொண்டு வருதல் எளிதன்று. அது பெரிய ஆழம். உள்ளத்தின் அடி ! கடலடியை மானுடர் அளந்து பார்த்திருக்கிறார்கள். உள்ளத்தின் அடி காண்பது அதனிலும் பலமடங்கு கஷ்டம். இருந்தாலும் சோர்வு பெறவேண்டா. ஒவ்வொருவனும் உள்ளக் கடலில் இயன்றவரை மூழ்கி அங்கிருந்து பொருள் கொண்டுவரலாம். எத்தனைக் கெத்தனை ஆழத்திலே போகிறாயோ, அத்தனைக் கத்தனை நல்ல முத்து கிடைக்கும்.

ரிஷிகள் உள்ளத்தைத் தெளிவு செய்து கொண்டோர். ஆதலால், அடிவரை எளிதாகப் பாய்ந்து அங்கிருந்து மந்திரங் கொண்டு வந்தனர். அம் மந்திரங்களுக்குத் தேவர் வசப்படுவர். வெறும் ‘சொல்’ லுக்கு மஹிமையில்லை. அச்சொல் உள்ளத் துணிவை உணர்த்துமாயின், அதற்கு

மஹிமையுண்டு. 'எதனை நினைக்கிறாயோ அதுவே யாகிறாய்,' என்பது தவறாத உண்மை. நினைப்பு நிஜ நினைப்பாக இருக்கவேண்டும். ஆழ்ந்த நினைப்பு, அசையாத நினைப்பு, வலிய நினைப்பு, மாறாத நினைப்பு—அவ்வித நினைப்பு விரைவில் உலகம் அறியத்தக்க வெளியுண்மையாக மாறி விடும். 'இந்திரன்,' எனப்படும் விஞ்ஞான சக்தியை மதுச்சந்த ரிஷி மேற்கூறப்பட்டபடி வலிமைகொண்ட மந்திரங் களால் ஸ்தாபனம் செய்கிறார். அம் மந்திரங்கள் கவிதை யிடத்திற் திகழ்கின்றன.

ரிக்வேதத்திலே ரிஷிகளுடைய கவிதையைப் படிக்கும்போது நமது உள்ளத்திலே தேன் பாய்கிறது: அறிவு தெய்வவெறி கொள்ளுகின்றது.

---

## இந்திரன்

### முன்னுரை

கீழே இந்திரனைப் பற்றிய மந்திரங்கள் சிலவற்றை மொழி பெயர்த்து எழுதுகிறேன். அம் மந்திரப்பொருளை விளக்கும் படியான சில விஷயங்களை முதலாவது சொல்லுகிறேன்.

'இந்திரன்,' என்பது விஞ்ஞான சக்தி; இவனுக்குப் பகை அஞ்ஞானம். இந்த அஞ்ஞானத்திற்கு விருத்திரன், என்று பெயர். (விருத்திரன்-மூடுவோன், மறைப்போன்.) விருத்திரன் இருள். அவனை தெய்வ இன்பங்களிலிருந்து நம்மைப் பிரித்து வைக்கும் அஹங்காரம்—அதாவது, பிரிவுணர்ச்சி. அவன் தாய்க்கு "தாநு" என்று பெயர், (தாநு—பிரிப்பது.)

நமக்குள்ளே மூன்று படிகள் இருக்கின்றன. மண், காற்று, வானம் என. (அதாவது, உடல், உயிர், அறிவு என்ற மூன்றும்.) வானத்தின்மேலே உண்மை யுலகம் இருக்கிறது. அந்த உண்மை யுலகத்திலிருந்து நமது அறிவிலே ஞான வொளியின் கிரணங்களும், தேவ இன்பங்களாகிய நதிகளும் எப்போதும் பாயும்படிச் செய்யவேண்டும். இதுவே வேத ரிஷிகளின் நாட்டம்.

அந்த நதிகளையும் கதிர்களையும் நம்முள்ளே பாய வொட்டாதபடி, விருத்திராசுரனும் அவன் கூட்டத்தாராகிய பணி முதலிய மற்றப் பிசாசுகளும் தடுக்கின்றன. அச்சம்,

கவலை, சிறுமை, திகைப்பு, சோர்வு முதலாக நமக்குள்ளே வாழும் அசுரருக்குக் கணக்கில்லை. இவர்களுக்கெல்லாம் தலைவன் விருத்திரன். இவன் மேற்கூறப்பட்ட தேவநதிகளை மண்மலையின் கீழே உள்ள ஓர் இருட்குகையில் அடக்கி வைத்து, அவை தமதறிவிலே பாயாதபடி மேலே நின்று தடுக்கிறான்.

இந்த விருத்திரனை வேதம் பாம்பென்று சொல்லுகிறது. அஞ்ஞானம் ஒரு விஷப் பூச்சி; அதற்குக் கை கால் கிடையாது; வீரியம் கிடையாது. நெளிந்து நெளிந்து உள்ளே புகுந்து ஒளியையும் இன்பத்தையும் மறைக்கிறது.

இந்திரன் முதலிய தேவர்களை யாகத்தினாலே தோழமை கொண்டால், அவர்கள் இந்தப் பாம்பையும் இதன் சேனைகளையும் கொன்று, தேவ நதிகளை விடுவித்து நம்முள்ளே பாயும்படிச் செய்து, நமக்கு அமரத் தன்மை உண்டாகும்படிச் செய்கிறார்கள். யாகம் (வேள்வி) என்பது நமது உடல், பொருள், ஆவி, அறிவு அனைத்தையும் தேவர்களுக்கு அர்ப்பணம் செய்து விடுதல். இந்த வேள்வி செய்தால் நமக்குள் மண், காற்று, வான் (உடல், உயிர், அறிவு) என்ற-மூன்று படிகளிலும் தேவர் வந்து நிலைபெற்று அமிர்தபானம் (ஸோமரஸம் குடித்தல்) செய்கிறார்கள். இது மஹரிஷிகளின் யோகானுபவத்திலே கண்டது. இதனை நன்றாகத் தெரிந்து கொண்டால், பின்வரும் மந்திரங்களின் பொருள் தெளிவுபடும்.

---

## இந்திரனை ஹிரண்ய ஸ்தூபர்

(தங்கத்தூண் என்ற ரிஷி பாடியது).[1]

1. இந்திரனுடைய வீரச் செயல்களை இங்குச் சொல்லுகின்றேன்.

அவன் வஜ்ரி; மின்னல் அவனுக்குப் படை. அவனுடைய முன்னைத் திறமைகளைச் சொல்லுகிறேன்.

பாம்பைக் கொன்றான்; ஆறுகளைப் பெருகச் செய்தான். மலைகளின் சார்புகளை உடைத்தான்.

---

[1] ரிக்வேதம; மண்டலம் 1, ஸூக்தம் 32; அஷ்டகம் 1, அத்யாயம் 2, வர்க்கம 36–8.

2. மலையின் மேலே கிடந்த விருத்திரப் பாம்பை அழித்து விட்டான்.

அறிவினாலே செய்த—வானத்தாலாகிய— வயிரப்படையை இவனுக்கு த்வஷ்டா என்ற தேவன் செய்து கொடுத்தான்.

நதிகள் வானக் கடலை நோக்கிப் பாடிக்கொண்டு விரைந்து சென்றன, இரைந்துகொண்டு செல்லும் ஆவினம் போல.

3. இந்திரன் ஏறு போன்றான், மூன்று படிகளிலே மது வுண்டான்; அந்த மது வேள்வியிலே வடிக்கப்பட்டது.

4. அரவுகளிலே முதலில் தோன்றியவனை இந்திரன் கொன்ற பிறகு, மற்ற மாயாவிகளின் மாயைகளை யெல்லாம் வென்றான்.

பின்பு, ஸூர்யனையும், வானத்தையும் உஷாதேவியையும் தோற்றுவித்தான். அதன் பிறகு, இந்திரா, உனக்கோர் பகைவனு மில்லை.

5. மறைக்கும் தொழிலே கொண்ட விருத்திரனுக்குத் தோளில்லை. அவனை இந்திரன் பேரிடியாலே கொன்றான்;

பிளந்த விறகுகளைப போலே விருத்திரன் மண் மீது சிதறி வீழ்ந்தான்.

6. போர்த் தொழி லறியாதவன் விருத்திரன்; இவன் நேர்மை நாடுவோனும் மஹா வீரனுமாகிய இந்திரனைப் போருக் கழைத்தான்.

இந்திரனுடைய அம்புத் திரளை இவனால் கடந்து செல்ல முடியவில்லை. சிதறுகின்ற தனது திறமைகளை இந்திர—சத்துரு ஒன்று சேர்க்க முயன்றான்.

7. காலும் கையு மில்லாதவன் விருத்திரன்.

இந்திரனோடு இவன் போர் செய்ய வந்தான். அவனுடைய வயிரப்படை இவனை மலையின் மீது கொன்றது,

பலவற்றிலே விளங்குவோன் இந்திரன்.

ஆணேறுகளை ஆண்மை போகிய எருதுகள் எதிர்ப்பது போல, அவனை விருத்திரன் பகைத்தான்; சிதறி வீழ்ந் தான்.

8. ஆற்றடி பிளவுண்டு கிடப்பதுபோலே, விருத்திரன் கிடந்தான்.

இவன் மீது நதிகள் சென்றன.

அவை மனதின் மேல் ஏறிச் சென்றன.

முன்னர், அவற்றை விருத்திரன் தனது வலிமையாலே சூழ்ந்து நின்றான்.

இப்போது அவற்றின் அடியிலே வீழ்ந்து கிடக்கிறான்.

9. விருத்திரன் தாயும் அகல வீழ்ந்தாள்.

தாய் மேலும் மகன் கீழு மாயினர்.

இந்திரன் அவள்மீது வீசியிருந்த படையை மீட்டுக்கொண்டான்.

கன்றுடன் கிடக்கும் பசுவைப் போலவே கிடந்தனள் தானு.

10. தங்குதடையில்லாது பாயும் நதிகளிடையே அவனுடல் அமிழ்ந்திக் கிடந்தது.

விருத்திரனது உடல் மறைவைக் கடந்து நதிகள் விரிந்து பெருகின.

இந்திரனைப் பகைகொண்டோன் நெட்டிருளில் வீழ்ந்தான்.

11. கதிர்களைப் பனியென்னும் பகைவன் பிடித்துவைத்தது போலே, நதிகளை விருத்திரன் தடுத்துக்கொண்டான்.

அவை பகைவனுக்குப் பத்தினிகளாயின. அவற்றைப் பாம்பு காத்தது.

நீர்த்திரள் வெளிப்படும் வாயில் அடைப்பட்டிருந்தது.

விருத்திரனைக் கொன்று இந்திரன் அதைத் திறந்தான்.

12. இந்திரா, முதற்பெருங் கடவுள் உன்னைப் போரிலே செலுத்தினான்; அப்போது நீ எமக்கு வலியதோர் உயிர்க் காவல் ஆயினை.

கதிர்களை வென்றாய், சூரா, மதுவை வென்றாய், ஏழு நதிகளையும் பெருகும்படி விடுத்தாய்.

13. இந்திரனும் விருத்திரனும் போர் செய்த காலத்தில், பகைவன் விளைவித்த மின்னலும் குமுறலும் இடியும் அவன் பொழிந்த மழையும் இவனைத் தீண்டவில்லை.

பிறகு பகைவனுடைய சேனைகள் வந்தெதிர்த்தன. அவற்றையும் இந்தி ன் வென்றான்.

14. இந்திரா, பகைவனை அழித்தபிறகு அச்சத்தோடு செல்லும் பருந்து போல, நீ எதன் பொருட்டாகத் தொண்ணூற்றொன்பது நதிகளையும் உலகங்களையும் கடந்து மேலேறிச் செல்லுகிறாய் ?

நீ கண்டு மனமஞ்சத் தகுந்த போராளி, பாம்பிற்கேது ?

15. செல்வன, நிற்பன, அனைத்திற்கும் இந்திரனே அரசன்.

இவன் வயிரப்படை கைக்கொண்டான்.

சிகரங்களுடைய அனந்த மலைக்கும் இவனே வேந்தன்

தொழில் செய்வோரை யெல்லாம் இவனே ஆளுகின்றான்.

ஆரக்கால்களை வளையம் சூழ்ந்திருப்பது போலே இவன் அவரைச் சூழ்ந்து நிற்கின்றான்.

**இந்திரனை மதுச்சந்தர் (தேனிசை) என்ற ரிஷி பாடியது.** [1]

1. பாடுவோர் இந்திரனைப் பாடுகின்றனர். மந்திரமோதுவோர் இந்திரனை யோதுகின்றனர். மொழிகள் இந்திரனை வேண்டி எழுகின்றன.

2, இந்திரன் இரண்டு குதிரைகளில் (அவை பூட்டிய தேரில், ஏறுகின்றான். மொழிகள்மீது ஏறுகின்றான் ; அவன் இடித்தலைவன் ; பொன் வண்ணமுடையவன்.

3. நீண்ட காட்சியின் பொருட்டாக இந்திரன் வானத்திலே ஸூர்யனை ஏற்றினான் ; ஒளிக் கதிர்களால் மேகத்தைப் பிளந்தான்.

---

[1] ரிக்வேதம : மண்டலம் 1, ஸூக்தம 7 : அஷ்டகம, அத்யாயம் 1, வர்க்கம் 13-14.

4. வலிய ஒளிகொண்ட இந்திரா, செழுமைகளிலும் ஆயிர வகைச் செல்வங்களிலும் எம்மை வளர்த்திடுக, நினது வலிய ஒளிகொண்ட வளர்ப்புக்களால்.

5. பெருஞ் செல்வத்திலும், சிறு செல்வத்திலும் இந்திரனை அழைக்கிறோம ; மறைவு செய்யும் பேய்களின் மீது மின்னற் படை வந்தது.

---

## தீ (அக்நி தேவன்)

### முன்னுரை

அக்கினி விஷயமாக ரிஷிகள் எழுதியிருக்கும் கவிதையைப் பற்றிப் பேசும்போது, ஸ்ரீ அரவிந்தகோஷ் சொல்லுகிறார் :—
' வலியவனாகிச் சுடர் வீசிக்கொண்டு நிற்கும் இந்தத் தேவனைப் பற்றிய மந்திரங்களிலே கவிதை மிகவும் செழிப் புற்றிருக்கின்றது. ஸூக்ஷ்மப் பொருள் ஆழ்ந்து நிற்கிறது. தெய்வ வெறி தெளிந்து நிலவுகிறது. பாட்டுக்கொள்ளுகிற அக்கினிதேவனுடைய தழலும், அவன் உறுமுதலும் ஒளியும் பாடுகிற ரிஷிகளின் அறிவிலே தாவி விட்டன போலும் ; அங்கே அவற்றின் களி தழல் கொண்டு எரிகிறது. '

ஆம், உயர்ந்த கவிதையின் நெறியே அது. கவியின் இஷ்ட தேவதை அல்லது இஷ்ட சித்தி, இஷ்ட தர்மம், இஷ்ட சுகம்—இதனுடைய காந்தி அவனுடைய உள்ளத்திலே வீசும். அந்த ஒளி பாட்டிலே தெரியும். உயர்ந்த கவிதையின் நெறி அது. அக்கினி விஷயமாக ரிஷிகள் சொல்லியிருக்கும் மந்திரங்கள், சித்திரங்கள், காட்சிகள்-இவற்றிலே சில இங்கு மொழி பெயர்த்துக் காட்டப்படும்.

---

## தீ (அக்நி தேவன்)

### தீயைப் பாடிய பாடல்கள் [1]

' தீயே [2], நீ தேவர்களில் முதற்பட்டவன், முன்னோன் தலைவன். மறைந்திருக்கும் முதற்கடவுளுடைய வடிவத் தழலை—அதன் வெண்மைகொண்ட வலியை, அதன் கனலுவது போன்ற திறமையை—அக்நி யென்று வாழ்த்துகிறோம்.

[1] வெவ்வேறு இடங்களிலுள்ள வேதவாக்யங்கள் இங்கு வேத ஸாரமாகத் தொகுக்கப்பட்டன.

[2] தீயென்பது ஞான சக்தி.

அவன் வையகத்தின் படிகளை அமைக்கும் பொருட்டு வருகிறான். அவற்றுள்ளே ரஹஸ்ய தேவதையாக வீற்றிருந்து நடைகளையும், செயல்களையும் தூண்டுகிறான்.

எல்லா வகைப்பட்ட செய்கைத் திறமை, உயிர் வலிமை, வடிவழகு, ஒளித் திகழ்ச்சி, அறிவு, பொலிவு, மாட்சி—இவையனைத்தும் அக்நி தேவனுடைய விளக்கங்கள்.

அவனுக்குள்ளே ஸத்யம் மோன நிலையிலே நின்று அவனைச் செயல்களிலும் கிளர்ச்சிகளிலும் நடத்துகிறது.

அவன் கை வைத்த பொருளையெல்லாம் பரிசுத்தப் படுத்துகிறான். வையத்திலே தத்தளித்துக்கொண்டிருக்கும் ஜீவனை இருளிலிருந்து ஒளியிலே கொண்டு சேர்க்கிறான்.

வெப்பத்திலும், தொல்லையிலுமிருந்து உபசாந்தியிலும் ஆனந்தத்திலும் கொண்டு நிறுத்துகிறான்.

ஆரம்பத்திலே இவன் உயிர்ப் படியில் எரியத் தொடங்கும் போது, இவனை நாலு புறத்திலும் புகை வந்து சூழ்கிறது.

இப்போது, அக்நி புகைச்சல் நீங்கி, தமது வானங்களிலே தெளிவு பெறஎரிகிறான். சுத்தம் மனம் என்பதோர் ஆகாசத்தைப்பற்றி ஏறுகிறான்.

இவன் க்ரது—வேள்வித்திறம், செய்கை வலிமை, துணிவு ; தெய்வத் துணிவையே அக்நி யென்கிறோம். இவன் கவி.

அறிவுக் கதிர்களை இவன் காவல் செய்கிறான்.

அந்தக் கதிர்கள், புல்லாந்தரையில் மேயும் பசுக்களைப் போலே, நமது உயிர் நிலத்தில் மேயும்போது, இருளுக்கும் பிரிவுக்கும் மக்களாகிய ராக்ஷஸப் பகைவர் அவற்றைக் கவர்ந்து செல்லாதபடி இவன் காக்கிறான்.

பொய், பிழை இவற்றின் கோணல் வழிகளையெல்லாம் கடந்து, தாழ்வும் உடைவும் வளைவும் கொண்ட தரையிலிருந்து மேலேறி, நேர் வழியையும் உயர்ந்த திறந்த வெளிகளையும் அவனுடைய உதவியால் அடைகின்றோம்.

இவனை உள்ளத்தே நிறுத்துகிறோம். அறிவும் துணிவும் ஒரு பொருளாகின்றன. வேள்வியின் வளர்ச்சியையும், ஏற்றத்தையும் அக்நி நடத்துகிறான். இவன் புரோஹிதன்,

ஹோதா, ரித்விக் ; புறத்தே வேதியர் சூழ்ந்து நின்று செய்வதாகச் சித்திரப்படுத்தும் கர்மங்களையெல்லாம் உள்ளத்து வேள்வியில் இவன் ஒருவனே நின்று செய்கிறான்.

நமது வேள்வி தேவருலகத்திற்கு மூண்டு செல்லுகிறது. அந்த மஹா யாத்திரையிலே அதனை ராக்ஷஸர் கவர்ந்து செல்லாதபடி அக்நி காக்கிறான்.

இவன் உயிருக்குத் தோழன், நமது காதலன்.

இவனை நம்பினவர்க்குப் பழுதில்லை.

இரவிற்குள்ளே ஆழ்ந்து இருளிலே மூடிக் கிடப்பவனும் இந்தச் சுடரைக் கொளுத்தினால், அவனுக்குக் கண் தெரியும். இது வளர வளர, ஏற ஏற, அவன் பரிபூரண உண்மையைக் காண்பான்.

உஷையை (ஞானோதயத்தை)க் காணும் பொருட்டு இவன் வானை நோக்கி வளர்கின்றான்.

பிராண லோகத்தின் வானங்களிலே ஊடுருவிச் சென்று தேஜோமயமான ஸ்வர் லோகத்தை எய்துகின்றான்.

ஸ்வர் லோகந்தான் அவனுடைய வீடு.

அது உண்மையிடம், தீரா இன்பம் ; அங்கே, தேவர்கள் ஸபை கூடியிருந்து அமிர்த பானம் செய்கிறார்கள்.

இங்கே, மண்ணுலகில் இவ்வொளி மறைந்திருக்கிறது. பூமிதேவி இவனைக் கருவிலே தரிக்கிறாள். வானத் தலைவனாகிய பிதாவின் காரியங்களுக்கு இவனை விடுவிக்கவில்லை. தனது விளைவுகள் அனைத்திலும், செடிகளிலும், பூண்டுகளிலும், மரங்களிலும் இவனை மறைத்து வைத்திருக்கிறாள்.

அறிவு முதிர்ச்சி பெறும்போது, இவன் மண்ணிலிருந்து வானத்தை நோக்கி எழுகின்றான்.

முதற் பெருங் கடவுளின் துணிவு. அஃதே தீ.

இவனை இரண்டு அரணிக் கோல்கள் கடைந்து தருகின்றன.

மண் கீழ்க்கோல், வானமே மேற்கோல் ; கடையும் தொழிலிலே தோன்றுகிறான். ஆதலால் இவன் வறுமையின் மைந்தன்.'

பிராண லோகத்திலே இவன் ஏறும்போது, புல்லாந் தரையில் மேயும் மாடு போலே, பூமியின் விளைவுகளையெல்லாந் தின்றுகொண்டு புகையுடன் எரிவான்.

அங்கு வேட்கையின் வலிமை, விடாயின் கிளர்ச்சி, அது தீ. தனது உணவுகளை யெல்லாம் அழித்து நாசமாக்குகிறான். தான் போகிற வழியிலே, முன்பு மகிழ்ச்சியும் பொலிவும் திகழ்ந்த இடங்களில், ஒரு கரிக்கோடு மாத்திரமே மிஞ்சி நிற்கும்படிச் செய்கிறான்.

ஆனால், எதனை அழிக்கிறானோ, அதனை மாசு தீர்க்கிறான். பிறகு புகை மறைந்து விடுகிறது.

அப்பால், ஞானோதயங்களின் முன்னே இவன் ஒரு வெள்ளைப்பரிபோன்று, நம்மை ஏற்றிக்கொண்டு பரமஸ்தானங்களிலே விடுகிறன். அங்கே நமது விருப்பங்களெல்லாம் உண்மை பெறுகின்றன. அறிவு ஸம்பூர்ணமாகிறது, அது களியுடனும் வெற்றியுடனும் தொழில் செய்கிறது.

வேள்வி செய்யும் சூரியனை வேள்வித் தீ இத்தகைய தெய்வ நிலையில் உயர்த்துகிறது. அமரத் தன்மைக்கு வெற்றியுண்டாகிறது. எண்ணமிட்டும், போர் செய்தும் பாடுபட்டுக்கொண்டிருந்த மனிதனைக் கவியாகவும் ஸ்வராஜனாகவும், இயற்கையின் வேந்தனாகவும், அக்நி தேவன் செய்துவிடுகிறான்.

தீயைச் சாத்திரங்களிலே புகழ்கின்றோம்.

நமது வாயில்கொண்ட மாளிகையின் தலைவன்; நம்மிடத்தே அன்புடன் விருந்துண்ண வந்தோன்; உயிரிலே இறைவன்; தழலுகின்ற சடைகளையுடைய கவி; தெய்வக் குழந்தை; புண்ய மூர்த்தியாகிய குமாரதேவன்; வெல்லொணாத சூரன் தீ.

மனிதரின் முன்னே சென்று வழி காட்டுவோன்; இறப்பவருள்ளே இறப்பின்றி நிற்போன்; மனிதனுக்குள்ளே தேவர் நிறுத்திய தொழிலாளி; அறிவிலே தடைப்படாதோன்; உண்மையில் முடிவற்றோன்; தீ.

விரிந்தொளிர் செய்யும் உண்மை ஞாயிறு; வேள்வியைச் சுமப்பவன்; அதன் படிகளை வகுப்பவன்; உறுதியான அடிப்படை; தெய்வத் தோற்றம்; ஒளிக்காட்சி; தீ.

## தீயை (அக்நி தேவனை) மதுச்சந்தர் என்ற ரிஷி பாடியது [1]

**1.** தீ வேள்வியின் முன் நிற்பவன்; அதன் பருவங்களை வகுக்கும் தேவன்; அங்கு வானவரை அழைப்பவன்; செல்வங்களை மிகுதியுற நாட்டுவோன்; அவனை வேண்டுகிறேன்.

2. தீயை முன்னைப் புலவர் போற்றினர்; புதியோரும் அவனையே போற்றுக. அவன் இங்கு அமரரைக் கொண்டு தருக.

3. நாளுக்கு நாள் வளருஞ் செல்வமும், வீரமிக்க புகழும் தீயாலே பெறுக.

4. தீயே, நெறியிலோங்கும் வேள்வியதனை நீ எப்புறத்துஞ் சூழ்ந்து காக்கிறாய்; அஃதே வானவரிடம் சேரும்.

5. தீ வானவரை யழைப்போன்; புலமையுள்ள செய்கைத் திறமையாவோன்; சித்திரமாகிய ஞானக் கேள்வி தருவதிலே சிறந்தோன்; அவ் வானவன் வானவருடன் வருக.

6. அன்ப, வேள்வி தருவோனுக்கு நீ சீர் தருவாய். அதுதான், தீயே, நினது உண்மை.

7. தீயே, நின்பால் நாள்தோறும், இரவும் பகலும், நாம் பணிவேந்தி வருகிறோம்.

8 நெறியிலோங்கும் வேள்விகளின் அரசே, நேர்மை காப்பாய், சுடர் வீசுவாய், தனது மனையிலே வளர்வாய், தீயே நின்னை யடைகிறோம்.

9. அருகே போவதற்கெளியவனாய், மகனுக்குத் தந்தை போல் தீ எமக்கு ஆகுக. நல் வாழ்வு பெறும்படி எம்மை நீ சார்ந்திடுக.

### விளக்கம்

"அமிர்தத்தின் பிறப்பிடமாகிய ஸூர்யன் என்ற ஒளியில் நான் என்னையே ஹோமஞ் செய்து கொள்ளுகிறேன்" என்று வேத ரிஷிகள் தமது வேள்வியின் பொருளைத் தாமே வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். இன்றைக்கும் காலையில் ஒவ்வொரு வேதியனும் இந்த மந்த்ரத்தைச் சொல்லுகிறான்.

[1] ரிக்வேதம், மண்டலம் 1, ஸூக்தம் 1.

இவ்விதமான வேள்வி நடைபெறவேண்டுமானால், அதற்குத் தீயின் துணை வேண்டும். தீ என்பது தவக் கடவுள். தெய்வீகமாகிய அறிவுத்துணிவு தீ எனப்படும். 'தேவருக்கு என்னை ஆஹுதி செய்துவிட்டு, அவர்கள் தரும் அமிர்தத்தை உண்டு நானும் அமரனாகி விடுவேன் இதை அஸுர சக்திகள் தடை செய்ய மாட்டா' என்று மனதிலே நிச்சயம் ஏற்படுத்திக் கொள்ளும்போது, தீ பிறக்கிறது.

**1.** தீயை எழும்பும்படிச் செய்தால் போதும். பிறகு இந்த வாழ்க்கை வேள்வியின் பொறுப்பு என்னைச் சார்ந்ததன்று. அவனே வேள்வியை அதன் பருவங்களுக்குத் தக்கவாறு படிப்படியாக மேலே ஏற்றுக்கொண்டு போகிறான். எல்லா விதமான தெய்வ சக்திகளையும் அங்கு அழைத்து வருகிறான்.

**2.** 'நமக்கு முன்னே விடுதலைபெற்ற மகரிஷிகளெல்லோரும் தீயையே துணைக் கொண்டனர். புதிய ரிஷிகளாகிய நாமும் அவனாலேயே விடுதலை பெறுவோம்' என்று முதல் வேதத்தின் முதல் ஸூக்தம் சொல்லுகிறது. ரிஷி பரம்பரையின் ஆரம்பத்தை எப்படியறிவோம்!

**3.** 'செல்வம்' என்பது இவ்வுலகச் செல்வங்கள், ஞானச் செல்வங்கள் ஆகிய இரண்டையும் குறிப்பது. இவற்றை நமக்கு அக்னி தேவன் தருவான்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார் திண்ணியாராகப் பெறின்" என்று திருவள்ளுவர் சொல்லுகிறார்.

**4.** தீக்கடவுள் எல்லா மனிதரிடத்தும் உள்ளத் திண்மையாக நிற்கின்றான். அவனை வளர்த்தால் எண்ணிய பொருள் எதுவும் எவ்வுலகத்திலும் கைகூடும்.

**5.** மனித நிலையிலிருந்து அமர நிலை நோக்கிச் செல்லும் வழிதான் வேள்வி போகும் வழி.

**6.** 'ஞானக் கேள்வி' இன்னதென்பதை மேலே காட்டியிருக்கிறேன்.

**7.** முழுதும் பணிவு கொள்வதே தேவரை அழைக்கும் வழி. அஹங்காரத்தை விட்டு, இவ்வுடல் முதலியவற்றைத் தேவருடைமையாக்கி அவரையே சரணடைந்து விடுதல் வேண்டும்.

8. நேர்மை—சொல்லிலும், நடையிலும், உள்ளத்திலும் முழு நேர்மை—காணும்போது அங்கே அக்நி சக்தி பிறந் திருப்பதாக அறிந்து கொள்ளலாம். உளளத் திண்மை இல்லாவிடில் நேர்மையைக் காத்தல் அரிது.

---

## மித்திரன்

### மித்திரன் என்ற ஸூர்ய தேவனை விசுவாமித்ர ரிஷி பாடியது.[1]

1. மித்திர தேவனிடமிருந்து பெறும் ஞானக் கேள்வி தொழில் செய்பவரைத் தாங்குவது ; இன்பங்களை வென்று தருவது ; உண்மை யுடையது ; ஒளிப் புதுமைகள் வாய்ந் தது. அதனை வாழ்த்துகிறோம்.

2. மித்திரன் அறிவிலே மேம்பட்டு மாந்தரை நடத்துகின் றான். மித்திரன் மண்ணையும் வானையும் தாங்குவோன். மித்திரன் உயிர்களை இமை கொட்டாமல் பாாத்து நிற்கின்றான். அந்த உண்மைக் கடவுளுக்கு நெய்யொளி கொண்ட உணவு படைப்போம்.

3. மித்திரா, விரதத்தாலே நின்னை உணர்வான் யாவன், அம் மனிதன் இன்பங்களை நன்கு நுகர்க. உன்னாலே காக்கப்படுவோன் (வளர்க்கப்படுவோன்) அழிவு பெறுவ தில்லை ; தோல்வி யடைவதில்லை ; அருகேயிருந்தும் தொலையி லிருந்தும் அவனைப் பாவம் வந்து சார்வதில்லை.

#### விளக்கம்

காலை ஸந்த்யா வந்தனத்தில் இந்தப் பாட்டுக்கள் உதய ஸூர்யனை நோக்கி ஓதப்படுகின்றன. ஸூர்யன் பரமாத்மாவி னுடைய ஞானவொளி ; இந்தத் தேவன் நான்கு அம்சங் களுடையவன் :—மித்திரன், வருணன், அர்யமான், பகன். இவருள்ளே, மித்திரன் அந்த ஒளியின் அன்பைக் குறிப் போன் ; வருணன் அதன் அனந்த நிலை (எல்லையற்ற தன்மை) யாவான் ; அர்யமான் வலிமைத் தேவன் ; பகன் அவ்வொளியின் இன்ப உணர்ச்சியாக நிற்பவன்.

முழுமுதற் கடவுளுக்கு ' ஒளியே விழி, ஒளியையே சூரியன் ' என்று போற்றுகிறோம். பூலோகத்திலே ஒளியாகத்

---

[1] இந்த ரிக்குக்கள் தைத்திரீய ஸம்ஹிதை 3-வது காண்டம் 4-வது ப்ரச நத்தின் கடைசியிலுள்ளன. இலேசான திரிபுகளுடன் ரிக்வேதம், 3-வது அஷ்டகம் 4-வது அத்தியாயத்திலே காணப்படுகின்றன.

தோன்றும் சக்திதான் சுவர்க்க லோகத்திலே ஞானமாகச் சுடர்கின்றது. அதன் அன்பு வடிவத்தை, அதாவது தெய்வீக அன்பையே மித்திரனென்று வாழ்த்துகிறோம்.

1. 'ஞானக்கேள்வி' தேவர்களிடமிருந்து மனிதன் அறிவுச் செவியினாலே பெற்றுக்கொள்வது. அன்பினிடமிருந்து இவ்விதமான கேள்வி பெறுவோர் செய்யும் தொழில்களை யெல்லாம் நழுவுதல் இல்லாதபடி அன்பு தாங்கிக் கொள்ளுகிறது.

2. அன்பில்லாவிடில் மனித வாழ்க்கை நடைபெறாது; வானமும் இயலாது. அன்புதான் இவ்வுலக முழுவதையும் சிதறாதபடி ஆதரிப்பது; அன்பு ஒரு க்ஷணம் கண் மூடிவிடுமானால், உலகமும் உயிர்களும் அழிந்துபோய்விடும். தேவர்களுக்கு மனிதன் தனது உடைமை முழுவதையும் அர்ப்பணம் செய்துவிட வேண்டும். அதுவே தேவர்களின் உணவு; 'நெய்யொளி கொண்ட தேவநதிகள்' என்றும், 'நெய்யொளி கொண்ட ஸரஸ்வதி' என்றும், 'நெய்யொளி கொண்ட அறிவு' என்றும், வேதம் பிற இடங்களில் வழங்குவதால், 'நெய்யொளி' என்பது 'ஞானதெளிவு' தான் பொருள் என்று தெரிந்து கொள்ளவேண்டும். எனவே, நாம் தேவர்களுக்குக் கொடுக்கும் உணவை ஞானத் தெளிவுடன் கலந்து கொடுக்க வேண்டுமென்று விசுவாமித்ரர் சொல்லுகிறார்.

8. 'விரத' மென்பது விதி. அன்பின் விதிகளை நன்கு வழக்கப்படுத்தினால், அன்பு நம்மை வளர்க்கும்; நம்மைக் காக்கும். பிறகு, அழிதலும் தோல்வியும் பாவமும் நமக்கில்லை.

## உயிர் (வாயுதேவன்)

### மதுச்சந்தர் (தேனிசை) என்ற ரிஷி வாயு இந்திரன் மித்திரன் வருணன் என்ற தேவர்களைப் பாடியது[1]

1. **கா**ற்றே வா, காட்சி யுடையாய், இங்கு நின்பொருட்டுத் தேன்கள் புனைந்து வைத்திருக்கின்றோம்.

அவற்றை அருந்து; கூவுதலைக் கேள்.

2. உயிரே, மந்திரங்களால் நின்னைத் துதி செய்கின்றனர். (யாவர்?) பண் பாடுவோர், தேன் பிழிந்தோர், பகலறிந்தோர்.

---

1 ரிக்வேதம்: மண்டலம் 1: ஸூக்தம் 2, அஷ்டகம் 1, அத்யாயம் 1 வர்க்கம் 3, 4.

3. உயிரே, நிறைவுதரும் நினது இன்ப ஓடை வேள்வி தருவோனை நோக்கிப் பாய்கின்றது.

(அஃது) தேன் பருகுமாறு விரிவுகொண்டது.

### உயிரும் அறிவுச்சுடரும் (வாயு, இந்திரன்)

4. இந்திரா, காற்றே, இங்குச் சாறுகள் பிழிந்திருப்பது, காணீர். இங்கே இனிமைகள் கொண்டு வருக. தேன்கள் நும்மை விரும்புகின்றன.

5. வளத்தின் கருப்பொருளிடை யூர் காற்றே, இந்திரா சாறுகளின் சுவையறிவீர்; விரைவுடன் இங்கு வருக.

6. காற்றே, இந்திரா! ஸோமம் பிழிவோன் செம்மை யாகச் செய்யும் வேள்வியின் கண்ணே, நேர்மையறிவுடன், வீரரே, விரைந்து வருக.

### அன்பும் விரிவும் (மித்திர வருணர்)

7. தூய பகுத்தறிவு கொண்ட மித்திரனை அழைக்கிறேன் பகைவரை மாய்க்கும் வருணனை அழைக்கிறேன்; அவர்; தெளிவுடன் ஒளிரும் அறிவைச் சமைப்போர்.

8. நேர்மையை வளர்ப்போர், நேர்மை நிலை பற்றுவோர், அந்த மித்திர வருணர் நேர்மையினாலே பெரிய வேள்வித் திறம் அடைகின்றனர்.

9. மித்திர வருணர் கவிகள்; பல பிறப்புடையோர்; விரிந்த மனையுடையோர்; அவர் நம்மைத் திறமையுடைய தொழிலில் நாட்டுக.

---

## அசுவிநௌ தேவர்

### முன்னுரை

அசுவிநௌ' என்றால், 'குதிரை யேறி வரும் இருவர்' என்பது பொருள். இவர் இரவு பகலைக் குறிப்பிடுவதாகச் சில ஐரோப்பிய பண்டிதர்கள் கருதுகிறார்கள். தேவ வைத்தியரென்பது புராணக் கொள்கை. தமிழிலே, வாசி என்ற சொல் குதிரையைக் குறிக்கும்; இது வாஜி என்ற வடமொழியின் திரிபு. இந்தச் சொல்லை யோகிகள் உயிர்க்

காற்றென்ற பொருளில் வழங்குவதுண்டு. அசுவம் என்பது உயிர்த் திறமை. அத்திறமையை அதன் போக்கு வரவுகளிலே பாதுகாக்கும் இரண்டு வீதச் சக்திகளே அசுவிநெள தேவர் என்பது யோகிகளின் மதம்.

## மதுச்சந்த ரிஷி அசுவிநெள தேவரையும், இந்திரனையும், வானவர் கூட்டத்தையும், ஸரஸ்வதி தேவியையும் பாடியது.[1]

### அசுவிநெள தேவர்

1. புரவி நடத்துவீர், விரைந்த நடை கொண்டீர், நன்மைத் தலைவரே, பல இன்பங்களுடையீர், எமது வேள்வியின் விருப்பங்களிலே மகிழ்ச்சி பெறுக.

2. இருவீர், பரியூர்ந்து வருவீர், பல வெற்றிகளையுடையீர், வீரரே, மதிசிறந்தீர், நுமது வலிமை கொண்ட அறிவினால் எமது சொற்களை விரும்புக.

3. வெல்வீர், இளமையுடையீர், நெறி செல்வீர், ருத்ரன் வழிகண்டீர், வேள்விப் புல்லை நன்றாகத் துணித்துப் பரப்பி வைத்திருக்கும் மனிதரிடத்தே ஸோமரஸங்களை உண்ணும்பொருட்டு வருக.

### இந்திரன்

4. வருக, இந்திரா! சித்திரக் கதிரோய்! இந்தத் தேன்கள் நின்னை விரும்பி நிற்கின்றன. இவை நுட்பங்களாலே முழுதும் தூய்மை செய்யப்பட்டன.

5. வா, இந்திரா! அறிவினாலே தூண்டுதல் பெற்று ஞானிகளின் ஏவுதல் கொண்டு இங்கே ஸோமத்துடன் வேண்டுவோனது மந்திரங்களை நோக்கி வா.

6. இந்திரா, புரவி யூர்வாய், விரைவுடன் எம்முடைய அறிவு மந்திரங்களை நாடி வருக, எமக்கு ஸோமத்திலே இன்பத்தை நாட்டுக.

---

1. ரிக்வேதம் : மண்டலம் 1. ஸூக்தம் 3 : அஷ்டகம் 1. அத்தியாயம் 1. வர்க்கம் 5-6.

விசுவ தேவர் (வானவர் கூட்டம்)

7. வானவர் எல்லீரும் வாரீர் ; காப்புத் தொழிலுடையீர், தொழில் செய்வோரைத் தாங்குவீர், ஸோமந்தருவோனுக்கு (நன்மைகள்) தருவீர், வருக.

8. வானவர் கூட்டமே, ஆறுகளைக் கடப்பீர், எமது ஸோமத்தை நாடி வருக, மந்தைக்கு வரும் ஆவினம் போலே.

9. வானவர் கூட்டமே, பகையற்றீர், பல சூழ்ச்சிகளுடையீர், தீங்கற்றீர், தாங்கும் வலிமை யுடையீர், வேள்வியை விரும்புக.

ஸரஸ்வதி

10. தூய்மை செய்வாள் ஸரஸ்வதி ; வளங்களிலே வளமுடையாள், கருப்பொருள் ஆவாள் ; நமது வேள்வியை அறிவினாலே தாங்குக.

11. உண்மைகளைத் தூண்டுவாள். நல்ல மதிகளை ஒளி பெறக் காண்பாள், நமது வேள்வியை ஸரஸ்வதி தாங்குகின்றாள்.

12. (உண்மைப்) பெருங்கடலைக் காட்சியினாலே தெளிவுறச் செய்கின்றாள். அறிவுகளனைத்திலும் ஸரஸ்வதி அரசு செய்கின்றாள்.

## இந்திரன்

### மதுச்சந்த ரிஷி இந்திரனைப் பாடியது.[1]

1. நல்ல வடிவங்கள் சமைக்கும் இந்திரனை நாள் தோறும் காக்கும்படி அழைக்கின்றோம், பால் வேண்டுவோர் நன்கு கறக்கும் ஆவினை நாடுவது போல.

2. எமது தேன் பிழிவுகளை நாடி வருக. ஸோமமுண்பாய், எமது ஸோமத்தை யுண்ணுக. செல்வனாகிய நினது களி எமக்குக் கதிர்களைத் தருமன்றோ ?

3. இனி, நினது மிகவும் நுட்பமாகிய மதிகளை அறியக் கடவோம்.

எம்மை நீ கடந்து சென்று விடலாகாது.

---

1. ரிக்வேதம் : மண்டலம் 1, ஸூக்தம் 4, அஷ்டகம் 1, அத்யாயம் 1, வர்க்கம் 7, 8.

4. வேள்வி செய்யும் மானுடனே, இந்திரன் வலியவன், அழிக்க வொண்ணாதான், தெளிவுடையோன். அவனிடம் உதவி கேள். நினது நண்பருக்கு அவன் வரமளித்தான்.

5. இந்திரனிடத்தே செயல்களை ஒப்புக்கொடுத்துவிட்டுப் பிறகு நம்மவர் நமது பகைவரை நோக்கி 'இங்கிருந்து விலகியோடுவீர்' என்று கூறுக.

6. நமக்கு அழிவு செய்ய நாடும் பகைவர் நம்மை 'நற்பேறு பெற்றோ' ரென்று பேசுக; இந்திரனுடைய இன்பத்திலே இருந்திடுவோம்.

7. வேள்வி செய்வோய், விரைந்து வரும் இந்திரனுக்கு விரைவுடைய தேனைக் கொண்டுவா; இத் தேன் வேள்வியின் செல்வம்; வீரருக்குக் களி தருவது; தோழரைக் களிப்புறச் செய்யும் இந்திரனை நோக்கி வீழ்வது.

8. நூறு வேள்வித் திறனுடையாய்! இந்திரா! இத் தேனையுண்டு விருத்திரரை (மறைப்புப் பேய்களை)க் கொன்றிடு வாய்; வளமுடைய மனிதனை வளங்களிலே காப்பாய்.

9. இந்திரா, வேள்வித்திறன் பலவுடையாய், வளமுடைய நின்னை வளமிகச் செய்கின்றோம், செல்வங்கள் பெறும் பொருட்டாக.

10. இன்பச் செல்வங்களை வென்று தருவான். பெரியோன், நன்கு கரையேற்றுவோன், தேன் பிழியும் மனிதருக்கு நண்பன்—அவ் விந்திரனைப் பாடுங்கள்.

## இந்திரனை மதச்சந்த ரிஷி பாடியது.[1]

1. வாருங்கள், வீற்றிருங்கள். இந்திரனைப் பாடுங்கள் துணைவரே![2] ஸ்தோமங்களைச் சுமப்பவரே!

2. பல செல்வங்களுடையவனை, விரும்பத்தக்க இன்பங் களின் அரசனை, இந்திரனை, ஸோமரஸம் பிழியுமிடத்தே, ஒன்றுகூடிப் (பாடுங்கள்).

---

[1]. ரிக்வேதம்: மண்டலம் 1, ஸூக்தம் 5, அஷ்டகம் 1, அத்யாயம் 1, வர்க்கம் 9, 10.

[2]. ஸ்தோமம்—மந்த்ர ப்ரதிஷ்டை.

3. அவன் எங்கள் யோகத்திலே அமர்க. செல்வமும் பலவகை யறிவும் பெறும்படி அவன் எம்மிடத்தே பொருந்துக. அவன் நம்பொருட்டு வளமைகளுடனே வருக.

4. போரில், மோதுமிடத்து, இவன் குதிரைகளைப் பகைவர் நயப்பதில்லை (அஞ்சுகின்றனர்). இவ்விந்திரனுக்குப் பாட்டுச் சொல்லுங்கள்.

5. ஸோம முண்பானுக்கு இந்த ஸோமங்களை வடித்தோம். இவை தூய்மை யுடையன, விருந்துக் களி தருவன, கட்டிப் பால்[1] கலந்தன.

இந்திரா, செய்கை நலமுடையாய், ஸோமத்தின் முதற் பானத்துக்கு நீ பிறந்து விட்டாய்.

6. பிறக்கும்போதே முதிர்ந்த வலிமையுடன் வந்தாய்.

7. விரைவு கொண்ட ஸோமங்கள் நின்னுள்ளே பாய்க! இந்திரா, பாட்டினை விரும்புவோய், அறிவோங்கிய நின்னிடத்து நலங்கள் சார்ந்திடுக.

8. உன்னை ஸ்தோமங்கள் வளர்த்திடும்; புல வேள்விகளின் இறைவனே, உன்னைச் சொற்கள் பெருகும்படிச் செய்யும். எமது பாட்டுகள் உன்னை வளர்த்திடுக.

9. எல்லா வகை ஆண்மைகளும் உடைய ஆயிரவிதமான பெருவளத்தை இந்திரன், தேயாத காவல் செய்பவனாகி, எமக்கு வென்று தருக.

10. உடல்களைக் கொல்லும் காலன் எமக்குத் துன்பஞ் செய்யா தொழிக. இந்திரா, பாட்டை விரும்புவோய், அவன் படைக்கலத்தை நீ தடை செய்திடுக.

## விளக்கம்

சுத்தமான அறிவு வட்டம் எங்கும் நிறைந்திருக்கிறது. அதன் தலைமைக் கடவுள் இந்திரன்.

இந்திரனை நமதுள்ளத்திலே ஸ்தாபனம் செய்யவேண்டுமானால், அதற்குரிய மனோ நிச்சயம் செய்துகொள்ளவேண்டும். அம் மனோ நிச்சயம் மந்திரவாக்காக வெளிப்படு

[1]. பால் என்பது ரிஷிகளின் பாஷையிலே ஒளிச் சுவை என்னும் பொருள் படும், 'கோ' என்னும் மொழி பசுவென்றும், ஒளிக்கதிரென்றும் இரண்டு பொருள்பட வழங்குதல் வேதத்தில் ஸர்வ ஸாதாரணமானது.

கின்றது. மந்திரம், மனம் என்ற இரண்டு சொற்களும் வடமொழியில 'மந்' என்ற ஒரே பகுதியில் தோன்றியவை. இந்திரன் வருகையை வேண்டி இந்த ஸூக்தம் சொல்லப்படு கிறது. தேவர்களை அழைப்போர் முன்னதாகவே ஸோமரஸம் பிழிந்து வைக்கிறார்கள். ஸோமப் பச்சிலையை உரலிலே போட்டு உலக்கையால் இடித்து ஸோமரஸம் பிழியப்படுகிறது. யோகானு பவத்திலே, உரல் பிரகிருதி; உலக்கை சேதனத் திறமை; உயிர்வாழ்க்கை என்ற இலையை இங்ஙனம் பிழியும்போது, சித்தத் தெளிவாகிய ஸோமரஸம் பிறக்கிறது. யோகசித்தி யும், மூவுலகின் செல்வங்களும், அறிவும்—பல வகை தரும் பொருட்டு இந்திரனை வேண்டுகிறோம்.

மனித அறிவிலே தெய்வத்திறமைகள் தோன்றுவதைத் தேவர்களின் புதிய பிறப்பென்று ரிஷி வர்ணிக்கிறார், இங்கு இந்திரன் பிறப்பும், அடுத்த ஸூக்தத்தில் மருத்துக் களின் பிறப்பும் இப்பொருளிலே கொள்ளத்தக்கன.

## இந்திரனும் மருத்துக்களும்

### இந்திரனையும் மருத்துக்களையும் மதுச்சந்த ரிஷி பாடியது[1]

1. அவனைச் சூழ்ந்து நிற்போர் வேகமும், ஒளியுமுடைய சிறப்புக் குதிரையைத் (தேரிலே) பூட்டுகிறார்கள். வானத் திலே சுடர்கள் ஒளி வீசுகின்றன.

2. விரும்பத்தக்கன, செந்நிறமுடையன, துணிவுடையன, வீரனைப் பொறுப்பன, இங்ஙனமாகிய குதிரைகளிரண்டை யும். இந்திரனுடைய தேரில் இருபுறத்திலும் பூட்டுகின்றனர்.

3. ஒளியில்லாத விடத்தே ஒளியினைச் செய்து, வடிவ மில்லாத விடத்து வடிவத்தினை அமைத்து, வீரனே, நீ புலரி[2]களுடன் பிறந்து விட்டாய்.[3]

---

[1]. ரிக்வேதம்: மண்டலம் 1, ஸூக்தம் 6, அஷ்டகம் 1, அத்யாயம் 1, வர்க்கம் 11, 12.

[2]. புலரி—வைகறை, காலைச் செவ்வானம். இங்கு 'புலரிகள்' என்பது ஞானோதயங்களை.

[3]. இம்மூன்று ரிக்குக்களும் இந்திரனைப் பாடியன.

4. பின்பு தமது வழக்கப்படி மருத்துக்கள் மீளவும் பிறந்தனர், தமது வேள்விப் பெயர் கொண்டனர். 1

5. இந்திரா, கோட்டைகளை உடைத்து, மறை விடங்களிலே வேள்வியைச் சுமந்து செல்லும் மருத்துக்களுடனே,[2] நீ ஒளிக்கதிர்களைச் சென்று மீட்டுக் கொடுத்தனை.[3]

6. பெரியோன், ஞானக் கேள்வியுடையோன், செல்வங்கள் தேடிக்கொடுப்போன். அவ்விந்திரனை நோக்கி மதியின்படிப் பாடலுற்றனர், பாட்டினாலே தேவ நிலைபெற விரும்புவோர்.

7. அஞ்சாத இந்திரனுடன் நீயும்[4] வந்து எங்கள் முன்னே தோன்றுக. நீங்களிருவரும் களியுடையீர். நிகரான ஒளியுடையீர்.

8. பழிக்கக்கூடாதவர், ஒளி சார்ந்தோர், இந்திரனுடைய விரும்பத் தக்க கணங்கள் இந்த மருத்துக்களால் வேள்வி வலிமையுடன் ஒளிர்கின்றது.

9. எங்கும் ஸஞ்சாரம் செய்வாய், இந்திரா, இவ்வேள்வியிலே நின்னை வாக்குக்கள் ஒன்றுகூடி வேண்டுகின்றன. அங்கு அச்சுடர் தரும் அறிவு வானத்திலிருந்து வருக.

10. அல்லது, அங்கு இம்மண்ணைச் சார்ந்த வானத்தினின்றும் வருக. அல்லது, மஹோ லோகத்திலிருந்து வருக.

### விளக்கம்

நமது மனமாகிய வேள்விக்கூடத்தை நோக்கி இந்திரன் புறப்படுகிறான். சிவந்த ஒளியும் துணையுமுடைய குதிரைகளால் அவனுடைய தேர் இழுக்கப்படுவதாகக் கவி கற்பனை செய்கிறார்.

---

1. ரிக்குக்கள் 4, 6-10 மருத்துக்களைப் பாடியன.

2. மருத்துக்கள் புயற் காற்றின் தேவர்; இவர் நமது அறிவொளியை மூடும் இருள்களை யெல்லாம் சாடிப் புடைத்துக் குத்தி யொழித்துவிட்டு, வானமழையையும் ஒளியையும் பெறும்படிச் செய்பவர்.

3. இந்த 5-வது ரிக்கும் 7-வதும் இந்திரனையும் மருத்துக்களையும் பாடுவன.

4. இந்த பாட்டில் நீ என்ற சொல் மருத்துக்களின் கூட்டத்தைக் குறிப்பிடுவதாகப் பழைய உரைகாரர் சொல்லுகின்றனர்.

பிறகு, மூன்றாவது படியில்,[1] இந்திரன் நமது மனோ மண்டலத்தில் வந்தபிறகு நடக்கும் செய்திகளைக் காட்டு கின்றார். அவன் வருமுன்னே ஒளியின்றியிருந்தது. அவன் வந்தவுடன் ஒளி யுண்டாயிற்று. அவன் வருமுன்னே நமது மனோமண்டலத்தில் நல்ல திருத்தமான வடிவங்கள் அமைந்திராமல் கலங்கிக் குழப்பமுற்றுக் கிடந்தது. அவன் வந்தவுடனே, அங்கு நல்ல வடிவங்கள் உண்டா யின; அதாவது, ஒழுங்கும் அழகுமுடைய மனோ நிய மங்கள் ஏற்பட்டன. பிறகு, 'வைக்றைகள்' என்று சொல்லப்படும் ஞானோதயங்கள் தோன்றின. பின்பு, அங்கே இந்திரனுடைய சேனை மறவராகிய மருத்துக்கள் என்னும் தேவர் பிறக்கிறார்கள். இந்திரன் தான்தோன் றும் போது, அஞ்ஞானம் அச்சம் கவலை முதலிய தன் பகைவரைக் கொல்லும் பொருட்டுப் படையுடன் வருகின்றான்.

ஒளியின் கதிர்களை அசுரர் ஆங்கு ஓரிருட் குகையில் மறைத்து வைத்திருக்கிறார்கள். இந்திரனும், மருத்துக் களும், அசுரருடைய கோட்டையைத் தகர்த்து, உள்ளே புகுந்து, அவ்வொளிக் கதிர்களை விடுவித்துக் கொடுக்கி றார்கள்.

வலிமைகொண்ட மந்திரங்களாலே, அதாவது மனோ நிச்சயங்களாலே, மனிதன் இவ்வுலகத்தில் அமரநிலை யடைகின்றான். அது பற்றியே, 'பாட்டினால் தேவநிலை பெற விரும்புவோர் இந்திரனைத் தமது, மதியின்படி பாடலுற்ற னர்' என்று ரிஷி சொல்லுகிறார்.

## அதிதி

(ரிக்வேதம் : 1 மண்ட.—191 ஸூ.—6 ரிக்.)

**வா**ன் உங்களுக்குத் தந்தை. மண் உமக்குத் தாய். ஸோம ரஸம் உடன் பிறந்தது. அதிதி உடன் பிறந்தாள்.

(8 மண்ட.—101 ஸூ.—15 ரிக்.)

ருத்திரர்களின் தாய், வஸுக்களின் மகள், தன் மக்க ளாகிய தேவருக் கெல்லாம் உடன்பிறந்தாள், அமிர்தத்தின் ஊற்றுவாள். அறிவுடைய மனிதனுக்குச் சொல்லுகிறேன்; 'மாசற்ற ஒளியாகிய அதிதியை மறக்கலாகாது'.

---

1. 'படி' என்பது 'ரிக்'.

(10 மண்ட.–63ஸூ.––10 ரிக்.)

நன்கு காக்கும் மண்ணாகவும், நிகரற்ற வானாகவும் அதிதியே விளங்குகிறாள்; நிறைந்த நலந் தருபவள்; நன்கு நடத்துபவள்; அந்த அதிதியாகிய தெய்வத் தோணியிலே, நாம் நல்ல நிலையின் பொருட்டாக ஏறிக் கொள்ளுவோம்; அது நல்ல தண்டுகளுடையது. மாசற்றது, தொளையில்லாதது.

(10 மண்ட.—36 ஸூ.—3 ரிக்.)

எல்லாத் தீமையினின்றும் நம்மை அதிதி காத்திடுக. அவள் மித்திரனுக்கும் செல்வ மிகுந்த வருணனுக்கும் தாய். அவளாலே அழிவற்ற வானொளியைச் சேர்ந்திடுவோம்.

(9 மண்ட.—74 ஸூ.—3 ரிக்.)

அதிதியின் நேர்மை நெறியிலே செல்வோன் விசாலமான ஒளிப் பாதையிலே செல்லுகின்றான்.

(2 மண்ட.—27 ஸூ.—7 ரிக்,)

ராஜமாதாவாகிய அதிதியும், அர்யமானும்[1] நம்மை நல்ல வழிகளிலே செலுத்திப் பகைமைகளை யெல்லாம் கடக்கும் படிச் செய்க. நாம் நல்ல வீரராகிப் பகைமை தீர்ந்து மித்ர வருணரின் மங்களத்தில் வாழ்வோமாக,

(8 மண்ட.—67 ஸூ.—14 ரிக்.)

கட்டுண்ட திருடனை அவிழ்த்து விடுவதுபோல, எம்மை ஓநாய்களின்[2] வாயிலிருந்து அதிதியும் அவள் மக்களும் விடுதலை செய்க.

(8 மண்ட.—18 ஸூ,—6 ரிக்.)

இரண்டற்றவளாகிய அதிதி பகலிலும் இரவிலும் எமது செல்வத்தைக் காத்திடுக. எப்போதும் வளர்ப்பவளாகி எம்மை அவள் தீமையினின்று காத்திடுக.

---

1. அர்யமான் வலிமைத் தெய்வம்: மித்ரன் அன்புத் தெய்வம்: வருணன் விரிவுத் தெய்வம்.

2. ராக்ஷஸரின்.

(8 மண்ட.—18 ஸூ.—7 ரிக்,)

மதியிலே நிற்பவளாகிய அதிதி நமக்குப் பகலொளியிலே துணை புரிய வந்திடுக. அவள் நமக்கு மங்களமயமாகிய பேரின்பத்தைத் தருக. அவள் நமது பகைவரை (ராக்ஷஸரை) யெல்லாம் ஒழித்திடுக.

(1 மண்ட.—185 ஸூ,—3 ரிக்.)

நிகரற்றதும் தீங்கற்றது மாகிய அதிதியின் வரத்தைவேண்டு கிறேன்.

(7 மண்ட.—40 ஸூ.—2 ரிக்.)

தேவியாகிய அதிதி நமக்குப் பெருஞ் செல்வம் தருக.

(10 மண்ட.—100 ஸூ.—1 ரிக்.)

அனைத்தையும் சமைப்பவளாகிய அதிதியை வேண்டு கிறேன்.

சில திருஷ்டாந்தங்கள் காட்டினேன். பிற்காலத்துக் கதை களிலே அதிதியின் உண்மைப் பொருள் மறைந்து விட்டது. 'அநந்த சக்தியை' ஒரு ரிஷி பத்தினியாக்கி விட்டார்கள். அதிதியென்பது எல்லையில்லாத பரமாத்ம சக்தி 'அஹங் காரம்' பிரிவு படுத்துகிறது. நான் என்ற பிரிவுணர்ச்சி நீங்கும்போது மனிதன் எல்லையற்ற நிலையுடன் பொருந்து கிறான். அதுவே 'அதிதியோகம்' அல்லது சக்தியோகம் என்று சொல்லப்படும். அதிதியின் மக்கள் ஆதித்யர். இது தேவருக்கெல்லாம் பொதுப் பெயர். ஸூர்யனுக்குச் சிறப்புப் பெயராக வழங்குகிறது. அதிதியைச் சரணமடைந் தோரும் ஆதித்யரேயாவர்.

## வாக்கு

**வே**தத்தில் வாக்கை ஒரு தெய்வமாகச் சொல்லியிருக்கிறது. திருஷ்டாந்தமாகப் பின்வரும் மந்திரங்களை நாம் ஏற்கெனவே[2] படித்திருக்கிறோம் :—

"நம்மைப் பரிசுத்தம் செய்வாள் ஸரஸ்வதி; வளங் களிலே மிகுந்தாள். அறிவுச் செல்வ முடையவள், (நமது) வேள்வியைத் தாங்குக.

---

[1]. ரிக்வேதம் : மண்டலம் 1. ஸூக்தம் 3. ரிக் 10-12.

[2]. 29-வது பக்கம் பார்க்க.

"உண்மை யொளிகளைத் தூண்டுவாள், நல்ல மதிகளை விளங்கச் செய்வாள், ஸரஸ்வதி வேள்வியைக் காக்கின்றாள்.

"பெரு வெள்ளமாகிய ஸரஸ்வதி, ஞானவொளியால் விளக்குவாள், எல்லா அறிவுகளிலும் கதிர் செய்கின்றாள்."

'வாக்' கென்பது, மூலத்திலே, படைத்தல் என்று பொருள்படும். ஸரஸ்வதியை இந்திரனுடைய மறைவுயிர் என்று சொல்வதுண்டு. ஸ்ருஷ்டியே வாக்கு; ஸ்ருஷ்டியே சக்தியானபடியாலேதான் புராணக்காரர் ஸரஸ்வதியைப் பிரம்மாவின் சக்தியென்றார். பைபிள் புஸ்தகத்திலே, 'ஆரம்பத்தில் வாக்கு இருந்தது; அந்த வாக்கு ஈசனோ டிருந்தது; அந்த வாக்கே ஈசன்' என்று சொல்லப்படுகிறது. சக்தி பரம புருஷனோடிருப்பதையும், அவ் விரண்டும் ஒன்றென்பதையும் அந்த வாக்கியம் காட்டுகிறது.

## ஸரஸ்வதி பூஜை—உண்மை வழி.

சொல்லை ஸாதாரணமாக நினைத்துவிடலாகாது. உண்மைச் சொல் க்ஷேம மந்திரமாகும். பொய்ச்சொல் அழித்துவிடும். "வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்."

இவளை அறிஞன் தனக்குள்ளே ஞான வெள்ளமாகக் காண்கிறான். அவனுடைய அறிவு கதிர் விடுகின்றது. இவளுடைய பூஜைக்கு முக்கிய வழிகள் எவை? தான் எப்போதும் எவ்விடத்திலும் உண்மை சொல்லுதல், பிறர் உண்மை சொல்வதை எப்போதும் எவ்விடத்திலும் விருப்பத்தோடு கேட்டல் என்ற இவ்விரண்டுமேயாம். தான் உண்மை சொல்வது மிகவும் சிரமமாய் விட்டது. பிறர் உண்மை சொல்வதைக் கேட்கும்போது நாராச வாணமாய்விட்டது. ஸாதாரண நிலையில், மனித வாழ்க்கை அத்தனை கோணலாகி விட்டது; மனித அறிவு அவ்வளவு குழப்பமடைந்து நிற்கின்றது.

## தேவ வாக்கு அவதாரம் : ஸரஸ்வதி.

வேத மார்க்கமாகிய வேள்வியின் ரஹஸ்யப் பொருளை உணர்ந்து நடந்தால், உண்மை சொல்வதிலும் துன்பமிராது

கேட்பதிலும் துன்பமிராது. உலக வாழ்க்கையே தேவருக்குச் செய்யப்படும் வேள்வியல்லவா ? அதனை ஸரஸ்வதியே தரிக்க வேண்டுமென்று மதுச்சந்த ரிஷி வேண்டுவதை மேலே கண்டோம். உண்மைச் சொல்லே ஸரஸ்வதி வசம் நமது வேள்வியை ஒப்புக் கொடுப்பதற்கு முக்கிய வழி யென்றேம். இதனுடன், நிந்தை, பழி, சாபம், பயம், அசுசி—இவற்றினால் வாக்கை மாசுபடுத்தாதிருக்க வேண்டும். அமங்கள வார்த்தைகளும் அவச் சொற்களும், பய வசனங் களும் தீமை தரும். பரிபூர்ணமான தீரும், வலிமையும், உண்மையும், திருத்தமும், தெளிவும் பொருந்திய வாக்கே தேவ வாக்கென்று சொல்லப்படும். மனித ஜாதிக்கு தேவ **வாக்குப் பிறந்திடுக.**

## ஸரஸ்வதியும் இலக்கியமும்

உலக நடையிலே, உண்மை முதலிய குணங்கள் ஸரஸ்வதி தேவியின் கருணைக்கு நம்மைப் பாத்திரமாக்கி, நம்மிடத்திலே தேவ வாக்கைத் தோற்றுவித்து, நமது வேள்வியைக் காக்கும் என்பது கண்டோம். இலக்கியக்காரருக்கோ வென்றால், இத்தெய்வமே குலதெய்வம். அவர் இதனைச் சுடர் செய்யும் உண்மையுடனே போற்ற வேண்டும். எதுகை மோனைகளுக்காகச் சொல்ல வந்த பொருளை மாற்றிச் சொல்லும் பண்டிதன் ஸரஸ்வதி கடாக்ஷத்தை இழந்து விடுவான். யமகம் திரிபு முதலிய சித்திரக்கட்டுக்களை விரும்பிச் சொல்லுக்குத் தக்கபடி பொருளைத் திரித்துக் கொண்டு போகும் கயிறு பின்னிப் புலவன் வாணியின் திருமேனியை நோகும்படிச் செய்கிறான். அவசியமில்லாத அடைமொழிகள் கோப்போன் அந்தத் தெய்வத்தின் மீது புழுதியைச் சொரிகின்றான். உலகத்தாருக்குப் பொருள் விளங்காதபடி இலக்கியஞ் செய்வோன் அந்தச் சக்தியைக் கரித்துணியாலே மூடுகின்றான்; 'வெள்ளைக்கலை' யுடுத்து வதில்லை. மனமறிந்த உண்மைக்கு மாறு சொல்லும் சாஸ்திரக்காரனும் பாட்டுக்காரனும் ஸரஸ்வதிக்கு நிகரில்லாத பாதகம் செய்கின்றனர். இலக்கியத்துக்குத் தெளிவும் உண்மையுமே உயிரெனலாம். இவ்வுயிருடைய வாக்கே அருள் வாக்கென்று சொல்லப்படும்.

---

# மருத்து

## புயற் காற்று

### முகவுரை.

இது கண்வ ரிஷி காட்டிய மந்திரம். மருத்துக்களென்றால் புயற் காற்றடிக்கும். தேவர். இவர்கள் ருத்திரன் மக்கள். ருத்ரன் அஞ்சத் தக்கவன். அவனுக்கு மூவுலகமும் நடுங்கும். பரமாத்மாவின் ஸம்ஹார வடிவத்துக்கு, வேதம் ருத்ரன் என்ற பெயர் சொல்லுகிறது. இவன் தன்னைச் சரணமடைந்தோருக்கு எங்கும் எப்போதும் நல்ல துணை யாவது போல், இவன் மக்களும் இந்திரனுடைய மற்றத் தோழருமாகிய மருத்துக்கள் இருளை ஒழிப்பதிலே கொடியோ ராயினும் வேள்வி செய்வோருக்கு நன்மை யெல்லாந் தருவர். வானத்திலே தோன்றும் புயற்காற்றுக்களையும், உள்ளத்திலே காணப்படும் உக்ர வேகங்களையும் ஆட்டி வைப்போர் மருத்துக்கள். இவர்களைச் சரணமடைந்தால், காவலும், இன்பங்களும், உண்மையறிவும் தோன்றும். இந்த வானவருடைய துணை வேண்டிக் கண்வ ரிஷி பின்வரும் மந்திரத்தை ஓதுகிறார்.

### மருத்தைக் கண்வரிஷி பாடியது

1. இப்படி உங்களுடைய திறமையை மேலிருந்து தீப்போல் வீசுவது யாருடைய வேள்வியால்? யாருடைய சூழ்ச்சியால்? யாரிடம் போகிறீர், உலகினை அசைப்பீர், யாரிடம்?

2. உம் ஆயுதங்கள் தாக்குவதில் உறுதியும், எதிர்ப்பதில் வலிமையும் பெறுக. தொழில் செய்யும் வீரம் உமக்கே யாகுக. மாயங்கள் செய்யும் மானிடனுக்கில்லை.

3. உறுதி கொண்டதை விசிறி யெறிகிறீர். கனமுடைய பொருளைச் சுழல்விக்கிறீர். மண்ணில் மரங்களையும் குன்றுத் தொளைகளையும் ஊடுருவிச் செல்லுகிறீர்.

4. பகைவரைக் கடித்துண்பீர்! உமக்கு வானத்தில் பகையில்லை, மண்ணிலுமில்லை. விரிவுடைய ஆற்றல் நுமக்கேயாம். ருத்ரரே! அதனை யாரும் மீறலாமா?

---

1. ரிக்வேதம்: மண்டலம் 1, ஸூ. 39, அஷ்டகம் 1, வர்க்கம் 18-19.

5. மலைகளை நடுங்கச் செய்கிறார்கள், மரங்களைப் பிளந்து தள்ளுகிறார்கள். வாரீர், மருத்துக்களே, பித்தரைப்போல்; தேவரே, உமது முழுக் குலத்துடன் வருக.

6. புள்ளி மான்களைத் தேர்களில் பூட்டினீர். சிவப்பு மான் தலைவனாக இழுக்கிறது, உமது வரவை மண்மக்களும் உற்றுக் கேட்டார்; மனிதர் நடுங்கினர்.

7. ருத்ரன் மக்களே, விரிவின் பொருட்டு, உமது துணையை விரைவில் வேண்டுகிறோம். பழமைபோலே எமக்குத் துணை கொண்டு வருக; அஞ்சி நிற்கும் கண்வனை நாடி இங்கு வருக.

8. உம்மாலேனும், மனிதராலேனும் தூண்டப் பெற்றதாகி எம்மை அடிக்க வரும் பிசாசு யாதாயினும், அதற்கு ஆற்றலும், வலிமையும், உம்முடைய உதவிகளும் இல்லாதபடி செய்க.

9. வேள்வி காப்பீர், கண்வனை முழுதும் காத்து விட்டீர், உமது முழு வரங்களுடன் எம்மிடத்து வருக, மழையிடத்து மின்னல்கள் கூடுவதுபோலே.

10 நன்றாகப் பிளப்பீர், முழு வன்மையும் கொண்டு வருகிறீர், உலகத்தை ஆட்டுவீர், மருத்துக்களே! ரிஷிகளின் கொடிய பகையின்மீதே அம்புபோலொரு பகையினை வீசுக.

**விளக்கம்**

உள்ளம் பழங்காடு போலாகி விட்டது. இருள் சேர்ந்து போயிற்று. நல்ல காற்றுப் புக வழியில்லை. புதரும் கிளையும் மிகுதியாகி, இருளும் சேறும் நாற்றமுமாகி, நடக்கத் திரிய வழியில்லாமலிருக்கிறது. அப்போது தேவனாகிய இந்திரனிடம் முறையிடுகிறோம். அவனுடைய தோழராகிய வேகசக்திகளை நாடுகிறோம். அந்த யோக சக்திகள் புயற்காற்றைப் போலே வந்து, உள்ளத்திலே சுத்தநிலையும், அமர வாழ்க்கையும் தந்து காக்கின்றன. ஓம் ததாஸ்து.

## புயற்காற்றுத் தேவராகிய மருத்துக்களை கோதமர் பாடியது [1]

1. வாரீர், மருத்துக்களே !

மின்னல்களும், நல்ல பாட்டுக்களும், வேல்களும் நிரம்பியன வாய், (காற்றுக்) குதிரைகளைச் சிறகுபோல் உடையனவாகிய தேர்களின் மீதேறி வருக. நல்ல மாயைகளை யுடையீர் !

மிக்க வளமுடைய இன்பத்தைக்கொண்டு, எம்மிடத்தே பறவைகள்போல் வருக.

2. தேர்களை விரைந்திழுக்கும் சிவப்புக்குதிரைகளும் மாநிற முடைய குதிரைகளுங் கொண்டு, அவர்கள் ஒளியுடன் வருகிறார்கள். (அவர்களில்) ஒருவன் அரிவாள் கொண்டிருக் கிறான். அவன் பொன்னொளி வீசுகிறான். தேருருளையினால் அவர்கள் பூமியை அடித்தனர்.

3. (வானவரே, நீங்கள்) உடம்பிலே, செல்வத்தின் பொருட்டு, வாள் பூண்டிருக்கிறீர்கள். நாட்டை மேலோங் கும்படி அசைப்பதுபோலே, எமதறிவையும் ஓங்கும்படிச் செய்க !

மானுடரே, உங்கள் பொருட்டாக இந்த மருத்துக்கள் நன்கு பிறந்து மிகவும் ஊக்க முடையவராய், மலையை அசைக்கி றார்கள்.

4. மருந்துகளே !

எமது நாட்கள் உம்மை ஒரு முறை சுற்றி வந்து, பிறகு எமதறிவினிடத்தேயும், எமது தெய்வீகமான செய்கையினிடத் தேயும் மீண்டெய்தி விட்டன.

நல்ல பாட்டுக்களாலே வேள்வி செய்யும் கோதம ரிஷியின் கூட்டத்தார் தண்ணீர் குடிப்பதற்காகக் கிணற்றின் மேன் மூடியைத் திறந்துவிட்டனர்.

5. மருத்துக்களே, உமக்காக, கோதமன் பாடிய இப் பாட்டுக்கு நிகர் வேறொன்று கண்டதில்லை. பொன்னுருளைத் தேர்களில் இரும்புப் பற்களுடைய காட்டுப் பன்றிகளைப் போலே வரும் உம்மைக்கண்டு (கோதமன் இப்பாட்டைச் செய்தான்.)

---

1 ரிக்வேதம் ; மண்டலம் 1, ஸூக்தம் 88, அஷ்-1, அத்-6, வர்க்கம் 14

6. தொண்டன் வாக்காதலால், உமக்கிணங்கிய இந்தப் பாட்டு உம்மை நோக்கி ஒலித்தெழுகின்றது. எம்மிடமிருந்து சிரமமின்றி, இயற்கையின்படி இந்த வாக்குண்டாயிற்று.

**விளக்கம்**

இந்த மந்திரம் பாடினவர் கோதம ரிஷி.

1 பழைய உலகத்தை மாற்றிப் புதிய உலகம் செய்வதும், பழைய காட்டை அழித்துப் புதிய காடு தோற்றுவிப்பதும், பழைய அறிவை நீக்கிப் புதிய அறிவு கொடுப்பதும், மருத்துக்களின் தொழில். அதனால் அவர்களுடைய தேர்களில் " மின்னலும், நல்ல பாட்டும் வேலும் " கொண்டு வருகிறார்கள். மின்னலாலும், வேலாலும் பழமையை அழித்து, நல்ல பாட்டினால் புதுமை பிறக்கும்படிச் செய்கிறார்கள் மருத்துக்கள் " நல்ல மாயைகளை யுடையோர். " தேவ மாயை யென்றும், அஸுர மாயை யென்றும், இரண்டு வகை யுண்டு, நல்ல மாயைகளாவன தேவ மாயைகள்.

2. மருத்துக்களிலே ஒருவன் ' அரிவாள் கொண்டிருக்கிறான். ' இவனுடம்பு பொன்னொளி வீசுகிறது இவன் யார்? கணநாதன் போலும்.

3. மனிதர் பொருட்டாக மருத்துக்கள் ' மலையை அசைக்கிறார்கள் '. இந்த மலை அஞ்ஞானம், அஹங்காரம்.

4. நாட்கள் மருத்துக்களைச் சூழ்ந்து நம்மிடம் திரும்பி வரும்போது, மருத்துக்களை அழைத்து வருகின்றன. அதாவது, நாம் பல நாளாக மருத்துக்களை வேண்டிச் செய்த தவம் பயனடைந்து விட்டது என்று அர்த்தம். கோதம ரிஷியின் கூட்டத்தார் ' தண்ணீர் குடிப்பதற்காக கிணற்றின் மேல் மூடியைத் திறந்து விட்டனர்'. அந்தக் கிணறு யாதெனில் அதுவே அமர வாழ்க்கை. அதில் ஊறிவரும் நீர் அமிர்தம். அந்தக் கிணற்றின் மேல் மூடியாவது ஆணவம். ஆணவத்தை நீக்கி அமிர்த பானம் செய்கிறோமென்பது பொருள். பருந்துகளென்றது மருத்துக்களை.

5. காட்டுப் பன்றிகள் மத்த நிலையும் வலிமையுங் காட்டுவன. அவற்றின் ' இரும்புப் பற்கள் ' பழைய காட்டைக் கழித்துத் தள்ளும் பொருட்டேயாம். இங்ஙனம் மருத்துக்கள் வருவதை நேரே ஞான விழியால் கோதம ரிஷி கண்டு

இப்பாட்டைப் பாடினாராதலால் இதில் அனுபூதி ரஸம் காணப்படுகிறது, ஆதலால் 'இந்தப் பாட்டுக்கு நிகர் வேறென்று கண்டதில்லை' என்று ரிஷி சொல்லுகிறார்.

**6.** ஸ்வானுபூதியால் வெளிப்பட்ட பாட்டாகையால் யாதொரு சிரமமில்லாமல், ஊற்றிலிருந்து நீர் புறப்படுவதுபோல் இயற்கையிலே தோன்றுகிறது. கோதம ரிஷியின் வாக்கினால் உலகத்தாரின் அஞ்ஞானம் நாசமடைகிறது.

## முடிவுரை,

வேத ரிஷிகள் காலத்தில் கோவில் கிடையாது; விக்ர ஹாராதனை கிடையாது; ஸந்யாஸம் கிடையாது. அத்வைதத்வைத விசிஷ்டாத்வைதப் பிரிவுகள் கிடையா; பக்தி மாத்திரந் தானுண்டு.

கோவிலும் மடமும், பௌத்தமதப் பழக்கத்தால் வெளி நாடுகளிலிருந்து நமக்குக் கிடைத்த பேறுகளென்று சரித்திரக் காரர் சொல்லுகிறார்கள். ஆனால், இப்போது ஹிந்து மதப் பயிற்சிகளுள்ளே கோவிலும் சிலையும் நெடுந்தூரம் ஆழ்ந்து போய்விட்டன. ஆதலால், இப்போது ஹிந்து மதத்திலிருந்து கோவிலைப் பிரிக்க முடியாது. கோவில்களுக்குள்ளே பரஸ்பரம் பொறாமையும், சண்டையுமில்லாதபடி எல்லாக் கோவில்களும் ஸாக்ஷாத் ஸூர்யனாகவும் அக்னி குமாரனாகவும் ருத்ரனாகவும், இந்த்ரனாகவும், வாயுவாகவும், விஷ்ணுவாக வும், வருணனாகவும் விளங்குகிற பரமாத்மாவின் கோவில்களென்றும், கோயில்களுக்குள்ளே கக்ஷி பேதங்கள் கிடையா வென்றும் பண்டித பாமரர்கள் நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

ப்ரக்ருதி இயற்கைத் தோற்றம்; காணப்படுகிற உலகம் விஷ்ணுவுடைய சரீரம். இதற்குள்ளே வ்யாபித்து நிற்கும் ஆத்மாவே விஷ்ணு, விஷ்ணுவைச் சிலையிலும் வணங்கலாம், மலையிலும் வணங்கலாம், தூணிலும் துரும்பிலும் வணங்கலாம். சிலைகளிலே வணங்குதல் ஒரு வகை யோகம். வேத ரிஷிகள் இந்த விஷ்ணுவை, இந்தரனை, ஸூர்யனை, ருத்ரனை நேராகக் கண்டு வணங்கினார்கள். உலகமே இவனுடைய உடம்பாதலால் அவர்கள் உலகத்தை வணங்கினர். அறிவுக்குள்ளே வானமும் ஸூர்யனுமிருப்பது போலே வெளியுலகத்திலும் இருக்கின்றன. உள்ளும் புறமும் ஒன்று.

மற்றொரு முறை விளங்கச் சொல்லுகிறேன். புயற் காற்றடித்தது. வேத ரிஷிகள் அதன் முன்னே போய் நின்றார்கள். ஆயிரம் மின்னல்கள் வாள் போலே வீசின. உலகம் குலுங்கிற்று. அண்டங்கள் இடிவது போலே சத்தம் கேட்டது. மேற்படி ரிஷிகள் பயப்படவில்லை. மந்திரங்களைப் பாடினார்கள். ருத்ரனுடைய உடம்புதானே உலகம்? வாயுவே ருத்ரன். வாயுவினுடைய உடற்செய்கைதானே புயற்காற்று? இந்திரன் மின்னலையும் இடியையும் காட்டுகிறான். மேகங்கள் சிதறுகின்றன. பூமிக்குத் தண்ணீர் கிடைக்கிறது. இதில் பயத்துக்கிடமெங்கே? ரிஷி புயற்க்காற்றைத் துதிக்கிறார். பிறகு, இரவு நீங்கி ஸூர்யோதயம் உண்டாகிறது; ஒளி தோன்றுகிறது. அதைப் பார்த்து நேரே கைகூப்பி ரிஷி மந்திரம் பாடுகிறார். பக்ஷிகள் பாடுகின்றன. பூக்கள் மலர்கின்றன. நீரும் காற்றும் சிரிக்கின்றன. இஃதத்தனையும் இயற்கைத் தெய்வத்தின் காட்சி. இதை ரிஷி போற்றும்போது ப்ரத்யக்ஷ நாராயணனைப் போற்றுகிறார்.

வீட்டிலே நெருப்பு வளர்த்து அதிலே தெய்வத்தைக் கண்டு தொழும் வழக்கம் அக்காலத்தில் மிகுதிப்பட்டது. பொதுவாக இயற்கை வணக்கம் வழக்கமில்லாமல் போன பிறகும் அக்நி பூஜையும், ஸூர்ய பூஜையும் இன்றுவரை நமக்குள்ளே மிஞ்சி நிற்கின்றன. ஸந்த்யா வந்தனாதிகளில் ஸூர்ய பூஜை நியதமாக நடந்து வருகிறது. ஸர்வ வைதிகக் கிரியைகளும் ஹோமம் வளர்த்துப் பூஜை பண்ணாமல் நடப்பதில்லை.

ப்ரக்ருதியை நேரே தொழும் வழக்கம் மிகுதிப் பட்டால் வேதம் ஒளி பெறும்.

சரணாகதியே வழி.

வேதரிஷிகள் வேறு வழி காட்டியதாக ஸம்ஹிதைகளிலே தெரியவில்லை.

குருவுக்கு மரியாதை செய்யவேண்டுமென்றும், பரமாத்மா ஒருவனுக்கே சரணாகதி தகுமென்றும் என்னுடைய அபிப்பிராயம்.

மனத்தைக் கட்டி ஆளுவதற்கு மந்திரத்தை உச்சரிப்பதே வழி. மந்திரத்தின் ஒலியைத் தியானம் செய்வதில் பயன் கிடைக்குமென்று தோன்றவில்லை. அதன் பொருளைத் தியானிக்கவேண்டும். பின்வரும் பாட்டில் பரம்பொருளாகிய நாராயணனுக்குச் சக்தி நாமம் வழங்கப்படுகிறது.

## பாட்டு [1]

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணிப் பூண்,
பஞ்சுக்கு நேர்பல துன்பங்க ளாமிவள்
பார்வைக்கு நேர் பெருந் தீ,
வஞ்சக மின்றிப் பகையின்றிச் சூதின்றி
வையக மாந்தரெல்லாம்
தஞ்சமென் றேயுரைப்பீர்; அவள் பேர், சக்தி
ஓம், சக்தி ஓம், சக்தி ஓம். (1)

நல்லதுந் தீயதுஞ் செய்திடும் சக்தி
நலத்தை நமக்கிழைப்பாள்;
அல்லது நீங்குமென்றே யுலகேழும்
அறைந்திடு வாய்முரசே!
சொல்லத் தகுந்த பொருளன்று காணிங்கு
சொல்லு மவர் தமையே
அல்லல் கெடுத் தமரர்க்கிணை யாக்கிவிடும்
ஓம், சக்தி ஓம், சக்தி ஓம். (2)

நம்புவ தேவழி யென்ற மறைதன்னை
நாமின்று நம்பிவிட்டோம்;
கும்பிட்டெந் நேரமும் சக்தியென்றுலுனைக்
கும்பிடுவேன் மனமே.
அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சமில்லாத படி
உம்பர்க்கு மிம்பர்க்கும் வாழ்வு தரும்பதம்
ஓம், சக்தி ஓம், சக்தி ஓம் (3)

பொன்னைப் பொழிந்திடு, மின்னை வளர்த்திடு,
போற்றி யுனக்கிசைத்தோம்;
அன்னை பராசக்தி யென்றுரைத் தோம்; தளை
யத்தனையுங் களைந்தோம்;
சொன்னபடிக்கு நடந்திடுவாய்,
மனமே தொழில் வேறில்லை காண்;
இன்னும் தேயுரைப் போம், சக்தி ஓம், சக்தி
ஓம்; சக்தி ஓம், சக்தி ஓம். (4)

---

1. 'தனத தனத தனத தனத தனத தனத தாம்.
என்று தாளம் போட்டுக் கொண்டு மேற்படி பாட்டை இஷ்டமான ராகத்தில் பாடலாம்.

வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொரு
ளாகி விளங்கிடு வாய்,
தெள்ளு கலைத் தமிழ் வாணி, யுனக் கொரு
விண்ணப்பஞ் செய்திடுவேன் ;
எள்ளத் தனை பொழுதும் பயனின்றி
யிராதென்ற னாவினிலே
வெள்ள மெனப் பொழிவாய், சக்தி வேல், சக்தி
வேல், சக்தி வேல், சக்தி வேல் ! (5)

---

## அக்நிஸ்தோமம்

### (ருக்வேதம் 5. 2.)

அத்ரி மஹரிஷி செய்தது.

### முன்னுரை.

மனிதனுக்குள்ளே பரமாத்மாவின் சக்தி திகழ்கின்றது. சாமான்ய நிலையில் அது மனிதனுடைய அறிவிலே தோன்றாமல் கீழ் நிலத்தில் மறைந்து கிடக்கின்றது. இயற்கை என்ற தாய் அதனை வயிற்றுக்குள் வைத்து மூடிக் கொண்டிருக்கிறாள். பகுதி, பிரிவு, சிறுமை யுணர்ச்சி—இவையிருக்கு மளவும் இந்தச் சக்தி ஒளி தராமல் மறைந்திருக்கும். “பெருமைக் காட்சி” என்று சொல்லப்படும் பேரறிவு கிடைக்குமானால் அங்கே இந்தச் சக்தி வெளிப்படப் பிறந்துவிடும். இந்தச் சக்தியை வேதம் அக்நி-தேவன் என்று கூறும். இனி அஞ்ஞானத்தின் கட்டுக்களே ராக்ஷஸ மாயைகள் என்று சொல்லப்படும். நமது அறிவுக் கதிர்களை ராக்ஷஸர் கவர்ந்து கொண்டனர். அக்நி-சக்தி தோன்றி ராக்ஷதரை அழித்து அவரை மீட்டிக் கொடுத்து நமது யாகத்தை நிறைவேற்றி நமக்கு மஹாசாந்தி தருகின்றது. (இவையெல்லாம் பின்வரும் மந்திரங்களிலே தெளிவாகச் சொல்லப்படுகின்றன.)

1. யுவதியாகிய தாய் மகனைத் தந்தையிடம் கொடாமல் தன்னுள்ளே மறைவாக அழுத்தி வைத்திருக்கிறாள். எனினும் இம்மகன் வலிமை குறையவில்லை. ஏறுகின்ற வேள்வித் தொழிலிலே அவன் பதிவுற்றிருப்பதை ஜனங்கள் தம்முன்னே காண்கிறார்கள்.

(தாய்-இயற்கை. மகன்-அக்நி-சக்தி. தந்தை-தூய அறிவு.)

2. இளம் பெண்ணே! நீ பகுதிகளில், இவனைச் சுமந்து கொண்டு நினது பெருமையைக் காட்சியிலே பிறப்பிக்கின்றாய். இம் மகன் யார்? பல்லாண்டுகளாகக் குழந்தை கருவிலே வளர்ந்தான். அவனைத் தாய் பெறும்போது நான் கண்டேன்.

3. தொலையிலே, கொல்லை நிலத்தில், பொன்னொளி வீசும் பற்களை யுடையவன். மாசற்ற வண்ணமுடையவன். அவன் படைகள் சமைப்பதைக் கண்டேன். எனது பகுதிகளில் உள்ள அமுதத்தை அவனுக்குக் கொடுத்துவிட்டேன். இனி என்னை இந்த ராக்ஷஸர், வேதமில்லாதவர், தெய்வ-அறிவில்லாதவர், என்ன செய்ய முடியும்?

(கொல்லை நிலம்—உணர்வு' நிலத்தின் பின்னேயுள்ளது. அண்டத்திலும், பிண்டத்திலும் மூன்று நிலங்கள் உள்ளன. இவைகளை ஏழாக வகுத்து ''ஸப்த லோகங்கள்'' என்பது முண்டு.)

4. கொல்லை நிலத்தில் இடைவிடாது பலவகைப்பட்ட கதிர்களுடன் செல்வதோர் பசுமந்தை போன்றதைக் கண்டேன். அவற்றை இனி யாரும் பிடித்துவைக்க மாட்டார்கள். அவன் பிறந்து விட்டானன்றோ? அவற்றுள் வயதாகி யிருந்தன வெல்லாம் மீண்டும் இளமை பெற்றுவிட்டன.

(கதிர்கள்-எமது அறிவுக் கிரணங்கள்-இவற்றை ராக்ஷஸர் பிடித்து வைத்திருந்தார்கள். அக்நி-சக்தி பிறந்தவுடன் இவை மீட்டும் நம்மிடத்தே வருகின்றன.)

5. இக்கதிர்களின்றும் என்னை வலிமையாகப் பிரித்து வைத்தோர் யாவர்? அப்போது நமது காவலன், நமது போராளி பிறக்கவில்லை. அவற்றை என்னிடமிருந்து கவர்ந்தோர் மீட்டும் என்பால் விட்டு விடக் கடவர். நான் இழந்து விட்ட ஒளிகளையெல்லாம் அவன் திரும்பத் தம் அறிவினாலே கொணர்ந்து தருகின்றான்.

6. உயிர்களிலே இருப்போரின் அரசன் உயிர்களுக்கு இருப்பிடமாவோன்—அவனை இன்பமற்ற நமது பகைவர் மனிதருக்குள்ளே ஆழ அமிழ்த்தி வைத்திருக்கிறார்கள். அத்ரியின் வேதங்கள் அவனை வெளிப்படுத்துக. அவனை அடைத்து வைத்தோர் தாம் அடைபடுக.

(அத்ரி-ரிஷியின் பெயர். இச்சொல்லுக்கு 'அனைத்தையும் தின்று சுவைப்போன்' என்பது பொருள்.)

7. முன்பு சுனசேபன் என்பவனை ஆயிரம் யூபத்தூணிலே கட்டியிருந்தார்கள், நீ அவனை விடுதலை செய்வித்தாய். அவன் சாந்தி பெற்றான். எம்மிடமுள்ள அக்நி-சக்தியே! எமது யாகத்தின் தலைவனே! அங்ஙனமே நீ இங்கு வீற்றிருந்து, எம்முள்ளே அறிவுபெற்று எமது கட்டுக்களையும் விடுவிப்பாய்.

8. எம்மீது சினந்து போய்விடலாகாது. தேவர்களின் நோன்பு காப்போன் உன்னைக் குறித்துச் சொன்னான். இந்திரன் உணர்ந்தவன். அவன் உன்னை விழிகளால் பின்பற்றினான். அவனிடம் அறிந்து கொண்டு, தீயே, உன்னை டுத்தேன்.

(இந்திரன்-அறிவுத் தேவன்).

9. தீ விரிந்து பெருகிய ஒளியுடன் சுடர்கின்றான். தனது பெருமையால் அனைத்தையும் வெளியுறக் காட்டுகின்றான். தீய நடைகொண்ட ராக்ஷஸ மாயைகளையெல்லாம் வெல்லு கின்றான். ராக்ஷஸனைக் கொல்வதற்காக இரண்டு கொம் பையும் தீட்டுகின்றான்.

10. வானத்திலே தீ செய்யும் முழக்கங்கள் ராக்ஷஸனை அழிப்பதற்குக்கூரிய படைகளாகுக. வெளியிலே இவனுடைய வெம்மை கொண்ட கதிர்கள் எதிர்ப்பதை யெல்லாம் உடைத்துக்கொண்டு முன்னேறுகின்றன. ராக்ஷஸத் தடைகள் இவனைக் கட்டுவதில்லை.

11. உள்ளொளி பெற்றவனும், தீரனும், செய்கையிலே தெளிந்தவனுமாகிய நான்—தீயே, பல வடிவங்களில் பிறந் திருப்பவனே, நினக்கு இந்த ஸ்தோமப் பாட்டை ஒரு தேராகச் சமைத்துக் கொடுத்தேன். தீயே! தேவனே! நீ எம்மிடத்து எதிர் மகிழ்ச்சி கொள்வாயானால் அதினின்று நாங்கள் வானொளியேற்ற நீர்ப் பெருக்கைப்போல், அறிவொளி யேந்திய உயிர் வெள்ளத்தை வெல்லக்கடவோம்.

வலிய கழுத்தினை யுடையதோர் ஏறுபோன்றான்—அவன் எம்முள்ளே வளர்ந்து பகைவற்ற அறிவை எமக்குக் கொண்டு தருகின்றான். சாதலில்லாத தேவர் தீயினிடம் இவ்வாறு சொல்லினர் :—"தீயே! வேள்வி நிலமாகிவிட்ட மனிதனுக்குச் சாந்தி தருக. அவியை ஏந்தி நிற்கும் மனிதனுக்குச் சாந்தி தருக."

---

ஓம் தத்ஸத்.

## ஈஸாவாஸ்யோபநிஷத்

१. ईशावास्यं इदँ सर्वं यत्किंच जगत्यां जगत् ।
तेन त्यक्तेन भुञ्जीथा मा गृधः कस्य स्विद्धनम् ॥

இயங்கும் உலகில் இயங்குகின்ற இஃதெல்லாம் ஈசனால் நிரப்பப்படுவது. ஆதலால் (உள்ளத்) துறவுடன் (இன்பங்கள்) துய்த்திடுக. பிறன் பொருளை விரும்பாதொழிக.

२. कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छतँ समाः ।
एवं त्वयि नान्यथेतोऽस्ति न कर्म लिप्यते नरे ॥

இங்குக் கடமைகள் செய்துகொண்டு நூறுண்டு வாழ்தல் வேண்டுக. நீ இதனைக் கொள்க. இஃதல்லால் வேறு வழியில்லை. கடமைப் பயன் மாசுபடுத்துவதில்லை.

३. असुर्या नाम ते लोका अन्धेन तमसा वृताः ।
ताँस्ते प्रेत्याभिगच्छन्ति ये के चात्महनो जनाः ॥

ஆத்ம நாசம் செய்துகொள்ளும் ஜனங்கள் (இவ் வுலகத்தி லிருந்து) நீங்கிக் குருட்டிருள் சூழ்ந்தனவாகிய அசுர லோகங்களை யடைகின்றனர்.

["ஆத்ம நாச"மாவது நித்ய முக்தனாகிய ஆத்மாவுக்குத் தீய சிந்தனைகள், தீய செயல்கள் என்பவற்றால் தளைக ளேற்படுத்திக்கொள்ளும் மடமைச் செய்கை.]

४. अनेजदेकं मनसो जवीयो नैनद्देवा आप्नुवन्पूर्वमर्षत् ।
तद्धावतोऽन्यानत्येति तिष्ठत्तस्मिन्नपो मातरि दधाति ॥

**(ஆத்மாவின் நிலை கூறுவது)**

ஒன்று : அசைதலின்றி மனத்தினும் விரைந்து செல்வது; இதனை இந்திரியங்கள் எட்டுவதில்லை, இது முன்னே சென்று விடும். மற்றவை ஓடும்போதுதான் நின்றபடியே அவற்றை எட்டிவிடும். இதனிடத்தே வாயு செயல்களைச் சமைக்கிறான்.

५. तदेजति तन्नैजति तद्दूरे तद्वदन्तिके ।
तदन्तरस्य सर्वस्य तदु सर्वस्यास्य बाह्यतः ॥

அது இயங்குவது. அது இயங்குவதில்லை. அது தொலையிலுள்ளது. அப்படியே ஸமீபத்திலுமிருப்பது. அது இவ்வனைத்திற்கும் உள்ளேயிருப்பது. இவ்வனைத்திற்கும் அஃது புறம்பானது.

('இவ்வனைத்திற்கும்' எனில் 'இவ்வுலகப் பொருள்களெல்லாவற்றிற்கும் என்பது பொருள்'.)

६. यस्तु सर्वाणि भूतानि आत्मन्येवानुपश्यति ।
सर्वभूतेषु चात्मानं ततो न विजुगुप्सते ॥

எவன் எல்லா உயிர்களையும் தன்னுள்ளே காண்கின்றானோ, எல்லா வுயிர்களிடத்தும் தன்னைக் காண்கின்றானோ, அவன் பிறகு கூசுவதில்லை.

७. यस्मिन् सर्वाणि भूतानि आत्मैवाभूद्विजानतः ।
तत्र को मोहः कः शोक एकत्वमनुपश्यतः ॥

அறிந்தவனுக்கு எவ் வுயிர்களும் தானேயாகிவிடும். (அனைத்திலும்) ஒருமை காணும் அவனுக்கு மயக்கமேது? கவலையேது?

८. स पर्यगात् शुक्रमकायमव्रणं
अस्नाविरं शुद्धमपापविद्धम् ।
कविर्मनीषी परिभूः स्वयंभूः
याथातथ्यतोऽर्थान् व्यदधाच्छाश्वतीभ्यः समाभ्यः ॥

எங்கும் நிறைந்தது, ஒளியுடையது, புண்ணற்றது, நரம்பில்லாதது, தூய்மையுடையது, பாவமற்றது, கவி, அறிவு சான்றது, இத் தன்மையுடைய ஆத்மா எப்போதும் இருக்கும் படியாகப் பொருள்களை இயற்கையினின்றும் அமைத்தது.

९. अन्धं तमः प्रविशन्ति येऽविद्यां उपासते ।
ततो भूय इव ते तमो य उ विद्यायाँ रताः ।

**அ**வித்தையை வழிபடுவோர் குருட்டிருளை அடைகின்றனர். **வி**த்தையிலே (மாத்திரம்) பற்றுடையோர் அதனினும் மிகுந்த இருளை யடைகின்றனர்.

१०. अन्यदेवाहुर्विद्यायाया अन्यदाहुरविद्यया ।
इति शुश्र मधीराणां ये नस्तद्वचाचचक्षिरे ॥

வித்தையினாலாகும் பயன் வேறென்பர். அவித்தையினாலாகும் பயன் வேறென்பர். இங்ஙனம் நமக்கு அதனை யுரைத்த தீரர்களிடம் கேட்டிருக்கிறோம்.

११. विद्यां चाविद्यां च यस्तद्वेदोभयँ सह ।
अविद्यया मृत्युं तीर्त्वा विद्ययामृतमश्नुते ॥

வித்தை, அவித்தை எனுமிரண்டையும் எவன் ஒருங்கே அறிந்தவனோ, அவன் அவித்தையால் மிருத்யுவைக் கடந்து, வித்தையால் அமிருதத்தை அருந்துகிறான்.

[**வித்தை**-பிரமத்தை ஒன்றாகக் காணுதல். **அவ்வித்தை**-பிரமத்தைப் பலமாகக் காணுதல். **அமிருதம்**-சாவில்லாமை, தீரா இன்பம்.]

१२. अन्धं तमः प्रविशन्ति येऽसंभूतिमुपासते ।
ततो भूय इव ते तमो य उ संभूत्याँ रताः ॥

**அழிவை** வழிபடுவோர் குருட்டிருளிலே புகுகின்றனர். **ஆக்கத்தை** வழிபடுவோர் அதனினும் மிகுந்த இருளையடைகின்றனர்.

१३. अन्यदेवाहुः संभवात् अन्यदाहुरसंभवात् ।
इतिशुश्रुम धीरणां ये नस्तद्वचाचचक्षिरे ॥

**ஆக்கத்தால்** பெறுவது வேறென்பர், **அழிவினால்** பெறுவது வேறென்பர். இங்ஙனம் நமக்கு இதனை யுரைத்த தீரர்களிடம் கேட்டிருக்கிறோம்.

१४. संभूतिं च विनाशं च यस्तद्वेदोभयँ सह ।
विनाशेन मृत्युं तीर्त्वा संभूत्यामृतमश्नुते ॥

**ஆக்கம், அழிவு** எனுமிரண்டையும் ஒருங்கே அறிந்தவன் அழிவினால் மிருத்யுவைக் கடந்து ஆக்கத்தால் அமிருதத்தை யடைகிறான்.

१५. हिरण्मयेन पात्रेण सत्यस्यापिहितं मुखम् ।
तत्त्वं पूषन् अपावृणु सत्यधर्माय दृष्टये ।।

ஸத்யத்தின் முகம் பொற் பாத்திரத்தால் மூடப்பட்டிருக்கிறது ; ஸத்ய தர்மத்தையுடைய எனது பார்வைக்கு, ஹே, பூஷந் ! நீ அதனைத் திறந்து காட்டுக.

१६. पूषन् एकर्षे यम सूर्यप्राजापत्यव्यूह रश्मीन् समूह तेजः ।
यत्ते रूपं कल्याणतमं तत्ते पश्यामि योऽसावसौ पुरुषः सोऽहमस्मि ।।

ஹே, பூஷந் ! ஏகரிஷியே ! யமா ! சூரியா ! பிரஜாபதியின் மகனே ! கதிர்களை விரிவுற வகுத்து ஒளியைத் திரட்டிக் கொள்க. நினது வடிவத்திலெல்லாம் கல்யாண மிகுந்த தாகிய வடிவத்தைக் காண்கிறேன். அதில் நிற்கும் இப் புருஷன்—அவனே நான்.

१७. वायुरनिलममृतं अथेदं भस्मान्तँ शरीरम् ।
ॐ क्रतो स्मर कृतँ स्मर क्रतो स्मर कृतँ स्मर ।।

வாயு இறப்பின்றிச் சலிப்பது. இவ்வுடல் சாம்பராய் முடிவது. ஓம். உள்ளமே நினை, செய்ததை நினை. நினை உள்ளமே. செய்ததை நினை.

१८. अग्ने नय सुपथा राये अस्मान् विश्वानि देव वयुनानि विद्वान ।
युयोध्यस्मज्जुहुराणमेनो भूयिष्ठां ते नम उक्तिं विधेम ।।

அக்னியே, எங்களை ஸம்பத்துக்கு நல்வழியாற் கொண்டு செல்லுக. எங்கள் குடிலமான பாவங்களை அழித்திடுக. நினக்கு மிகச் சிறந்த போற்றி மொழி யிசைக்கிறோம்.

———

ஓம்

# கேநோபநிஷத்.

## முதற் கண்டம்

१. ॐ केनेषितं पतति प्रेषितं मनः केन प्राणः प्रथमः प्रैति युक्तः ।
केनेषितां वाचमिमां वदन्ति चक्षुः श्रोत्रं क उ देवो युनक्ति ॥

எவனுடைய ஏவுதலால் மனம் தான்விரும்பிய பொருளிலே போய் வீழ்கின்றது? ஆதியிலே பிராணன் எவனுடைய அமைப்பினால் செல்வதாயிற்று? மனிதர் பேசும் பேச்சை எவன் தூண்டுகிறான்? கண்ணையும் செவியையும் எந்தத் தேவன் தொழிலிற் பொருத்திவிடுகிறான்?

२. श्रोत्रस्य श्रोत्रं मनसो मनो यद्वाचो ह वाचं स उ प्राणस्य प्राणः ।
चक्षुषश्चक्षुरतिमुच्य धीराः प्रेत्यास्माल्लोकादमृता भवन्ति ॥

செவியின் செவி, மனத்தின் மனம், வாக்கின் வாக்கு, அவனே பிராணனுக்குப் பிராணன். கண்ணுக்குக் கண். அவனை யறிந்தோர் (தீரர்) பந்தங்களை விட்டு, இவ்வுலகினின்றும் (சாவற்ற) அமிர்தத் தன்மை பெறுகின்றனர்.

३. न तत्र चक्षुर्गच्छति न वाग्गच्छति नो मनः ।
न विद्मो न विजानीमो यथैतदनुशिष्यात् ॥

அதனிடத்தே விழி செல்வதில்லை, வாக்கேறுவதில்லை. தெரிகிலோம், அதை யெங்ஙனம் பிறருக்கு எடுத்துச் சொல்வதென்பதை யறியமாட்டோம்.

४. अन्यदेव तद्विदितात् अथो अविदितादधि ।
इति शुश्रुम पूर्वेषां ये नस्तद्व्याचचक्षिरे ॥

இஃது வேறு. அறியப்படு பொருளுக்கெல்லாம் கீழே யுள்ளது. அறியப்படாததற்கு மேலேயுள்ளது. இங்ஙனம் நமக்கு அதனை யுரைத்த முன்னோர்களிடம் கேட்டிருக்கிறோம்.

५. यद्वाचानभ्युदितं येन वागभ्युद्यते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥

*எது வாக்கால் விளங்குவதில்லையோ, எதனால் வாக்கு விளங்குகிறதோ, அதுவே பிரமமென்றறி. ஜனங்கள் வழிபடு மிஃதன்று.*

६. यन्मनसा न मनुते येनाहुर्मनो मतम् ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥

*எதனைக் கருத்தால் கருதலாகாதோ, எதனால் மனம் கருதப்படுமென்பரோ, அதுவே பிரமமென்றறி. ஜனங்கள் வழிபடு மிஃதன்று.*

७. यच्चक्षुषा न पश्यति येन चक्षूंषि पश्यति ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥

*எதனைக் கண்ணால் காண்பதில்லையோ, எதனால் கண்கள் காண்கின்றனவோ, அதுவே பிரமமென்றறி. ஜனங்கள் வழிபடு மிஃதன்று.*

८. यच्छ्रोत्रेण न शृणोति येन श्रोत्रमिदं श्रुतम् ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥

*எதனைச் செவியால் கேட்பதில்லையோ, எதனால் செவிகள் கேட்கின்றனவோ, அதுவே பிரமமென்றறி. ஜனங்கள் வழிபடு மிஃதன்று.*

९. यत्प्राणेन न प्राणिति येन प्राणः प्रणीयते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥

*எது உயிரால் உயிர்த்திருப்பதில்லையோ, எதனால் உயிர் உயிர்த்திருக்கின்றதோ, அதுவே பிரமம் என்றறி. ஜனங்கள் வழிபடு மிஃதன்று.*

**இரண்டாம் கண்டம்**

१. यदि मन्यसे सुवेदेति दभ्रमेवापि नूनं त्वं वेत्थ ब्रह्मणो रूपम् ।
यदस्य त्वं यदस्य च देवेष्वथ नु मीमांस्यमेव ते मन्ये विदितम् ॥

நன்ருக அறிவேனென்று கருதுவையாயின் நீ இந்தப் பிரமத்தின் ரூபத்தைச் சிறிதுதான் அறிகின்ருய். இந்தப் பிரமத்திலே நீ யாது, தேவர்களிடம் யாதுளது, என நீ அறிந்ததை யெல்லாம் இன்னும் பரிசோதனை செய்தே பார்த்தல் வேண்டும்.

२. नाहं मन्ये सुवेदेति नो न वेदेति वेद च ।
यो नस्तद्वेद तद्वेद नो न वेदेति वेद च ॥

நன்ருக அறிவேனென்று நான் கருதவில்லை, அறியவில்லை யென்றும் கருதவில்லை. நமக்குள் இதை எவன் தெரிபவனே அவனறிகின்ருன். தெரியாதவனும் அறிகின்ருன்.

३. यस्यामतं तस्य मतं मतं यस्य न वेद सः ।
अविज्ञातं विजानतां विज्ञातमविजानताम् ॥

எவன் (உணர்ந்ததாகக்) கொள்ளவில்லையோ, அவன் இதை யுணர்ந்தவன். எவன் கொள்கையுடையவனே அவன் அறியவில்லை. அறிந்தவரால் அறியப்படாதது, அறியாதவரால் அறியப்பட்டது.

४. प्रतिबोध विदितं मतममृतत्वं हि विन्दते
आत्मना विन्दते वीर्यं विद्यया विन्दतेऽमृतम् ॥

எவன் இதை ஒவ்வோருணர்விலும் உள்ளதாகக் கொண்டவனே, அவன் அமிர்தத் தன்மை பெறுகின்ருன். ஆத்மாவினுல் வீர்யத்தை யடைகிருன். வித்தையினுல் அமிருதத்தை யடைகிருன்.

५. इह चेदवेदीत् अथ सत्यमस्ति
न चेदिहावेदीन्महती विनष्टिः ।
भूतेषु भूतेषु विचित्य धीराः
प्रेत्यास्माल्लोकादमृता भवन्ति ॥

இவ் வுலகிலேயே இதனை அறிந்தானுயின் பிறகு உண்மையுண்டு. இவ்வுலகில் அறியாவிடில், பெருங்கேடு. ஒவ்வோருயிரிலும் இதனைச் சிந்திக்கும் தீரர் இவ்வுலகிலிருந்து நீங்கி அமிர்தராகின்றனர்.